
# அழகின் ஆராதனை



லக்ஷ்மி

பூங்கொடி பதிப்பகம்

CPL 5936624

## உள்ளே...


| | |
|---|---|
| உன்னை விடவா ரம்யா | 7 |
| அழகின் ஆராதனை | 129 |


# உன்னை விடவா, ரம்யா

ஞாயிற்றுக்கிழமை காலை. கேட் திறக்கப்படும் ஓசை கேட்டதும் தம்ளரில் பாக்கி இருந்த காப்பியை ஒரே வாயாகக் குடித்து விட்டு வாயைத் துடைத்தபடியே கதவைத் திறந்து கொண்டு எட்டிப் பார்த்தார் சபேசன்.

இந்து, எக்ஸ்பிரஸ் இரண்டையும் சுருட்டி வராந்தா மீது தொப்பென்று வீசிவிட்டு ஓடினான் பேப்பர் பையன்.

கேட்டைக் கையோட சாத்திவிட்டுப் போகக்கூடப் பையனுக்கு அவசரம். மூடாது ஓடி விட்டான். சபேசனுக்கு எரிச்சல் மண்டிக்கொண்டு வந்தது.

தோளில் கிடந்த துண்டைத் தலைமீது போட்டுக் கொண்டு வராந்தாவை விட்டிறங்கி, ஓடிச்சென்று கேட்டை மூடிவிட்டு மூச்சிறைக்கத் திரும்பினார்.

மார்கழி மாதப் பனிமூட்டம் அவருக்கு ஒத்துக் கொள்ளாத சங்கதி. ஒரு தும்மல் போட்டாலும் அவர் மனைவி கௌரி கத்துவாள். ''எத்தனை தடவை நான் சொல்லுவது? ஊதக்காத்து உங்க உடம்புக்கு ஆகாதுன்னு தெரியுமில்லையா! தும்மி, இருமி என் பிராணனை வாங்கணுமா?''

அவளது கத்தலையும் சாடலையும் கேட்டுக்கொண்டே முப்பத்தைந்தாண்டு காலம் வாழ்க்கையை ஓட்டி விட்டார்.

அவரது மூத்த மகன் சந்திரன் உயிருடன் இருந்திருந்தால் பேரன் பேத்திகளால் வீடு நிறைந்திருக்கும். ஐந்து வயதிலேயே அவன் அல்பாயுசில் போய்விட்டான். அதனால் வீட்டுக்குத் தற்போது மூத்த மகனான இரண்டாவது பிள்ளை கோதண்டராமனைக் கண்ணின் கருமணி போல வளர்த்து ஆளாக்கி, கல்யாணம் செய்து வைத்து, அதன் பலனாகக் கிடைத்த அந்த அழகான பங்களாவில் வாழும் ஒரு பாக்கியத்தைப் பெற்று விட்டிருந்தார்.

முன் அறைக்குள் புகுந்து தாம் வழக்கமாக உட்காரும் பிரம்பு நாற்காலியையும் மோடா ஒன்றையும் தூக்கிக் கொண்டு வந்து வராந்தாவில் போட்டுக் கொண்டார். இருள் முற்றிலும் பிளந்து வெளிச்சம் பரவாத விடியற்காலை வேளை. வராந்தாவின் குழல் விளக்கைப் பொருத்தினார்.

நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு காலை மோடா மீது நீட்டியபடி பத்திரிகைகளைப் பிரித்துப் பக்கத்தில் வைத்துக் கொண்டார். விடியற்காலை காப்பியும் 'இந்து'வும் பலகாலம் தொட்டு வந்த பழக்கம். யாரும் தொடுவதற்கு முன் அவர் படித்தாக வேண்டும். முதல் பக்கத்திலிருந்து கடைசித்தாள் வரை மேல் வரியாக ஒரு தடவை படித்து விட்டுத்தான் மற்றவர்களுக்குக் கொடுக்கும் பழக்கம். பின்னர் பத்துமணி சாப்பாட்டிற்குப் பிறகு ஒன்றையும் விடாமல் மறுபடி படித்து மனதிற்குள்ளே பதிய வைத்துக் கொள்ளவேண்டும். கடற்கரையில் சந்திக்கும் தமது நண்பன் குப்புசாமியிடம் பேச ஏதாவது சங்கதி தேவையாயிற்றே?

மற்ற நாட்களைப் போல இன்று அவர் காலடி ஓசை கேட்டதும் கலங்கத் தேவையில்லை. கோதண்டம் ஹைதராபாத்துக்கு டூர் போயிருந்தான். அவனது வேலை அப்படி. அடிக்கடி வெளியூர் பயணம். சின்னப் பிள்ளை மித்திரன் இப்போதுதான் சி. ஏக்குப் பயிற்சி பெற ஒரு பெரிய ஆடிட்டிங் நிறுவனத்தில் ஒட்டிக் கொண்டிருந்தான். நல்ல நாளிலேயே அவனை எழுப்ப அம்மா ரொம்பவும் பாடுபட்டுப் போய்விடுவாள்.



ஞாயிற்றுக்கிழமை தூக்க மன்னன் மித்திரன் லேசில் எழுந்திருக்க மாட்டான். பல் துலக்காமல் பரட்டைக் கிராப்புடன் ஓடி வந்து பத்திரிகையை அப்பாவின் கையிலிருந்து பிடுங்கிக் கொள்ளமாட்டான். மாலதியைப் பற்றிக் கொஞ்சமும் கவலை இல்லை.

பி.ஏ. படிப்பை முடித்ததும் அடுத்தது தூக்க ஆராய்ச்சி என்பதுபோல அவள் தினமும் காலை எட்டு மணிக்கு மேல் தான் எழுந்திருப்பாள்.

அவள் வாரப்பத்திரிகைகளைக் கொண்டுபோகும் நடமாடும் லைப்ரரியில் சேர்ந்திருந்தாள். மாதம் ஐம்பது ரூபாயைக் கட்டிவிட்டு அம்மாவுக்குத் தமிழ் வாரப் பத்திரிகைகளையும் தனக்கு ஆங்கிலப் பத்திரிகைகளையும் வாங்கிக் கொண்டு அமைதியாக இருந்தாள். காலை இந்துவை அவள் மெள்ளத்தான் புரட்டுவது வழக்கம்.

இந்துவைத் திறந்து புரட்டி விட்டு எக்ஸ்பிரசைக் கையில் எடுத்து இங்குமங்கும் பார்வையை ஓட்டினார். தெருவில் வேகமாக ஓடிய கார் ஒன்றின் ஹாரன் ஒலி அவரது கவனத்தைத் தோட்டப் பக்கம் திருப்பியது.

அவருக்கு மறுபடியும் எரிச்சல் மண்டிக்கொண்டு வந்தது. அடுத்த பங்களாக்காரன்- சொந்தமாக ஏதோ வியாபாரம் நடத்துகிறவன். உட்கார்ந்து கொண்டு உடம்பை அதிகமாகப் பருக்கவிட்டவன். காலைவேளை கடற்கரைப் பக்கம் வாக்கிங் போய் விட்டுக் காரில் வீடு திரும்பும்போது கூர்க்காவைக் கேட்டைத் திறக்கச் சொல்ல, அந்தத் தெருவே அதிரும்படி ஹாரனை அடித்துத் தொலைக்கும் கிராதகன். தினமும் அவரது அமைதியை ஒருகணம் அதிரச் செய்யும் பாவி. பல்லைக் கடித்துக்கொண்டு பெருமூச்சுடன் தோட்டத்தைப் பார்த்தார். ஓங்கி உயரமாக வளர்ந்து கொம்பைப் பற்றிக்கொண்டு மதில் சுவரை எட்டிப் பிடிக்க முயன்ற போகன் வில்லா ஆரஞ்சு வண்ணப் பூக்களுடன் விடியும் தருவாயில் பார்க்க மிகவும் அழகாகவே இருந்தது. பரவாயில்லை. அவரது மேற்பார்வையில் தோட்டத்திலே

பூச்செடிகள் நன்றாகவே வளர்ந்து கொண்டு வருகின்றன என்ற திருப்தியில் பளபளவென்று விடிந்து கொண்டு வந்த வெளிச்சத்திலே கண்களை நாலாபுறமும் ஓட விட்டார்.

சித்ரா காலனியிலே அவர்களது பங்களாதான் புத்தம் புதிது. பெரிது. கீழ்ப்பகுதியில் உள்ளடங்கிய குளியலறைகள் கொண்ட நான்கு பெரிய படுக்கை அறை. பெரிய முன்னறை, சாப்பாட்டறை இத்யாதிகளுடன் அவர் மனைவி கௌரி அறை, பெரிய சமையலறை மேலே கோதண்டத்தின் உபயோகத்திற்கு என்று பிரத்தியேகமானதொரு படுக்கை அறை, சிறு முன்னறை என்று பெரியதொரு பங்களா அது.

கட்டில்கள், மெத்தைகள், சோபாக்கள் என்று ஏகப்பட்ட சாமான்களைப் போட்டு ஜன்னல்களை விதவிதமான திரைச்சீலைகளால் அலங்கரித்து முன்னறை தரை மீது கால் புதையக் காஷ்மீர் கம்பளத்தைப் பரத்தி விட்டு, ஃபிரிட்ஜ், மிக்ஸி, ஏ.சி. என்று எல்லா வசதிகளையும் வைத்து, தோட்டத்தைச் செப்பனிட்டுத் தந்து, அவர்கள் குடியேறுமுன் செடி கொடிகளை அங்கு வளரவிட்டு வாசலில் புது மாருதிக்காரை மாலையுடன் நிற்க வைத்து அவர்களது கண்கள் வியப்பில் விரியும்படி செய்து நீலகண்டன் அவர்களைச் சந்தோஷ சாகரத்தில் தள்ளி விட்டிருந்தார்.

பெண்ணுக்குச் சீதனமாக அந்தப் பங்களாவையும் அதை நிறைத்த சாமான்களையும், காரையும் தந்துவிட்ட நீலகண்டன், சபேசனைத் தம் அருகில் அண்ட விடாத ஒரு கண்டிப்புக்காரனாக இருந்து தொலைந்ததுதான் பிடிக்காத சங்கதியாக இருந்தது.

சம்பந்தி நீலகண்டன் வாட்ட சாட்டமாகக் கோதுமை நிறத்தில் லேசாக நரை பரவிய சுருண்ட முடி கிராப்புத் தலையும் கூர் நாசியும் எடுப்பான முகவாயுமாக, கல்யாணத்திற்குப் பெண்ணைப் பெற்ற தகப்பன் போலவே தோன்றாமல் மனையில் உட்கார வேண்டிய மாப்பிள்ளை போல் பளபளத்த ஓர் இளமையில் மிடுக்காகத் தெரிந்தார்.



பென்ஸ் காரில் பவனி வந்து கொண்டிருந்த பரம்பரைப் பணக்காரர். பெரியதொரு நிறுவனத்தின் உச்ச நிலை அதிகாரி. ஜெர்மனிக்கும் ஜப்பானுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் அமெரிக்காவுக்கும் அண்டை வீட்டுக்குப் போவதுபோல வருஷத்தில் பல தடவைகள் பறந்து கொண்டிருந்த ஒரு பெரிய வியாபாரப் புள்ளி. சம்பந்திகள் என்ற உறவைத் தவிர, சபேசனுக்கும் அவருக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள அளவு அந்தஸ்து வித்தியாசம்.

சபேசன் ஆடை தயாரிப்பு நிறுவனம் ஒன்றில் ஏற்றுமதி பகுதியில் வேலை பார்த்தவர். ஓய்வடைந்து குடும்பத்தை நடத்திக்கொண்டு போக மிகவும் கஷ்டமாகத்தான் இருந்தது. ராயப்பேட்டை ரங்கசாமி தெருவில் ஓர் ஓட்டுக் கூரை வீட்டில் வசித்துக் கொண்டிருந்தார்.

வீட்டுக்காரன் அதை விற்றுவிடப் போவதாகப் பயமுறுத்தி வாடகையை ஒவ்வொரு வருஷமும் ஏற்றிக் கொண்டே போனான். அந்த வீட்டின் வாடகை எழுநூறாக உயர்ந்து போனபோது நல்ல வேளையாகக் கோதண்டத்திற்கு ஒரு நல்ல கம்பெனியில் வேலை கிடைத்து விட்டிருந்தது. கம்பெனி தந்த வாடகை உபயத்தில்தான் அந்த வீட்டில் தொடர்ந்து வசிக்க முடிந்தது.

ஆனால் சின்னப்பிள்ளை மித்திரனுக்கு அந்த வீடு பிடிக்கவில்லை. தன் நண்பர்களை வீட்டுக்கு அழைக்க அவன் ரொம்பவும் மனம் கூசினான்.

கௌரி அதைவிட ஒரு பங்கு மேலாக அந்த வீட்டை வெறுத்தாள். பங்களா வாழ்க்கைக்கும் படகுக் காருக்கும் அவள் தன் மூத்த மகனையே நம்பிக் கொண்டிருந்தாள். அத்துடன் கல்யாணத்திற்கு நின்று கொண்டிருந்த தன் அருமை மகள் மாலதியை ஒருவன் கையில் ஒப்படைக்க நிறையவே பணம் தேவைப்பட்டது.

சின்னவன் மித்திரன் படிப்பை முடித்துக்கொண்டு வேலைக்கு அமரும்வரை அவனுக்கு உதவ வேண்டிய கடமை. இத்தனைக்கும் கைகொடுக்கும் கல் தூணாகக்

கோதண்டத்தைத்தான் அவர்கள் நம்பியிருந்தார்கள். அவன் மூலமாக வாழ்க்கையை உயர்த்திக்கொள்ள வேண்டுமென்றால் அவனுக்குப் பெரிய இடத்தில்தான் பெண்ணைத் தேட வேண்டும் என்று கௌரி பிடிவாதமாக இருந்தாள்.

தங்களிடம் வசமாக வந்து சிக்கிக் கொண்டு விட்டார் நீலகண்டன் என்றுதான் ஆரம்பத்தில் அவரும் கௌரியும் எண்ணினார்கள். இவர் சொன்னார், அவர் சொன்னார் என்று தெரிந்தவர்கள் மூலம் கிடைத்த வரன் அது.

''பெண் கொஞ்சம் கறுப்பு. ஆனால் என்ன கறுப்பும் ஒரு அழகு, காந்தலும் ஒரு ருசி'' என்று வரனைப் பற்றி விவரம் கொண்டு வந்த தூரத்து அத்தை வேப்பிலை அடித்தாள்.

பெண்ணைப் பார்க்க குடும்பமே புறப்பட்டது. அந்தக் காலத்து பங்களா, அதை அழகாகப் புதுப்பித்துக் கொண்டிருந்தார் நீலகண்டன்.

கேட்டைக் காவல் காத்த கூர்க்கா, வாசலில் நின்ற வெள்ளை பென்ஸ், வேகமாகச் சீறிக்கொண்டு வந்து ஆக்ரோஷமாகக் குரைத்த அல்சேஷன் எல்லாம் மனிதரது அந்தஸ்தைத் தம்பட்டம் கொட்டின.

பிளந்த வாயை மூட முடியாமல் வியப்புடன் வீட்டைப் பார்த்தார் சபேசன். வரவேற்பறைக்குள் சென்று அமர்ந்ததும் அவருக்கு அது பூலோகமா கைலாசமா என்று புரியாததொரு பிரமிப்பு.

அவர்கள் அனைவருக்கும் அப்பா சொல்படி விழுந்து நமஸ்கரிக்காமல் கைகூப்பியபடி நின்ற பெண்ணைக் காலோடு தலைவரை பார்த்தாள் கௌரி. கழுத்தில் மின்னிய வைர அட்டிகை, கைகளில் டால் அடித்த வைர வளையல்கள்தான் கண்களில் பட்டதே ஒழிய, பெண்ணின் கறுப்பு நிறம் தெரியவே இல்லை. ஒளிமயமான அந்த நகைகளின் விலையைத் தன் உள்ளத்துக்குள்ளேயே கணக்குப் போட்டுக் கொண்டாள்.

கோதண்டத்தின் முகத்தில் உற்சாகம் இருக்கவில்லை. வீட்டிற்குத் திரும்பியதும் அவனது தங்கையும் தம்பியும் பெண்ணை விமர்சிக்கத் தொடங்கினர்.



''பெண் பார்க்கச் சுமார். மூக்கு கொஞ்சம் சப்பை. நிறம் கறுப்பு'' என்றாள் மாலதி.

''அதோட மட்டும் இல்லை. படிப்பும் ஸைபர். பி.ஏ. வரைகூட எட்டிப் பார்க்கலையாம். பிளஸ் டூவோடு வீட்டில் உட்கார்ந்து விட்டாளாம்'' என்று விமரிசித்தான் மித்திரன்.

''பணத்து மேலே உட்கார்ந்திருக்கான்னு சொல்லு'' கலகலவென்று சிரித்தாள் மாலதி.

''அது ஒரு பிளஸ் பாயிண்ட். ஒத்துக்கறேன். அப்பன் தலையைப்போட்டால் அத்தனை சொத்துக்கும் உரிமைக்காரி இவள் ஒருத்திதான். அப்பாவுக்கு ஒரே பெண்.''

''சின்ன வயதிலேயே தாய் போய்ட்டாளாம். அங்கே பார்த்தோமே ஒரு கிழவி. அவள்தான் ஏதோ அத்தை உறவாம். எடுத்து வளர்த்தாளாம். அந்த ஸ்டுப்பிட் லேடியால வளர்க்கப்பட்ட பெண் எப்படி இருப்பாள். ஒரு முட்டாள் பெண்ணாகத்தான் வளர்ந்திருப்பாள். முகமே சொல்றதே!''

''அண்ணா இந்த வரனுக்குச் சம்மதிப்பான்னு நினைக்கிறியா?''

அதே சமயம் கூடத்திற்குள் வந்த கௌரி தன் இரு குழந்தைகளையும் கண்களால் எரித்தாள். ''வாயை மூடுங்கள். கோதண்டத்தின் காதில் பட்டு விடப் போகிறது'' பற்களை நறநறவென்று கடித்தாள்.

அவர்களது பேச்சு கோதண்டராமனின் காதுகளில் விழவில்லை. கூடத்து அறைக்குள் கட்டிலின் மீது சுருட்டி வைக்கப்பட்டிருந்த மெத்தைமேல் சாய்ந்து உட்கார்ந்தபடி அவன் சிந்தனைக்குள் மூழ்கி விட்டிருந்தான்.

இதுதான் அவன் முதல் முதலாகக் கல்யாணத்திற்காக ஒரு பெண்ணைப் பார்க்கப் புறப்பட்டது. சிலரைப் போல பெண்ணைப் பார்த்துவிட்டு, ஆடப் பாடச் சொல்லி அதிகாரம் செய்து விட்டு, சொஜ்ஜி, பஜ்ஜி, காப்பியை விழுங்கி விட்டு, பிறகு பெண்ணைப் பிடிக்கவில்லை என்று உதறிவிட்டு முன்பின் தெரியாத ஓர் இளம் பெண்ணின் மனத்தை நோகச் செய்வது அவனுக்குப் பிடிக்காத விஷயம்.

ஆனால் அந்தப் பாவத்திற்கு அஞ்சித் தன் காலில் விலங்கு போட்டுக்கொள்ள அவன் விரும்பவில்லை. ரம்யா என்ற பெயர்தான் அவனுக்குப் பிடித்திருந்தது. மற்றபடி பெண்ணை அவனுக்குப் பிடிக்கவே இல்லை. நீலகண்டன் மறுநாள் அவர்கள் வீட்டுக்குத் தாமே வந்து பதிலைத் தெரிந்து கொள்ளப் போவதாகச் சொல்லியிருந்தார். அத்தனை பெரிய மனிதரின் முகத்தில் அடித்தாற்போல பெண்ணைப் பிடிக்கவில்லை என்று எப்படி ஒதுக்க முடியும்?

'பெண் கறுப்பு, மேலும் ரொம்பப் படிக்கலை. என் வீட்டில் நாங்கள் எல்லோரும் நல்ல நிறமானவர்கள். என் தங்கை ஒரு பட்டதாரி. எனக்கு வருகிறவளும் என்னைப் போல சிவப்பாய் அழகாய் இருக்க வேண்டும். பட்டதாரியாக இருக்க வேண்டும். இருவரும் வேலைக்குப் போய்ச் சம்பாதிக்கவேண்டும் என்று கனவு காண்கிறவன் நான்' என்று உண்மையைச் சொல்ல முடியுமா?

இந்தத் தொல்லை ஏன்? ஜாதகம் சரியில்லை என்று நழுவிக் கொண்டால்? அட கடவுளே! அம்மா வாயை மூடிக் கொண்டு இராமல் அவர்கள் வீட்டுக்குப் போய் உட்கார்ந்ததுமே பெரிய குரலில் அந்தப் பாட்டியம்மாவிடம், 'ஜாதகப் பொருத்தம் நன்றாக இருக்கு' என்று சொல்லித் தொலைத்து விட்டிருக்கிறாளே?

கோதண்டம் கவலைப்பட்டவனாகக் கதவைத் திறந்து கொண்டு, எட்டிப் பார்த்தபோது தம்பியும் தங்கையும் பேசியது நன்றாகக் கேட்டது.

''நமக்கு டிபன் கொடுத்து உபசாரம் பண்ணியபோது சாப்பாட்டறைச் சுவரில் தொங்கிய போட்டோவை நான் வியப்போடு பார்த்தேன். அது ரம்யாவின் தாயாரோட போட்டோவாம். சுகந்தின்னு பேராம். ரோம்ப அழகா இருக்கான்னு நான் வியந்து போய்க் கொண்டதில் அந்தக் கிழவி தொண தொணக்க ஆரம்பிச்சுட்டாள். நேரில் பார்த்தால் இன்னும் ரொம்ப அழகாயிருப்பாள். நல்ல சிவப்பு, மூக்கும் முழியுமாய்த் தங்கப் பொம்மைபோல



இருந்தாள். மயில் தோகையாட்டம் கூந்தல். பெரிய இடத்துப் பெண். ஏகப்பட்ட சொத்தோட வந்தாள். ஆனால் ஆயுசைத்தான் கொண்டு வரலை. ரம்யாவோட மூனாவது வயசிலே போய்ட்டாள் மகராஜி. அவள் நினைவுதான் இன்னமும் நீலகண்டனுக்கு. அதனாலேயே இரண்டாம் கல்யாணம் பண்ணிக்கலை, அப்படின்னு அவர்கள் வீட்டுச் சரித்திரத்தை எடுத்துப் போட்டாள்.''

''மாலதி, அசடு போலப் பேசாதே. அவங்க பரம்பரையிலே இப்படி ஒரு ஜீன் இருக்கு. அது நாற்பதாவது பரம்பரையாக இருக்கலாம். விடேன் தொடேன்னு நீலகண்டன் வாரிசாக வந்து நிற்கிறது'' கலகலவென்று சிரித்தான் மித்திரன்.

கோதண்டம் முகம் சுருங்கிப் போனான். தலையை உள்ளே இழுத்துக் கொண்டபோதிலும் தொடர்ந்து அவர்களது பேச்சு காதில் சுளீரென விழுந்து கொண்டிருந்தது.

''ரம்யாவுக்கு அம்மாவைப்போல ரொம்பப் பொறுமையான குணமாம். நன்றாகச் சமைக்கக் கற்றுக் கொண்டிருக்காளாம். ரொம்பச் சுறுசுறுப்பான பெண்ணாம். சுமாராகப் பாடுவாளாம்.''

''பாத்ரூமில் பாடுவாளாக்கும்? நிறையப் பணம் இருக்கே. அது பெரிய பிளஸ் பாயிண்டாச்சே. அந்த நீலகண்டன் முகத்திலேயே பணக்காரத்தனம் பெருத்த மிடுக்காக என்னைப் பயமுறுத்தியது.''

தாடை இறுகிப் போக, கோதண்டம் திகைப்புடன் உள்ளே நின்று கொண்டிருந்தான். மேலே அவர்கள் இன்னும் ஏதாவது பேசு முன்பு அவர்களை அடக்க எண்ணிக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். அதே சமயம் கௌரி சமையலறையிலிருந்து வந்து விட்டாள்.

''கோதண்டம், நீ அங்கே டிபன்கூட நன்றாகச் சாப்பிடலை. நான் கவனிச்சேன். வா உள்ளே உனக்குச் சூடாய்த் தோசை வார்த்துப் போடறேன். நீ சாப்பிடு. அப்படியே நான் உன் கிட்ட முக்கியமாய்ச் சிலது பேசணும்.''

தம்பி மித்திரன் தங்கையைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டினான்.

''ஏன் இங்கே உட்கார்ந்து கொண்டு கத்திக் கூச்சல் போடறீங்க? வேலையைக் கவனியுங்க'' அம்மா அதட்ட ஆளுக்கு ஒரு பக்கமாக அவர்கள் இருவரும் நமுட்டுச் சிரிப்புடன் நகர்ந்தனர்.

மாலதி கூடத்து அலமாரியைத் திறந்து தன் புத்தகங்களைத் தேடினாள். அப்பா விளக்கை ஏற்றினார். மித்திரன் பின்பக்கம் சென்று மறைந்து கொண்டான்.

சமயலறைத் தரையில் தட்டை வைத்து, மரப் பலகையைப் போட்டுத் தண்ணீர் டம்ளரை எடுத்து வைத்தாள் கௌரி. நெய்யைத் தாராளமாக ஊற்றித் தோசையை முறுகலாக வார்த்து எடுத்துச் சூடாகத் தட்டில் போட்டாள். ''மிளகாய்ப் பொடியா, சாம்பாரா?'' தணிவான குரலில் கேட்டாள்.

''ஏதோ போடும்மா'' - முணகினான் கோதண்டம்.

அடுத்தடுத்து இரண்டு தோசைகளைத் தட்டில் போட்டு விட்டு அடுப்பை அணைத்து விட்டு மகனருகே தரையில் வந்து உட்கார்ந்து கொண்டாள் கௌரி. ''நீ ரொம்பக் கஷ்டப்பட்டு வேலை செய்கிறே. அதுக்குத் தக்கபடி உடம்பைக் கவனிச்சுக்கணும். எனக்கு வயசாகிக் கொண்டு வருகிறது. தள்ளலை. அதனாலே உன்னைப் பார்த்துக்க ஒருத்தி இந்த வீட்டுக்கு வந்துட்டா நல்லதுன்னுதான் அந்த வரனைப் போய்ப் பார்த்துட்டு வந்தோம்.''

''அம்மா, எனக்கு அந்தப் பெண்ணை...'' - தோசை விள்ளலை விழுங்க முடியாமல் தடுமாறினான் கோதண்டம்.

''ரொம்ப அழகா இல்லேன்னு சொல்றே... அழகு சாப்பாடு போடுமா என்ன? குடும்பத்துப் பின்னணியும் பெண்ணின் குணமும்தான் நமக்கு முக்கியம். எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. ரொம்பப் படிச்ச பெண்ணா இல்லைன்னு கவலைப்படாதே. நம்ப வீட்டுக்கு வந்தப்புறம் காலேஜில் சேர்த்துப் படிக்க வச்சுடலாம்.''



கூடத்தில் இருப்புக் கொள்ளாதிருந்த சபேசன் மெள்ள உள்ளே தலையை நீட்டினார். மௌனமாக மகன் தோசையைப் பிட்டு விழுங்குவதைக் கண்டார்.

''நீங்களும் இப்படி வந்து உட்காருங்கள். தோசை சாப்பிட்டுக் கொண்டே பிள்ளைக்குப் புத்தி சொல்லுங்கள்.''

வரப்போகிற சம்பந்தி வீட்டில் சபேசன் டிபனை ஒரு பிடி பிடித்து விட்டிருந்தார். நெய்பக்கோடா மூக்கு வழியே கொட்டிவிடும் போன்று வயிறு முட்டிக் கொண்டிருந்தது. ஆனாலும் மனைவி வார்த்துப் போடும் பட்டுப் பட்டான தோசையை நினைத்ததும் அவர் நாக்கு ஊறியது.

தட்டின் முன் உட்கார்ந்தார். நெய் மணத்தோடு சூடாகத் தோசை பட்டென்று விழுந்தது. உற்சாகத்துடன் பேச ஆரம்பித்தார்.

''நாளைக்கு அந்த மனுஷன் இங்கே வந்து நிற்பார். நாம் பதில் சொல்லியாகணும். பெண் கொஞ்சம் கறுப்பு. அவ்வளவுதான். ஆனால் எப்பேர்ப்பட்ட இடம்! அதை நாம் யோசிக்க வேண்டாமா? வலுவில் வந்த சீதாதேவி போல வந்திருக்காள். நாம் அசட்டை செய்கிறது பிசகு. சம்பந்தி என்கிட்டே பேசினார். பெண்ணுக்குப் பங்களா ஒண்ணும் காரும் சீதனமாகத் தந்துவிடப் போவதாக அவரே முந்திக் கொண்டார். வரதட்சணையில் அவருக்கு நம்பிக்கை இல்லையாம். கோதண்டம் இப்பத்தானே வேலையில் சேர்ந்திருக்கான்? இவன் சம்பாதிக்கிறதை வைத்துக் கொண்டு மாலதி கல்யாணத்தை முடிக்கணும். சின்னவன் தன் காலை ஊன்றி நிற்க உதவணும். நமக்குன்னு ஒரு வீட்டை வாங்கிக்கணும். இதெல்லாம் சாத்தியப்படற சங்கதியா?'' - அதட்டலாகக் கேட்டார் அப்பா.

''நம்ம பையனை அவருக்கு ரொம்பப் பிடிச்சுப் போயிட்டதாம். அந்த அத்தைக்காரி என்கிட்டே ரகசியமாய்ச் சொன்னாள். நாம் இதற்கு மேல் ஏன் மீன மேஷம் பார்க்கணும்?'' - அம்மா பொரிந்து கொட்டினாள்.

கௌரிக்கு ஒரு விசேஷ குணம் இருந்தது. தனக்குப் பிடித்த காரியத்தை எப்படியாவது நிறைவேற்றி விடுவாள். முதலில் முடியாது என்று மறுத்த கோதண்டத்தை இருபத்து நான்கு மணி நேரத்திலே மாற்றி விட்டிருந்தாள்.

# 2

மறுநாள் மாலை பென்ஸ் காரில் வந்திறங்கிய நீலகண்டன் காலில் போட்டிருந்த ஷூவைக் கழற்றாமல் அப்படியே நடுக்கூடத்தில் வந்து அமர்ந்தார்.

''என்ன, பெண் பிடிச்சிருக்கு இல்லையா?'' -தானே புன்முறுவலுடன் ஆரம்பித்தார்.

சமையல் அறை வாயிற்படியில் நின்றபடி அடிக் குரலில் சொன்னாள் கௌரி. ''எங்களுக்கு பிடிச்சிருக்கு, மற்ற விஷயங்களை இவர் வந்து உங்ககிட்டே பேசுவார்.''

''அதுக்கென்ன, பேஷா வரட்டும். மாப்பிள்ளைகூட வந்து தேவைப்பட்டதைப் பேசலாம். எனக்கு ஆட்சேபணை இல்லை.'' - மனிதர் அட்டகாசமாகச் சொன்னார்.

கோழிக்குஞ்சை அப்படியே கூடையைப் போட்டு அமுக்கி விட்டதுபோல் கோதண்டத்தின் சுதந்திரத்தைப் பெற்றோர்கள் ஒரேயடியாக அமுக்கி விட்டனர். பெற்றவர்களிடம் மதிப்பு வைத்திருக்கும் சாதுவான பிள்ளை அவன்.

அந்த இடத்தில் மித்திரன் இருந்திருந்தால், 'போங்கள், பங்களாவும் வேண்டாம், காரும் வேண்டாம். எனக்குப் பிடிச்ச பெண்தான் வேணும்' என்று முரண்டு பிடித்திருப்பான். ரொம்ப அதட்டினால் வீட்டை விட்டு வெளியேறி, எவளையாவது தைரியமாகப் பதிவுத் திருமணம் செய்து கொண்டு விடுவான். அப்படிப் பட்டதொரு அடங்காப் பிடாரி.

கோதண்டம் சாதுப் பையன். பெற்றோர்கள் மாற்றி மாற்றிப் பேசியதில் மயங்கிப்போய் முடிவில் ஒப்புக்



கொண்டான். அவன் வாயைத் திறக்காமல் எல்லாவற்றிற்கும் பெருமாள் மாடு மாதிரி தலையாட்டத் தொடங்கி விட்டான்...

கல்யாணம் நிச்சயமான பின்புதான் நீலகண்டன் தன் சுய ரூபத்தைக் காட்டத் தொடங்கினார்.

சாதாரணமாக, பெண்ணைப் பெற்றவர்கள்தான் கல்யாணம் நடந்தேறினால் போதும் என்று கேட்டதற்கெல்லாம் ஆடுவார்கள். இங்கே நிலைமை தலைகீழாக இருந்தது.

வரதட்சணைக்குப் பதில் கைச்செலவுக்கென்று நீலகண்டன் இருபதாயிரத்தை அலட்சியமாக வீசி விட்டுப் போயிருந்தார்.

அத்தனை பணத்தையும் ஒட்டு மொத்தமாகக் கௌரி பார்த்ததே இல்லை. சந்தோஷம் பிடிபடவில்லை அவளுக்கு.

''பெண்ணுக்குப் போட்டிருக்கிற வைரத்தோடு சின்னதாக இருந்தது. நாம் ஒண்ணு பெரிசா ஆர்டர் கொடுத்துடுவோம். நம்ப நாகபூஷணம் ஜுவல்லர்ஸ் கிட்டே பொறுக்கி எடுத்துக் கட்டச் சொல்லி விடுவோம். அவர் பில்லைக் கொடுத்தால் போதும்'' என்று யோசனை சொன்னாள்.

''வைரத்தோடு ஒண்ணு பெண்ணுக்கு நாங்க பார்த்துக் கட்டிப்போடப் பிரியப்படறோம்.'' சபேசன் சம்பந்தியை டெலிபோனில் தொடர்பு கொண்டார்.

''ஓகே'' என்று அமர்த்தலாக மனிதர் கூறிவிட்டு டக்கென்று போனை வைத்து விட்டார்.

கௌரியும் சபேசனும் கடைக்குப் போனார்கள். மனத்துக்குப் பிடித்தபடி கற்களைப் பொறுக்கிக் கொடுத்துக் கட்டச் சொல்லி விட்டாள் கௌரி.

இரண்டு வாரத்தில் நகைக் கடைக்காரர் புன்னகையும் தோடுகள் கொண்ட பெட்டியுமாக வந்து நின்றார்.

''இருபத்தைந்தாயிரம்'' என்று அவர் தந்த பில்லைக் கண்டு பயந்து போனாள் கௌரி.

நகைப் பெட்டியைக் கணவர் கையில் கொடுத்து, சம்பந்தி வீட்டுக்கு உடனடியாக விரட்டினாள்.

காலை வேளை, நீலகண்டன் அலுவலகம் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

ஆட்டோவினின்றும் இறங்கி, சலாம் போட்ட கூர்க்காவுக்குப் பல் காட்டி, உறுமிக் கொண்டு வந்த நாயை வேலையாள் இழுத்துப் பிடித்துக் கட்ட, பயத்தால் வேர்த்து விறுவிறுத்துப்போய் மெள்ள வராந்தாவைத் தாண்டி உள்ளே சென்றார்.

''யார் வந்திருக்கிறது?''- மாடியிலிருந்து சிம்மக் குரல் கொடுத்தார் நீலகண்டன்.

''சம்பந்தி வந்திருக்கார். என்னவோ பேசணுமாம்'' வேலையாள் மென்று விழுங்கினான்.

''உட்காரச் சொல், வந்துட்டேன்'' மறுபடியும் ஓர் உறுமல் மாடியினின்று கேட்டது.

வேலைக்காரன் காட்டிய சோபாவில் சபேசன் அமர்ந்து கொண்டார். ஏனோ அவர் நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டது. சமையற்காரர் கொண்டுவந்து வெள்ளி டம்ளரில் வைத்த காப்பியை மடக் மடக்கென்று குடித்தார்.

மரியாதையை உத்தேசித்து வீட்டிலே இருக்கும் அந்த அத்தைக் கிழவிகூட எட்டிப் பார்க்கவில்லை.

சுவரில் தொங்கிய சித்திரங்களையும் தலைக்குமேல் இருந்த சர விளக்கையும் மாறி மாறிப் பார்த்துக் கண் பூத்துப் போனவராகக் காலடி ஓசையை எதிர்பார்த்து உட்கார்ந் திருந்த சபேசனுக்கு ஒரு யுக காலம் ஓடி விட்ட பிரமை. கனத்த பூட்ஸ் காலடி ஓசையும் தொடர்ந்து தொண்டையைச் செருமும் சப்தமும் கேட்டது.

''குட்மார்னிங்' என்றபடி சம்பந்தி நீலகண்டன் எதிரே வந்து உட்கார்ந்து, கால்மேல் கால் போட்டுக் கொண்டார்.



சபேசனுக்கு வியர்வை நெற்றியில் வடிந்தது. நா வறண்டு போனது.

''வைரத் தோடு செய்தாகி விட்டது. கௌரி உங்க கிட்ட காட்டிவிட்டு வரச் சொன்னாள்.''

''பேஷ்'' என்றபடி, கையில் பெட்டியை வாங்கித் திறந்து பார்த்தார். ''நன்றாக இருக்குன்னு சொல்லுங்க'' என்றார் நீலகண்டன்.

''பில்லையும் உங்ககிட்ட கொடுத்து... காசு வாங்கிட்டு வரச் சொன்னாள். நகைக் கடைக்காரருக்கு பில்லை உடனே செட்டில் பண்ணியாகணும்...'' சொல்லி முடிப்பதற்குள் சபேசன் குறுகிப் போனார்.

''நான் ஏன் இந்த பில்லுக்குப் பணம் தரணும்? தேவையில்லை. நீங்க பெண்ணுக்கு வேறே ஒரு செட் வைரத் தோடு போட ஆசைப்பட்டீர்கள். செஞ்சு போடுகிறீர்கள். நான் அவளுக்கு அவளோட அம்மாவின் நகை அத்தனையும் கொடுக்கப் போறேனே, இது வேறே எதுக்கு? எங்களுக்கு வேண்டாம்னு உங்க மனைவி கிட்டே சொல்லுங்கள்'' என்றார் கடுமையான குரலில்.

காப்பியடித்து விட்டு, கல்லூரிப் பரீட்சை மேல் அதிகாரியின் கடுமையான பார்வையில் அகப்பட்டு விட்டவர் போல கதி கலங்கிப் போனார் சபேசன்.

இந்தக் கௌரி ஏன் இப்படி ஒரு தவறு செய்தாள்? பேராசை பெரும் நஷ்டமாகி விட்டிருக்கே.

''என்ன யோசிக்கிறீர்கள்? லௌகிகமெல்லாம் அப்பவே பேசி முடிச்சிட்டோம். அது இதுன்னு பின்னால் தொல்லை கொடுக்கக் கூடாதுன்னு கண்டிப்பா நான் சொன்னேன். தலையை ஆட்டினீர். இப்போ ஒரு ஜதை தோட்டோடு வந்து நின்றால் என்ன அர்த்தம்? உங்களுக்குக் கல்யாணத்துக்கு ஒரு பெண் இருக்காளே அவளுக்குப் போடுங்கள்'' டக்கென்று எழுந்து நின்றார் அவர்.

''எனக்கு ஆபீசுக்குப் போற நேரம். வரட்டுமா?'' கூறி விட்டு வேகமாகத் திரும்பினார்.

வெட்கத்தில் ஒரு சாணாகக் குறுகிப் போன சபேசன் மெல்ல எழுந்து நடந்தார்.

ஒப்புக்குக்கூட, ''இருங்கள், ஆபீஸ் போற வழியில் உங்களைக் கொண்டு விட்டு விட்டுப் போகிறேன்'' என்று சொல்லவில்லை.

சபேசன் வெளியே வருமுன்பு நீலகண்டனின் பென்ஸ் சாலைக்குள் மறைந்து விட்டது.

வெய்யில் விழுந்து மண்டையைப் பிளக்கத் தள்ளாடிக் கொண்டு ஆட்டோ ஒன்றைப் பிடித்து வீட்டுக்கு வந்து சேர்ந்தார் சபேசன்.

உங்களுக்குப் பேசத் தெரியலை. நான்கூட வந்திருந்தால் அவரை நன்றாய் மடக்கி இருப்பேன். என்ன நினைச்சுக் கொண்டிருக்கார் மனுஷன். அவர் பொண்ணுக்குச் செய்த நகைக்கு நாமா பணம் கட்டணும்? இருபத்தஞ்சாயிரத்துக்கு நாம் எங்கே போவோம்?''

அவள் கூச்சல் போட்டதுதான் மிச்சம். கணவனும் மனைவியுமாக மறுபடி நீலகண்டன் பங்களாவுக்குப் போனது வெட்கக் கேடாக முடிந்தது.

''கறுப்புப் பெண்ணைப் பெற்றுவிட்டும் மனுஷனுக்கு ரொம்ப அகம்பாவம். பணத்திமிர்! கண்டிப்பாகப் பேசிட்டாரே! தோட்டுக்குப் பணம் தர முடியாதுன்னு அனுப்பிட்டாரே! கல்யாணத்தை நிறுத்தி நாம் அவரை அவமானப் படுத்தினால்...'' வீட்டில் கத்தி ரகளை செய்தாள் கௌரி.

''அந்த மனிதன் நம்மைச் சும்மா விடமாட்டார். மான நஷ்ட வழக்குத் தொடுத்து சந்தியில் நிறுத்தி விடுவார்.'' சபேசன் பதற்றத்துடன் குமுறினார்.

''தொலையட்டும். பெண்ணுக்குச் சீதனமாக பங்களா கொடுக்கப்போறாரே, அத்தோட திருப்தியடைவோம்''



என்று அடங்கிப் போன கௌரி, நீலகண்டன் கொடுத்த இருபதாயிரத்துடன் தங்கள் கையிலிருந்து ஐயாயிரத்தைப் போட்டுத் தோட்டுக் கடனை அடைத்து, பின்னர் புடவைகள் வாங்க ஒரு பத்தாயிரம்கடன் வாங்கிக் கொண்டு அதை மெள்ள மெள்ள அடைத்துக் கொண்டு வருவது வேறு ஒரு பெரிய கதையாகி விட்டது.

மருமகளுக்குச் செய்த தோடுகளைத் தன் காதுகளில் அணிந்துகொண்டு கடன் வாங்கி எடுத்த பட்டுச் சேலைகளை உடுத்திக்கொண்டு நீலகண்டன் தன் மகளுக்குத் தந்த பெரிய பங்களாவில் பணக்கார வேஷத்துடன், எல்லோரையும் மிரட்டிக் கொண்டு கௌரி வளைய வந்து கொண்டிருந்தாள்.

வரவேற்பறையிலிருந்து போன் திடீரென்று அலறியதும் திடுக்கிட்டு எழுந்தார் சபேசன்.

அந்த வீட்டின் வாயிற் கதவு மணி கிணு கிணுத்தாலும் சரி, போனில் யாராவது கூப்பிட்டாலும் சரி அவர்தான் ஓடிச் சென்று கவனிக்க வேண்டும்.

''வாசல்லே யார் மணியடிக்கிறதுன்னு பார்க்கக் கூடாதா?'' கௌரி முணுமுணுப்பாள். முகத்தாலடிப்பாள்.

''ஏம்பா, முன்னறையில் உட்கார்ந்து பேப்பர் படிக்கிறீங்க. போன் வந்தா யார்னு கேட்டா குறைஞ்சா போயிடுவீங்க?'' சின்னப் பிள்ளை சீறுவான்.

பயிற்சிக் காலத்திலே அந்த ஆடிட்டிங் நிறுவனம் பாவம் என இரங்கித் தரும் நூறு ரூபாய் காசு கையில் கிடைத்ததும் பிள்ளை ரொம்பவே துள்ளத் தொடங்கி விட்டிருந்தான். இன்னும் பரீட்சைகளில் பாஸாகி சி.ஏ. பட்டம் கிடைத்து ஏதாவது ஒரு கம்பெனியில் தொற்றிக்கொண்டு விட்டபின் அவனது அட்டகாசத்தை அவரால் பொறுக்க முடியுமோ?

மாலதி படுசோம்பேறி. கதைப் புத்தகத்துடன் கைவிரல் நகத்தைக் கடித்துக்கொண்டு சோபாவில் சாய்ந்து விட்டால் உலக நினைப்பு அவளுக்குக் கொஞ்சமும் இருக்காது.

''போன் அடிச்சதா? நம்ப வீட்டு போனா?'' என்று மெள்ள விசாரிப்பாள்! அவளை அதட்டினால் கௌரி பரிந்து கொண்டு சண்டைக்கு வந்து விடுவாள்.

வீட்டுக்கு வந்திருக்கும் மருமகள் ரம்யா, பாவம். அவளுக்கு நாள் முழுவதும் சரியான வேலை. அவளது அப்பாவைத் தண்டிக்க முடியாது, அந்தக் கோபத்தை வட்டியும் முதலுமாக அந்தப் பெண் மீது கௌரி காட்டிக் கொண்டிருந்தாள்.

''சமையலுக்கு உங்க வீட்டைப்போல இங்கே ஆள் கிடையாது. நீதான் கவனிக்கணும்'' என்று வந்த அன்றைக்கே அந்தப் பெண்ணின் கையில் கரண்டியைக் கொடுத்து விட்டாள்.

மருமகளுக்காகச் சபேசன் உள்ளூர இரக்கப்பட்டார். ஆனால் வாயைத் திறக்க முடியவில்லை.

பெரிய மனிதர் வீட்டுப் பெண்தான் ரம்யா. ஆனால் அந்த வீட்டில் மாடாய் உழைத்தாள். முணுமுணுக்கக்கூட தெரியாத வெகுளி, பாவம்!

பலவும் எண்ணிக்கொண்டு வேகமாக உள்ளே சென்று போனை எடுத்தார் சபேசன். விடியற்காலையில் யாராவது போனில் அழைத்தால் அவருக்கு ரொம்பவே அச்சம். தெரிந்தவர்கள், உறவினர்கள் யாராவது இறந்து போயிருந்தால்தான், விடிந்ததும் விடியாததுமாகச் சாவுச் செய்தியைச் சொல்லித் தொலைப்பார்கள்.

வியாபார விஷயமாகப் போயிருந்த கோதண்டம் கூப்பிடுகிறானோ? இருக்காது. அவன் அப்பா பயப்படுவார் என்று சாவகாசமாகப் பத்துமணி அளவில்தான் அழைப்பான்.

போனை நடுக்கத்துடன் எடுத்தார். மறுபுறம் தொனித்த குரல் அவரை மேலும் நடுங்க வைத்தது.



''நீலகண்டன் பேசறேன். ரம்யாவைக் கொஞ்சம் கூப்பிட முடியுமா?'' அதட்டலாகத் தொனித்த குரலைக் கேட்டதும் சபேசன் நடுங்கிப் போனார்.

அவர்கள் வீட்டிலிருந்த அத்தை செத்து விட்டாளோ...

''ரம்யா கொஞ்சம் பிசியா இருக்காள். சங்கதியைச் சொன்னால்...'' மிகவும் குழைவாகத்தான் கேட்டார்.

''ரம்யா கிட்டே நான் நேரே பேச வேண்டிய சங்கதி - அவளைக் கூப்பிடுங்கள்.'' உறுமினார் நீலகண்டன்.

சப்தநாடியும் ஒடுங்கிப் போனார் சபேசன். சம்பந்தியுடன் அவர் சண்டையிட்டு மனத்தாங்கலைப் பெற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அவரிடமிருந்து இன்னும் எத்தனையோ சீர்வரிசைகளை எதிர்பார்த்துக் கொண்டு கௌரியே வாயை மூடிக்கொண்டு இருக்கும்போது அவரால் எகிற முடியாது.

துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு சமையலறைப் பக்கம் விரைந்தார். அடுப்பில் குக்கரை ஏற்றி விட்டுத் திரும்பிய ரம்யா, மாமனாரைக் கண்டு மெலிதாக முறுவலித்தாள்.

''இன்னும் கொஞ்சம் காப்பி வேணுமா? புதுப்பால் வந்திருக்கு. கலந்து தரட்டுமா?'' மிகவும் அன்போடு கேட்டாள்.

''உங்கப்பா போனில் கூப்பிடறார். உன்னோட பேசணுமாம்,'' என்றார்.

''அப்பாவா?'' என்று கேட்ட ரம்யா, அடுப்பை அணைத்து விட்டு முன்பக்கம் ஓடி விட்டாள்.

அப்பா என்றால் அவளுக்கு உயிர். அப்பாவின் பேச்சு வேத வாக்கு. அவர் அவளுக்குத் தெய்வம். அப்படி வளர்ந்தவள்.

''என்னம்மா ரம்யா. சௌக்கியமாத்தானே இருக்கே?''

''நல்லா இருக்கேன். உங்களுக்கு உடம்புக்கு என்ன?''

''ஒண்ணுமில்லை, ரெண்டு நாளா ஜுரம். நீ வந்து இங்கே இருந்தா தேவலை போலிருக்கு. பத்து மணிக்குக் கார் அனுப்பறேன், நீ உடனே புறப்பட்டு வந்துடு.''

''மாமியார்கிட்டே உத்தரவு கேட்டுக் கொண்டு வரேன் அவர்கூட ஊரில் இல்லை...''

''ரொம்ப நல்லதாப் போச்சு. மாப்பிள்ளை இல்லாத போது நீ அவர்களுக்கு சேவகம் செய்து கொண்டு இருக்கத் தேவையில்லை. உன் துணிமணிகளை ஒரு பெட்டியில் போட்டுக் கொண்டு தயாராய் இரு. கார் வரும்'' அப்பா உத்திரவிட்டபடி போனை வைத்தார்.

''என்னத்துக்கு உன் அப்பா இந்த விடிகாலை வேளை கூப்பிட்டாராம்?'' அதட்டினாள் கௌரி.

''அவருக்கு உடம்புக்குச் சரியில்லை. நான் வந்து ரெண்டு நாள் கவனிச்சிக்கணுமாம்.''

''புக்ககத்திலே இருக்கிற பெண்ணைத் திடீர்னு கூப்பிட்டா என்ன அர்த்தம்?'

''நீங்க உத்திரவு கொடுத்தால் நான் போய் இருந்துட்டு வர ஆசைப்படறேன்.''

சபேசன் மனைவியைக் கண்களால் சாடை செய்தார்.

நடை பக்கம் வந்து நின்ற மனைவியிடம் கிசுகிசுத்தார்.

''உடம்புக்குச் சரியில்லைன்னு கூப்பிட்டிருக்கிறார். தடுக்காதே. போய்வரட்டும். இது முள் மேலே போட்ட சேலை. மெள்ளத்தான் இந்தச் சம்பந்தியைச் சமாளிக்கணும். மனத்தாங்கல் பட்டுக் கொண்டால் நஷ்டம் நமக்குத்தான், தெரிஞ்சுக்கோ. பெண்ணுக்கு எல்லாம் கொடுத்தாச்சு. இனி அந்தக் குடும்பத்துக்கு நாம் ஏன் தரணும்னு கோபம் வந்து தன் பங்களா, பாங்க் அக்கௌண்ட் எல்லாத்தையும் ஏதாவது தான தர்மத்துக்கு எழுதி வச்சாலும் வச்சுடுவார். மனுஷன் அப்படிப்பட்டதொரு கோபக்காரன். 'பிறந்த வீட்டுக் குத்தானே? போய்ட்டு வாம்மா'ன்னு சந்தோஷத்தோட அனுப்பு. கல்யாணமாகி இங்கே வந்து ஒரு வருஷமாகிறது. பாவம் ரம்யா! அப்பாவைப் பார்க்க நாலு தடவை போயி ருக்கா. அவரும் ஒரு ஆறு தடவை இங்கே வந்திருப்பார். உள்ளூரிலே பிறந்த வீட்டை வைத்துக் கொண்டு ஒரு பெண்



தன் அப்பாவைப் பார்க்கப் போக ஆசைப்படாமல் இருப்பாளா சொல்லு'' ரம்யாவுக்குப் பரிந்தார்.

கணவனைக் கடுமையாக உறுத்துப் பார்த்து விட்டுப் பற்களைக் கடித்துக் கொண்டு ''போயிட்டு வா. பத்து மணிக்குத்தானே புறப்படப் போறே? அதுக்குள்ளே சமையலை முடிச்சுட்டு எல்லோருக்கும் சாப்பாடு போட்டு, சமையலறையை ஒழிச்சி, சுத்தப்படுத்திட்டுக் கிளம்பு. எனக்குக் கார்த்தால இருந்து ரொம்பக் களைப்பா இருக்கு. ஏன்னு தெரியலை. நாளைக்கு டாக்டரைப் போய்ப் பார்க்கணும்'' என்று உத்திரவிட்டாள்.

''சரியம்மா. அப்படியே செய்கிறேன்...'' ரம்யா புன்னகைத்தபடி உற்சாகமாக உள்ளே ஓடி மறைந்தாள்.

வீட்டு வேலை அனைத்தையும் முடித்துவிட்டுப் பத்து மணிக்கு வாசலில் வந்த காரில் பெட்டியுடன் ஏறிக் கொண்டாள் ரம்யா.

''இந்த மனுஷன் என்ன நினைச்சுக் கொண்டிருக்கார்? பெண்ணைக் கொடுத்துவிட்டு அதிகாரம் வேறே. இதற்கு ஒரு முடிவு கட்டணும்'' கோபத்துடன் கணவனை முறைத்தாள் கௌரி.

# 3

**சா**ப்பாட்டிற்குப் பின்னர் பத்திரிகைகளை மேலெ முந்த வாரியாகப் புரட்டிவிட்டு மித்திரன் படுக்கையில் உறக்க மயக்கத்தில் புரண்டு கொண்டிருந்தான்.

ஞாயிற்றுக்கிழமைகளில் பகல் ஒரு மணிக்கு அவனுக்கு நல்ல டிபனும் காப்பியும் தேவைப்பட்டன.

விதவிதமாகச் சமைத்துப்போட அண்ணனுக்கு ஓர் அசட்டு மனைவி அகப்பட்டது அவன் காட்டில் பெருத்த மழை.

திடுக்கிட்டு விழித்துக்கொண்டான் மித்திரன். பகல் மணி இரண்டைத் தாண்டி விட்டிருந்தது. முகத்தைக் கழுவி

முடியைச் சீர்திருத்திக் கொண்டு, மெல்ல வெளியே வந்தான்.

அடுப்புக்குள் பூனை தூங்குவது போன்றதொரு அமைதி சமையலறையில் நிலவியிருந்தது. வாசலுக்கும் உள்ளுக்கும் அலைந்து ஓய்ந்துபோன சபேசன் முடிவில் முன்னறை சோபாவிலேயே குட்டித் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டிருந்தார். தலை மீது ஒரு துண்டை இறுக்கிக் கட்டிக் கொண்டு உப்பிய முகத்துடன் வெளிப்பட்ட கௌரி எதிர்ப்பட்டவர் மீது எரிந்து விழத் தயாரானாள்.

அதுசமயம் முன்னறையிலிருந்த தொலைபேசி அன்று இரண்டாவது முறையாகக் கிணுகிணுத்தது.

''யாராவது போய் எடுக்கப்படாதா?'' அம்மா கூச்சலிட்டு விட்டு முகத்தைக் கழுவித் துடைத்துப் பொட்டிட்டுக் கொண்டு, முடியை வாரி முடித்துக்கொண்டு பின்னர்தான் சமையலறைப் பக்கம் போவதாக இருந்தாள். சாதாரணக் குடும்பத்திலிருந்து வந்தவள். மிகவும் சாதாரணமானதொரு குடும்பத்தில் வாழ்க்கைப் பட்டவள்.

காலையிலிருந்து இரவு படுக்கப் போகும்வரை அடுப்படியிலேயிருந்து அத்தனை பேருக்கும் சமைத்துப் போட்டுக் குடும்பத்தை நிர்வகித்து அலுத்துப் போய் விட்டிருந்தாள்.

பிள்ளை நன்றாகச் சம்பாதிக்கத் தொடங்கியதும் சமையலுக்கு ஆள் போட்டு விடவேண்டுமென்று எண்ணியிருந்தாள். கோதண்டத்தின் சம்பாத்தியத்திற்கு அது கட்டுப்படியாகாத சங்கதியாக இருந்தது.

பணக்கார வீட்டிலிருந்து ரம்யா பங்களாவையும் அதை நிறைத்த சாமான்களையும் கொண்டு வந்திருந்தாள். நீலகண்டன் என்ன பாண்டியமன்னனா? சோழனுக்குப் பெண்ணைக் கொடுத்து, கூடவே சீதனமாக ஒரு புலவரை அனுப்பியதுபோல, சமையற்காரர் ஒருவரைப் பங்களா



வோடு அனுப்ப? அத்தனை பெரிய பங்களாவை நிர்வகிக்க வேண்டிய பொறுப்பும் சமையல் வேலையும் அவளுக்குத் தாங்க முடியாமல் போகவே, மருமகள் வந்த சில நாட்களிலேயே எல்லாவற்றையும் அவளிடம் தந்து விட்டு மூட்டுவலி, தலைவலி, வயிற்றுவலி என்று பல நோய்களை வரவழைத்துக் கொண்டு வீட்டிற்குள் வளைய வந்தபடி எல்லோரையும் அதிகாரம் செய்து வாழ்ந்து கொண்டிருந்தாள்.

''அம்மா, டிபனுக்கு என்ன பண்ணப் போறீங்க?''

''போன் அலறுதே. போய் அதை முதல்லே எடு.'' எரிந்து விழுந்தாள்.

''அப்பா என்ன பண்றார்? அவர் வேலை அது.'' என்றான் மகன்.

சொப்பன உலகிலே சுற்றிக் கொண்டிருந்த சபேசன் திடுக்கிட்டு விழித்துக் கொண்டார். போன் அவரது காதை அறுத்தது.

ஹைதராபாத்திலிருந்து கோதண்டம் கூப்பிட்டான். ''அப்பாவா? எல்லாருமே சௌக்கியந்தானே? ரம்யாவைக் கூப்பிடுங்கள், பேசணும்.'' என்றான்.

''ரம்யா பிறந்த வீட்டுக்குப் போயிருக்காள். சம்பந்திக்கு லேசா ஜுரம். ரெண்டு மூணு நாள் அங்கேயே இருப்பாள்.''

பேசி முடிக்குமுன் கையில் பிடித்திருந்த ரிசீவரை வெடுக்கென்று கௌரி பிடுங்கிக் கொண்டாள். ''கோதண்டம், அம்மா பேசறேன். சம்பந்தி விடியுமுன்பே கூப்பிட்டார். என்கிட்டே கூடக் கேட்கலை. நேரே பெண்ணுக்கு உத்திர விட்டார். அவள் உடனே கிளம்பிவிட்டாள். உனக்கு போன் போட்டுக் கேட்கணும்னு அந்த அசடுக்குத் தோணலை.''

லேசாகச் செருமினான் கோதண்டம். மறுபக்கத்தில் கோபம் வந்து விட்டது என்பதைக் கௌரி புரிந்து கொண்டு விட்டாள். ஆரம்ப காலத்தில் கல்யாணமான புதிதில் மனைவியை வெளியே அழைத்துப் போகச் சொல்லி அவள் மிகவும் மன்றாட வேண்டியிருந்தது.

கடமைக்குக் கல்யாணம் செய்து கொண்டு கோதண்டம் கொஞ்ச காலத்திற்குப் பின் வேண்டாம் என்று அந்தப் பெண்ணை உதறிவிடுவானோ, விவாகரத்து செய்து விடுவானோ என்றெல்லாம் பயந்தாள்.

முகத்தைச் சதா தொங்கப்போட்டுக் கொண்டு எதையோ பறி கொடுத்தவன் போல இருந்த மகனை உற்சாகப்படுத்த பட்டபாடு...

''காரை எடுத்துக் கொண்டு பீச்சுக்கு ரம்யாவோட போய்ட்டு வாயேன். இன்னிக்குத் திலகா தியேட்டரில் புதுசா ஒரு இங்கிலீஷ் படம் ஓடுதாம். ரம்யாவோட போய்ட்டு வாயேன்.''

'ரம்யாவுக்கு அரிசி உப்புமா பிடிக்காதாம். தெரியாத் தனமா அதை இன்னிக்கு டிபனுக்குப் பண்ணிட்டேன். ஞாயிற்றுக்கிழமைதானே! ஈட்டிங் ஹவுஸுக்குப் போய்ட்டு வா.அங்கே பிரமாதமான சன்னா பட்டோரா செய்ய றாங்களாம். மித்திரன் சொன்னான். அவன்தான் பெரிய சாப்பாட்டு ராமனாச்சே?'' - இப்படிச் சொல்லி, ஒரு சில நாளில் அவன் போக்கையே மாற்றி விட்டிருந்தாள்.

அதன் பயன்? கோதண்டத்திற்கு ரம்யாதான் உலகம் என்று மாறிப் போய்விட்டது.

'அம்மா, வரட்டுமா!' என்று வேலைக்குப் போகுமுன் சொல்லி விட்டுப் போகிற பிள்ளை, இப்போது ரம்யாவிடம் சொல்லி விட்டுப் போகத் தொடங்கியிருந்தான்.

'ரம்யா என்ன சொன்னாள்? ரம்யாகிட்டே கேட்டீங் களா?' என்று அவளது அபிப்ராயங்கள் முக்கியமாகி விட்டன.

''நானும் வீட்டில் இல்லை. வீட்டோட கட்டிப் போட்டாப்பல அவளுக்கு இருந்திருக்கும். பிறந்தகத்துக்கு இந்தச் சாக்கை வைத்துக் கொண்டாவது போய்விட்டு வரட்டும். மெதுவா வரட்டும். நீங்க கூப்பிட்டுத் தொந்திரவு பண்ண வேண்டாம்.''



முகம் சிவந்து, கோபம் மூச்சை அடைக்க சட்டென்று பதில் சொல்ல முடியாமல் திணறிப் போனாள் கௌரி. ''சரி...'' என்று கூறிவிட்டு மகனிடம் மேலும் எதுவும் கேட்காமல் போனை வைத்து விட்டாள்.

''கோதண்டம் என்ன சொன்னான்?'' மெல்லிய குரலில் கேட்டார் சபேசன்.

தலையை அழுத்திக் கொண்டிருந்த துண்டை அவிழ்த்து கை மடக்கில் போட்டுக் கொண்டாள். 'இந்த ரம்யாவுக்கே உங்க பிள்ளை இப்படி மயங்கிப் போய் ஆடறான்னா, இன்னும் ஒரு அழகான மோகினியோ ரம்பையோ வந்து வாச்சிருந்தா என்ன பாடு படுத்துவானோ தெரியாது. அம்மா கஷ்டப்படுவாளேன்னு எண்ணம் கொஞ்சமும் இல்லை. ரம்யா பிறந்த வீட்டிலே கொஞ்ச நாள் இருக்கட்டும் பரவா யில்லைன்னு அவளுக்கு ரெஸ்ட் கொடுத்துட்டான். அம்மா வுக்கு ஒரேடியா ரெஸ்ட் தரப் போறான்... பற்களைக் கடித்தபடி ஆவேசமாகக் குளியலறைப் பக்கம் விரைந்தாள்.

''டிபன் ஏதும் பண்ணப் போறதில்லையா?'' சமைய லறைக்குள் மறுபடியும் வந்து எட்டிப் பார்த்தான் மித்திரன்.

அம்மா முகத்திலே எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தன. ''எல்லோரும் ஹோட்டலுக்குப் போய்த் தின்னுங்கள்'' என்று அவர்கள் மூவரையும் அடித்து விரட்ட அவளுக்குப் பொருளாதாரம் இடம் கொடுக்கவில்லை.

''கொஞ்சம் இரு. ஏதாவது பண்ணித்தரேன்'' என்று அதட்டி விட்டு அடுப்பை மூட்டினாள் கௌரி.

தட்டுக்களில் சூடான பஜ்ஜியும் தொட்டுக் கொள்ள டொமாடோ சாஸுமாக எல்லோரும் டிபன் சாப்பிட அமர்ந்தார்கள். அம்மா இன்னமும் அடுப்படியில் அலண்டு கொண்டுதான் இருக்கிறாள் என்ற நிம்மதியில் சொன்னான் மித்திரன், ''கார்த்தாலே போன் வந்தப்போ அதை நான் எடுத்திருந்தால் சம்பந்திக்குச் சூடா பதில் கொடுத்தி ருப்பேன்.''

''உன்னைவிட அம்மாவக்குச் சூடா பதில் சொல்லத் தெரியும். ஆனால் சமய சந்தர்ப்பமும் தெரியும். அதுதான் வித்தியாசம்.''

''மாலதி, உங்களுக்கெல்லாம் துணிச்சல் கிடையாது. பணத்திற்குச் சலாம் போடுகிறவங்க நீங்கள். பெண்ணை அனுப்ப முடியாதுன்னு பட்டுனு சொன்னா அந்த நீலகண்டன் என்ன பண்ணுவார்?''

''உடனே காரில் புறப்பட்டு வந்து உடனடியாக அழைத்துக் கொண்டு போயிடுவார். அத்தனை திமிர் பிடிச்ச ஆசாமி அவர்.''

''அங்கேயே பிறந்த வீட்டில் கிடக்கட்டும்னு விட்டுட்டா?''

''நாம இந்தப் பங்களாவிலிருந்து நடுத் தெருவுக்கு நெட்டித் தள்ளி விடப்படுவோம்.''

''நீங்கள்ளாம் ரொம்பப் பயந்து சாகிறீங்கன்னு தெரிஞ்சு அந்த மனிதர் ரொம்பவே மிரட்டறார்.''

''மன்னி தன் பிறந்த வீட்டுக்குப் போகக் கூடாதுன்னு தடுக்கவோ- அவளை அதட்டவோ நம்மிலே யாருக்கும் உரிமை இல்லை.''

''ஏன் இல்லை? அவள் நம்ம வீட்டுப் பெண்.''

''மித்திரன், ரொம்பப் பேசாதே. மன்னியை அதட்டிட்டு நீ அண்ணாகிட்டே வாங்கிக் கட்டிட்டது எனக்குத் தெரியாதா?''

தாடை இறுகிப் போனான் மித்திரன். மாலதிக்கு அது தெரியாது என்று எண்ணியிருந்தான். அந்த நிகழ்ச்சியை எப்படியோ அவள் பார்த்து விட்டிருக்கிறாள். வேறே வேலையென்ன? சதா காதல் நாவல்களைப் படித்துக் கொண்டு நகத்தைக் கடித்தபடி வீட்டில் உள்ளவர்கள் பேசுவதை ஒட்டுக் கேட்டுக்கொண்டு... இவள் ஒரு திமிர் பிடித்தவள்.



''ஏன் பேச்சே அடங்கிப் போச்சு?'' குத்தினாள் ஊசியாக மாலதி.

''அண்ணா பெரியவர்னு மரியாதைக்கு அன்னிக்கு ஒதுங்கிப் போனேன். அண்ணாவிடம் சில சங்கதிகளை எடுத்து விட்டிருந்தால் அப்படியே வாயைப் பொத்திக் கொண்டு நகர்ந்திருப்பார்.''

''அது என்ன சங்கதி என்னிடம் சொல்லு பார்க்கலாம். ஒரு சமயம் எனக்குத் தெரிஞ்சதாக இருக்கும்.''

''இது நம்ப வீட்டில் நடக்கும் சங்கதியில்லே. உனக்குத் தெரியவே வழியில்லை. சொல்லமாட்டேன். சமயம் வரும். எடுத்துப் போடுவேன் குண்டுகளை.''

''போதும். வீட்டிலே எல்லாரும் இருந்தால் இப்படி விவாதமும் வீண் சண்டையும்தான் காதில் படுகிறது. மாலதி, சட்டுனு சாப்பிட்டு எழுந்து கூடமாட உதவி செய்'' என்று அதட்டினாள் அம்மா.

முகத்தை வலித்துக் கொண்டு எழுந்தாள் மாலதி.

கையைக் கழுவிக்கொண்டு துண்டால் வாயைத் துடைத்தபடி நடையில் வந்த சபேசனுக்குத் தாங்க முடியாத ஆவல். ''என்னவோ உனக்குத் தெரியும்னு சொன்னியே? என்கிட்ட மட்டும் ரகசியமாகச் சொல்லு மித்திரன். நான் வாயைத் திறக்கமாட்டேன்'' -மெல்லிய குரலில் மகனிடம் குழைவாகக் கேட்டார்.

''உங்க கிட்டேயா, எனக்கு வேறே வினை வேண்டாம். முதல்ல இன்னிக்குச் சாயங்காலமே உங்க பீச்சு நண்பர் குப்புசாமி கிட்டே சொல்லுவீங்க. அவர் ஒரு பெரிய டமாரம். அடுத்த நாள் காலை இந்தப் பட்டணத்தில் உள்ள அத்தனை பேருக்கும் தெரிந்து போகும். வேண்டாம். காலம் வரும் காத்திருங்கள்'' என்று மிடுக்காகக் கூறி விட்டு வாசல் பக்கம் விரைந்து விட்டான்.

''ஆமாம். அந்தச் சங்கதி என்ன?''- தமது வழுக்கைத் தலையைச் சொறிந்து கொண்டு நின்றார் சபேசன்.

மித்திரன் தெருவைக் கடந்து சாலைக்குள் புகுந்தான்.

# 4

குளிர்கால மாலைப் பொழுது. சீக்கிரமே மங்கத் தொடங்கி விட்டது.

வீட்டில் இருப்புக் கொள்ளவில்லை. வெளியே போகவும் இடமில்லை என்றதொரு வேதனை.

சி.ஏ. பயிற்சிக்கு அவனுடன் சேர்ந்திருந்த ராம்குமார் அடுத்த தெரு அம்ருதா மான்ஷனில் நாலாவது மாடி ஃப்ளாட்டில் இருந்தான்.

ராம்குமார் சிநேகிதம் சமீபத்தில்தான் ஏற்பட்டது.

சில தடவைகள் அவனைப் பார்க்க அங்கே போயிருக்கிறான்.

ராம்குமாரிடம் ஸ்டீரியோ, டூ இன் ஒன், டெக் இத்யாதிகள் இருந்தன. அவர்கள் வீட்டிலும் எல்லாம் இருந்தன. ரம்யாவின் தந்தை அவைகளை மாப்பிள்ளைக்குப் பரிசாகத் தந்திருந்தார்.

ஆனால் அண்ணாவுக்கு சாஸ்திரீய சங்கீதத்தில்தான் மோகம். அம்மாவுக்கு பஜனைகள்தான் கேட்கப் பிடிக்கும். மாலதி தமிழ் சினிமாப் பாட்டுகளைத்தான் பெரிதும் ரசித்தாள். நண்பர்கள் யாரிடமாவது வெஸ்டர்ன் பாப் மியூசிக் டேப் ஏதாவது கட ன் வாங்கிக் கொண்டு வந்து போட்டுக் கேட்கலாம் என்றாலோ, அண்ணா உள்ளேயிருந்து ஆவேசமாக எழுந்து வந்து விடுவான். ''ஏன் இப்படி காதை அறுக்கிறே?'' என்று கத்துவான்.

சமீப காலமாக அண்ணாவுக்கும் அவனுக்கும் இடையே ஒற்றுமை குறைந்து விட்டிருந்தது.

ரம்யா மன்னியைத் தான் அதட்டப் போக ஆரம்பித்த விபரீதம் அது.

நண்பன் ராம்குமார் வீட்டிற்கு அவன் சில தடவைகள் போயிருக்கிறான். காது செவிடாகி விடும்படி ரிக்கார்டைப் போட்டு, கூடப் பாடிக் கொண்டே கூத்தடிக்க அவனுக்குத் தோழர்கள் கூட்டம் ஒன்று உண்டு.



ராம்குமாரின் தாய் வந்து கதவைத் தட்டுவாள். கொஞ்சம் மெதுவாகப் போடக் கூடாதா?" பற்களைக் கடிப்பாள்.

ஆனால் ராம்குமார் சத்தத்தைக் கொஞ்சம் மெதுவாக்கி விட்டது போல போக்குக் காட்டிவிட்டு, அவள் நகர்ந்ததும் உரக்கக் கத்தவிட்டு நண்பர்களுடன் சேர்ந்து கைதட்டி பாட்டுக்குத் தகுந்தபடி ஆடத் தொடங்கி விடுவான். மறுபடி அம்மா வந்து கதவைத் தட்டுவது அவர்கள் காதிலே கேட்கவே கேட்காது.

மித்திரனுக்குப் பாடவே வராது. குளியலறையில் கூடக் கூக்குரலிட லாயக்கற்றவன். மற்றவர்கள் பாடிக் கூத்தடிக்கும்போது பலமாகக் கை தட்டி ஆர்ப்பாட்டம் செய்வான். அவ்வளவுதான்.

ராம்குமார் வீட்டில்தான் அவன் சிகரெட் பிடிக்கக் கற்றுக் கொண்டான். வீட்டில் அப்பாவுக்கு எதிரிலோ, அண்ணனுக்கெதிரிலோ செய்ய முடியாத காரியம் அது.

பகிரங்கமாக ஒரு பெட்டியைச் சட்டைப் பையில் வைத்துக் கொள்ளவும் சாத்தியப்படாது.

வாயை மூடிக்கொண்டு சூயிங்கம் ஒன்றைச் சுவைத்துக் கொண்டு வீடு திரும்ப வேண்டும். இல்லாவிட்டால் ஏதோ ஒரு கொலையைச் செய்துவிட்டு வந்து விட்டதுபோல அம்மாவும் அண்ணாவும் அட்டகாசம் செய்வார்கள்.

அவனுடைய குடும்பம் சரியானதொரு பஞ்சாங்கம்.

பலவும் எண்ணித் தாடை இறுகியவனாக மித்திரன் அமிர்தா அப்பார்ட்மெண்டை அணுகினான்.

லிஃப்ட் இல்லாத கட்டடம் அது. ராம்குமாரின் குடியிருப்பு நாலாவது மாடியிலிருந்த ஃபிளாட் மூன்றாம்

என் வாயிற்படியருகில் வந்து சேர்வதற்குள் அவனுக்கு மூச்சிறைத்துப் போனது.

ராம்குமாரின் குண்டு அம்மா எப்படித்தான் ஒரு நாளைக்குப் பத்துத் தடவை ஏறி இறங்குகிறாளோ! ஆச்சரியப்பட்டபடி அழைப்பு மணியை மெல்லத் தொட்டான்.

ஒரு பாவாடை சட்டைப் பெண் கதவைத் திறந்தாள். உள்ளே முன்னறை போன்ற பகுதியில் ஏகக் கூட்டம்.

அவனுக்கு ஞாயிற்றுக்கிழமை மாலை என்பது மறந்தே போயிற்று. வீட்டிலிருந்த டி.வி.க்கு ஏகப் போட்டி. அம்மா, அப்பா, மாலதி, அண்ணா வீட்டிலிருந்தால் அவனும் மன்னியும் வந்து உட்கார்ந்து விடுவார்கள்.

அந்தச் சூழ்நிலை அவனுக்குப் பிடித்ததில்லை. வயலும் வாழ்வை அப்பா ரொம்ப நேசிப்பார். சிறு பிராயத்தில் கிராமத்திலிருந்த நினைப்பு வந்து விடும். மனை மாட்சிக்குள் அம்மா தலையை விட்டுக்கொண்டு விடுவாள். மாலதிக்கு இளந்தென்றல். அண்ணாவுக்குச் செய்திகள். ரம்யா மன்னிக்குப் பரதநாட்டியம். இப்படி ஆளுக்கு ஒரு வித ரசனை.

வீட்டிலிருந்த கலர் டி.வி. பெட்டி அருகே தான் தலைக் காட்டி ரொம்ப நாளாகி விட்டிருந்தது. சமீப காலமாக அவனுக்கு வீட்டவர்கள் அனைவரும் விரோதிகளாகக் கண்களில் பட்டனர்.

இனம் காண முடியாத ஓர் எரிச்சல். ஏதோ மனத்திலே ஒரு பரபரப்பு. எங்கேயாவது போகவேண்டும் என்றதொரு அர்த்தமில்லாத துடிப்பு.

நடையிலெரிந்த விளக்கு ஒளியில் கும்பலாக அங்கே உட்கார்ந்திருந்த பெண்கள் கூட்டத்தைக் கசப்புடன் பார்த்தான். எதிர் ஃப்ளாட், பக்கத்து ஃப்ளாட் வேலைக்



காரிகள் என்று அங்கே ஒரு பெண்கள் பட்டாளம் சாயந்திர சினிமாவுக்கு ஆஜராகி விட்டிருந்தது.

'விக்ரம் - விக்ரம் - விக்ரம்... வேதாள் - வேதாள் - வேதாள்' என்று கலர் டி.வி. கோஷித்தது.

ராம்குமாரின் அம்மாவுக்கு ஏறக்குறைய அவனது தாய் வயதிருக்கும். முன்னெற்றியில் பட்டையாக நரைத்த முடி. கட்டாயம் பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதையைப் படித்திருப்பாள்.

இப்போது பச்சைக் குழந்தையாகி, விக்ரம் விக்ரமை ரசித்துத் தன்னை மறந்து உட்கார்ந்திருக்கிறாளே!

''யாரு?'' அவள் குரல் அதட்டலாக ஒலித்தது.

''யாரோ ரவியோட சிநேகிதராம். பார்க்க வந்திருக்கார்.''

''சினிமா பார்க்கணும்னா வந்து உள்ளே உட்காரச் சொல். இல்லாவிட்டால்...'' திரும்பிப் பார்த்தாள் அவள்.

மெலிதாகப் பரவி நின்ற இருட்டில் அவளது கண்கள் கோபத்தில் பளபளத்தன.

''ரவியைப் பார்க்க வந்தேன்.'' தணிவான குரலில் முணுமுணுத்தான்.

''ரவி வெளியே போயிருக்கான் வர நாழியாகும்.'' அந்த அம்மாவின் குரல் - எரிச்சல் மேலோங்கித் தொனித்தது. 'பூஜை வேளைக் கரடியாக ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் நீ எங்கே வந்து தொலைச்சே?'' என்பதுபோல கண்கள் அனலாக எரிந்தன.

''ஸாரி...'' என்றபடி மித்திரன் வேகமாக நடையைக் கட்டினான்.

ரவியின் தாயார் மீது அவனுக்கு வெறுப்பு மண்டிக் கொண்டு வந்தது. எதிர்ப்பட்ட எல்லோர் மீதிலும் வெறுப்பு. ஏன், உலகத்தின் மீதே ஓர் அர்த்தமில்லாத வெறுப்பு அவனுள் கிளறி எழுந்து கொண்டிருந்தது.

வீட்டுக்குத் திரும்பினால் அம்மா டி.வி.யில் படம் பார்த்து முடித்ததும் சாப்பிட அழைத்து மிரட்டுவாள். ரம்யா இல்லாவிட்டால் அம்மா அடுப்பை வெட்டிக் கிணற்றில் போட்டு விடுவாள்.

காலை சமைத்த சாதமும் மோரும் வடுமாங்காய் ஊறுகாயும்தான் என்று வைத்திருப்பாள். ஆறிப்போன சாதமும் சில்லென்று வயிற்றைப் பிடிக்கும் மோரும் அவனுக்குத் தேவையில்லை.

ராம்குமாருடன் அடிக்கடி அவன் போகும் அந்த லால்ஜி கடைக்குப் போய்ச் சூடாய்ச் சமுசாவும் டீயும் வாங்கிச் சாப்பிட வேண்டியதுதான்.

துணைக்கு ராம்குமார் இன்று இல்லை. அதனால் என்ன? பாதையோரத்தில் நின்று கொண்டே பீங்கான் தட்டில் வைத்த பேல் பூரியைத் தின்றபடி நின்று கொண்டிருக்கும் ஒரு பெரிய கூட்டமே இருக்கும். எண்ணியபடி விரைந்தான்.

சில்லென்று வீசிய காற்றைப் பொருட்படுத்தாமல் மாக்ஸி, மிடி, புடவையிலும் வேட்டி ஜிப்பாவிலும் பல தரப்பட்டவர்கள் கடை எதிரே நடைபாதையில் நின்றபடி வடக்கத்திய உணவு வகைகளை ரசித்துக் கொண்டிருந்தனர்.

ஒரு பெரிய வாளியிலிருந்த நீரில் மீண்டும் மீண்டும் சாப்பிட்ட தட்டுகளைப் போட்டு பையன் முக்கி எடுத்து, அழுக்குத் துணியால் துடைத்துப் பரபரவென்று அடுக்கிக் கொண்டிருந்தான். திரும்பினால் வயிறு இடிக்கும் சின்னக் கடை. அடுப்புக்குப் பின் நின்ற ஆசாமி இடம் முழுவதையும் ஆக்கிரமித்தபடி சமூசாக்களைப் பொரித்தெடுத்துக் கொண்டிருந்தார். பாவ் பாஜி, சன்னா பட்டோரா என்று பல வகைப்பட்ட தயாரிப்புக் கொண்ட பாத்திரங்கள் ஒருபுறம்.

இன்னொரு ஆசாமி வேகமாக வாடிக்கைக்காரர் கேட்டதை அந்தப் பிளேட்டுகளில் வைத்துக் கொண்டிருந்தான். அழுக்காகி விட்ட வாளித் தண்ணீரைப் பார்க்க வயிற்றைக் குமட்டியது அவனுக்கு. அம்மாவுக்கு பீங்கான்



பாத்திரங்களைக் கண்டாலே பிடிக்காது. எரிச்சலுடன், 'கர்மம்' என்று தலையில் அடித்துக் கொள்வாள். அந்தச் சூழ்நிலையில் வளர்ந்து தொலைத்து விட்டிருந்தாள்.

அடிவயிற்றிலெழுந்த அருவருப்பையும் சமுசாவையும் சேர்த்து விழுங்கியபடி தன் பார்வையைப் பல பக்கம் ஓட்டிக் கொண்டு நின்றான்.

ரவியும் அவனும் ஒருநாள் இப்படி அந்தக் கடைக்கு வந்து சன்னா பட்டோராவை வாங்கிச் சுவைத்துக் கொண்டிருந்தபோது சர் என்று ஓரமாக வந்து நின்ற பென்ஸ் காரைப் பார்த்து வியப்புடன் திரும்பினான்.

நீலகண்டன் அதிலிருந்து இறங்கினார். அவர் கூடவா இந்தத் தெருக் கடைக்கு விஜயம் செய்கிறார்! வாயில் போட்டுக் கொண்ட பட்டோரா தொண்டைக்குள் சிக்கிக் கொண்டது. அவனது விழிகள் விரிந்தன.

வந்த மனிதர் தனியாக வரவில்லை. கூடவே கொடி போல் ஓர் இளம் பெண். ஊதா வண்ண சைனா சில்க்கில் ஒய்யாரமாக அவர் மேல் இடித்துக் கொண்டு நடந்து வந்தாள்.

சட்டென்று பாதையோரத்தில் நின்றதொரு நெட்டை மனிதனுக்குப் பின்னால் பதுங்கிக் கொண்டான். நெஞ்சிலே ஒரு படபடப்பு. அண்ணா என்னவோ பெருமையாகச் சொன்னாரே, 'ரம்யாவின் சின்ன வயதிலேயே அவள் அம்மா காலமாகி விட்டாள். அதற்குப் பின் தன் குழந்தைக் காகவே அவர் மறு கல்யாணம் செய்துக்கலை. ராமனாக வாழ்ந்தார்' என்று.

அண்ணாவிடம் போய் சொல்லவேண்டும். 'உங்க மாமனார் ராமன் இல்லை. ஒரு சின்ன வீடு செட்டப் பண்ணி வச்சுக் கொண்டிருக்கிறார்.'

மனுஷன் பணத்திமிர் கொண்டவராச்சே! ஒரு சின்ன வீடுதானா இருக்கும்? சென்னையில் ஒரு வீடு. ஹைதராபாத்தில் வேறு ஒரு பங்களா, டெல்லியில் அப்பார்ட்மெண்ட்,

பம்பாயில் மலபார் ஹில்லில் ஒரு ஃபிளாட் என்று மனிதனுக்குப் பல இடங்கள் இருக்கும். இதைப்பற்றி ஆராய வேண்டும்... நன்றாகத் தெரிந்து கொண்டு ஒருநாள் அண்ணா தன் மாமனாரைப் பற்றி உயர்வாகப் பேசும்போது எல்லார் முன்னிலையிலும் விஷயத்தைப் போட்டு உடைத்து மூக்கையும்கூட உடைக்க வேண்டும். கறுவிக் கொண்டே சாப்பிட்டான்.

நீலகண்டன் தேவைப்பட்டதை வாங்கிக் கையில் பிடித்தபடி அந்த கட்டழகியைக் கடத்திக் கொண்டு காரில் போய் விட்ட பின்னர்தான் நகர்ந்தான்.

மறுநாள் அவன் தனது பயிற்சிக்குப் போகவில்லை. அண்ணாசாலையில் காலைப் பொழுதைக் கடத்தி விட்டு நீலகண்டன் வேலை பார்த்த அந்தப் பிரபல நிறுவனத்திற்குள் உணவு நேரத்தின்போது நுழைந்தான். அங்கே வேலை பார்த்துக் கொண்டிருந்த காசிலிங்கம் அவனது பள்ளிக்கூட நண்பன். தெருவில் சந்தித்தால், 'ஹாய்' என்கிறவரை நட்பு.

அவனை அணுகி விஷயத்தை மெல்ல கிரகிக்க வேண்டும். ஒரு பெரிய நிறுவனத்தில் உள்ள உயர்மட்ட அதிகாரியின் அந்தரங்கங்கள் கட்டாயம் அங்கு வேலை செய்யும் சில ஊழியர்களுக்குத் தெரிந்திருக்கும். பள்ளிக்கூட நாட்களிலேயே காசிலிங்கத்திற்குப் பெரிய வம்பன் என்ற பெயர் உண்டு.

அவன் ஒரு தட்டெழுத்தராக அங்கே வேலை பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

அலுவலகப் பையன் காட்டிய அறைக்குள் மெல்ல எட்டிப் பார்த்தான். உணவு நேரம் என்றதும் எல்லோரும் போய் விட்டிருந்தனர். காசிலிங்கம் டைப் இயந்திரத்தின் மீது பிளாஸ்டிக் உறையைப் போட்டு மூடிவிட்டுக் கிளம்பிக் கொண்டிருந்தான்.

''ஹாய்...'' என்ற குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தவனுக்கு மகிழ்ச்சி!



சில நாட்களாக அலுவலகத்தில் சலசலத்துக் கொண்டிருந்த அந்த வம்பு அவன் தலையை வெடித்தது. யாரிடமாவது சொல்லிவிட வேண்டுமென்றதொரு உணர்வின் அழுத்தம். நீலகண்டனின் உறவுக்காரனையே கண்டதும் ரொம்ப கொண்டாட்டமாக இருந்தது.

பெரிய மனுஷர் என்று வெளியில்தான் வேஷம். உள்ளே சுத்த மோசம் என்று அவர்கள் வீட்டுச் சம்பந்தியின் சங்கதியை எடுத்துப்போட வேண்டுமென்ற குரூரமான தொரு ஆசை அவனுக்கு.

இருவரும் ஐஸ்க்ரீம் சாப்பிட எதிரேயிருந்ததொரு பார்லருக்குள் நுழைந்தனர்.

''ரொம்ப நாளாச்சு உன்னைப் பார்த்து. அதனாலேயே இது என்னுடைய ட்ரீட்'' என்று ஆரம்பத்திலேயே மித்திரன் சொல்லி விட்டான்.

பதிலுக்கு ஏதாவது செய்யவேண்டும்? தணிந்த குரலில் அவர்கள் வீட்டு வம்பை மெல்லச் சொல்லத் தொடங்கினான் காசிலிங்கம். ''நீ கோவிச்சுக்கக் கூடாது. முதலில் இலைமறைவு காய் மறைவா இருந்த சங்கதி இப்போ ஆபீசிலே பலருக்குத் தெரிஞ்சு போச்சு. உங்க சம்பந்தி நீலகண்டன் ஸ்டெனோ ரேவதியோட ரொம்பச் சுத்தறார். அவள் பம்பாய் அலுவலகத்திலிருந்து மாத்திக் கொண்டு இங்கே வந்திருக்காள். மனுஷன் அவளுக்கு ஒரு ஃபிளாட் எடுத்துக் கொடுத்து வசதி செய்து தந்திருக்கிறார். ரேவதிக்கு முப்பது வயசிருக்கும். பார்த்தால் இருபத்தைஞ்சுக்கு மேலே மதிப்பிட முடியாது. கொஞ்சம் சிவப்பு நிறம். ஒப்பனை வேறு. பார்க்க பிரமாதமாகத் தெரிகிறாள். மனுஷனுக்கு மிடில் ஏஜ் மார்ட்னஸ் வந்திருக்கு.''

உதட்டைக் கடித்துக் கொண்டான் மித்திரன். காதும் மூக்கும் சூடாகிப் போனான். வெட்கக் கேடு, பேரன் பேத்தி எடுக்கும் காலத்திலே ஆசாமிக்கு இப்படி ஓர் ஆசை.

மித்திரனுக்கு அப்பவே தெரியும். சில்க் ஜிப்பாவும், பட்டுக்கரை வேட்டியுமாய் குப் என்று ஷேவிங் லோஷன் முகத்திலடிக்க அவர்கள் வீட்டு முன்னறையில் உட்கார்ந்து கொண்டு தனது சுருண்ட கிராப்புத் தலையை லேசாகத் தடவி ஒழுங்கு செய்து கொள்ளும்போதே, மனிதர் லேசுப் பட்டவர் இல்லை. இந்த வயதில் தன் தோற்றத்தைப் பற்றி இத்தனை கவனிப்பு ஏன்? அது அவர்கள் மெச்சுவதாக இல்லை.

ஓர் இளம் பெண் மயங்குவதற்காகத்தான் எனத் தன்னுள் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தது தப்பாகப் போகவில்லை.

''எங்க வீட்டுச் சம்பந்தி இப்படித்தான் வாழணும்னு நாங்க ஏதாவது தடையுத்தரவு போட முடியுமா? பணம் இருக்கு. மனுஷன் தனியா இருக்கார். என்ன வேணா பண்ணிக்கட்டுமே!'' என்று மித்திரன் அசட்டையாகப் பேசி விட்டு, மெல்ல விடை பெற்றுக் கொண்டு வந்தான்.

ஆனால் மனத்தில் ஆத்திரம் பொங்கியது. தன் மாமனாரின் அட்டகாசத்தைத் தெரிந்து கொள்ளாத மக்குப் பயலாக இருக்கும் அண்ணா மீது கோபம் வந்தது.

அடிக்கடி அம்மா தன் சிநேகிதிகளிடம் அவன் காதுபடச் சம்பந்தியின் பிரதாபத்தைத் தொலைபேசியில் அளந்த போது, கட்டுக் கொள்ளாத சினத்தில் பொங்கிப் போனான்.

மன்னி ரம்யா தன் அப்பாவுக்குச் சாப்பிட இது பிடிக்கும், அது பிடிக்கும் என்று சொல்லும்போது இடைமறித்து, அவருக்கு இப்போது பிடித்திருக்கும் சங்கதியை அம்பல மாக்க வேண்டும்போல் ஆத்திரமாக வந்தது. அடிமனத் திலே இந்தக் கலவரம் அரித்துக் கொண்டிருந்ததாலோ என்னவோ, ஒரு நாள் அவன் மன்னியை அதட்டிப் பேசி விட்டான்.

''நான் ஆபீசுக்குப் போகணும்னு தெரியுமில்லையா? முன்னாலேயே செய்யக்கூடாதா? இப்படி சூடா சாதத்தை அள்ளிப் போட்டுக் கொண்டா எனக்கு அல்சர் வந்திடும். சமையலுக்கு ஒரு ஆள் வைக்க உங்கப்பாகிட்டே சொல்றது தானே?''



மாடியிலிருந்து இறங்கி வந்த அண்ணா கோதண்டம் அவனை வெறித்துப் பார்த்தான். ''என்ன சொன்னே?'' என்று உறுமினான்.

''உண்மையைச் சொன்னேன். மன்னி ஒரே மசமச. சுறுசுறுப்பே இல்லாதவங்க.''

''ஒண்ணு தெரிஞ்சுக்கோ. இதுவே முதலாவதாகவும் கடைசியாகவும் இருக்கட்டும். அவள் என் மனைவி. அதிகாரம் செய்யவும் அனுசரணையாக இருக்கவும் எனக்குத்தான் உரிமை. நாளைக்கு உனக்கு ஒருத்தி வந்ததும் உன் அதிகாரத்தை அவகிட்டே காட்டு, அதுவரை வாயை அடக்கிக் கிட்டு இங்கே இருந்தா இரு. இல்லாட்டா பல் உடைபட்டுப் போகும்.''

புஸ்ஸென்று எழுந்த கோபம் அடங்கி, பூனையாகச் சுருண்டு கொண்டு விட்டான் மித்திரன். அண்ணாவுக்கு இப்படி ஓர் ஆத்திரம் வரும் என அவன் கனவிலேகூட நினைத்ததில்லை.

''என்னப்பா, அங்கே கலாட்டா?'' என்று அம்மா அன்று இடைபுகுந்து விடாதிருந்தால், நிலைமை மோசமாகி இருக்கும்.

அவன் அடிக்குரலில் ஏதாவது முணுமுணுத்திருப்பான். அண்ணா ஓங்கிப் பளீரென்று கன்னத்தில் அறைந்திருப் பான். அப்பா அலறிக் கொண்டு வந்திருப்பார். மாலதி சிரித்திருப்பாள். வேலைக்காரி இடுப்பில் கையை வைத்துக் கொண்டு வேடிக்கை பார்த்திருப்பாள். நல்ல வேளை தப்பினான்! அதற்குப்பின் அவன் மனம் புகையும் எரிமலையாகி ஆத்திரம் அடி வயிற்றுக்குள் அப்பிக் கொண்டு விட்டது.

ஏதாவது ஒரு சமயம் வரும். சமுசாவைப் பலமாகக் கடித்து உள்ளே திணிக்கப்பட்டிருந்த உருளைக் கிழங்கின் காரம் நாவைச் சுட மென்று விழுங்கியபின் அதிர்ந்து போய் நின்று விட்டான்.

அதே கடைக்கு முன் சம்பந்தி நீலகண்டன் இறங்கினார்.

அன்று பார்த்த அந்த மோகினி - காசிலிங்கம் சொன்ன ஸ்டெனோ ரேவதி - அவரது கையைப் பிடித்துக் கொண்டு உதட்டைச் சுழித்துக் கொஞ்சியபடி, ''பேல் பூரி வாங்கிக் கொள்ளுங்க'' என சிணுங்கியபடி வந்தாள்.

தெரு விளக்கிலே அவளை ஏற இறங்கப் பார்த்தான். அவரது மகள் ரம்யா வயது இருக்கும். அத்தனை இளம் பெண்ணாகத் தெரிந்தாள்.

தாடி நரைக்கத் தொடங்கிய கிழவர் அவர். ஆசை நரைக்காத மனம்.

''சே! இவர் ஒரு மனிதரா? பணம் இருக்கும் மமதையில் இப்படி பகிரங்கமாக அலைகிறாரே...''

அப்பா இவரைவிட வயதானவர்தான். அவனுக்குத் தெரிந்தவரை கோயில், குளம், பீச்சு என்று வளைய வந்த கண்ணியமானவர். அவருக்குப் போய் இப்படி ஒரு சம்பந்தியா?

ஒதுக்குப் புறமாக அவர் கண்ணில் படாதிருக்க நகர்ந்து நின்றான். அப்படி நேருக்கு நேர் பார்த்தால் தான் என்ன? மனிதருக்கு அடையாளம் தெரிய வாய்ப்பில்லை. ஒரு முறை அம்மாவுக்குத் துணையாக அவன் அவர்கள் பங்களாவுக்குப் போனபோது, யாரது என்று அம்மாவையே அடையாளம் தெரியாமல் அதட்டியவர் அவர். பணம் அவரது கண்களை மறைத்துக் கொண்டிருக்கும்போது... அதெப்படி இரண்டொரு தடவை பார்த்த மாப்பிள்ளையின் தம்பியை அவர் இந்த உற்சாகமான சூழ்நிலையில் தெரிந்து கொள்ளப் போகிறார்?

கடைசியாக இருந்த சமூசா துண்டத்தை வாயில் போட்டு மென்று விழுங்கியபடி கைக்குட்டையால் துடைத்துக்



கொண்டு காலியான பீங்கான் தட்டைக் கடை முகப்பிலிருந்த மேடைமேல் வைத்து விட்டுத் திரும்பினான்.

மனிதர் நிறைய என்னென்னவோ வாங்கிக் கொண்டிருந்தார்.

எங்கேயாவது பார்ட்டியா? யோசித்தவன் மூளையில் அந்தச் சங்கதி ஓங்கியடித்தாற்போல பளிச்சிட்டது. இன்று காலை போனில் தமக்கு ஜுரம் என்று சொல்லித் தம் மகளை வீட்டுக்கு அழைத்துக் கொண்டாரே... இப்போது வீதியில் ஓர் இளம் பெண்ணோடு பவனி வருகிறாரே!

அப்படியானால், காலையில் டெலிபோனில் சொன்னது சுத்தப் பொய். எதற்காக அவசரப்பட்டு மகளை வீட்டுக்கு அழைத்தார்? அவனது மண்டைக்குள் பல கேள்விக் குறிகள்.

நீலகண்டனது செயல், பேச்சு ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாதிருப்பதன் காரணம்?

இது ஒன்றும் தெரியாமல் அவனது அண்ணா ஒரு ஃப்ரீப் கேசைத் தூக்கிக் கொண்டு ஹைதராபாத்தில் பல அலுவலகங்களுக்கு ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறார். சரியான முட்டாள். சென்னை நகரிலேயே அவர் அருகே மாமனார் செய்கிற லீலைகளைக் காணாமல்...

பற்களைக் கடித்துக் கொண்டு மெல்ல வீடு திரும்பினான். கதவை திறந்த அம்மா கையில் கரண்டியுடன் நின்று கொண்டிருந்தாள். ''நல்ல வேளை, சாப்பாட்டுக்குத் தட்டு வச்சுக் கொண்டிருந்தேன். வந்துட்டே'' முணுமுணுத்தாள் அம்மா.

''மோர் சாதமும் வடுமாங்காயும் எனக்கு வேண்டாம். மாலதி, அப்பா, நீங்க எல்லோரும் சாப்பிடுங்கள். நான் ஓட்டலில் சாப்பிட்டு விட்டு வந்தேன்.'' விறைப்பாய்ப் பதிலளித்து விட்டு உள்ளே சென்று தன் அறைக்குள் புகுந்து கொண்டான் மித்திரன். விஷயத்தை அம்மாவிடம் சொல்வதா வேண்டாமா என்றதொரு மன உளைச்சல். அந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண இயலாதவனாக

எதிர்பட்டவர் மீது எரிந்து விழத் தயாராக விளக்கைப் போட்டுக் கொண்டு ஆங்கில சினிமாப் பத்திரிகை ஒன்றை புரட்டிக் கொண்டு நாற்காலியில் சாய்ந்து கொண்டான்.

# 5

வீட்டுக்குள் நுழைந்ததுமே அலுவலகம் புறப்பட ஆயத்தமாக உடுத்திக் கொண்டு நின்ற அப்பாவைப் பார்த்து ரம்யா திடுக்கிட்டுப் போனாள்.

''ஜுரம்னு சொன்னீங்களே அப்பா?'' வியப்புடன் கேட்டாள்.

''ஒரு குரோசின் போட்டுக் கொண்டேன். ஜுரம் இறங்கிப் போச்சு. தலைவலியும் குறைஞ்சிட்டது. ஆபீசில் சில முக்கிய காரியங்கள் இருக்கு. கவனிச்சிட்டு பகல் சாப்பாட்டுக்கு வரேன்.'' சொல்லிவிட்டு கிளம்பினார்.

கார் வாசலிலிருந்து நகர்ந்ததும் சாப்பாட்டறைத் தடுப்பின் பின்னாலிருந்து அத்தை மெல்ல எட்டிப் பார்த்தாள்.

''போய்ட்டார் இல்லையா? இப்போ நாம நிம்மதியா பேசலாம்'' என்றபடி அவள் மெல்ல முன்னறைக்கு நடந்தாள். ''உன் கல்யாணத்துக்கப்புறம் நான் என் பெண்ணோடத்தான் இருந்துட்டேன். சமையற்காரரும் அவரும் நல்லபடி குடித்தனம் பண்றதாக நினைச்சேன். மார்கழி மாசம் கற்பகாம்பா கபாலீஸ்வரரைத் தரிசிச்சுட்டுப் போகலாம்னு இங்கே வந்தேன். இன்னிக்கு ராத்திரி நான் புறப்படறேன்.''

''ஏன் அத்தை இந்த வீட்டிலே உங்களுக்கு என்ன குறை ஏற்பட்டது? இது உங்க சொந்த வீட்டைப் போலத்தானே?''

''அதெல்லாம் ஒரு குறையுமில்லே. உங்கப்பா நடவடிக்கை எனக்குப் பிடிக்கலை. மனுஷன் குடிக்க ஆரம்பிச்சிருக்கார்.''



ரம்யாவின் நெஞ்சு தீவிரமாக அடித்துக் கொண்டது. உடம்பு சாணாகி விட்டது போன்றதொரு உணர்வில் தவித்தாள்.

''அவர் இஷ்டம். சாப்பிடட்டும்னு நீ சொல்வே. அளவுக்கு மீறி சாப்பிட்டுட்டு ஆடிக்கொண்டு ரொம்ப நேரம் கழிச்சு வரார். எல்லாம் இந்த சமையற்காரர் உட்கை. முன்னாலிருந்த மகாலிங்கம்னால் ரொம்ப பொறுப்பாக வீட்டையும் உன் அப்பாவையும் கவனிச்சுக் கொள்வார். அவருக்கு வயசாச்சு. புறப்பட்டுட்டார். இந்த புது சமையற்காரர் பொல்லாதவர்.''

''இப்போ நான் என்ன செய்யணும்னு நினைக்கிறீங்க அத்தை?''

''அப்பாவுக்குக் கொஞ்சம் புத்தி சொல்லு. நான்தான் நேத்துராத்திரி ஜலதோஷம் பிடிச்சுக் கொண்டிருக்காப்பல இருக்கு பெண்ணைக் கூப்பிட்டு நாலு நாள்கூட வச்சுக் கோப்பா'ன்னு சொன்னேன்.''

''நீங்க...?'' ரம்யாவுக்கு அழுகை தொண்டையை அடைத்தது.

'வெற்றிலை பாக்கு- அதுவும் 'சாப்பிட்ட பிறகு ஒரு தடவை போட்டுக் கொண்டாலே அதிகம். அப்படிக்கட்டுப் பாடாக வாழ்ந்த அப்பா, இப்போ குடிக்கிறார் என்றால்...' அவளுக்குத் துக்கம் தாங்க முடியவில்லை. ''நான் இன்று ராத்திரி மெயிலில் பெங்களூர் கிளம்பரேன். நீ அப்பாவோட ஒரு பத்து நாளாவது தங்கியிருந்து இந்தக் கெட்ட பழக்கத்தை முளையிலேயே கிள்ளி எறிஞ்சிட்டுப் போ.''

''நான் சொன்னா அப்பா கேட்பாரா?'' விசும்பினாள் ரம்யா.

அப்பாவின் எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறதோ என்ற கலவரத்தில் அவள் நெஞ்சு பதைபதைத்தது. அப்பா மேல் குற்றம் சொல்வதில் பயன் இல்லை. அவள் வீட்டை விட்டு புக்ககம் போனதும் அத்தையும் புறப்பட்டு

விட்டாள். தனியாகி விட்ட அவர் அமைதியைத் தேடி மது புட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு விட்டார்.

அவளால் அப்பாவின் அந்தப் பழக்கத்தைச் சுலபமாக மாற்ற முடியுமா? ஒரு தடவை பிடித்துக் கொண்டால் அது பெரும் தொத்து வியாதி என்று கேள்விப்பட்டிருக்கிறாள். கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் விசும்பிக் கொண்டு அத்தை மடியில் விழுந்தாள் ரம்யா.

அத்தை ஊருக்குக் கிளம்பிப்போய் விட்டாள். அவளைக் கொண்டு போய் ரயிலடியில் சேர்த்து விட்டுத் திரும்பிய பிறகு, அப்பா காப்பி, டிபனை முடித்துக் கொண்டு சீக்கிரமாகவே அலுவலகத்திற்குப் புறப்பட்டு விட்டார்.

போகும்போது மட்டும் மகளைக் கூப்பிட்டுச் சொன்னார். ''இன்னிக்கு சாயங்காலம் உன்கிட்ட சில முக்கியமான சங்கதிகள் பேச விரும்பறேன். உன் கணவன் போன் செய்தால், ஒரு வார காலம் நான் உன்னை இங்கே இருக்கச் சொன்னதாகச் சொல்'' என்று சொல்லிவிட்டு அவசரமாக காரில் ஏறிக்கொண்டார்.

அப்பா காப்பி டிபன் சாப்பிட்டபோது அவள் எதுவும் சாப்பிடவில்லை. இப்போது நல்ல பசி. சமையலறைப் பக்கம் சென்று பார்த்தாள். அத்தை சொன்னபடி புதுச் சமையல்காரன் ராமுவை அவளுக்கும் பிடிக்கவில்லை.

அப்பாவின் எதிரில் அடக்கமாகத் தென்பட்டான். அவர் தலைமறைந்ததும் சமையலறையில் ஒரு டிரான்சிஸ்டரை அலறவிட்டுக் கொண்டு கூடவே அத்துடன் பாடியபடி அடுப்பின் மீது பாத்திரங்களை நக்கென்று வைத்துக் கொண்டிருந்தான்.

''உங்களுக்கு டிபன் வேணுமா?'' ஏதோ அவன் தயவு செய்து கொடுக்கும் தோரணையில் கேட்டான்.

''கழுத்திலே தங்கச் செயினும் வெங்கடேஷ்வரர் டாலரும் புஸ்சென்று கொஞ்சம் மார்பு மயிர் தெரிய முதல் பித்தானைத் திறந்து விட்டுக் கொண்ட வெள்ளை டெர்லீன்



சட்டையும் மடித்துக் கட்டிய வெள்ளை வேட்டி மேல் சமையல் அழுக்குப் படாதவாறு சுற்றிக் கொண்டிருந்த டர்க்கிஷ் டவலுமாக ஆள் ரொம்பவே அலட்டிக் கொள்கிறவனாக இருந்தான்.

அவள் முன்பு பிறந்த வீட்டிலிருந்தபோது உபயோகித்த சிறிய அலாரம் கடியாரத்தை எடுத்து வந்து மேடை அருகே வைத்துக் கொண்டிருந்தான்.

கொதிக்கும் சாம்பார், ரசம் இத்யாதிகளைத் துளி அளவு எடுத்து உள்ளங்கையில் விட்டுக் கொண்டு நாக்கு ருசி பார்த்துக் கொண்டு அவன் சமைத்த கண்ணராவி அத்தைக்குப் பிடிக்கவில்லை. அப்படிச் செய்யக்கூடாது என்று சொல்ல அவளுக்குப் பயமாக இருந்தது. ஆள் வாட்ட சாட்டமாக முப்பது வயதிற்குட்பட்டதொரு இளைஞனாக இருந்தான்.

நல்ல வேளையாக அந்திப் பொழுதுவரை அப்பா அலுவலகத்திலிருந்து திரும்பும் வரை தோட்டக்காரன் மனைவி வள்ளி வீட்டோடுகூட இருந்தாள். இல்லா விட்டால் கர்லா கட்டை போன்ற தோள்களுடன் கடுமையாக விழித்த அவனுடன் தனியே அந்தப் பெரிய பங்களாவில் தங்கியிருக்க அவளுக்கு மனமே இருக்காது. தோட்டக்காரன் கந்தனும், அவன் மனைவி வள்ளியும் அவுட்ஹவுசிலேயே தங்கிக் கொண்டிருந்தனர். அவளுக்கு நினைவு தெரிந்த நாள் முதல் வீட்டோடு தங்கியிருப்பவர்கள் அவர்கள்.

வள்ளி பரம சாது. வாயைத் திறக்கவே மாட்டாள். ஆனால் கந்தன் கொஞ்சம் வாயாடி. ஏதாவது பேசிக் கொண்டிருப்பான். புது சமையல்காரன் வந்த நாளிலிருந்து கந்தனுடன் ஒத்துப் போகாமல் தகராறு செய்து கொண்டிருந்தான் என்பதைப் பார்வையாலேயே ரம்யா புரிந்து கொண்டு விட்டிருந்தாள்.

''இந்தா காப்பி! ஆறிப் போச்சுன்னு பின்னால் கம்ப்ளெயிண்ட் பண்ண வேண்டாம்'' என்று டக்கென்று சப்தத்துடன் டம்ளரை நடையிலிருந்த முக்காலி மீது வைப்பான் ராமு.

''நாய்க்குப் போடறாப்பல ஒண்ணும் எனக்குத் தரத் தேவையில்லை'' கந்தன் முணுமுணுத்துக் கொண்டே அதை எடுத்துப் போவான்.

ஆனால் அவர்கள் வீட்டு வெள்ளை அல்சேஷன் ரோவருக்கு அப்படிச் சாப்பாடு போடமுடியாது. ''ரோவர் கண்ணு... சாப்பிட வா'' என்று கெஞ்சிக் கூப்பிடா விட்டால் அது உர் என்று உறுமும்.

சமையல்காரன் ராமுவுக்கு அதனுடைய பகையை வாங்கிக் கொள்ளப் பயம். மேலே விழுந்து பிடுங்கி விடப் போகிறது என்ற கிலியில் ''ரோவர் கண்ணா... சமுத்துக் குட்டி, வாடா ராஜா'' என்றெல்லாம் கொஞ்சிக் குழைந்தான்.

ஆளுக்கு ஒரு வேடம் போடத் தெரிந்த அசகாய சூரன் அவன்.

''காப்பி டிபனைக் கொண்டு வரேன். நீங்க போய் உட்காருங்கள்'' கொஞ்சம் காரமான குரலில் அதட்டினான் அந்த அமுக்குப் பேர்வழி.

உதட்டைக் கடித்துக் கொண்டு சாப்பாட்டறை மேஜையில் உட்கார்ந்தாள்.

ஒரு தட்டில் அடுக்காக நான்கு தோசைகளும் கிண்ணத்தில் தேங்காய்ச் சட்டினியும் ஒரு டம்ளர் தண்ணீரும் வேகமாக வைக்கப்பட்டன. தோசைகள் ஆறிப் போயிருந்தன. ஒவ்வொன்றும் வறட்டிகள் போன்று கனமாக இருந்தன.

சட்டினியில் உப்பு, சகிக்கவில்லை.

காப்பி டம்ளரை நக்கென்று வைத்துவிட்டு, ''இன்னும் ஏதாவது?'' என்று கேட்டபடி எதிரே நின்றவனை அவள் நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை.

''போதும், தாங்க்ஸ்'' என்று கூறிவிட்டு தட்டில் வைத்ததை வேறு வழியின்றி எடுத்துப் போட்டுக் கொண்டு தின்றாள்.

CPL 693624



'அப்பா சாப்பாட்டில் ரொம்ப நாசூக்காக இருப்பவ ராச்சே! இந்தத் தடியனைக் கட்டிக் கொண்டு ஏன் மாரடிக்கிறார்? ரசத்தில் கொஞ்சம் காரம் என்றால் வீடு தூள் பறக்கும் பழைய சமையற்காரக் கிழவர் கையும் காலும் பதற ஓடி வருவாரே! அப்பா இப்படி ஏன் மாறிப் போனார்?' பலவும் எண்ணியபடி அவள் எழுந்து கையைக் கழுவிக் கொண்டு முன்னறைப் பக்கம் செல்வதற்குள் தொலைபேசி கிணுகிணுத்தது.

693624

ஹைதராபாத்திலிருந்து அவள் கணவன் அழைத்தான்.

''உன் அப்பாவின் உடம்புக்கு என்ன? டாக்டர் வந்து கவனிச்சுக் கொண்டிருக்கிறார் இல்லையா?'' மிக்க ஆதங்கத்துடன் கேட்டான்.

894.8113 LAK

'அவருக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை. அலுவலகத்துக்குப் புறப்பட்டுப் போயிருக்கிறார். என்னவோ என்னிடம் பேச வேண்டுமென்றுதான் வீட்டுக்கு அழைச்சிருக்கார்' என்ற உண்மையைச் சொல்ல அவளுக்குத் துணிச்சல் இருக்கவில்லை. அதே சமயம் பொய் சொல்லவும் பிடிக்க வில்லை.

''அப்பாவுக்கு உடம்புக்கு ஏதும் சுகக் குறைவு இல்லை. மனசுக்குத்தான் ஏதோ கஷ்டம் ஏற்பட்டிருக்காம். என்கிட்ட நிறையப் பேசணும்னார். ஒருவாரம் தங்கிட்டுப் போ. உன் கணவரிடம் சொல். அவர் உத்தரவு தருவார்ன்னார்'' என்றாள்.

கோதண்டம் உச்சி குளிர்ந்து போனான். மாமனார் அவனது பேச்சுக்கு எத்தனை மதிப்பு வைத்திருக்கிறார்.

''அப்படியே செய் ரம்யா. இப்போது நான்கூட வெளியூர்லே இருக்கிறதாலே உன் பிறந்த வீட்டிலே நீ ஓய்வாகக் கொஞ்சம் தங்கியிருப்பதில் தப்பு ஏதும் இல்லை'' என்றான் உற்சாகத்துடன்.

''தாங்க் யூ, அங்கே அம்மா தனியாகக் கஷ்டப்படு வாரேன்னுதான் கவலையா இருக்கு.''

...MARA PUBLIC LIBRARY

''மாலதி இருக்காள். அம்மாவுக்கு உதவியா இருப்பாள். நீ கவலைப்படாதே. வச்சுடட்டுமா?'' என்று போனை வைத்து விட்டான்.

நிம்மதியாகப் பெருமூச்சு விட்டபடி ரம்யா காலைப் பத்திரிகை ஒன்றை கையில் எடுத்துக் கொண்டு புரட்டத் தொடங்கினாள். அவளது புக்ககத்தில் காலைப் புத்திரிகையே இரவுதான் அவள் கைக்கு வரும். சில முக்கியமான விளம்பரங்களையும் கட்டுரைகளையும் மித்திரன் அதற்குள் கத்தரித்து எடுத்துக் கொண்டு விட்டிருப்பான். கௌரி காய் கறிகளைச் சுருட்டி வைக்க ஒரு பக்கத்தை எடுத்துக் கொண்டிருப்பாள். அத்தனை அலங்கோலத்திலிருக்கும் பத்திரிகையை அவள் புரட்டுமுன் ராத்திரி சாப்பாட்டுக்கு எல்லோரும் கூச்சல் போட்டு விடுவார்கள். எத்தனையோ நாட்கள் அவள் பத்திரிகைகளை ஒழுங்காகப் பார்த்ததில்லை. டி.வி.யைச் சரியாகப் பார்த்ததில்லை. அப்படி ஓர் அவசர வாழ்க்கை. நிற்க நேரம் இல்லாது வேலைகள்.

கணவன் சொன்னபடி ஒருவார காலம் நிம்மதியாகப் பிறந்த வீட்டில் ஓய்வாக இருந்து விட்டு...

அவள் தன்னுள் யோசித்து முடிக்குமுன் மறுபடி தொலைபேசி தொண தொணத்தது.

இந்தத் தடவை மாமியார் கௌரி மறு பக்கத்திலிருந்து அவளை அழைத்தாள். ''சம்பந்தி இப்போ எப்படி இருக்கார்? ஜுரம் இறங்கி விட்டதா?'' அவள் குரலில் ஏளனம் தொனித்தது.

''கொஞ்சம் தேவலை. அத்தோட ஆபீஸ் போயிருக்கார். உங்க பிள்ளை என்னை ஒருவாரம் இங்கேயிருந்து அப்பாவைக் கவனிச்சிட்டு வரச் சொன்னார்.''

கௌரியின் முகத்தில் பரவிய கடுமையை ரம்யாவால் ஊகிக்க முடிந்தது. மாமியாரிடமிருந்து பதில் வரச் சில நொடிகள் பிடித்தன.



''சில நாள் நிம்மதியா உன் பிறந்த வீட்டில் இருக்கப் போறே. அத்தோட ஒரு காரியம் செய்.''

''என்னம்மா?'' கவலையோடு ரம்யா கேட்டாள்.

''உங்கப்பா சிநேகிதர் வீட்டுக் கல்யாணத்துக்குப் போகணும்னு வீட்டிலே இருக்கிற வைர அட்டிகை, வளையல்கள், காசுமாலை, கல்லட்டிகை, முத்து நெக்லஸ் எல்லாத்தையும் எடுத்துட்டு வரச் சொன்னாரே, அவைகளைத் திருப்பிக் கொண்டு வா.''

''அதையெல்லாம் அப்பா லாக்கரில் வச்சிருக்கார்.''

''லாக்கரில் வைக்கவா உனக்கு இந்த நகைகளைப் போட்டுக் கல்யாணம் செஞ்சு கொடுத்தார்? மறக்காம எடுத்துக்கொண்டு வா.''

''உங்க பிள்ளை - அதுகள் அப்பாவோட லாக்கரிலேயே இருக்கட்டும். அவசரமில்லைன்னு சொன்னாரே?''

''அவன் கிடக்கான் பைத்தியக்காரன். உன் நகைகளை இங்கே கொண்டு வந்து கோதண்டத்தோட பாங்க் லாக்கரில் வச்சுக்கோ. இன்னும் உங்கம்மா சங்கிலி கைவளையல்கள் எல்லாம் உனக்குன்னு சொன்னார் உங்கப்பா. அவைகளைக் கொடுக்கலை, எல்லாத்தையும் கேட்டு வாங்கிக் கொண்டு வந்துடு.''

''சரியம்மா'' என்றாள் ரம்யா. அவள் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

கல்யாணத்திற்கு அவள் தந்தை அவளுக்குப் போட்ட நகைகள் மிகவும் அதிகம்தான். அம்மாவின் வைர அட்டிகை, ஒரு டஜன் தங்க வளையல்கள், சிறு காசு மாலை இன்னும் சங்கிலி, தங்க அட்டிகை என்று சில லட்சங்கள் பெறுமான நகைகளைப் போட்டுக் கல்யாணம் செய்து கொடுத்தார்.

அப்பா ஒரு கல்யாணத்தில் அவளது புக்ககத்தாரைச் சந்திக்க நேர்ந்தது. ரம்யா கழுத்தில் வெறும் தங்க சங்கிலியும் இடையில் ஒரு பிரிண்டெட் சில்க்குமாக வந்திருந்தாள்.

வைர அட்டிகையையும் வளையல்களையும் சம்பந்தி அம்மாள் அணிந்து கொண்டிருந்தாள். நீலகண்டன் தமது பெண்ணுக்குக் கிரஹப்பிரவேசத்துக்கு வாங்கித் தந்திருந்த இரண்டாயிரத்துச் சொச்சம் விலை கொண்ட காஞ்சிபுரம் பட்டுப் புடவையை உடுத்திக் கொண்டிருந்தாள். மாலதி தன் அண்ணியின் வைர நெக்லசில் மினுக்கிக்கொண்டு நின்றாள்.

தாம் பெற்ற பெண் பரதேசியைப்போல் கல்யாணத்திற்கு வந்திருக்கும்போது, அவளது நகைகளை அள்ளிப் பூட்டிக் கொண்டு நின்ற அந்த இருவரையும் கண்களாலேயே அவர் எரித்தார். சம்பந்தி அம்மாள் அதைக் கண்டுகொள்ளவே இல்லை. 'எங்கள் வீட்டு நாட்டுப் பெண்ணுடைய நகைகள் எங்களுக்கும் சொந்தம்' என்ற நிலையில் மிக்க அகம்பாவத்துடன் பந்தலில் அமர்ந்து கொண்டிருந்தாள்.

கோதண்டத்திற்குத் தன் தாயின் செய்கை பிடித்தமாக இருக்கவில்லை. கல்யாணம், பிறந்த நாள் வைபவம் என்று தெரிந்தவர் வீட்டு விழாக்களுக்கெல்லாம் அவள் ரம்யாவின் நகைகளையும் புடவைகளையும் எடுத்து அணிந்து கொண்டு சென்றது மனத்தை உறுத்தியது. மாலதி பெரிய கோடீஸ்வரியின் மகள்போல் அண்ணியின் வைர நகைகளை எடுத்து அணிந்துகொண்டு தன் தோழிகளின் வீட்டு நவராத்திரிக்கு சென்று மகிழ்ந்தது எரிச்சலைத் தந்தது.

'நீ ஏன் இவைகளை உன் பீரோ லாக்கரில் வைத்துக் கொள்ளவில்லை? அம்மாவிடம் ஏன் கொடுத்தாய்?' என்று ஒரு நாள் மனைவியை அதட்டினான்.

''அம்மாவும் மாலதியும் இதுகளைப் போட்டுக் கொள்ள ஆசைப்படுகிறார்கள். போட்டுக்கட்டுமே! தேய்ஞ்சா போயிடும்?'' என்று அமைதியாகப் பதில் அளித்தாள் ரம்யா.

''அப்பாவிடமிருந்து அவளுக்கு அடுத்த வாரமே தொலைபேசியில் தகவல் வந்தது. அவளுடைய நகைகள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு அவள் பிறந்த வீட்டுக்கு



அன்று மாலையே வரவேண்டும். சிநேகிதர் வீட்டுக் கல்யாணம் மாப்பிள்ளை அழைப்பிலிருந்து ரிசப்ஷன் வரை போக வேண்டியிருக்கும்'' தேவையான புடவைகளுடன் வரவேண்டும். கட்டளையிட்டிருந்தார்.

கௌரி முகம் கடுத்தாள். ஆனால் சம்பந்தியை எதிர்த்துக் கொள்ள முடியவில்லை.

திரும்பிப் புக்ககம் வந்த ரம்யா இரண்டொரு தங்க நகைகளைத் தவிர அத்தனையையும் அப்பாவிடம் விட்டு வந்ததைக் கண்டு ரொம்ப ஆத்திரமடைந்தாள் கௌரி. 'எந்தத் தைரியத்தில் நீ எல்லாத்தையும் அங்கே விட்டுட்டு வருவே?' இரைந்து கத்தினாள்.

''நாம போட்டுக்கக் கூடாதுன்னு அவள் அப்பா சொல்லியிருப்பார். அதனாலே அங்கேயே விட்டுட்டு வந்து விட்டாள்.'' மாலதி மூட்டிக் கொடுத்தாள்.

''என் படிப்புக்காக அதுகள் எதையாவது நீங்க அடகு வச்சு உபயோகித்து விடுவீர்களென்று சம்பந்திக்குப் பயம் போல இருக்கு.'' மித்திரன் ஏளனமாகச் சிரித்தான்.

அப்பாவிடம் எதிர்த்துப் பேச முடியாத பயம். மாமியாரின் கட்டளையை நிறைவேற்ற முடியாத கஷ்டம். என்ன செய்வது என்று தெரியாமல் விசும்பி அழுதாள் ரம்யா.

சபேசனுக்குப் பரிதாபமாக இருந்தது. ஆனாலும் வீட்டில் அவருக்கு அதிகாரம் ஏதும் கிடையாதே?

''கண்ணைத் துடைச்சிட்டு உள்ளே போம்மா'' என்று மெல்லிய குரலில் மருமகளுக்கு ஆறுதல் சொன்னார்.

அலுவலகத்திலிருந்து வந்த மகனிடம் முதல் காரியமாக ரம்யா நகைகளை விட்டு விட்டு வீடு திரும்பிய சங்கதியைச் சொல்லி முடித்தாள் கௌரி. மகன் அதைக் கேட்டு ஆத்திரப் படுவான் என்று நினைத்தவளுக்குப் பெருத்த ஏமாற்றம்.

''நகைகள் அங்கேயே இருக்கட்டும் அம்மா. அவள் அப்பா அவைகளைச் சாப்பிட்டுவிட மாட்டார்'' என்றான்.

ஆரம்பத்தில் பெண் பிடிக்கவில்லை என்று மறுத்த மகன், சில மாதங்களில் இப்படியா மாறிப் போவான்? இந்த கறுப்பு மனைவிக்கே இந்தப் பாடென்றால் ரம்யா நல்ல சிவப்பாக அழகாக அமைந்து விட்டிருந்தால் ஏதேது கையில் பிடிபடாமல் பறப்பான் போலிருக்கிறதே! கௌரி கோபத்தில் கொதித்தாள். ஆத்திரப்பட்டாள். பற்களைக் கடித்தாள். அதற்குமேல் தர்க்கிக்க முடியாமல் அடங்கிப் போனாள். ஆனாலும் நகைகள் சங்கதி நீறுபூத்த நெருப்பாக அவளது நெஞ்சுக்குள்ளே குமுறிக் கொண்டிருந்தது. எப்படியாவது அவற்றைத் திரும்ப வரவழைத்து விட வேண்டும். அவற்றைப் போட்டுக்கொண்டு பெரிய மனுஷியாக அவள் உலாவ வேண்டும்; சம்பந்தி கண்களில் பட வேண்டும்? அவர் கேட்க முடியாமல் தவிக்க வேண்டும் என்று கோபத்தில் குமைந்து கொண்டிருந்தாள்.

அப்பாவிடம் நகைகளைப் பற்றி எப்படி ஆரம்பிப்பது? மகள் தம்மேல் அவநம்பிக்கைப்படுவதாக அவர் எண்ணிக் கொண்டால்? இந்த முறை கட்டாயம் அவள் நகைகளுடன் வீடு திரும்ப வேண்டுமென்று மாமியார் உத்தரவு போட்டிருக்கிறாளே? அதன்படி செய்ய முடியாவிட்டால்... ரம்யா கலவரத்துடன் தன் அறைக்குள் சென்று படுக்கை மீது சாய்ந்து கொண்டு மனதுக்குள் அழுதாள்.

இதுமாதிரியான இக்கட்டான சந்தர்ப்பத்தில் ஒரு பெண்ணுக்கு அறிவு சொல்ல ஒரு தாய் அவசியமாயிற்றே? பிறந்ததிலிருந்து அவளது முகத்தைப் பார்த்தறியாத பேதை அவள். நல்ல நினைவு ஏற்படுமுன்னே அம்மாவை இழந்து விட்டாள். கூட உதவிக்கொண்டிருந்த அத்தையும் தனியாக அந்த வீட்டில் இருக்க மறுத்துக் கிளம்பிப் போய் விட்டாள்.

மாலை வீட்டுக்குத் திரும்பியதும் அப்பா அவளிடம் என்னவோ பேச விரும்புகிறார். அது என்னவாக இருக்கும்?

அதற்குமுன் அவள் நகையைப் பற்றிக் கேட்டு விடுவது சரியா? அப்பா தமது அலுவலகத்துக் கவலைகளை



அவளிடம் சொல்ல விரும்புகிறாரா? அப்போது நகைகள் பற்றிப் பேசுவது முறையா? பலவும் நினைத்து அவளுக்குத் தலைவலியே வந்து விட்டது.

படபடவென்று கதவு தட்டப்பட்டதும் திடுக்கிட்டு எழுந்தாள். சமையற்காரன் ராமு வாசற்படியருகே நின்று கொண்டிருந்தான்.

''எஜமான் சாப்பாட்டுக்கு வர நேரம்... நீங்களும் அவரோடு சேர்ந்து சாப்பிட்டுட்டா எனக்கு வேலை எளிதாகி விடும்.'' மிடுக்காகச் சொன்னான்.

''அப்பா வந்ததும் வந்துடறேன்'' என்று கூறி விட்டுக் கதவைச் சாத்திக் கொண்டாள்.

அவசரமாகக் குளியலறைக்குள் சென்று முகத்தைக் கழுவி முடியைச் சீராக்கிக் கொண்டு பொட்டு வைத்துக் கொண்டாள். புடவையை மாற்றிக்கொண்டு அவள் தயாராவதற்குள் அப்பாவின் பென்ஸ் ஓசைப்படாது வாசலில் வந்து நின்றது.

ரோவர் போட்ட சத்தத்தில்தான் அவளுக்கு அப்பா உள்ளே வருகிறார் என்று தெரிந்தது.

சாப்பாட்டறையில் அப்பாவுடன் அவள் எதிர்புறமாக உட்கார்ந்து கொண்டாள்.

சமையற்கார ராமு ரொம்பப் பதவிசாகப் பரிமாறினான். ''கொஞ்சம் பொரிச்ச கூட்டு போடவா. இன்னும் கொஞ்சம் பருப்பு உசிலி போடட்டுமா? எலுமிச்சம் பழரசம் கப்பில் கொண்டு வரவா?'' உபசாரம் தடபுடல் பட்டது. என்ன பணிவு, என்ன குழைவு!

அத்தை சொன்னபடி அப்பாவைக் கையில் போட்டுக் கொண்டு இந்தத் தடியன் என்ன செய்கிறானோ?

அப்பாவைப் பார்த்துச் சிரமப்பட்டுப் புன்னகைத்தபடி சாப்பிட்டாள்.

நீலகண்டன் மறுபடி அலுவலகம் கிளம்பத் தயாரானதும் வாசல் வரை வந்து வழி விட்டாள் மகள்.

''இன்னிக்குத்தான் நான் உண்மையா வயிறு நிறையச் சாப்பிட்டேன். உன்கிட்டே பேசிட்டுச் சிரிக்கச் சாப்பிட்டது மனதுக்கு நிறைவா இருக்கு. தினமும் நாலு சுவத்தைப் பார்த்துட்டுச் சாப்பிடுவது ஒரு வாழ்வான்னு அலுத்துப் போச்சு. நீ ஒரு வாரம் என்னோட இருக்கப் போறேன்னு நினைக்கும்போதே மனசுக்கு ஆறுதலா இருக்கு. சாயங் காலம் ரெடியா இரு. நான் உன்னைப் பீச்சுக்கு அழைச் சிட்டுப் போறேன். நிம்மதியாகக் கடற்கரையிலே காரை நிறுத்திட்டுக் காத்து வாங்கிக்கொண்டே உன்கிட்டே நிறை யப் பேசப் போறேன்...'' சொல்லிவிட்டுக் கிளம்பினார்.

இது என்ன மூடுமந்திரம்? அப்பா நிறையப் பேசப் போறேன் என்று சொல்வதின் அர்த்தம்? குழப்பம் தாளாது உள்ளே திரும்பியவள் தன் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு படுக்கையில் சுருண்டு கொண்டாள்.

''சாயங்காலம் காப்பியுடன் என்ன டிபன் வேணும்?'' என்றோ, 'ராத்திரிக்கு என்ன சமைக்கட்டும்' என்றோ கேட்காமல் ஒரு பாட்டைச் சீட்டியடித்தபடி உள்ளே சென்ற சமையற்காரனை அவளுக்குப் பார்க்கவும் பிடிக்கவில்லை.

'எதை வேணுமானாலும் சமைக்கட்டும். அவனது திருதிரு விழிகளையும் ஏளனச் சிரிப்பையும் பாராதிருக்கும் வரை சரி'' என்று முணகிக்கொண்டு தன் பிறந்த வீட்டிலேயே ஒரு கைதிபோல் அறைக்குள் அடங்கிக் கொண்டாள்.

# 6

தன்னையறியாது தூங்கி விட்டிருந்தாள் ரம்யா.

திடுக்கிட்டு விழித்துக்கொண்டு மணியைப் பார்த்த போது பொழுது மாலை நான்கு மணியைத் தாண்டி விட்டிருந்தது.

திரைச் சீலையை விலக்கி விட்டு முன் பக்கத்துத் தோட்டத்தை எட்டிப் பார்த்தாள்.

கந்தசாமி ஹோஸ் பைப்பை வைத்துக் கொண்டு மஞ்சள் வெய்யிலில் செடிகளுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்தான்.



தோட்டம் அவனது கவனிப்பால் எப்பொழுதும்போல் சீராக அழகாக, செழுமையாகக் காணப்பட்டது.

அப்பா வீட்டுக்குத் திரும்பும் நேரமாகி விட்டதே என்ற அவசரத்தில் உள்ளடங்கிய குளியலறைக்குள் விரைந்தாள். முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்டு தலைமுடியை இழைய வாரிக் கொண்டை போட்டுக் கொண்டாள். முகத்தில் லேசாகப் பவுடரை ஒற்றி முடித்துக் கொண்டு, நெற்றியில் பளிச்சென்று பெரிதாகக் குங்குமப் பொட்டை வைத்துக் கொண்டாள். கண்ணாடியில் தெரிந்த தன் உருவத்தை உற்றுப் பார்த்தாள்.

அவளது புக்ககத்து மனிதர்கள் அத்தனை பேரும் நல்ல நிறம். கல்யாண வயதில் பெண் ஒருத்தி வீட்டிலிருந்த போதிலும் சாயம் பூசிய கருங்கூந்தலை அள்ளிக் கொண்டை போட்டுக் கொண்டு லேசான ஒப்பனையில் கௌரி சின்னப் பெண்ணைப் போலத் தங்க நிறத்திலே சிக்கென்று இருந்தாள். மாலதி கொடி போல, அம்மாவின் கூர் மூக்கும் அப்பாவின் சுருண்ட முடியுமாகத் தங்க பொம்மைபோல அழகாக இருந்தாள். மச்சினன் மித்திரன் அசட்டையாக உடுத்திக் கொண்டு கிளம்பினாலும் பார்க்க சினிமாக் கதாநாயகன் போல மிடுக்காக, லட்சணமாக இருந்தான்.

அவள் கணவன் கோதண்டராமனை நினைத்துக் கொண்டபோது ஏனோ அவளுக்கு நெஞ்சை என்னவோ உறுத்தியது. உயரமாக, கோதுமை நிறத்தில் கம்பீரமாக நின்ற அவன் பக்கத்தில் அவளது கறுப்பு ரொம்ப அதிக மாகத் தெரிவதைப் போன்ற பிரமை மனத்தைச் சில சமயம் வருத்தியது. மாமியார் கௌரி சமீப காலமாக அவளது நிறத்தைப் பற்றிக் காதில் பட்டும் படாமலும் பேசினாள்.

ஒருநாள் ரம்யா சமையலறையில் வேலையாக இருந்த போது கௌரி முன்னறை தொலைபேசியில் தன் சிநேகிதி யாரிடமோ இரைந்து பேசியது கேட்டது. ''பெண் கறுப்பா... சிவப்பா... சுமார் நிறமாகவாவது இருக்காள்

இல்லையா? சந்தோஷப் பட்டுக்கோ. என் நாட்டுப் பெண் போல ரொம்பக் கறுப்பு இல்லையே?''

நெஞ்சில் நெருப்பாகக் கொட்டியது அந்த வார்த்தைகள். கண்களில் புரண்ட கண்ணீரை விழுங்கிக் கொண்டு அவள் வீட்டு வேலையில் மூழ்கிப் போனாள்.

ஆனால் அன்று மாலை கோதண்டம் அவளைக் காரில் கடற்கரைக்கு அழைத்துக் கொண்டு போனபோது கேட்காமல் இருக்க முடியவில்லை.

''உங்களுக்கு என்னை அழைச்சுக் கொண்டு போக வெட்கமாக இல்லையா?''

''என் மனைவியோட வெளியே போக நான் ஏன் வெட்கப்படணும்?''

''அதுக்கில்லை. உங்களுக்கு பக்கத்திலே கறுப்பா நான் நிற்கும்போது பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள் தெரியுமா? எள்ளும் அரிசியும் கலந்தாப்பல இந்த ஜோடியைப் பார்னு சிரிப்பார்கள்.''

கோதண்டம் முகம் சிவந்து போனான். ''இந்த மாதிரித் தத்துப் பித்துனு ஏன் பேசறே? நான் எப்பவாவது உன் மனசு நோகறாப்பல ஏதாவது சொல்லியிருக்கேனா? நான் ஒரு கேள்வி கேட்கட்டுமா?''

''கேளுங்களேன்.''

''இந்தப் பணக்காரப் பெண்ணை இந்தப் பரதேசி எப்படிக் கல்யாணம் பண்ணிக் கொண்டான்? நீலகண்டன் அந்தஸ்து என்ன, இவன் வீட்டு அந்தஸ்து என்னன்னு யாராவது பேசிச் சிரிக்க மாட்டாங்களா? ரம்யா, இன்னியோட இந்தப் பேச்சை நிறுத்திடு. என்னை உனக்குப் பிடிச்சிருக்கு, உன்னை எனக்குப் பிடிச்சிருக்கு. அடுத்தவர் அபிப்பிராயம் நமக்குத் தேவையே இல்லை. அடடா... எதுக்கு அழறே?'' என்றபடி தன் கைக்குட்டையால் அவளது கண்ணீரை அன்போடு துடைத்து விட்டான்.



அப்போது நினைத்துக் கொண்டாள். நிறத்தை மட்டமாகக் கொடுத்த கடவுள் அவளுக்கு ஓர் உயர்ந்த மனிதனைக் கணவனாகக் கொடுத்திருக்கிறாரே?

சட்டென்று தன் சிந்தனையினின்று மீண்டாள். வெளியே செல்ல அலமாரியில் அடுக்கி வைத்துக் கொண்டிருந்த பெட்டி போட்டதொரு காஞ்சீபுர நூல் சேலையை ஜோடியான ரவிக்கையுடன் அணிந்து கொண்டாள். கொண்டையில் வைத்துக்கொள்ள ஒரு ரோஜாப்பூவைப் பறிக்க அறையை விட்டுத் தோட்டத்திற்குள் இறங்கினாள்.

குழாயை நிறுத்தி விட்டுக் கந்தசாமி ஓடி வந்தான். சுவர் ஓரமாக வளர்ந்து நின்ற சிவப்பு ரோஜாச் செடியிலிருந்து ஒரு மலரைக் கத்தரித்து அவளிடம் கொடுத்தான்.

''என் புடவை நிறத்துக்குத் தக்கபடி பார்த்துத் தந்திருக்கே. தாங்க்ஸ்'' என்று சிரித்துக் கொண்டே தலையில் சூடிக் கொண்டாள்.

''அம்மா, உங்ககிட்ட ஒரு முக்கிய சங்கதி பேசணும். காலையிலிருந்து துடிச்சிக்கிட்டிருக்கேன்...'' மிகவும் தாழ்ந்த குரலில் சொன்னான்.

''என்ன விஷயம்? சம்பளம் போதலையா? உன் மகனை பார்த்து வர லீவு தேவையா? அய்யா கிட்ட கேட்கப் பயமா இருக்கா?'' புன்னகைத்தாள் அவள்.

''போன மாசம் இரண்டு நாள் லீவு எடுத்துட்டுப்போய் என் மகனைப் பார்த்துட்டு வந்தோம். இந்த வருச ஆரம்பத்திலேயே அப்பா இருபது ரூபாய் அதிகம் போட்டுச் சம்பளம் தரார். எனக்கும் என் பெண்ஜாதிக்கும் எந்தக் குறையும் கிடையாது.''

''அப்படின்னா? வேறு என்ன சங்கதி?''

''இந்த வீட்டைப் பத்தின சங்கதிதான் அம்மா. அய்யா முன்னே போல இல்லே. சமீபத்திலே அவர் ரொம்பக் குடிக்க ஆரம்பிச்சிருந்தார். நல்லவேளையா அந்தப் பழக்கம் குறைஞ்சுகிட்டு வருதேன்னு நான் சந்தோஷப்பட்டப்போ,

இன்னொரு பழக்கம் ஏற்பட்டிருக்கும்மா. அய்யா இந்த வயசிலே உங்களைப்போல ஒரு சின்னப் பெண்ணோட சுத்திக்கிட்டிருக்கார். சில சமயம் அந்தப் பொண்ணை வீட்டுக்குக் கூட்டி வரார்.''

முகம் சுருங்கிப் போனாள் ரம்யா. அவளது நெஞ்சு படபடத்தது. தான் ஏதோ தவறு செய்து விட்டது போன்றதொரு குற்ற உணர்வில் மனம் பதைபதைத்தது. எச்சிலை விழுங்கிக் கொண்டாள்.

''அந்தப் பெண்ணை அப்பா இங்கேகூட அழைச்சுக் கொண்டு வராரா? சமையற்காரர் அதைக் கண்டு கொள்கிறதில்லையா?''

''அந்த வெட்கக்கேட்டை ஏன் கேக்கறீங்க? இந்தச் சமையற்காரர் அந்தப் பெண்ணுக்குத் தூர வழியில் அண்ணன் சொந்தம். இந்தப் பெண்ணோட தொடர்பு ஏற்பட்டதாலேதான் இந்தச் சமையற்காரருக்கே இங்கே வேலை கிடைச்சுது. தன் சகோதரிக்கு அய்யா நெருக்கமாகிட்டார் என்கிற திமிரில் இந்தச் சமையல் ஆள் வைச்சது சட்டமா இருக்கு. என்னையும் என் பெண்ஜாதியையும் ரொம்பப் பாடாப் படுத்தறார்.''

''உன்னை மட்டுமா கந்தசாமி? என்னையும் படுத்துகிறார். இப்போ எனக்கு அவனுடைய திமிரின் காரணம் புரிஞ்சி' டது... 'தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள்.'

''இதில் நான் என்ன செய்ய முடியும்னு நினைக்கறே?'' என்று கேட்டாள்.

''அப்பாவுக்கு ஜாடையா எடுத்துச் சொல்லுங்கள்.''

அவன் பேச்சை முடிப்பதற்குள் நீலகண்டனின் பென்ஸ் தோட்டத்து பாதையில் தவழ்ந்தோடி வந்தது. சட்டென்று கந்தசாமி ஹோஸ் பைப்புடன் பின்புறம் மாயமானானான்.

''என்னம்மா? தோட்டம் முன்போல நல்லாத்தானே இருக்கு? உனக்குப் பிடிச்ச ஜாதி முல்லையை கராஜ் சுவர் ஓரமாய்ப் பயிரிட்டு வச்சிருக்கேன். பூக்க ஆரம்பிச்சுட்டது.'' காரிலிருந்து இறங்கிய அப்பா சிரித்தார்.



'எனக்குப் பிடிச்ச முல்லையா, உங்க கேர்ள் பிரண்டுக்குப் பிடிச்சதா?' வெடுக்கென்று கேட்க வார்த்தைகள் நாக்குவரை எட்டி விட்டன.

அப்பாவிடம் இதுவரை அவள் எதிர்த்துப் பேசியறியாதவள். இப்போது மட்டும் அந்தத் திடீர்த் துணிவு எங்கேயிருந்து வரப்போகிறது?

''வாம்மா, டிபன் சாப்பிட்டு விட்டு பீச்சுக்குப் போய்ட்டு வருவோம்.'' மெல்லிய குரலில் அப்பா சொன்னதும் பின்னால் உள்ளே நடந்தாள்.

எஜமானரைக் கண்டதும் ராமு ரொம்பவே பதவிசுடன் வேகமாக டிபனைப் பரிமாறி, நுரை பொங்கிய காப்பி டம்ளர்களைக் கொண்டு வந்து மேஜை மேல் வைத்தான்.

கைகளைக் கழுவி முகத்தைத் துடைத்துக் கொண்டு வெளியே செல்ல வேட்டி சட்டையில் வந்த அப்பா தட்டில் இருந்த பிடி கொழுக்கட்டைகளைக் கவனிக்காமலே சாப்பிட்டார். அவருக்கு அந்த டிபன் கொஞ்சம் கூடப் பிடிக்காது. ஒருநாள் அத்தை ஆசைப்பட்டுச் செய்து போட்டபோது கோபத்துடன் தட்டைத் தள்ளிவிட்டு வெளியேறிய அதே அப்பா, இன்று வாய் பேசாமல் டிபனைச் சாப்பிட்டு விட்டு எழுந்தார்.

அப்பாதான் எப்படி மாறிப் போயிருக்கிறார்! ஒரு பெண்ணின் சகவாசம் அவரை இப்படி ஒரு புதுவித மனிதராக மாற்றி விட்டிருக்கிறதே! வியப்புடன் எழுந்த ரம்யா கையைக் கழுவிக் கொண்டு வாயைக் கைக்குட்டையால் துடைத்தபடி சாப்பாட்டறைச் சுவரில் தொங்கிய தாயின் படத்தை ஒரு நிமிடம் பார்த்தபடி நின்றாள்.

''வாம்மா, போகலாம்'' என்று அப்பா கூறி விட்டு முன்னே நடந்து விட்டார்.

வேலைக்காரி வள்ளி கொண்டு வந்து வைத்த தோட்டத்து நித்யமல்லிச் சரத்தை எடுத்து அம்மா படத்திற்குச் சூட்டியபோது மனத்திலே அந்தக் கேள்வி எழுந்தது.

'இனி அப்பா அம்மாவின் படத்தருகே வந்து நின்று கொண்டு இறந்தவளை ஒரு கணமாவது நினைத்துப் பார்ப்பாரோ?'

துக்கம் தொண்டையை அடைத்தது. முன்பின் தெரியாத அந்த இளம் பெண்மீது கோபம் பொத்துக் கொண்டு வந்தது. உதட்டைக் கடித்துக் கொண்டு திரும்பினாள்.

அதற்குள் நீலகண்டன் பொறுமையின்றி இரண்டு தடவைகள் காரின் ஹாரனை ஒலிக்க விட்டார்.

''வந்துட்டேன் அப்பா'' கூவிக் கொண்டே அவள் வேகமாக வந்து காரில் ஏறிக் கொண்டாள்.

நீலகண்டன் டிரைவரை அனுப்பி விட்டுத் தாமே காரை ஓட்டினார். கடற்கரையின் வசதியான ஓர் இடத்தில் காரை நிறுத்தி விட்டு அவளைப் பார்த்தார்.

''இந்தா, முதலில் இதைச் சாப்பிடு'' சொல்லிக் கொண்டே காரின் பின் ஆசனத்தில் வைக்கப்பட்டிருந்த தொரு சிறு பார்சலை அவளிடம் தந்தார்.

அவசரமாகப் பிரித்த ரம்யா அதற்குள் இரண்டு சாக்லெட் கட்டிகள் இருப்பதைப் பார்த்து விட்டுச் சிரித்தாள்.

''என்னப்பா, நான் என்ன சின்னக் குழந்தையா? இதெல்லாம் வாங்கிட்டு வந்திருக்கீங்க?''

''சில சமயம் நாம் வயதில் குறைந்து விட்டவர்கள் போல நினைத்துக் கொண்டு விடுகிறோம் இல்லையா?''

அப்பா சொல்லப்போகிற சங்கதியை அவளால் ஓரளவு ஊகிக்க முடிந்தது. ''நீங்களும் சாப்பிடுங்கள் அப்பா.'' மகள் அப்பாவிடம் சாக்லெட் கட்டியை நீட்டினாள்.

சரிகைத் தாளைப் பிரித்து வில்லைகளை ஒடித்து வாயில் போட்டுக் கொண்டார். ''ஸே இட் வித் ஸ்வீட்ஸ் என்பது போல நான் சொல்லப் போவதை இனிப்போடு சொல்றேன்'' மகளைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டினார்.

சாக்லெட் துண்டங்களை விழுங்க முடியாமல் ரம்யா தவித்தாள்.

''உன்னைக் கல்யாணம் பண்ணிப் புக்ககம் அனுப்பின பிறகு அத்தை புறப்பட்டுப் போனதும் நான் ரொம்பவே தனியாகி விட்டேன் தெரியுமா?''

ரம்யா தலையை ஆட்டினாள்.



''மனிதனுக்குத் தனிமை என்பதுதான் முதல் விரோதி. நம்ப பெரிய வீட்டில் வெறுமையாகி விட்டிருந்த உன் அறையைப் பார்த்து, தோட்டத்தைச் சுற்றி வந்து, இரவு சாப்பாட்டை முடித்துக் கொண்டு படுக்கை மீது விழுந்தால் எனக்குத் தூக்கம் வரவே மறுத்தது. முதலில் தனிமையை விரட்டவும் கொஞ்சம் நன்றாக தூங்கவும் நான் மது சாப்பிட ஆரம்பித்தேன்.''

ரம்யா மௌனமாகத் தன் தந்தை முகத்தைப் பார்த்தாள். வெற்றிலை பாக்குகூடப் போடாத மனிதர் அவர். குடிக்கும் அளவுக்கு மிகவும் மாறிப் போய்விட்டாரே... அவள் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

''வீட்டுக்கு வந்தால், வெறும் நாலு சுவரை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்றால், வெறுப்பு ஏற்பட்டது.''

அப்படி ஒன்றும் தந்தையும் மகளும் முன்னறையில் உட்கார்ந்து அறிவு சம்பந்தப்பட்ட விஷயங்களைச் சர்ச்சை செய்ததில்லை. அப்பா தான் குடிக்க ஆரம்பித்ததற்கு அவள் புக்ககம் போனதுதான் காரணம் என்று ஏதோ கதை அளக்கிறார். மனத்திற்குள்ளே சொல்லிக் கொண்டாள்.

''நான் என்னப்பா செய்வேன்? என்னை நீங்கள்தானே இந்த இடத்தைப் பார்த்துக் கல்யாணம் செய்து கொடுத்தீங்க. என் கணவரால் வீட்டோட மாப்பிள்ளையாக இருக்க முடியாதே.''

''அதுக்கு நான் சொல்லலை. உரிய காலத்திலே நான் கடமையைச் செய்ய வேண்டாமா? அதனால் உன்னைக் கல்யாணம் செய்து கொடுத்தேன். கோதண்டம் ரொம்ப நல்ல பையன். அதைப்பத்தி எனக்கு ரொம்பச் சந்தோஷம் தான். உன்னுடைய மூணாவது வயதில் உன் அம்மா போய் விட்டாள்.''

''தெரியும் அப்பா.''

''அதிலிருந்து நீ புக்ககம் போனவரை நான் உனக்காகவே வாழ்ந்தேன். தெரிகிறதா?''

''புரிகிறது அப்பா.'' ரம்யாவின் தொண்டை அடைத்துக் கொண்டது.

''மறுமணம் செய்து கொள்ளச் சொல்லி உறவினர்கள் ரொம்ப தொந்தரவு பண்ணினார்கள்.''

''அத்தை சொல்லியிருக்கிறாள். தெரியும்பா.''

''உனக்காகவும் உன் அம்மாளின் நினைவுக்காகவும் வாழ்ந்தேன் இதுவரை. உனக்கு இருபத்து மூணு வயதாகிற தில்லையா? சுமார் இருபது வருஷம் நான் வீடு- ஆபீஸ்னு வாழ்க்கையை ஓட்டியிருக்கிறேன்.''

''ரொம்பவே சிரமப்பட்டிருக்கீங்க அப்பா. எனக்காகப் பெரிய தியாகம் செஞ்சிருக்கீங்க.''

''தனிமையைப் போக்க நான் ஆரம்பித்த மதுப் பழக்கம் என்னை நாளடைவில் ரொம்பக் கெடுத்து விட்டது. தினம் சாயங்கால வேளையில் குடித்து விட்டுத் தான் மறுகாரியம் என்கிற கெட்ட பழக்கம் என்னைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட்டது.''

''கேட்க வருத்தமாக இருக்குப்பா. இப்போகூட.''

''அதைத்தான் சொல்லவரேன். நான் இந்தப் பழக்கத்துக் குள்ளே அகப்பட்டுக் கொண்டதும் என்னையே ஏமாத்திக்க ஆரம்பிச்சேன். சாயங்காலம் வீட்டிற்கு வந்ததும் கால் நடையா வெளியே கொஞ்சம் போய் வருவது போலப் போக்குக் காட்டி விட்டு, ரொம்ப மட்டமான ஒரு இடத்திலே போய்க் குடிக்கிற வழக்கம். அங்கே என்னை யாரும் அடையாளம் கண்டுக்க மாட்டாங்கன்னு நினைப்பு. ஒரு தடவை கண்மண் தெரியாமல் குடிச்சுட்டு வீடு திரும்பற நினைவு இல்லாம கால் போன போக்கில் தடுமாறிக் கொண்டு எங்கேயோ போய் நடைபாதை மேல் விழுந்துட்டேன்.''

''ஐயோ... அப்புறம்?'' அவள் பதறினாள்.

''எல்லாம் அரை நினைவு இருந்தது. சுற்றிலும் ஒரு கூட்டம் சேர்ந்து விட்டது. 'என் சகோதரன் ஹார்ட்கேஸ் மயக்கமாகிட்டார். தள்ளுங்க எல்லோரும்'ன்னு'யாரோ சொல்வது கேட்டது. பிறகு ஒரு ரிக்ஷாவிலே என்னை ஏற்றி



அழைச்சுக் கொண்டு போனவரை நினைவு இருந்தது. நான் எழுந்தபோது நடு இரவு. கொஞ்சம் நிதானம் வந்து சுற்றிலும் பார்த்தேன். ஒரு ஓட்டு வீட்டு கூடத்திலே, கயிற்றுக் கட்டிலில் படுத்துக் கிடந்தேன். ''ஸார், இப்போ எப்படி இருக்கு? இன்னும் மயக்கமாவா இருக்கு'ன்னு மெல்லியதாக ஒரு பெண்ணின் குரல் கேட்டு வியப்போடு பார்த்தேன். அவள் வேறு யாருமில்லை. எங்கள் அலுவலகத்தில் ஸ்டெனோவா வந்து புதிதாய்ச் சேர்ந்திருந்த ரேவதி என்கிற பெண். ராத்திரியெல்லாம் ஒரே வாந்தி-வயிற்றுப் புரட்டல்னு கஷ்டப்பட்டேன். அங்கேயே தூங்கிட்டேன். அவளும் அவள் தாயாரும் எனக்குச் செய்த சிச்ருஷைகள் கொஞ்ச நஞ்சமல்ல.''

''அப்புறம் அப்பா?'' மெல்லக் கேட்டாள் மகள்.

''உங்கம்மா உயிரோட இருந்தா இப்படி நான் கெட்டழிய விட்டிருப்பாளா?''

''என் மனசு கேட்க ரொம்ப வேதனைப் படறது அப்பா?'' ரம்யா தடுமாறினாள்.

''ரேவதி என்கிற அந்தப் பெண்ணுக்கும் எனக்கும் நெருங்கின சிநேகிதம் அப்படி இப்படின்னு கதைகள் பரவ ஆரம்பிச்சது. பாவம், ஏழைப் பெண். தன் விதவைத் தாயோட வாழ்கிறவள். அவளுக்கு என்னால பெயர் கெட்டுப் போகிறதேன்னு மனம் சங்கடப்பட்டது. தினமும் சாயங்காலம் அவளைக் காரில் கூட்டிக் கொண்டு சென்று அவள் வீட்டில் விட்டு வரும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டேன். அதன் பலனாக சிலநாள் மதுவை கையால் தொடுவது கூடக்கிடையாது. சில சமயம் என்னையும் மீறி மது சாப்பிட்டு விட்டால் ரேவதி பொறுப்பாக என்னை வீட்டில் கொண்டு சேர்த்து விட்டுப் போவாள். கூடவே நிழல் போலத் துணையாய் இருந்து நான் பெரிய ஆல்க ஹாலிக்காகப் போய்விடாமல் பார்த்துக் கொண்டு வந்தாள். இப்போ அநேகமாக நான் புட்டியைத் தொடறதில்லை.''

''அவளுக்கு நாம் ரொம்பக் கடமைப் பட்டிருக்கோம் அப்பா.''

''அந்தக் கடமை உணர்ச்சிதான் என்னைக் கொஞ்ச காரியங்களைச் செய்ய வச்சது. அவளுக்கும் அவள் அம்மாவுக்கும் வசதியாய் வாழ என் செலவில் ஒரு ஃபிளாட் எடுத்து வச்சிருக்கேன்.''

''உங்க ஆபீசிலே இதைப் பத்தித் தப்பா நினைச்சுக்கு வாங்களே அப்பா.''

''ஆமாம். ரொம்பத் தப்பாத்தான் நினைச்சு, கன்னா பின்னான்னு பேசறாங்க. ரேவதி என்னுடைய மிஸ்ட் ரஸ்ன்னு கதை கட்டி விட்டிருக்காங்க.''

''அந்தப் பெண்ணுக்கு உங்க நிறுவனத்து வேற ஆபீசுக்கு மாற்றல் வாங்கித் தந்து விடுங்களேன். இங்கிருந்து வேற ஊருக்குப் போய்ட்டா உங்கமேல் வீண்பழி குறையும்.''

''அதுதான் முடியாது. என்னை முன்போல ஒரு நல்ல மனிதனாக மாற்ற அவளது துணை அவசியம். என்னைக் கவனிச்சுக்கொள்ள, என் சிரமங்களைக் கேட்டு ஆறுதல் சொல்ல ஒரு பெண் துணை தேவைப்படுகிறது. காலைத் தலையை வலிச்சால் ஏன்னு கேட்க வீட்டில் ஒரு பெண் இல்லாமல் எத்தனை காலம் நான் தனியாக இருக்க முடியும் சொல்லு?''

''அப்படின்னா, அந்தப் பெண் மேலே...'' தொடர்ந்து கேட்க முடியாமல் மூக்கும் முகமும் சூடாகிப் போக நெஞ்சு படபடக்க ரம்யா மௌனமானாள்.

''அந்தப் பெண்ணை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது ரம்யா.''

''அந்தப் பெண்ணுக்கு?'' மேலே பேச முடியாது மென்று விழுங்கினாள்.

''அவளுக்கு வசதியான வாழ்க்கை தேவை. அதன் காரணமோ, அல்லது என்னைப் பார்த்துப் பரிதாபமோ என்னைப் பிடிக்கிறது என்று சொல்லித்தான் பழகுகிறாள்.''

ரம்யா மௌனமாகத் தலையை குனிந்தாள். ஒரு தந்தை தன் மகளிடம் பேசும் விஷயமா இது என்று வெட்கத்தில் உடல் குறுகிப் போனாள்.



''உன்கிட்ட மறைச்சு வைச்சுட்டுத் திடுதிப்புனு உனக்கு ஒரு அதிர்ச்சியைக் கொடுக்க விரும்பலை நான். ரேவதியை நான் மதிக்கிறேன். அவள் பெயர் வீணாக நாசமாகி விடக்கூடாது என்கிற நோக்கமும் என்னை இந்த முடிவெடுக்கச் செய்து விட்டது. நாங்கள் விரைவில் கல்யாணம் செய்து கொள்ளத் தீர்மானித்து விட்டோம். நாளை மறுநாள் ரேவதியை நம் வீட்டுக்கு அழைத்து வந்து உனக்கு அறிமுகம் செய்து வைக்கப் போகிறேன். உன் சித்தியை நீ பார்த்து பேசணும். கொஞ்சம் பேசினால் உனக்கும் அவளை ரொம்பப் பிடித்துவிடும்.''

இந்தச் செய்தியை சொல்லவா அப்பா அவளைக் கடற்கரைக்கு அழைத்துக் கொண்டு வந்தார்?

''உனக்கு இதில் ஏதும் மறுப்பு உண்டா அம்மா?''

''உங்கள் இஷ்டம். மறுப்புச் சொல்ல எனக்கு என்ன உரிமை இருக்கு?''

''உன் புக்ககத்தார் கேள்விப்பட்டால் ரொம்பப் பேசுவார்கள்.''

''என் கணவர் உங்கள் சொந்த விஷயத்தில் தலையிட மாட்டார்.''

''இன்னும் ஒரு மாசத்துக்குள்ளே கல்யாணத்தை வச்சுக் கலாம்னு நினைக்கிறேன். நீ கூட இருந்து உன் சித்திக்குப் புடவை, ரவிக்கை இத்யாதி வாங்க உதவி செய்யணும் அம்மா. அதுக்குத்தான் உன்னை இங்கே வர வழைச்சி ருக்கேன்.''

மிடறு விழுங்கினாள் ரம்யா. அவளது தாய் இருந்த இடத்தில்... வயதில் வித்தியாசப்பட்ட ஒரு பெண் எங்கிருந்தோ வந்து புகுந்து கொள்வதா? ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. ஆனால் அவளுக்கு அதைத் தடுக்க என்ன உரிமை இருக்கிறது? சொல்லாமல் கொள்ளாமல் அவர் கல்யாணம் செய்து கொண்டு வந்து நின்றால் அவள் என்ன செய்துவிட முடியும்? இந்தவரை அவளை மதித்து, தாம்

எடுத்த முடிவைச் சொன்னாரே... அதற்காக அவள் அப்பாவுக்கு நன்றியுள்ளவளாக இருக்க வேண்டும்.

''என்னம்மா, பேச மாட்டேங்கிறே?''

''நீங்க பேசணும்னு சொன்னதையெல்லாம் கேட்டு முடிச்சிட்டேன். உங்க இஷ்டப்படி சித்திக்கு நான் உதவி செய்கிறேன். தடையில்லை. என் கணவர் போன் செய்தால் இந்தச் சந்தோஷமான சங்கதியை அவர்கிட்டே மட்டும் சொல்லி ரகசியமாக வச்சுக்கச் சொல்றேன். இப்போ என் மாமியார் - மாமனாருக்குத் தெரியவேண்டிய அவசிய மில்லை.''

''சரி, அப்படியே செய் அம்மா. கோதண்டராமன் ஒரு பண்பான மனிதன். அவன் எதுவும் இடக்காகப் பேச மாட்டான்.''

''அப்பா... நானும் உங்ககிட்ட ஒண்ணு பேசணும்னு நினைக்கிறேன்.''

''பேஷா, சொல்லும்மா கேட்கிறேன்.''

''என் மாமியார் கேட்டுக் கொண்டு வரச் சொன்னாங்க. ஒரு சமயம் நம்ப சிநேகிதரோட வீட்டுக் கல்யாணத்துக்காக எடுத்துக்கொண்டு வந்த என் நகைகள் அத்தனையையும் நீங்க- உங்க பாங்க் லாக்கரிலேயே வச்சுக் கொண்டிருக்கிறீங்களாம். அவைகளை எடுத்துத் தரச் சொல்லி வாங்கிட்டு வரச் சொன்னாங்க.

''ஏன், அவளும் அவள் பெண்ணும் உன் நகைகளைப் போட்டுக்கொண்டு மினுக்க முடியலையேன்னு ஆத்திரமா இருக்காமோ?''

''என் நகைகள் எங்க வீட்டிலேயே இருக்கணும்னு மாமியாரின் உத்தரவு.''

''உன் நகைகள் என் லாக்கரில் பத்திரமா இருக்கு. நம்ப ரெண்டு பேர் பேரிலும் இருக்கு. நீ எப்ப வேண்டுமானாலும் வந்து எடுத்துக்கொண்டு போகலாம். ஆனால் இப்போ வேண்டாம். உன் மாமியார் உன் அம்மாவின் அட்டிகையைப் போட்டுக்கொண்டு அந்தக் கல்யாணத்தில் மினுக்கினதைப் பார்த்து நான் பதறிப் போனேன்.''



''வீட்டுக்குத் திரும்பினதும் மாமியார் கேட்டால் நான் என்ன பதிலைச் சொல்றது?''

''காலம் இருக்கிற இருப்பில் கழுத்தில் தாலி சரட்டைக் கூடப் போட்டுக்கொண்டு பெண்கள் நடக்க முடியாதபோது விலை உயர்ந்த நகைகளைப் போட்டுக்கொண்டு எங்கே போக முடியும்னு அப்பா அதட்டறார். அவர் லாக்கரிலே எல்லாம் பத்திரமாயிருக்குன்னு சொல்லச் சொன்னார்ன்னு சொல்லு. உன் கணவரிடம் நான் இதைப்பற்றிப் பேசிவிடுகிறேன்'' என்று முடித்த நீலகண்டன் காரைக் கிளப்பினார்.

மாலைப் பொழுது நன்றாக அஸ்தமித்து இருள் வேகமாகப் பரவி விட்டிருந்தது. சாலை விளக்குகள் பளிச்சென்று ஒளியூட்டின. அதற்குப் பிறகு இருவரும் பேசவேயில்லை. மௌனமாக வீடு வந்து சேர்ந்தனர்.

அன்று இரவு ரம்யாவுக்குத் தூக்கமே வரவில்லை.

''என் நகைகளை எடுத்து உடனடியாகக் கொடுங்கள் என்று அப்பாவை அதட்ட முடியாது.

அப்பா கூறியதைப் போய் மாமியாரிடம் சொன்னால் வீட்டில் பெரிய ரகளை நடக்கப்போகிறது.

'இதுக்குத்தானா பத்து நாள் உன் பிறந்தகத்தில் போய் காம்ப் போட்டே?' என்று மாமியார் கூத்தாடுவாள்.

இருவருக்கும் இடையே அவள் என்ன செய்வாள்? தாங்க முடியாத கவலையில் அவள் ஒரு மூச்சு அழுது விட்டாள்.

# 7

தோட்டத்தில் படிந்திருந்த மஞ்சள் வெயில் மறைந்து இருள் லேசாகப் பரவிக்கொண்டு வருவதைக் கண்ட கௌரி வராந்தா விளக்கை எரிய விட்டாள்.

''மாலதி, பூஜை விளக்கை ஏத்தும்மா. அந்தப் புண்ணியவதிதான் ஒரு வாரமா பிறந்தகத்திலே காம்ப் போட்டிருக்காளே'' எரிச்சலுடன் குரல் கொடுத்தாள்.

கதைப் புத்தகத்தின் கடைசிப் பக்கங்களை முடிக்கப் பரபரத்துக் கொண்டிருந்த மாலதிக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது.

''போ! அம்மா சொல்றபடி செய். நாளைக்கு வரப் போகிறவர்கள் வீட்டுக்குப் போய் நீ விளக்கேத்த வேண்டாமா? இப்பவே கொஞ்சம் பிராக்டிஸ் பண்ணிக்கோ...'' மாடியிலிருந்து இறங்கிவந்த மித்திரன் சிரித்தபோது அவளுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது.

''நீ உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ'' என்று எரிந்து விழுந்தாள்.

''நாளைக்கு...'' என்று ஆரம்பித்த மித்திரன் சட்டென்று வாயை மூடிக் கொண்டான்.

வாசலில் நீலகண்டனது பென்ஸ் ஓசைப்படாமல் வந்து நின்றது.

தோட்டக்காரனுடன் பூவாளியுடன் அலைந்து கொண்டிருந்த சபேசன் சட்டென்று அதைக் கீழே வைத்துவிட்டு உள்ளே திரும்பினார்.

டிரைவர் கதவைத் திறந்து விட, ரம்யாவும், கோதண்டமும் ஒருங்கே இறங்குவதைக் கண்டு கௌரிக்கு வியப்புத் தாங்க முடியவில்லை.

''நீ எப்படி அங்கே போனே?'' முகவாயில் கையை வைத்தாள்.

''இது என்ன உலக மகா அதிசயம்? அண்ணா பம்பாயிலிருந்து மாலையே வந்திருப்பார். நேரே மாமனார் வீட்டுக்குப் போய் மன்னியைத் தன்னோடுகூட அழைச்சிட்டு வரார்'' மித்திரன் விவரித்தபோது கௌரி முகம் சுருங்கிப் போனாள்.

ஒரு காலத்தில் மூச்சு விட்டால்கூட அம்மாவிடம் கேட்டுக்கொண்டு செய்த பிள்ளை இப்போது தலைகீழாக மாறி விட்டிருக்கிறானே?



''மித்திரன் சொல்றது சரிதான் அம்மா. நேத்திக்கு நான் போன் செய்தப்போ, விமான நிலையத்திலிருந்து நேரே அங்கே வந்து காப்பி டிபன் சாப்பிட்டு விட்டு ரம்யாவை அழைச்சிட்டுப் போகலாம்னு மாமனார் சொன்னார்.''

அவன் முடிக்கு முன் பற்களைக் கடித்துக் கொண்டு கௌரி உள்ளே திரும்பி விட்டாள். மாமனார் சொல்வதற்கெல்லாம் தலையாட்டும் பொம்மையாகி விட்டானே அவளது செல்லப்பிள்ளை. சம்பந்தி நீலகண்டன் மீது அவளுக்கு நெஞ்சுவரை துவேஷம் பொங்கிக் கொண்டு வந்தது.

டிரைவர் டிக்கியைத் திறந்து அவர்களது பெட்டிகளைத் தூக்கி வந்து நடையில் வைத்தான். பின்னர் ஒரு கையில் கூடையும் இன்னொரு கையில் பெரிய அட்டைப் பெட்டியுமாக நுழைந்தவனை அசட்டையாகப் பார்த்தாள் அவள்.

எல்லாவற்றையும் வைத்துவிட்டு டிரைவர் உத்தரவு பெற்றுக் கொண்டு சென்றதும் சபேசன் ஆவலுடன் கூடையைத் திறந்து பார்த்தார்.

''உங்களுக்குப் பிடிக்கும்னு அப்பா ஹைதராபாத் திராட்சையும், கமலா ஆரஞ்சும் அம்மாவுக்கு ஆப்பிளும் மலைவாழைப்பழங்களும் வாங்கி அனுப்பியிருக்கார்.'' என்றபோது, மருமகளை எரித்து விடுவதுபோலப் பார்த்தாள் கௌரி.

''அத்தை வீட்டிலே இல்லாததாலே அப்பா சமையற்காரர் கிட்டே சொல்லி பாதாம் பர்பியும் டேப் பக்கவடாவும் செஞ்சு அனுப்பியிருக்கார்.''

''பாதாம் பர்பியா? எனக்குப் பிடிக்குமே.'' என்று மித்திரன் கத்திக் கொண்டு கூடையருகேயிருந்த அட்டைப் பெட்டியைத் திறக்க முயன்றான்.

''பஞ்சத்திலே அடிபட்ட அல்பமாட்டமா என்ன பதட்டம்? அதைத் தொடாதே. நாளைக்கு என்ன பண்றதுன்னு கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். மாலதியைப்

பார்க்க வர்றவங்களுக்குக் காப்பி மட்டும் போட்டால் போதும். டிபன் தயாரா இருக்கு. ஒரு வழியில் இதைச் சம்பந்தி அனுப்பி வச்சது நல்லதாப் போச்சு'' என்றாள் கௌரி.

அவள் குரலில் தொனித்த ஏளனத்தை உணராதவள்போல் புன்முறுவலுடன் ரம்யா உடையையும் அட்டைப் பெட்டியையும் தூக்கி உள்ளே கொண்டு வைத்தாள்.

''என்னம்மா இப்படி? என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லாமல் யாரையோ பெண் பார்க்க வரச் சொல்லி ஏற்பாடு பண்ணியிருக்கிங்களே?'' ஆதங்கமாகக் கேட்டான் கோதண்டம்.

''டெல்லிக்கும் பம்பாய்க்கும் நீ பறந்துட்டே இருக்கே. உன்கிட்டே சொல்லிப் பிரயோஜனம்? உங்கப்பா தினமும் அந்தக் குப்புசாமியோட பீச்சுக்குப் போய் உட்கார்ந்துட்டு இருட்டி எட்டு ஜாமத்துக்குத்தான் திரும்புவார். மாலதியைப் பத்தி நான்தானே கவலைப்படணும்? எங்க மாதர் சங்கத்துச் சிநேகிதி அலமேலு வழியா நல்ல ஒரு வரன் வந்திருக்கு.''

''போனில் நான் பேசினபோது சொல்லியிருக்கலாமே?''

''ஜாதகம் பொருந்துதான்னு பார்த்துச் சொல்றதாக அவங்க வீட்டிலே சொல்லியிருந்தாங்க. நேத்தி சாயங்காலம்தான் அலமேலு போன் செய்து சொன்னாள். பெண் பார்க்க நாளை வெள்ளிக்கிழமை சாயங்காலம் அஞ்சு மணிக்கு வர்றதாகச் சொல்லியிருக்காள்.''

கோதண்டராமன் மேலே விவாதிக்காமல் உள்ளே சென்று விட்டான்.

அன்று இரவு சாப்பாட்டின்போது மறுபடியும் பெண் பார்க்க வரப்போகிறவர்களைப் பற்றிய பேச்சு துவங்கியது.

''நாளைக்கு நீ கொஞ்சம் முன்னாடியே ஆபீசிலிருந்து வந்துடு. அவர்களெல்லாம் வர்றதுக்கு முந்தி வந்து



விட்டால் நன்றாக இருக்கும். இந்த ஒரு வாரமா அடுப்போட நின்னு நான் அலுத்துப் போயிருக்கேன். ரம்யா தான் காப்பி போட்டு வந்தவர்களைக் கவனிச்சுக்கணும்'' என்றாள் கௌரி.

வந்ததும் வராததுமாக சமையலறைக்குள் நுழைந்து கரண்டியைக் கையில் எடுத்துக் கொண்ட ரம்யா, அத்தனை பேருக்கும் சப்பாத்தியும் சப்ஜியும் செய்திருந்தாள்.

''மன்னி எப்ப வருவாங்க, வயிற்று ஜிப்பை எப்ப திறக்கலாம்னு நான் காத்துக் கொண்டிருந்தேன்'' என்ற சின்ன மகனைக் கோபமாகப் பார்த்தாள் கௌரி.

''தத்துப் பித்துனு நீ எதுவும் பேசவேண்டாம். வாயை மூடு'' என்று அதட்டி விட்டு மேலே சொல்ல ஆரம்பித்தாள்.

''வரதட்சணை இல்லாத இடம். பையன் பார்க்க நன்றாய் இருக்கானாம். மாலதிக்கு ஏத்த வயசு. எம்டெக், படிச்சிட்டு கருணா அண்ட் பிரதர்ஸில் பெரிய வேலை பார்க்கிறான். கம்பெனி வீடு, கார் எல்லா வசதியும் செஞ்சு கொடுத்திருக்கு. நம்மைப்போல அவர்களும் சின்னக் குடும்பம். இரண்டு பிள்ளைகள். ஒரு பெண், இவன்தான் மூத்தவன். பெண்ணுக்குக் கல்யாணம் ஆகி விட்டது. பட்டணத்திலேதான் கொடுத்திருக்காங்க. நாளைக்கு அவளும் பெண் பார்க்க வரப்போகிறாள். பையனோட அப்பா பெரிய வேலையில் இருந்தாராம். ஓய்வடைஞ்சு வீட்டோடு இருக்கார். சின்னவனுக்கு ஏதோ ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரி ஒண்ணு ஆரம்பிச்சுக் கொடுக்கிறதாக யோசனையாம். அவரும் இஞ்சினியர்தானாம்...'' வளவள வென்று பேசினாள் கௌரி.

''வரட்டுமே பார்ப்போம், பேசுவோம். நமக்கு ஏத்ததாக இருந்தால் மேலே தொடர்வோம். எல்லாத்தையும்விட நம்ம மாலதிக்குப் பிள்ளையைப் பிடிக்கணுமே?''

''போட்டோவைப் பார்த்தாள். வேண்டாம்னு சொல்லலை. அப்படின்னா என்ன அர்த்தம்?'' சப்பாத்தியை வாய் நிறைய வைத்துக் கொண்டு மித்திரன் குறுக்கிட்டான்.

முகம் சிவந்து போனாள் மாலதி. ''வாயை மூடு உன்னை ஒருத்தரும் கேட்கலை.'' தன் சகோதரன் மேல் சீறி விழுந்தாள்.

''முக்கியமான சங்கதியை மறந்துட்டு என்னென்னவோ பேசிக் கொண்டிருக்கேன். நான் ஒரு முட்டாள். ஆமாம் ரம்யா. நான் சொன்னபடி உன் நகைகளையெல்லாம் எடுத்துக் கொண்டு வந்திருக்கே இல்லையா?''

பரிமாறிக்கொண்டிருந்த ரம்யா, கணவன் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தாள். ''இல்லேம்மா. அப்பா பின்னாலே வேண்டியபோது எடுத்துக்கலாம். பாங்க் லாக்கர்லேயே இருக்கட்டும்னு சொல்விட்டார்.''

''உன் நகை எங்கே இருக்கணும்னு சொல்ல அவருக்கு என்ன உரிமை?''

''அப்படிப் பேசாதீங்க அம்மா. அவருடைய பாங்க் லாக்கரிலேயே இருக்கட்டும். தேவைப்பட்டபோது நான் ரம்யாவோட போய் எடுத்துக் கொண்டு வரேன்'' கோதண்டம் மனைவிக்காகப் பரிந்து பேசினான்.

''சமயத்துக்கு உபயோகமா இருக்கும்னுதானே எடுத்துக் கொண்டு வரச்சொன்னேன்?''

''இப்ப அதுகளுக்கு என்ன உபயோகம்?'' மகன் சற்று அழுத்தமான குரலில் கேட்டான்.

''நீ ரொம்ப அழகாத்தான் பேசறே. நாளைக்கு ரம்யாவைக் கூட்டிக் கொண்டு போய் முதல்லே நகைகளை லாக்கரிலிருந்து எடுத்துக் கொண்டு வா. பெண் பார்க்க வரபோது மாலதிக்கு அவைகளைப் போட்டு, ''நல்ல புடவையை உடுத்திக்கச் சொல்லி, அவர்களுக்கு நம்ப அந்தஸ்தைக் கொஞ்சம் கோடி காட்ட வேண்டாமா?''

''கல்யாணத்தின்போது கன்னிகாதானம் செய்கிற கட்டத்திலே பெண் மேலே இரவல் நகை இருந்தால் அதுகளை உடனே எடுத்திடும்படி புரோகிதர் சொல்வார்.



பிறத்தியாருடைய நகைகளைப் போட்டுக் கன்னிகாதானம் செய்யறது தப்பு என்கிற கருத்து. அதைப்போல நம்ப அந்தஸ்தை உயர்த்த ரம்யா நகைகளைப் போட்டு நீங்க மாலதியை அலங்காரம் செய்ய விரும்பறது தப்பும்மா.''

''என்ன தப்பு?''

''பெண் பார்க்க வந்தப்போ பெண்ணுக்கு வைர அட்டிகை, வளையல் போட்டிருந்தீர்கள். அதைப் போடும் என்று சம்பந்தியம்மாள் சொல்லிவிட்டால் என்ன செய்வீங்க?''

''எப்படியாவது நாத்தனாருக்குக் கல்லாணம் நன்றாய் முடிஞ்சால் போதும்னு ரம்யா தன் நகைகளைத் தியாகம் செய்துடலாம் இல்லையா?''

''அது ரொம்பத் தப்பான எதிர்பார்ப்பு அம்மா. வைர அட்டிகை போடுகிறவரை அந்தஸ்து உள்ள இடம்னா அவர்கள் ரொம்பவே எதிர்பார்ப்பார்கள்.''

''ஒரே தங்கைதானே? கடனோ உடனோ பட்டுக் கல்யாணத்தைச் செய்வோம்னு சொல்லாமல் ரொம்ப இடக்காய்ப் பேசுறியே! அவள்தான் பிடிவாதமா நகைகளை அப்பாகிட்டே விட்டுட்டு வந்தால் நீ புருஷன் அதட்டி அதுகளை எடுத்துக் கொண்டு வரச் சொல்லாமல் நியாயம் பேசறியே?'' உரத்த குரலில் ஒளரி கத்தினாள்.

கோதண்டராமனைத் தவிர மற்ற எல்லோரும் ஒரு கணம் பயந்து போய் விட்டார்கள்.

''உன் தங்கை கல்யாணத்துக்கு ஒத்தாசை செய்வியா மாட்டியா? அதையாவது சொல்லிடு.'' அம்மா உரத்த குரலில் தொடர்ந்தாள்.

''நாளைக்கு அவர்கள் வந்து பெண்ணைப் பார்க்கட்டும். பிறகு மத்ததைப் பற்றிப் பேசலாம்'' என்று கூறி விட்டு எழுந்து கை கழுவச் சென்று விட்டான் கோதண்டம்.

அதற்குப் பிறகு யாரும் வாய் திறக்கவில்லை.

கௌரி வழக்கம்போல டி.வி. பார்க்க முன்னறையில் உட்காராது முகத்தைக் கடுத்துக் கொண்டு படுக்கப் போய் விட்டாள்.

சமையலறை வேலைகளை எல்லாம் முடித்துக் கொண்டு ரம்யா தங்களது அறைக்குள் சென்றபோது, காலைப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டு கோதண்டம் உட்கார்ந்திருந்தான்.

''அப்பாவிடம் வற்புறுத்திப் பேசி நகைகளை நான் எடுத்துக் கொண்டு வராதது பெரிய தப்பாயிட்டது. அம்மா ரொம்பக் கோவிச்சுக்கிறார். எனக்குப் பயமா இருக்கு'' என்று முணகினாள் ரம்யா.

''கவலையை விடு. இந்தக் கல்யாணச் சங்கதி என் பொறுப்பு. ஒரு வாரம் உன் பிறந்த வீட்டிலே ஓய்வா இருந்து விட்டு வந்ததுமே உனக்கு இங்கே ஏகப்பட்ட வேலை. ரொம்பக் களைச்சுப் போயிருப்பே. பேசாமல் தூங்கு.'' என்றான் அன்புடன்.

விளக்கை அணைத்துவிட்டுத் தலையணை மீது சாய்ந்தான். சில வினாடிகளில் உறங்கிப் போனான் அவன்.

ஆனால் அவளுக்குத் தூக்கம் வரவில்லை. தந்தை தன்னிடம் சொன்ன அந்தத் திடுக்கிடும் தகவலை அவள் எப்படி புக்ககத்தாரிடம் சொல்வது என்ற பெரிய கவலை. சொன்னதும் மாமியார் முதலில் கை தட்டிச் சிரிப்பாள். பின்னர், ''உனக்கு வரப்போகிற சித்தியைப் பார்த்தியோ? எப்படி இருக்காள்? யார் அவள்?'' இத்யாதி விவரங்களைக் கட்டாயம் விசாரிப்பாள். சொல்லாமல் இருப்பது சரியா? மூடி மறைத்தாள் என்று பின்னர் குற்றம் சாட்டப்படுவாளோ திகிலுடன் மெல்லப் படுக்கையில் புரண்டாள்.

அவள் புக்ககத்திற்குப் புறப்படவிருந்த முதல்நாள் காலையிலேயே அப்பா அவளிடம் சொல்லி விட்டார். இன்னிக்குச் ''சாயங்காலம்தான், ரேவதியை இங்கே



அழைத்துக் கொண்டு வந்து உனக்கு அறிமுகம் செய்து வைக்கப் போகிறேன். பார்த்தால் உனக்கு அவளை ரொம்பப் பிடிக்கும். பரம சாதுவான பெண். கள்ளங்கபட மில்லாமல் பழகுவாள்.''

திடுக்கிட்டுப் போனாள் ரம்யா. நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. அப்பா நெருங்கிப் பழகுவதாகச் சொல்லப்படும் - சில நாட்களில் அந்தப் பங்களாவுக்கு எஜமானியாகப் போகிற ரேவதியை அவள் அவசியம் பார்க்க வேண்டுமா?

''நீ வெளியே போகத் தயாராக இரு. நாம் மூவரும் இன்னி ராத்திரிக்கு வெளியே ஹோட்டலில் சாப்பிடலாம்.'' உத்தரவு போட்டுப் போய் விட்டார்.

அப்பாவுக்கு மறுப்புச் சொல்ல முடியாமல்தான் அவள் அன்று மாலை வெளியே கிளம்பினாள்.

பச்சை வண்ண ஃபாரின் சைனா சில்க்கில் கொடி போல உள்ளே வந்து நின்ற ரேவதியைப் பார்த்து அவள் மிகவும் அதிர்ந்து போனாள்.

உண்மையிலேயே அவள் ரொம்ப அழகாகவே இருந்தாள். அப்பா இந்த வயதில் அவளைக் கண்டு மயங்கிப் போனதில் அதிசயமே இல்லை.

''ஹலோ!'' என்று சொல்லிக்கொண்டு, ''என் பேர் ரேவதி. உன் பேர் ரம்யான்னு எனக்குத் தெரியும்'' என்றபடி அவளது கரத்தைப் பற்றிக்கொண்டாள்.

தாழம்பூ நிறத்திலே தகதகத்த அவள் பக்கத்திலே நிற்க ரம்யாவுக்கு மிகவும் கூச்சமாகவே இருந்தது. அதிகமாக வெளியாரிடம் நெருங்கிப் பழகி அறியாதவள் ரம்யா.

என்ன பேசுவது, என்ன செய்வது என்று குழம்பித் தவித்துப் போனாள். அப்பா வந்ததும் நிலைமை சகஜமாகியது. சமையற்கார ராமு உற்சாகத்துடன் ஓடி வந்து காப்பி டிபனை பரிமாறி உபசரித்தான். அவனது

உறவுக்காரப் பெண்- வெகு சீக்கிரத்தில் அந்த வீட்டுக்கு எஜமானியாகிவிடப் போகிறாள் என்ற பெருமை அவனுக்கு.

நகரத்தில் புதிதாகத் தோன்றியிருந்ததொரு பிரபலமான ஈட்டிங் ஹவுசிற்கு அப்பா அவர்களை அழைத்துச் சென்றிருந்தார். மங்கலாக எரிந்த விளக்கொளியில் அப்பாவின் தோளோடு இடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்த ரேவதியைப் பார்த்தபடி அப்பா வரவழைத்த குஜராத்தி சாப்பாட்டை அவளால் ரசிக்க முடியவில்லை.

எத்தனை சின்னப் பெண் ரேவதி! இவளா தனக்கு வருங்கால சித்தி? அப்பா கல்யாணம் செய்து கொண்ட பின் அவள் அடிக்கடி பிறந்தகத்திற்குப் போய்ச் சீராட இயலுமா? இப்போது அப்பா அவளிடம் காட்டும் பரிவும் பாசமும் தொடர்ந்து நிலைத்து நிற்குமா?

எண்ணங்கள் மனத்தில் அலைபாய, நிம்மதியாகச் சிரித்துச் சாப்பிட முடியாமல் போலியாகப் புன் முறுவலித்தபடி அவள் மௌனமாகத் தட்டையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

''என்ன இன்னுமா தூங்கலை? ஏன், தலையை வலிக்கிறதா?'' என்று கேட்டபடி எழுந்து உட்கார்ந்து விளக்கைப் போட்டான் கோதண்டம்.

படுக்கை மீது எழுந்து நிமிர்ந்து அவளும் உட்கார்ந்து கொண்டாள். லேசாகக் கன்னத்தில் ஓடிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

''என்னத்துக்கு அழறே? நகையைப் பத்தியா கவலை? அதை விட்டுவிடுன்னு சொன்னேனே?'' அன்புடன் அதட்டினான் கோதண்டம்.

''அதைவிட ஒரு முக்கியமான செய்தி. அதை உங்ககிட்டே சொல்லக்கூடப் பயமா இருக்கு.'' திக்கித் திணறினாள்.



''என்ன சங்கதியானாலும் என்கிட்டே நீ தாராளமாச் சொல்லலாம். நான் இல்லாதபோது உனக்கும் மாலதிக்கும் ஏதாவது சூடான வார்த்தை பரிமாறல் ஏற்பட்டதா?''

''உங்களுக்குத் தெரியும். நான் எதிர்த்துப் பேச மாட்டேனென்று.''

''வாயில்லாப் பூச்சியாக நீ இருக்கக்கூடாது. அனாவசியமாக உன்னை வம்புக்கு இழுத்தால் நீ பட்டென்று பதில் சொல்லலாம். அது உன் உரிமை.'' என்றான் கோதண்டம்.

கணவன் தன்னிடம் காட்டும் பரிவில் மனம் கரைந்து போனாள் ரம்யா. ''எங்கப்பா என்னிடம் ஒரு சங்கதி சொன்னார். கேட்கவே எனக்கு என்னவோ போலிருந்தது. அதை உங்ககிட்டே சொல்லக் கூச்சமா இருக்கு. சொல்லாவிட்டாலும் பழி என் மேலே ஏற்படும்.''

''சுத்தி வளைக்காதே. நேரே விஷயத்துக்கு வா. சம்பந்திகள் ரொம்ப பேராசைக்காரர்கள் என்றாரா உன் அப்பா?''

''அது மாதிரியெல்லாம் அப்பா பேசக்கூடியவர் இல்லை. தனக்குப் பிடிக்காவிட்டால் அழுத்தமாக மௌனமாகி விடுவார்.''

''சரி... என் ஊகம் தவறு. நீயே அந்தச் சங்கதியைச் சொல்லிடு. தூக்கம் கண்களைச் சுத்துகிறது.''

''அப்படின்னா நாளைக்குக் காலையிலே அதைப் பற்றிப் பேசலாமா?''

''தூங்கறவனை எழுப்பி உட்கார வச்சிட்டு நாளைக் குன்னு ஏன் ஒத்திப் போடறே?''

''எனக்கு ரொம்பப் பயமா இருக்கு. நீங்கள்ளாம் இந்தச் சங்கதியை எப்படி எடுத்துக் கொள்வீங்களோ தெரியாது.''

''மறுபடியும் சுத்தி வளைக்கிறே. நேரே சங்கதியைச் சட்டுனு ரத்தினச் சுருக்கமா சொல்லி முடி.''

''என் அப்பா இரண்டாவது கல்யாணம் பண்ணிக்க முடிவு செய்து விட்டார்.''

திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்து அவளை அதிசயத்துடன் பார்த்து, 'நிஜமாவா?' என்று கேட்பான் என எதிர்பார்த்தவளுக்குப் பெருத்த ஏமாற்றம். ''இதுவா? நான் என்னவோன்னு நினைச்சுக் குழம்பிப் போனேன்'' என்று கூறி விட்டு உரத்துச் சிரித்தான்.

''சிரிக்க வேண்டிய சங்கதிதான். அதனாலேதான் சொல்லப் பயமா இருந்தது.''

''சே! அசடு, இதைச்சொல்ல நீ பயந்ததைப் பார்த்துச் சிரித்தேனே தவிர, சங்கதியைக் கேட்டுக் கேலியா சிரிக்கலை. உன் அப்பாவோடு முந்தாநேத்திக்குப் போனில் பேசியபோது இதை அவரே என்கிட்டே சொன்னார். என் அபிப்ராயத்தைக் கேட்டார்.''

''உங்ககிட்டே சொல்லி அபிப்ராயம் கேட்டாரா?''

''அதிசயம் என்ன? நான் அவரது மாப்பிள்ளை. அந்த வகையில் என் மேலே மதிப்பு வச்சிருக்கார். அபிப்பிராயம் கேட்டார்.''

''நீங்க என்ன சொன்னீங்க?''

''இதில் என்ன தவறு? உங்களைப் பார்த்துக் கொள்ள வீட்டில் ஒரு துணை தேவைதானே? கல்யாணம் எப்போன்னு கேட்டேன்.''

''இன்னும் சில வாரங்களில் நடக்கப் போகிறதுன்னு அப்பா என்கிட்டே சொன்னார். எனக்குச் சித்தியா வருகிறவளையும் பார்த்துப் பேசினேன்.''

''உனக்குப் பிடிச்சிருக்கா இல்லையா?''

''அப்பாவுக்குப் பிடிச்சிருக்கு அவளை, சித்தியா வருகிறவளை நான் மதிக்கத்தானே வேணும்? ஆனால்



எனக்கு உள்ளூர வெட்கம் பிடுங்கித் தின்றது. இத்தனை வயசுக்கு மேலே...''

''கல்யாணம் என்கிறது ஒவ்வொருவரின் அந்தரங்கமான சமாசாரம். வயசு எத்தனை ஆனால் என்ன? அவர் கல்யாணம் செய்துக்கப் பிரியப்படறார். அவரை ஏத்துக்க அந்தம்மா ஒப்புக் கொள்கிறார்கள். இடையே நமக்கென்ன?''

''எல்லாரும் ஏதாவது பேச மாட்டாங்களா?''

''அவங்க பேசுவாங்க இவங்க பேசுவாங்கன்னு பார்த்தால் நாம் வாழ முடியாது. உங்கப்பா தனியா இருந்தாலும் தன்னந்தனியா இருக்கானே மனுஷன் ஏதாவது பெண் சமாசாரம் இருக்கும்?''னு பேசுவாங்க. கல்யாணம் செய்து கொண்டாலும், 'கிடக்கிறதெல்லாம் கிடக்கட்டும். கிழவனைத் தூக்கி மணையில் வை என்றானாம் என்கிற கதையா இந்த வயதில் கல்யாணமா?' என்பார்கள். ஊர் ஒபீனியனுக்கு நாம் ஒத்துப் போய்க் கொண்டிருந்தால் கழுதையைத் தூக்கிக்கொண்டு நடந்த அப்பா பிள்ளை கதையாகி விடும்.''

''உங்களுக்கு வெட்கமா இல்லையே?''

''எனக்கு எந்தவிதமான மறுப்பும் இல்லை. நான் ஏன் வெட்கப்படணும்?''

''அப்படின்னா நாளைக்கு அம்மாகிட்டே இதைச் சொல்லட்டுமா?''

''வேண்டாம். தானே விஷயம் வெளிவரும்போது அம்மா தெரிஞ்சுக்கட்டும். அதுவரை நாம் ரெண்டு பேரும் வாயைத் திறக்க வேண்டாம்.''

''எனக்கு என்ன செய்யறதுன்னே தெரியலை. நீங்க என் மேலே காட்டற அன்புக்கு... என்னைப் புரிஞ்சுட்டு ஆறுதலாகப் பேசறதுக்கு...'' மேலே பேச முடியாமல் விக்கி அழுதாள் அவள்.

''சே! அசடு, எதுக்கு நடுராத்திரி உட்கார்ந்து கொண்டு அழறே. கண்ணைத் துடைச்சுக்க'' என்றபடி அவள் கண்களில் வழிந்த நீரைத் தன் கைக்குட்டையால் துடைத்து விட, அவள் அவன் தோள் மேல் சாய்ந்து கொண்டு மேலும் விசும்பி மனம் ஆறும் மட்டும் அழுதாள்.

# 8

அடுத்த நாள் காலையிலேயே கௌரி ஆரம்பித்து விட்டாள்.

முன்னறையில் கிடந்த சோபாக்களை வேலைக்காரி யுடன் கூட நின்று இடம் மாற்றிப் போட்டாள். டெலிவிஷன் பெட்டி மீது புதிதாக ஒரு துணியைப் போட்டு அழகு செய்தாள். டிவைடரில் நின்ற நடராஜப் பெருமானைப் புளி போட்டு, தேய்த்துப் பளபளவென்று கொண்டு நிறுத் தினாள். கலைந்து கிடந்த புத்தகங்களை ஒழுங்காக, வரிசையாக வைத்தாள். தோட்டத்துப் பூக்களைக் கொஞ்சம் பறித்து வந்து ஜெய்ப்பூர் பித்தளை ஜாடியைக் கழுவித் துடைத்துச் செருகி வைத்தாள்.

இடுப்பிலே கையை வைத்துக்கொண்டு முன்னறையைத் தாய் நோட்டம் விட்டுக்கொண்டிருந்த சமயம் பெண் மாடியறையில் பெண் பார்க்கும் படலத்தில் தனது அலங்காரத்தை ஒத்திகை செய்து கொண்டிருந்தாள்.

பகல் பொழுது லீவு போட்டுவிட்டு வீடு திரும்பிய கோதண்டம், அம்மா கொடுத்த லிஸ்ட் பிரகாரம் வரும்போது நகரத்திலிருக்கும் பிரபல மிட்டாய்க் கடையிலிருந்து அரை கிலோ ஹல்வாவும் வறுத்த முந்திரிப் பருப்புப் பொட்டலம் ஒன்றும் பூ, வெற்றிலை, பாக்கு இத்யாதிகளுடன் திரும்பியிருந்தான்.

மித்திரனும் பகல் பொழுது தன் வேலை பயிற்சிக்கு மட்டம் போட்டு விட்டுத் திரும்பியிருந்தான்.



வாசலுக்கும் உள்ளுக்குமாக உலவிக் கொண்டிருந்த சபேசனுக்குத்தான் என்ன செய்வதென்று புரியாத குழப்பம்.

தன் பிறந்த வீட்டிலிருந்து மருமகள் கொண்டு வந்த பக்ஷணங்கள் எதையுமே அவர் கண்களில் காட்டவில்லை கௌரி. பெண்ணைப் பார்க்க வருகிறவர்களுக்கு டிபன் உபசாரம் செய்தது போக மீதியை வீட்டுக்கு உபயோகிக் கலாம் என்று சாமான் அறைக்குள் வைத்துப் பத்திரமாகப் பூட்டி விட்டிருந்தாள். மகன் கொண்டு வந்து மேஜை மேல் வைத்த பொருள்களை யாரும் இல்லாத சமயம் மெல்லத் திறந்து பார்த்தார்.

அவருக்கு அல்வாவும் முந்திரிப் பருப்பும் ரொம்பவே பிடிக்கும். கனிசமானதொரு பெரிய அல்வாத் துண்டத்தை எடுத்து வாயில் திணித்துக் கொண்டு ஒரு பிடி முந்திரிப் பருப்புடன் வாசல் பக்கம் நடையைக் கட்டினார்.

பெண்ணைப் பார்க்க வரப்போகிறவர்கள் ஒரு பெரும் கூட்டத்தையே, கூடக்கொண்டு வந்தால் இவைகள் அவரது கண்களிலேயே படாமல் போய்விடும் என்ற ஆதங்கம் அவருக்கு.

நேரம் பின் மாலைப்பொழுதை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. பகல் உணவுக்குப் பின்னர் தினசரி அனுபவித்த அந்தக் குட்டித் தூக்கத்தை எட்டிப் போட்டு விட்டுக் கௌரி பரபரப்பாகத் தயாராகிக் கொண்டிருந்தாள்.

''அப்பாவைக் கூப்பிட்டுச் சொல்! அழுக்கு வேட்டியும் சட்டையுமா அவர்கள் எதிரே வந்து நிற்கப் போறார்! சலவை செஞ்ச வேட்டி, ஜிப்பா எல்லாம் எடுத்து வச்சிருக்கேன். உடுத்திக்கச் சொல்'' என்று சின்ன மகனை ஏவி விட்டாள்.

''உன்னைத்தானே! அந்த அழுக்குப் பிடித்த டிரெஸ்லே ஹிப்பியாட்டமா வந்து நிற்காதே. சுத்தமான பாண்ட்டும் ஷர்ட்டுமா இருந்து தொலை'' மித்திரனைப் பார்த்து உறுமினாள்.

ரம்யா தன் நகைகளைப் பிறந்த வீட்டிலே விட்டு விட்டு வந்ததைப் பற்றிய ஆத்திரம் இன்னமும் அடங்கவில்லை.

''பச்சை மைசூர் சில்க்கும் முத்துத் தோடும் முத்து மாலையும் போதும். இந்தக் காலத்திலே யார் கண்டதைப் போட்டுக்கறாங்க? அவங்கள்ளாம் ரொம்ப நாசூக்கானவங்களாம்'' என்று மாலதியை எச்சரித்தாள்.

அடுப்பருகே நாள் முழுவதும் போராடிக் கொண்டு நிற்க நேரமின்றி வீட்டு வேலைகளில் மூழ்கியிருந்த ரம்யாவிடம் வந்தாள். ''மூஞ்சியில் எண்ணெய் வழிய வந்து நிற்காதே. அவர்கள் வரும் நேரமாயிட்டது. முகத்தை அலம்பிப் பளிச்சினு பொட்டு வச்சிட்டு நல்லதா எதையாவது கட்டிட்டு வந்து அவர்களுக்கு பரிமாறு. வீட்டுச் சமையற்காரின்னு வந்தவங்க தப்பா நினைச்சுடக்கூடாது'' அடிக் குரலில் அதட்டினாள்.

கோவிலுக்கு உடுத்த என்று ஒதுக்கி வைத்திருந்த காஞ்சீபுரம் பட்டுப்புடவையில் தலை நிறைய மல்லிகைப் பூவுடன் கௌரி வரப் போகிறவர்களை வரவேற்கத் தயாராகி விட்டிருந்தாள்.

புளி மூட்டை போல ஒரு கூட்டத்தை அடைத்துக் கொண்டு அம்பாசிடர் ஒன்று வாசலில் வந்து நின்றதும் மித்திரன் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தான். ''மாலதி அவங்கள்ளாம் வந்தாச்சு'' என்று எச்சரித்தான்.

லேசாக உதட்டுச் சாயத்தைப் பூசி முடித்துக் கொண்டிருந்த மாலதி, ஆவலுடன் ஓடி வந்து ஜன்னல் அருகே நின்றாள்.

பின் ஆசனத்தின் பாதியை நிறைத்துக் கொண்டிருந்த மாப்பிள்ளையின் அம்மாதான் முதலில் இறங்கினாள்.

''அப்பாடா... சரியான குண்டு!'' என்றான் மித்திரன்.

கோபத்துடன் அவனை உறுத்துப் பார்த்தாள் மாலதி. அவளால் எதுவும் பேச முடியவில்லை. உண்மையில்



அவளுக்கு வரப்போகும் மாமியார் ரொம்பவே பருமனாக இருந்தாள்.

''நல்ல சிவப்பு. பறங்கிப் பழம் போல. ஒரு பிளஸ் பாயிண்ட்'' என்றான் மித்திரன்.

அடுத்தபடியாக இறங்கிய பிள்ளையின் தந்தை ஒல்லியாக உயரமாக மாநிறமாக இருந்தார். மூக்குக் கண்ணாடியில் மறைத்தபடி தலையை வெளியே நீட்டிக் கொண்டு இறங்கியவரைக் கண்டு, 'உஷ்' என்று சீட்டியடித்தான் மித்திரன்.

''தலை சகாரா பாலைவனமாக இருக்கே?'' என்றபோது மாலதி முகம் சிவந்து போனாள்.

யாரோ தூரத்து உறவுக்காரி போல ஒரு சுமங்கலிப் பெண்மணி. அடித்துத் துவைத்துக் காய வைத்த சுருக்கம் கலையாத பழைய காஞ்சீபுரம் பட்டுச் சேலையில் இறங்கினாள். அதற்குப் பின்னால்... சுரிதார் குர்தாவில் இறங்கிய பெண்ணைப் பார்த்து வியப்புடன் நின்றான் மித்திரன்.

'கல்யாணமான பெண் உள்ளூரிலே இருக்காள். கூட்டி வரப் போறோம்'ன்னு சொன்னாங்களே, அவளா இவள்? தலைமுடியைக் கத்தரித்துக் கொண்டிருக்கிறாளே? அம்மா இவர்களுக்காக ஒரு கூடைப்பூ வாங்கி வைத்திருப்பது வீண்' என்றபடி வண்டியிலிருந்து கடைசியாக இறங்கிய மாப்பிள்ளைப் பையனை உற்றுப் பார்த்தான்.

''பிள்ளை அம்மாவைக் கொண்டிருக்கிறான். இப்பவே ஷர்ட் மேலே ஒரு சின்னத் தொந்தி தெரிகிறது. அப்பார் போலக் கண்ணாடிக் கட்டழகன். தலைமுடி பரத்தலா இருக்கு. பின்னால் வழுக்கை விழலாம்னு தோணுது. ஆனால் நல்ல சிவப்பு. அது ஒரு பிளஸ் பாயிண்ட்'' என்றான்.

''ஷட் அப் மித்திரன். இன்னும் ஏதாவது சொன்னியோ ஒன்னு நான் கத்திக் கூச்சலிடுவேன். தெரிஞ்சுக்கோ'' என்று அதட்டி விட்டு உள்ளே சென்று விட்டாள் அவள்.

''மாலதி... மாலதி! கீழே வா'' என்று அம்மா அரைக் குரலில் மகளுக்கு உத்தரவிடவே, அவள் மெள்ளக் கீழே இறங்கி வந்தாள்.

முன்னறையில் பல குரல்கள் ஏக காலத்தில் ஒலித்தன. அறிமுகம் துவங்கியது. மித்திரன் வேண்டா வெறுப்பாக ஒரு பக்கம் உட்கார்ந்திருந்தான். அம்மா கௌரிதான் உற்சாக மாகப் பேசிக்கொண்டிருந்தாள். பிள்ளையின் தாயார் அவளுக்கு ஈடு கொடுத்தபடி பேசிச் சிரித்து கலகலப்பை அதிகமாக்கிக் கொண்டிருந்தாள்.

சபேசன் ஒரு பக்கம் மௌனமாக உட்கார்ந்திருந்தார். 'ஏடாகூடமாக ஏதாவது பேசி விட்டுத் திண்டாடாதீர்' என்று மனைவி தந்த எச்சரிப்புக்கு அவர் மிகவும் மதிப்புக் கொடுத்திருந்தார்.

அவரைப் போலவே பிள்ளையைப் பெற்றவரும் வாய் மூடி மௌனியாக அமர்ந்திருந்தார்.

''வாங்க, டிபன் சாப்பிட்டுக் கொண்டே பேசுவோம்'' என்று கௌரி உற்சாகப்படுத்த, எல்லோரும் எழுந்தி ருந்தனர்.

நீலகண்டன் தன் மகளுக்கு வாங்கிப் போட்டிருந்த அந்தப் பெரிய சன்மைகா மேஜையைச் சுற்றிலும் எல்லோ ரும் அமர்ந்து கொண்டனர்.

நெற்றியில் பூத்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு வேகமாக எல்லோருக்கும் டிபன், காப்பி பரிமாறினாள் ரம்யா.

''பெண்ணுக்குப் பாட்டு வருமோ? என் பெண் சோபா நன்றாகவே பாடுவாள்'' என்று அருகிலமர்ந்திருந்த தன் பெண்ணைப் பார்த்து முறுவலித்தாள் பிள்ளையின் தாயார்.

''சாப்பாட்டுக்கே பெரிய பாடாக இருந்த காலம்... சங்கீதம் சொல்லி வைக்க அப்போது எங்களுக்கு வசதி யில்லை' என்ற உண்மையைக் கௌரி சொல்லி விடுவாளா?



''அவளுக்கு ஸ்போர்ட்ஸ்லே ரொம்ப இன்ட்டரஸ்ட், அதனாலே பாட்டு கத்துக்க நேரமே இருக்கலை.''

''சமையல் கத்து வச்சிருக்கா இல்லையா?'' பிள்ளையின் அம்மா கேட்டு விட்டுத் தன் மகள் பக்கம் பெருமையுடன் திரும்பினாள்.

''மாலதிதான் கொஞ்ச நாளாய் வீட்டுச் சமையல் முழுதையும் கவனிக்கிறாள்.''

''அம்மா, ஏன் இந்தப் பொய்? மாலதிக்கு ஒரு கப் காப்பி போட்டுத் தரக்கூடத் தெரியாது. ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணத்தைச் செய்யணுங்கிறதுக்காக ஆரம்பிச் சுட்டீங்களா பொய்களை?'' தன்னுள் புன்னகைத்தபடி மித்திரன் கடைக் கண்ணால் தன் சகோதரியைப் பார்த்தான்.

அவள் திருதிருவென்று விழித்துக்கொண்டு ஒரு பக்கம் அடக்கமாக நிற்பதைக் கண்டு அவனுக்கு மிக்க மகிழ்ச்சி யாக இருந்தது. அடங்காப்பிடாரியான மாலதி ஓர் ஆட்டுக் குட்டியாக அமரிக்கையாக நிற்பதைக் காண அவனுக்கு வேடிக்கையாக இருந்தது.

''என் பெண் வடக்கத்திச் சமையல்கூட ஜோரா பண்ணுவாள். சமையல் வகுப்புகளுக்குப் போய்ப் படிச்சு ஒரு டிப்ளமோ வாங்கியிருக்காள்'' பிள்ளையின் தாய் பெருமையாகப் பேசினாள்.

''என் மருமகளிடமிருந்து மாலதி பலவிதமான சமையல் முறைகளைக் கத்துக்கொண்டு வரா. உங்க வீட்டுக்கு வந்ததும் நாத்தனார் கிட்டே கத்துக்கட்டுமே ஹி...ஹி...'' கௌரி சிரித்து மழுப்பினாள்.

சமையல் சாப்பாடு என்று ஆரம்பித்து, பெண் பார்க்கும் படலம், பின்னர் காசு, பணம், சீர், நகை என்ற பாதையில் திரும்பியது.

பிள்ளை பல தடவை மாலதி பக்கம் பார்த்து அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

எல்லோர் முகத்திலும் பெண்ணைப் பற்றிய நல்லெண்ணத்தின் அறிகுறிதான் நிறைந்திருந்தது.

''என் பெண்ணுக்கென்ன? கண்டேன் கண்டேன்னு யாரும் கொத்திக் கொண்டு போய் விடுவார்கள். அத்தனை அழகானவளாச்சே!'' அம்மா கௌரி தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள்.

''நாங்க ரெண்டு பேரும் கொஞ்சம் தனியாய்ப் பேசணும்'' என்று பிள்ளையின் தாய் உரத்த குரலில் கூறியதும் எல்லோரும் முன்னறைக்குப் போய் விட்டனர்.

காலி டிபன் தட்டுகளை வேகமாக எடுத்துக் கொண்டு உள்ளே சென்று விட்டாள் ரம்யா. மாலதி மறுபடியும் மாடி அறைக்குள் ஒண்டிக் கொண்டாள்.

மூச்சு இரைக்க வந்த மித்திரன் சொன்னான். ''பைசா விஷயத்தைப் பற்றி இரண்டு பேரும் மனம் திறந்து பேசப் போகிறார்கள். உங்க பெண்கள் கூட்டத்திலே வரதட்சணை பற்றி வாய் கிழியப் பேசுகிறீர்களே, அதை ஆண்களா ஆரம்பிக்கிறாங்க? கேட்கிறது பெண்கள்தான். உன் வருங்கால மாமியார் அம்மாவுக்கு ஒரு லிஸ்ட் கொடுக்கத்தான் தனியாப் பேசணும்னு ஆரம்பிச்சிருக்காள். நான் சொல்லட்டுமா மாலதி? பெண்களுக்குச் சமூகத்திலே ஏற்படற பல அவலங்களுக்கும் காரணம் பெண்கள்தான். பெண்களின் முதல் எதிரியே பெண்கள்தான். வீணாக எங்களைப் பழி சொல்லிக்கொண்டு திரிவது உங்கள் வழக்கமாய்ப் போச்சு. ஒரு நாகரிகமாச்சு.''

''உன் வாயை மூடிக்கொண்டு அப்பால் போறியா நான் கூச்சல் போட்டு அம்மாவை வரவழைக்கவா?'' சீறினாள் மாலதி.

ஆனால் உள்ளூர அவளுக்கு ஏகக் கவலை. மாப்பிள்ளையை அவளுக்குக் கொஞ்சம் பிடித்திருந்தது. பார்க்கச் சற்றுப் பருமனாகத்தான் இருந்தான். கல்யாணமானதும் கடும் டயட்டில் போட்டுச் சரி செய்து விடலாம் என்ற



நம்பிக்கை அவளுக்கு. அவர்கள் வீட்டு அந்தஸ்து, அவன் வகித்த பெரிய உத்தியோகம், அதன் சுகபோகங்கள் எல்லாம் ரொம்பவே பிடித்திருந்தன. ஆனால் மாமியாராக வரப் போகிறவள் என்னவெல்லாம் கேட்பாளோ என்ற கவலை உள்ளூர நெருடிக் கொண்டுதானிருந்தது.

தோள்களை அசட்டையாகக் குலுக்கி விட்டு ஓர் ஆங்கில நாவலுடன் தன் அறைக்குள் அமுங்கி விட்டான் மித்திரன். முன்னறைப் பக்கம் பேச்சும் சிரிப்புமாகக் கலகலத்துக் கொண்டிருந்தது.

அதே சமயம் சாப்பாட்டறையில் உட்கார்ந்திருந்த கௌரியின் முகம் வரப்போகும் சம்பந்தி அம்மாள் சமர்ப்பித்த ஜாபிதாவைக் கேட்டுக் கவலையில் சாம்பிப் போயிற்று.

''என் பெண்ணுக்கு நான் என்ன செய்தேனோ, அதை நீங்க உங்க பெண்ணுக்கு செய்தால் போதும்'' என்று ஆரம்பித்தாள் அந்தம்மாள்.

கௌரி தலையை ஆட்டினாள். ''என் பெண்ணுக்கு ஐம்பது பவுன் நகை, வைரத்தோடு, மோதிரம் இவ்வளவு தான் போட்டேன்.''

கௌரியின் வயிற்றில் சில்லென்றதொரு திகில் உணர்வு. ஐம்பது பவுனுக்கு அவள் எங்கே போவாள்? அவளது நகைகளையெல்லாம் சேர்த்தால்கூட முப்பத்தைந்து தேறாதே?

வெள்ளிக்கூஜா, தட்டு, சந்தனப்பேலாவோட நீங்க நல்ல கனமும் உரமுமா இரண்டு வெள்ளிக்குத்து விளக்குகள் வைக்கணும். என் பெண்ணுக்கு நான் அப்படித்தான் செய்தேன். கூரைப் புடவையும் தாலியும் எங்களைச் சேர்ந்தது. வரதட்சணை வாங்க மாட்டோம். ஆனால் எங்க உறவுக்காரர்கள் பம்பாய், கல்கத்தாவிலிருந்து வரணும். என் வயதான பாட்டி உசிரோட இருக்காள். டெல்லியிலிருந்து அவள் விமானத்திலே வருவாள். அந்த செலவுக்கெல்லாம் ரொம்ப வேண்டாம். இருபதாயிரம் செலவுக்குத் தந்தால்

போதும். கல்யாணத்துக்கு என் பிள்ளையோட சிநேகிதர்கள்- அவன் வேலை செய்கிற கம்பெனியிலிருந்து டைரக்டர் உள்பட - பலபேர் வருவாங்க. அதனாலே ஜெகதீஸ்வரி மண்டபத்திலே கல்யாணத்தை நடத்தினால் நன்றாயிருக்கும். ரிசப்ஷனுக்கு ஒரு மெல்லிசையாவது வச்சாத்தான் நன்றாயிருக்கும். கல்யாணத்துக்குப் பிறகு சம்பிரதாயப்படி மத்ததுகளை நீங்க கவனிச்சுக்குவீங்க'' பிள்ளையைப் பெற்ற மகராஜி தன் கண்களை ஓட விட்டாள்.

இத்தனை பெரிய வீட்டில் இவ்வளவு சுகபோகத்துடன் வாழ்கிற இவர்களுக்கு இதுவும் தரமுடியும். இன்னமும் தர முடியும் என்று அவளது மூளையில் கணக்கு ஓடியது.

எல்லாவற்றிற்கும் தலையை ஆட்டிக் கொண்டிருந்தாள் கௌரி. நல்ல இடம் வேண்டுமென்றால் கொஞ்சம் சிரமப் பட்டுத்தான் ஆகவேண்டும். கோதண்டம் இருக்கிறான் ஈடுகொடுக்க என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டு வந்தவர்களை முறைப்படி உற்சாகமாக வழி அனுப்பி வைத்தாள்.

''எல்லாம் முடிஞ்ச மாதிரிதான். நீங்க ஓகேன்னு சொல்லிட்டா, மத்த விஷயங்களைச் சீக்கிரமா முடிச்சுக்கலாம். சுப காரியங்களைத் தள்ளிப் போடக் கூடாதே.'' சர்க்கரையாகப் பேசிவிட்டுக் கிளம்பி விட்டாள் அந்தம்மாள்.

சிரிப்பொலியில் கலகலத்த வீடு திடீரென்று அமைதியில் மூழ்கியது. வாங்கி வந்த பொட்டலத்திலிருந்த மீதியான முந்திரிப் பருப்பைக் கையில் கொட்டிக் கொண்டு முன்னறை சோபாவில் போய்ச் சாய்ந்து கொண்டு கொறிக்கத் தொடங்கினார் சபேசன்.

உடம்பில் வியர்த்த வியர்வையை வாரிக் கொட்டிய பட்டுப் புடவையைக் களைந்து விட்டு நூல் சேலை ஒன்றை உடுத்திக் கொண்டு முன்னறைக்கு வந்த கௌரி கோபத்



துடன் கத்தினாள். ''ஆளுக்கு ஒரு திக்காய்த் தலைமறைவாகி விட்டால் என்ன அர்த்தம்? இந்தக் கல்யாணத்தை நாம் எப்படி நடத்தப் போகிறோம்னு யோசிக்க வேண்டாமா?'' மூத்த மகனைப் பார்த்து எரிந்து விழுந்தாள்.

''நீங்க ரெண்டு பேரும் பேசி என்ன முடிவெடுத்தீங் கன்னு சொல்லாமல் கோபப்பட்டா என்ன அர்த்தம்'' பதிலுக்கு மகன் கடிந்து கொண்டான்.

''உன் கல்யாணத்துக்கு நான் என்ன கேட்டேனோ அதைத்தான் மாலதிக்கு வரப்போர மாமியாரும் கேட்கிறாள்.''

''பங்களா, கார், வைர நகைகள் இதனை வாரிக் கொடுக்க என் மாமனாரால் முடிஞ்சது அம்மா. அவர் பணக்காரர். ஆனால் நாம் மத்தியதர வகுப்பைச் சேர்ந்தவர்கள். மறக்காதீங்க.''

''ஒண்ணுமே தரமாட்டேன்னா எப்படிக் கல்யாணம் நடக்கும்?''

''என்னதான் அவர்கள் கேட்கிறாங்கன்னு சொல்லுங் களேன்'' கோதண்டம் வற்புறுத்தினான்.

கௌரி ஒரே மூச்சில் பிள்ளை வீட்டார் எதிர்பார்ப்பவை களைச் சொல்லி முடித்தாள்.

''கல்யாணத்துச் செலவே லட்சத்துக்கு மேலே ஓடும் போலிருக்கு. அவங்க கேட்கிற நகை இத்யாதியோட அடேயப்பா. அத்தனை பணத்துக்கு நாம எங்கே போவோம்?''

''அப்படிச் சொல்லிட்டால் உன் கடமை விட்டுப் போயிடுமா? ரம்யாவுடைய நகைகளைக் கொண்டு வந்தால் அதிலிருந்து சிலதை எடுத்துப் போட்டுச் சமாளிக்கலாம்.

''அம்மா, நல்ல யோசனை சொல்றீங்க! ரம்யா நகையை மாலதிக்கு எப்படிப் போட முடியும்?''

''ஏன் முடியாது? உன் மனைவிக்குப் போட்ட நகை உன்னுடைய சொத்தாகி விட்டது. சொத்தை உன் தங்கைக்குப் போட்டுக் கல்யாணம் செய்து கொடுக்கறதில் என்ன தப்பு? அது உன் கடமைதானே?''

''தப்பு அம்மா. ரம்யாவுக்கு அவள் அப்பா போட்டவைகள் அவளுடைய சொத்து. அதைத் தொட எனக்கு உரிமை இல்லை.''

''இந்தப் பங்களாவை அடமானம் வச்சுப் பணம் திரட்டறது.''

''மறுபடியும் மறந்து பேசறீங்களே? இந்தப் பங்களா ரம்யாவுடையது. இதன் மேலே இன்னும் கடன் கொஞ்சம் இருக்கு. அவள் அப்பா அடைச்சிட்டு வரார். இதைத் தொட நம்ப யாருக்கும் உரிமை கிடையாது.''

''உன் கம்பெனியிலிருந்து கடன் வாங்கித் தங்கைக்குக் கல்யாணம் பண்ணிக் கொடு. யாராவது வேண்டாம்ன்னு சொன்னாங்களா?'' கௌரி கோபப்பட்டாள்.

''அத்தனை பெரிய தொகையை என்னால் கடன் வாங்க முடியாது.''

''அப்படின்னா, முடிவில் நீ என்னதான் கடைசியாச் சொல்றே?'' அம்மா உரத்த குரலில் மகனை அதட்டினாள்.''

''இந்த வரன் நமக்குக் கட்டுப்படியாகாது. நம்ப அந்தஸ்துக்குத் தக்கபடி வேறே இடம் பார்ப்போம். பெரிய வேலையிலே இல்லாவிட்டாலும் நல்ல பையனாக நமக்குக் கட்டுப்படியாகும் இடமாய் நான் பார்க்கிறேன். என் ஆபீசிலே கணக்கனாய் ஒரு பிள்ளை இருக்கான்.''

''வேண்டாம். என் பெண்ணுக்கு அவன் சம்பாதிக்கிறதிலே வாழ முடியாது. வசதியாய் இருந்து பழகிட்டாள். அதனால்...''

''நான் முடிவாய்ச் சொல்லி விட்டேன். பெரிய இடம் நமக்கு வேண்டாம். நம்ப அந்தஸ்துக்குத் தக்கபடி பாருங்கள். நான் என் பொறுப்பை ஏத்துக்கறேன்.''



''நம்ப அந்தஸ்துக்கு என்ன குறைச்சல்?'' உறுமினாள் கௌரி.

''நாம் போலியாக என் மாமனார் நீலகண்டன் கொடுத்த சுகபோகத்திலே மறைஞ்சுகொண்டு வாழறோம். உண்மையிலே நாம் சாதாரணமானவங்க. அதைப் புரிஞ்சு கொண்டு சாதாரண இடம் பாருங்கள்.'' கோபமாகக் கோதண்டம் உள்ளே போய் விட்டான்.

''பார்த்தீங்களா உங்க பிள்ளையை. இந்தக் கல்யாணத்துக் கப்புறம் எப்படி மாறிட்டான். நான் கிழிச்ச கோட்டைத் தாண்டாதவன். என்னமோ பேசறான். ஊமைக் கோட்டான் போல இருந்துகொண்டு இந்த ரம்யா இவனை எப்படி ஆட்டிப்படைக்கிறாள் பார்த்தீங்களா? ஊர் உலகத்திலே ஒவ்வொருத்தர் தன் நாத்தனார் வாழணும்ன்னு செய்யாத தியாகமா இவள் செய்துடப் போறாள்? இந்தப் பிள்ளையை நம்பிட்டுத்தானே நாம...'' பேச முடியாமல் கௌரி ஓவென்று அழத் தொடங்கினாள்.

சபேசன் பதிலளிக்காமல் தொண்டையைப் பலமுறை செருமினார். மாலதி விசும்பிக் கொண்டாள்.

'வந்தவங்க எல்லோரும் டிபனை ஒரு கை பார்த்துட்டுப் போயிட்டாங்க. எனக்குச் சரியா ஒண்ணுமே கிடைக்கலே. வீடு இருக்கும் லட்சணத்தில் சாப்பிட ஏதாவது கேட்டால் வேறு ஏதாவதுதான் கிடைக்கும்.' தனக்குள்ளே முணுமுணுத்தபடி பேல்பூரி வாங்கிச் சாப்பிட வெளியே நழுவி விட்டான் மித்திரன்.

அன்று இரவு யாரும் சாப்பிடவில்லை. தானும் சாப்பிடப் பயந்து ரம்யா சமையலறையை ஒழுங்கு படுத்தி விட்டு மெள்ளத் தங்கள் அறைக்குள் நுழைந்தாள். அலுவலக ஃபைல் ஒன்றைக் கவனித்துக் கொண்டிருந்த கணவன் அருகே உட்கார்ந்தாள்.

''மாலதிக்குக் கல்யாணம் செய்து வைக்கிறது நம்ம கடமை இல்லியா?''

''என் கடமையை எப்படிச் செய்யணும்னு தெரியும். நீ அவசரப்படாமல் தூங்கு'' என்றான்.

அதற்கு மேல் தர்க்கிக்க ரம்யாவுக்குப் பயம். போர்வையைத் தலைமேல் வழிய விட்டுக் கொண்டு படுத்து விட்டாள்.

கௌரி எந்தக் காரியத்தையும் சுலபமாக ஒதுக்கி விடமாட்டாள். அவளுக்கு அந்த வரன் மிகவும் பிடித்திருந்தது. அதை எப்படியாவது மாலதிக்கு முடித்துவிட வேண்டுமென்ற ஆதங்கம்.

மறுநாள் காலை, அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. காப்பி சாப்பிட்டு விட்டுக் காலை பத்திரிகையுடன் உட்கார்ந்த கணவனிடம் வந்தாள். ''நாம பெத்த பெண் மாலதி- அவளைத் தக்க இடத்திலே கொடுத்து வாழ வைக்க வேண்டியது நம்ப கடமை. அதனாலே நான் சொன்னபடி செய்யுங்கள்'' என்று உத்தரவிட்டாள்.

சுள் என்று எரித்த வெய்யிலில் ஆட்டோவைப் பிடித்துக் கொண்டு புறப்பட்டார் சபேசன். நீலகண்டன் பங்களாவின் வரவேற்பறைக்குள்ளே காலை வைப்பதற்குள் மனிதர் வேர்த்து விறுவிறுத்துப் போனார்.

அமர்த்தலாக நடந்து கொள்ளும் தமது சம்பந்தியிடம் சமமாகப் பேச அவருக்கு ரொம்பவே பயம்.

சமையற்கார ராமு வெள்ளி டம்ளரில் நுரை பொங்கிய காப்பியைக் கொண்டு வந்து முக்காலி மீது நக்கென்று வைத்தான். ''ஐயா குளிக்கிறார். பத்து நிமிஷம் ஆகும்'' என்று கூறி விட்டு மாயமானான்.

பத்து நிமிஷம் பத்து யுகமாக நீண்டு, நேரம் கனத்தது. எத்தனை தடவை தலைக்கு மேல் தொங்கிய சரவிளக்கைப் பார்ப்பார். எத்தனை தடவை சுவரில் மாட்டப்பட்டிருந்த சித்திரங்களை உற்று நோக்குவார். எத்தனை தடவை கால் புதையும் ரத்தினக் கம்பளத்து வேலைப்பாட்டைக் கண்டு வியப்பார்.



சரவிளக்கைப் பார்த்து வலித்த கழுத்தை இடது கையால் தடவிக் கொண்டு திரும்பியவர், இலேசாக இருமும் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தார்.

''உட்காருங்கள். நீங்கள் வந்திருப்பதாக ராமு சொன்னான். கொஞ்ச நேரத்திலே நான் ஆபீசுக்கு கிளம்பிட்டு இருக்கேன்.''

''மாலதிக்கு ஒரு நல்ல இடம் வந்திருக்கு. அவளது கல்யாணம் முடிஞ்சா எங்க பொறுப்பு ஓரளவு குறையும். சின்னவன் பாஸ் பண்ணி வேலைக்கமர்ந்தப்புறந்தானே அவனைப் பத்திக் கவலைப்படணும்...'' சுற்றி வளைத்தார்.

''ரொம்பச் சந்தோஷம். கல்யாணம் எப்போ?''

''அதைப் பத்திதான் பேச உங்ககிட்டே வந்திருக்கேன்.''

''என்கிட்டேயா?'' புருவங்களை உயர்த்தினார் நீலகண்டன்.

''நீங்க கொஞ்சம் பணம் கடன் கொடுத்து உதவினால் ரொம்ப உபகாரமா இருக்கும்... இந்தக் கல்யாணத்துக்கு லட்சத்துக்கு மேலே தேவைப்படுது.''

முகம் சிவந்து போனார் நீலகண்டன். தம்முள் மூண்ட கோபத்தை அடக்கிக் கொண்டு புன்முறுவலித்தார். ''ஸாரி மிஸ்டர்... என்னால கடன் கொடுத்து உதவ முடியாது. வேறே இடங்களில் முயற்சி பண்ணிப் பாரும். அவ்வளவு தானே?'' என்று கூறிவிட்டு எழுந்து விட்டார்.

சபேசனுக்கு அவமானம் தாங்க முடியவில்லை. வீட்டுக்குப் போகாமல் அப்படியே கடற்கரை ஓரமாக நடந்து கடலுக்குள் இறங்கி மறைந்து விடக்கூடாதா என்று வெட்கத்தில் துவண்டு போனார். அவர்கள் வீட்டில் ஒரு பூகம்பம் உருவாகி விட்டிருந்தது.

''ஒரு லட்ச ரூபாய் கொடுத்து உதவினால் என்ன கேடாம்? அத்தனை பணத்தையும் தலையில் கட்டிக் கொண்டா போகப் போறான் பாவி?'' கௌரி ஆத்திரத்தில் கத்தினாள்.

''சம்பந்தியைப் போய்க் கடன் கேட்கச் சொல்லி என் மானத்தை வாங்கிட்டே. நாக்கைப் பிடுங்கிட்டு சாக மாட்டமான்னு அவமானமா இருக்கு'' அடிக் குரலில் அரற்றினார் சபேசன்.

வேலையினின்று வீட்டுக்குத் திரும்பி இருந்தான் கோதண்டம். நேரே அம்மாவிடம் வந்தான். ''அப்பாவை ஏன் என் மாமனார் வீட்டுக்கு அனுப்பினீங்க?''

''நீ பண உதவி செய்யமாட்டேன்னு சொல்லிட்டே, அவராவது உதவராரான்னு கேட்டுக் கொண்டு வரச் சொன்னேன். அந்தப் பாவி முடியாதுன்னு கையை விரிச்சுட்டார். ஆமாம், உனக்கெப்படித் தெரியும்?''

''எப்படித் தெரியுமா? என் மாமனார் என்னை டெலிபோனில் கூப்பிட்டு அப்பா வந்ததைப் பற்றியும் தன்னால் உதவ முடியாதது பற்றியும் சொன்னார். உங்களுக்கு வெட்கமாய் இல்லையா அம்மா? கொண்டான் கொடுத்தான் கிட்டேயா கடன் கேட்கிறது?''

''இதிலே வெட்கம் என்ன இருக்கு? கடன் தானே கேட்டோம்? சும்மா பிச்சை கேட்கலையே!'' கௌரி சீறினாள்.

''எனக்கு ரொம்ப வெட்கமா இருக்கு - இன்னொரு தடவை இந்த மாதிரித் தப்புக் காரியங்களைச் செய்து என்னை அவமானப்படுத்த வேண்டாம். சொல்லிட்டேன்.'' வேகமாகப் பேசிய மகன் தொப்பென்று தன் கையிலிருந்த பெட்டியை மேஜைமேல் போட்டு விட்டுத் தலையைக் கையால் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தான்.

''என்னமோ குடி முழுகிவிட்டது போல உட்கார்ந் துட்டியே? உன் மாமனார் கடன் தராட்டா போறார். மாலதிக்குன்னு போட்டிருக்கிற புருஷன் காணாமல் போயிட மாட்டான். தானே வருவான்'' என்று அதட்டி விட்டு கௌரி அடுப்பங்கரைப் பக்கம் மறைந்தாள்.

ஆனாலும் அவள் மனம் பக்பக்கென்று அடித்துக் கொண்டது. தோளுக்கு மிஞ்சி விட்ட பிள்ளையோடு சண்டை போட்டுச் சமாளிக்க முடியாதென்ற விசாரம்.



# 9

ஞாயிற்றுக்கிழமை காலை முன்னறையில் உட் கார்ந்தபடி பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்த சபேசன் டெலிபோன் ஒலிப்பதைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனார்.

''போனை எடுத்து யார்னு கேட்கக்கூடாதா?'' என்று கௌரி கத்துவாள் என்ற கலவரம் அவருக்கு.

சிலர் அழைத்தால் அவள் வீட்டில் இருப்பதாகச் சொல்ல வேண்டும். சிலர் கூப்பிடும்பொழுது அவள் கோவிலுக்குப் போயிருப்பதாகக் கதைவிட வேண்டும். எப்போது யாருக்கு என்ன சொல்வது என்பது சபேசனுக்குப் புரியாத குழப்பம்.

'ரஞ்சிதா கூப்பிட்டாளா? ஏன் நான் இல்லைன்னு போனை வச்சிட்டீங்க? அவகிட்டே முக்கியமான சங்கதி பேச எனக்கிருக்கே!' கடுகடுப்பாள்.

'அனுசூயாகிட்டே என்னை நன்றாய் மாட்டி விட்டுட் டீங்க. லேசில் போனை வைக்க மாட்டாளே மகராஜி! ஒரு மணி நேரம் பேசி அறுத்துத் தொலைத்தாள்' என்று சீறுவாள்.

உதட்டை நாவால் தடவிக் கொண்டு மெல்லப் போனைக் கையில் எடுத்தார். ''யார் பேசறது? பெண்ணோட அம்மா தானே?'' மறுபக்கம் கலகலப்பாக ஒலித்த குரல் அவருக்குக் குழப்பத்தை உண்டு பண்ணியது.

''நீங்க யார்னு சொன்னா...'' சபேசன் மென்று விழுங்கினார்.

''இது கோதண்டராமன் வீடுதானே? உங்க மனைவியைக் கொஞ்சம் கூப்பிடறீங்களா? வெள்ளிக்கிழமை பெண் பார்க்க வந்தோமே... மிஸஸ் ஈஸ்வரன்தான் கூப்பிட றாங்கன்னு சொல்றீங்களா?'' தேனாகக் குழைந்தாள் திருமதி ஈஸ்வரன்.

பின் வராந்தாவில் வேலைக்காரியுடன் பெரும் போர் தொடுத்துக் கொண்டிருந்தாள் கௌரி.

''இத்தனை சோப்பைக் கொட்டி நீ என்ன துணி துவைக்கிறே?'' இரைந்து கொண்டிருந்தாள்.

''நானும் நாலு வாட்டி சொல்லிட்டேன். டி.வி.யிலே வர அந்தச் சோப்புக் கட்டியை வாங்கித்தாம்மா, துணி நல்லா வெளுக்கும்னு சொல்றேன். நீ கேட்க மாட்டேங்கிறே!''

''எனக்கு நிம்மதியா உட்கார்ந்து டி.வி. பார்க்க நேரமில்லை. நாலு வீடு வேலை செய்கிற உனக்கு நேரம் இருக்கு.''

''கடைசியா நான் ஜானம்மா வீட்டுக்கு வேலை செய்யப் போறேன் இல்லையா? பாத்திரங்களைக் கழுவிப் போட்டுட்டு அவங்க தர காப்பி டிபனை முடிச்சிட்டு அப்படியே டி.வி. பார்க்க உட்கார்ந்துடறேன். ஏழுமணி தமிழ்ச் செய்திச் சுருக்கம் கேட்ட பிறகுதான் வீட்டுக்குப் போவேன். நாடகம் இருந்தா அதைப் பார்த்த பின்னாடிதான் வீடு''

''பரவாயில்லை உன் பிழைப்பு. இரண்டு பிள்ளைகளைப் பெத்தும் எனக்கு விமோசனம் ஏது?'' வெள்ளிக்கிழமை இரவிலிருந்து ஆரம்பித்த கோபம் அவளை இன்னும் விட்டபாடில்லை.

சதா வீட்டில் உள்ளவர்களைக் குத்திக் குதறிக் கொண்டிருந்தாள்.

சபேசன் பின் வராந்தா பக்கம் விரைந்து வந்தார்.

''அந்த மிஸஸ் ஈஸ்வரன் உன்கிட்டே பேசணுமாம். கூப்பிடறாள்'' என்று மெல்லிய குரலில் கூறினார்.

மாடியிலிருந்து அதற்குள் இறங்கி வந்த கோதண்டராமன் முன்னறையில் ஸ்டாண்டிலிருந்து எடுத்து வைக்கப்பட்ட போனைத் தூக்கிக் கொண்டான். ''யார் வேணும்?'' என்றான் எரிச்சலோடு.

''நான்தான் மிஸஸ் ஈஸ்வரன் பேசறேன். நீங்க?''

''கோதண்டராமன். கௌரி அம்மாளின் பிள்ளை.''



''நல்லதாப் போச்சு. உங்ககிட்டேயே விஷயத்தைக் கேட்டு முடிச்சிடலாம் இல்லையா?'' மெல்லிய குரலில் சிரித்தாள் மறுபக்கத்தில்.

''ஆமாம், என்ன தீர்மானிச்சீங்க? கௌரியம்மா உடனே தகவல் தெரிவிப்பதாகச் சொல்லியிருந்தாங்க.''

''அம்மா சொல்லப் போறதை நான் சொல்லிடறேன். எங்களுக்கு நீங்க கேட்கிறபடி செய்யக் கட்டுப்படியாகாது. நான் ஜாதகம் சரியில்லை. நட்சத்திரத்திலே ஒரு சின்னக் கோளாறுன்னு பொய் சொல்லத் தயாராயில்லை. லட்சக் கணக்கில் செலவழிக்க நீங்க நினைக்கிற அளவு நாங்க பணக்காரங்க இல்லை. அதனாலே இந்த வரன் வேண்டாம்னு முடிவு செஞ்சிட்டோம்.''

பட்டென்று போன் மறுமுனையில் துண்டிக்கப்பட்டது.

பரபரப்பாக உள்ளே வந்த கௌரி, மகனைச் சுட்டெரிப்பதுபோல் பார்த்தாள். ''நான் வர்றதுக்குள்ளே உனக்கு என்ன அவசரம்? பளிச்சினு இப்படியா சொல்லுவாங்க?'' உரத்து அதட்டினாள்.

''உண்மையைச் சொன்னேன். வீணே ஜாதகத்து மேலே பழி ஏன்?'' முகத்தைக் கடுத்துக் கொண்டு உள்ளே திரும்ப அவன் யத்தனித்தபோது வாசல் அழைப்பு மணி அழுத்தமாக ஒலித்தது.

வேகமாகச் சென்று தானே கதவைத் திறந்தாள்.

ஞாயிற்றுக்கிழமை காலை வேளையில் டொனேஷன் கேட்டுக் கொண்டு யாராவது வருவார்கள். இல்லாவிட்டால் ஏதாவது நிதி திரட்ட டிக்கெட் விற்பதாக இரண்டு கல்லூரிப் பெண்கள் ஜோடியாக வந்து பல்லைக் காட்டித் தொலைக்கும். இவர்களுக்கெல்லாம் வேலை என்ன? வாரத்தில் ஒரு நாள் நிம்மதியாய் கூட டி.வி.யைப் பார்க்க முடியாது. பூஜை வேளை கரடி...

CONNEMARA PUBLIC LIBRARY

பலவும் எண்ணிப் பற்களைக் கடித்துக் கொண்டுதான் வராந்தாவில் நின்ற காக்கி சீருடை இளைஞனை வெறித்துப் பார்த்தாள்.

''கல்யாணப் பத்திரிகை கொண்டு வந்திருக்கேன். இதில் ஒரு கையெழுத்துப் போடுங்கள். நேரே கொடுத்திட்டு வரச் சொல்லி ஐயா உத்தரவு.''

நான்கு முனைகளிலும் மஞ்சள் தடவப்பட்டிருந்தொரு கடித உறையைக் கொடுத்து ஒரு நோட்டுப் புத்தகத்தை நீட்டினான்.

எந்த ஐயா, யார் வீட்டுக் கல்யாணம் என்றெல்லாம் அவனைக் கேட்டுக் கொணடு நிற்க அவளது கௌரவம் இடம் தரவில்லை.

வேறு பல இடங்களுக்குப் போகத் துடித்தபடி ஒரு கையில் நோட்டுப் புத்தகமும் இன்னொரு கையில் கட்டு அழைப்பிதழ்களுமாக நின்ற அந்த இளைஞனும் ஒரே அவசரமாக இருந்தான்.

அவன் காட்டிய இடத்தில் அவன் தந்த பேனாவால் தன் கையெழுத்தைக் கிறுக்கி விட்டுக் கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே திரும்பினாள்.

யார் பெண்ணுக்கோ கல்யாணம். அழைப்பிதழை நேரே அனுப்பியிருக்கிறார்கள். கட்டாயம் கல்யாணத்திற்கு அவர்கள் வரவேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு போலும். அடுத்த புதன் முகூர்த்த நாள். ஊரில் ஒரு சத்திரம் காலியாக இருக்காது. ஒரு கல்யாண மண்டபத்தில் கூட இடம் கிடைக்காது. மூன்று மாசத்திற்கு முந்தியே எல்லோரும் மண்டபத்திற்கு அச்சாரம் கொடுத்துப் பிடித்துக் கொண்டிருப்பார்கள். கல்யாண மண்டபமே கிடைக்காமல் ஜனங்கள் படும்பாடு - இந்த நாளில் கையில் வந்த நல்ல வரனை உதறி விட்டு விட்டானே கோதண்டராமன். அவள் போனில் பேசியிருந்தால் குழைந்து கும்பிட்டு அந்தம்மாள் கேட்டவைகளை பாதியாகக் குறைத்து விட்டிருப்பாள்.



அவளுக்கு ஒரு வாய்ப்புக் கொடுக்காமல் பற்களைக் கடித்தபடி முகத்தைச் சுருக்கிக்கொண்டு சாப்பாட்ட றைக்குள் வந்து ஒரு நாற்காலியில் அமர்ந்து திரு.சபேசன், திருமதி சபேசன் மற்றும் குடும்பத்தார் என்று போடப் பட்டிருந்த அந்தத் திருமண அழைப்பிதழின் உறையை உருவி அப்பால் வைத்து விட்டு உள்ளே ரோஜா வண்ணத் திலே தங்க எழுத்துக்களில் பளிச்சிட்ட அழைப்பிதழைப் பார்த்தாள்.

தேள் கொட்டியது போல, ''இங்கே வாங்க. எல்லோரும் வாங்க'' என்று உரத்த குரலில் கிரீச்சிட்டாள்.

கோதண்டம் பதறிக்கொண்டு ஓடி வந்தான். சமையல் வேலையைப் போட்டு விட்டு ஓடி வந்தாள் ரம்யா. மாடிப் படிகளை நாலே பாய்ச்சலில் தாண்டிக் கீழே இறங்கி வந்து அம்மா அருகில் நின்றான் மித்திரன். படித்துக் கொண்டிருந்த நாவலைத் தூக்கிப் படுக்கை மீது விட்டெறிந்து விட்டு வேகமாக வந்து சேர்ந்தாள் மாலதி. சபேசன் காலைப் பத்திரிகையைக் கையில் தொங்க விட்டுக் கொண்டு பயத்துடன் வந்து நின்றார்.

''எல்லோரும் நன்றாய்க் கேட்டுக் கொள்ளுங்க. நம்மை வர புதன்கிழமை காலை முகூர்த்தத்திற்குச் சம்பந்தி நீலகண்டன் திருநீர்மலைக்கு- கல்யாணத்துக்கு அழைச்சி ருக்கார்.''

''நீலகண்டனுக்கு ரம்யாவைத் தவிர பெண் கிடையாதே. தம்பி அண்ணன் அக்கான்னு நெருங்கின உறவும் கிடையாதே. தூர பந்து வீட்டுக் கல்யாணத்தை எடுத்து நடத்தறாரோ?''

''தன் சம்பந்தி வீட்டுக் கல்யாணத்துக்குக் கடனாகக் கூடப் பணம் உதவ மறுத்த கருமி. தூரத்து உறவுக்காரங்க கல்யாணத்தை எடுத்து நடத்துவாராக்கும்? கைகொட்டி சிரிக்க வேண்டிய சங்கதி. உங்க சம்பந்தி நாளை புதன் காலை முகூர்த்தத்தில் ரேவதி என்கிற பெண்ணைக் கல்யாணம் செய்துக்கப் போறாராம். மாலை ஐந்து

மணிக்குக் கிரிஜா ஹோட்டலில் ரிஸப்ஷன். போதுமா சங்கதி?'' கௌரி இடி இடியென்று சிரித்தாள்.

கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு ரம்யா மௌனமாக நின்றாள். கோதண்டம் கைகளை மடக்கியபடி அம்மாவின் எதிரே பேசாமல் நின்று கொண்டிருந்தான்.

''அச்சா! பலே ஜோர்!'' என்று மித்திரன் கைகொட்டிச் சிரித்தான்.

புடவைத் தலைப்பை வாயால் கடித்துக் கொண்டு மெல்லச் சிரித்தாள் மாலதி.

''சரியாய்ப் படிச்சியா? வேறு யாராவது நீலகண்டன்னு இருக்கப் போவுது.'' சபேசன் உளறியபோது மனைவி அவரைக் கோபத்துடன் வெறித்தாள்.

''எல்லாம் சாட்சாத் உங்க சம்பந்தி நீலகண்டன்தான். வேணும்னா நீங்களே படிச்சுப் பார்த்துக் கொள்ளுங்க. என் கண் பொட்டையாயிடலை.'' உறுமினாள்.

மூக்கின் மீது நழுவிய மூக்குக் கண்ணாடியைச் சரி செய்து கொண்டு சபேசன் அதை வாங்கிப் படித்துப் பார்த்தார்.

அவரால் நம்பவே முடியவில்லை. பேரன் பேத்தி எடுக்கும் காலத்தில் மனிதனுக்குஇப்படி ஒரு சபலமா வந்து தொலையனும்? நாளைக்கு நண்பன் குப்புசாமி சங்கதி தெரிந்ததும் ரொம்பக் கேலி செய்வானே?

'சம்பந்தியும் சம்பந்தியும் சத்திரத்துக்குப் போனால் எச்சுமில்லை பேச்சுமில்லை என்பார்கள். நீங்களும் இந்த வயசிலே ஒரு கல்யாணம் செய்து கொண்டு விடுங்கள். சரியாயிடும்' என்று சீண்டுவான். மடையன் பலதாரச் சட்டத்தைப் பற்றி மறந்து அசட்டுத் தனமாய்ப் பேசுவான். பலவும் ஒரு விநாடியில் சிந்தித்து விட்டு, மனைவியிடம் பத்திரிகையைத் திருப்பித் தந்தார்.

''கோதண்டம், உன் மாமனார் செய்திருக்கிற காரியத்தைப் பார்த்தியா? எத்தனை திமிர் மனுஷனுக்கு.



நேரே வீட்டுக்குப் பையன்கிட்டே கொடுத்துப் பத்திரிகையை அனுப்பிச்சிருக்கார். இப்படிச் செய்யப் போறார்னு உனக்குச் சந்தேகம் ஏதாவது ஏற்பட்டதோ? பாவம் நீ, அவரை ஒரு பெரிய ஜென்டில்மேன்னு அடிக்கடி வருணிப்பே. உன்னைச் சொல்லிக் குத்தமில்லே. கிராப்பு வச்சுக்கொண்டு நாசூக்காய் உடுத்திக்கிற அத்தனை ஆண்களும் உனக்கு ஜென்டில்மேன்தான்'' படபடவென்று கௌரி பேசினாள்.

''இதுமாதிரி ஏதாவது நடக்கும்னு எனக்குத் தெரியும்மா.'' மித்திரன் தன் சட்டைக் காலரை உயர்த்தி விட்டுக் கொண்டான்.

''எப்படித் தெரியும் உனக்கு?'' அம்மா அதட்டினாள்.

''நம்ப சம்பந்தியும் அவருக்கு மனைவியாகப் போகும் அந்த ரேவதியும் ஜோடியாய்க் காரில் வந்து நான் டிபன் சாப்பிடும் அதே வடக்கத்தியார் கடையில் சமோசாவும் பேல் பூரியும் வாங்கிக்கொண்டு போவாங்க. பார்த்திருக்கிறேன்.''

''ஏண்டா, பார்த்தவன் உடனே வந்து சொல்றதுக்கென்ன?''

''நான் ஏன் சொல்லணும்? அவர் என் அண்ணனின் மதிப்பிற்குரிய மாமனார். அவரைப்பற்றி நான் ஏதோ தவறாய்ப் பேசறதாக நீங்க மொத்துவீங்க. அந்தம்மா அவரோட சின்ன வீடுன்னு கேள்விப்பட்டேன். இப்போ பெரிய வீட்டிலேயே சட்டப்பூர்வமாக வந்து உட்காரப் போறாங்க. அவ்வளவுதானே?'' சிரித்தான்.

''போதும், உன் விளக்கத்தை நிறுத்து,'' கோதண்டம் உரத்த குரலில் தம்பியை அதட்டினான்.

''உண்மையைச் சொன்னா உடம்பு எரிகிறதோ? உன் மாமனாரின் சங்கதி நாளைக்கு ஊரறிஞ்சு போகப் போகுது. அப்போ எவனைப்போய் அடக்கப் போறே? மாப்பிள்ளையைப் போனில் கூப்பிடறதும் பென்ஸ்காரை அனுப்பி

அழைக்கிறதுமா மனுஷன் நன்றாய் வேப்பிலை அடிச்சார். எனக்கு அப்பவே தெரியும். ஷோக்கா டிரெஸ் பண்ணிட்டு ஒரு பாட்டில் ஷேவிங்லோஷனை மூஞ்சியிலே அபிஷேகம் செய்து கொண்டு வராரே இந்த மனுஷன்! ஏதாவது கோணாமாணா காரியத்தைச் செய்தாலும் ஆச்சரியப்படுற துக்கில்லேன்னு நினைச்சேன்.''

''கல்யாணம் பண்ணிக்கப் போறார். அதிலே என்னம்மா தப்பு?'' கோதண்டம் சீறி விழுந்தான்.

''இன்னும் பத்து வயசு கழிச்சுச் செஞ்சுக்கிறதுதானே? இவரை யார் தடுக்கப் போறாங்க? உன் பெண்டாட்டியை வேணா அழைச்சிட்டுப் போய்ப் பச்சைப்பிடி சுத்திப் போடச்சொல்லு. எதுக்கும் ஒரு வயசு, காலம் இதெல்லாம் கிடையாதா? இந்தச் சங்கதி உனக்குக் கொஞ்சம் கூடத் தெரியாமல் மக்கு போல நீ பாம்பேக்கும் கல்கத்தாவுக்கும் பறந்திட்டு இருந்தே.''

''எனக்குத் தெரியும். என் மாமனார் தனது முடிவைப் பத்தி என்கிட்டே சொல்லியிருந்தார். அவர் ஒண்ணும் மறைச்சு வைக்கலை.''

''நீதான் எங்ககிட்டேயிருந்து மறைச்சு வச்சயாக்கும்?''

''தானே விஷயம் வரும்போது தெரிஞ்சுக்கட்டும்னு இருந்தேன். இது தப்பா? அவர் இஷ்டம் அவர் கல்யாணம் பண்ணிக்கிறார். இது அவரது சொந்தப் பிரச்சனை. நீங்க ஏன் இப்படி ஆத்திரத்திலே குதிக்கிறீங்க?''

''இது அவரோட சொந்தப் பிரச்சினை இல்லை. நாளைக்கு நம்மைப் பாதிக்கப்போற பெரிய பிரச்சினை. எல்லாச் சொத்துக்கும் ரம்யா ஒரே பெண்ணுன்னு நாம் ஏமாந்து கொண்டிருந்தோம். வரப்போற இளையாள்... இரண்டைப் பெத்துப் போட்டால்?''

''ரம்யாவுக்குத் தரவேண்டியதெல்லாம் தந்துட்டார். மீதியான அவர் சொத்தை அவர் ஏதாவது தான தர்மத்துக்கு எழுதி வச்சுட்டுப் போனால் என்ன பண்ணுவீங்க? அதை நினைச்சுப் பாருங்கள்.''



''ஏண்டி ரம்யா, உனக்கும் இந்தச் சங்கதி தெரியுமில்லையா?''

ரம்யா கலவரத்துடன் தலையை அசைத்தாள்.

''அப்போ ஏன் எங்ககிட்ட சொல்லாமல் மொழுக்குனு இருந்தே. இதுக்குத்தான் உன் அப்பா ஜுரம், தலைவலின்னு உன்னைக் கூப்பிட்டு அனுப்பினாரோ? எதுவோ எப்படியோ போகட்டும். இந்தக் கண்ராவி கல்யாணத்துக்கு நாம் போகப் போறதில்லை.''

''நானும் ரம்யாவும் கல்யாணத்துக்குக் கட்டாயம் போக வேண்டும். அந்தப் பத்திரிகையை இப்படிக் கொடுங்கள்'' என்று தாயிடமிருந்து அழைப்பிதழை வாங்கிக் கொண்டான் கோதண்டம்.

''அம்மா நீங்க போகாம ஒதுங்கி இருந்தா ரொம்பத் தப்பு. கிரிஜா ஓட்டலில் நடக்கப் போகும் ரிஸப்ஷனுக்காவது நாம் எல்லோரும் போகணும்.'' மித்திரன் குழைவான குரலில் சொன்னான்.

''நீ வாயை மூடிக்கொண்டு மாடிக்குப் போ. வீணா என் வாயைக் கிண்டாதே. கோபத்தைக் கிளப்பாதே'' என்று கூறிவிட்டுக் கௌரி பொங்கி வந்த பல்வேறு உணர்வுகளால் உந்தப்பட்டுத் தன் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

மித்திரன் பின்னால் மாடிக்கு வந்த மாலதி மெல்லிய குரலில் கேட்டாள். ''நிசமா நாம ரிஸப்ஷனுக்குப் போகணும்னு நீ நினைக்கிறயா? ரெண்டு பேருக்கும் ஜோடிப் பொருத்தம் எப்படின்னு வேடிக்கை பார்க்கணும்னு உனக்கு ஆசை இருக்கு இல்லையா?''

''அவங்க ரெண்டு பேரையும் பல தடவை பார்த்திருக்கேன். ரிஸப்ஷனில் ரோஜா மாலையோடு பார்ப்பேன். அத்தனைதான். எனக்கு முக்கியமா கிரிஜா ஓட்டலுக்குப் போகணும் என்கிற ஆசை, ஏன் தெரியுமா?''

''பட்டணத்தில் புதுசா ஏற்பட்டிருக்கிற ஓட்டல் அது. அங்கே டிபன் ரொம்ப நன்றாக இருக்கும்னு கேள்வி!''

''ரிஸப்ஷன் சாக்கை வச்சுக் கொண்டு அங்கே போய் ஒரு பிடி பிடிக்கலாமேன்னுதான் சொன்னேன்.''

''போடா சாப்பாட்டு ராமா, உனக்கு...'' என்று கோபத்துடன் கையிலிருந்த புத்தகத்தைச் சகோதரன் மேல் வீசி விட்டு மாலதி தன் அறைக்குள் போய்ப் படுக்கையில் விழுந்தாள்.

இந்தச் சங்கதி அவளுக்குப் பெரியதொரு அதிசயமாகத் தெரிந்தது. அவளைப்போல் உள்ள ஓர் இளம் பெண் கல்யாணம் ஆகுமா என்று எதிர்பார்ப்பில் ஏங்கிக் கொண்டிருக்கும் வேளையில்... காதோரம் கிருதா நரைத்துப் போன சம்பந்திக்கு ஜாம்ஜாம் என்று இண்டாவது கல்யாணமா? உலகம் ரொம்பவே மோசமாகி விட்டது. பொருமியபடி படுக்கையில் புரண்டாள்.

''சே நீ எதுக்கு அழறே? உன் வீட்டையும் அப்பாவையும் பார்த்துக்க ஒரு சித்தி வராளேன்னு சந்தோஷப்பட்டுக் கொள். புதன்கிழமை விடிகாலையிலே முகூர்த்தம்- சட்டு புட்டுனு நாம கிளம்பணும். மறக்காதே'' என்று மனைவியைக் தேற்றினான் கோதண்டம்.

காலைப் பத்திரிகையைக் கையிலே சுருட்டிக் கொண்டு சபேசன் மூத்த மகன் அருகே தயக்கமாக வந்து நின்றார். ''நீயும் ரம்யாவும் கல்யாணத்துக்குப் போறபோது என்னையும் கூட்டிக்கொண்டு போய்விடு. கொண்டான் கொடுத்தானோட எனக்கேன் பொல்லாப்பு?'' மெல்லிய குரலில் முணகினார்.

விடியும் முன்பே எழுந்திருந்து அவசரமாகக் குளியலை முடித்துக் கொண்டு வீட்டவர்களுக்கு உணவைத் தயாரித்து ஹாட் கேசில் நிரப்பி விட்டுத்தான் ரம்யா தன் கணவனுடன் கல்யாணத்திற்குக் கிளம்பியிருந்தாள்.



ரம்யா காப்பியை கலந்து, தயாராக மேடைமேல் வைத்திருந்த பிரீத்தில் இட்லியை வார்த்து அடுப்பில் ஏற்றி இறக்குவதற்குள் கௌரிக்குத் தன் பிராணன் பாதி போய் விட்ட பிரமிப்பு. ஈரத் தலைமீது துவாலையைச் சுற்றிக் கொண்டு தன் இரு செல்வங்களுக்கும் டிபன் பரிமாறினாள் அவள்.

''என்னம்மா, இன்னிக்குப் புதன்கிழமைதானே? தலை குளிச்சிருக்கிங்க?'' வாயைக் கிண்டினான் மித்திரன்.

''சம்பந்தி மனுஷனுக்கு ஒரு முழுக்குப் போட்டு விட்டேன்னு வச்சுக்கோ. நாக்கைக் கொட்டிக் கொண்டு சட்டினியை எதிர்பார்க்காதே. மிக்ஸி ரிப்பேர். அம்மியைக் கட்டிக் கொண்டு அழ என்னாலாகாது'' எரிந்து விழுந்தாள்.

மிளகாய்ப் பொடியை எண்ணெயில் குழைத்துக் கொண்டு இட்லியைப் பிட்டுத் தொட்டு விழுங்கினான் மித்திரன். 'ரம்யா மன்னி இருந்தால் ஜோரான தேங்காய் சட்டினி பண்ணி வைத்திருப்பாளே!' என்று எண்ணம் ஓடியது அவனுக்கு.

''இத்தனை நேரம் கல்யாணம் முடிஞ்சிருக்குமில்லையா?'' மறுபடியும் தாயின் வாயைக் கிளறினான் மகன்.

''முடிஞ்சிருக்கும். எல்லோரும் வீட்டுக்குத் திரும்பியிருப்பாங்க. நீலகண்டன் வீட்டிலே அமர்க்களமாகக் காலை டிபன் நடந்து கொண்டிருக்கும். உங்கப்பா வெட்கத்தை விட்டு அங்கே அதைச் சாப்பிட உட்கார்ந்திருப்பார்'' அம்மா பொருமினாள்.

''எனக்கென்னவோ நாம் இந்தக் கல்யாணத்தை பாய்காட் பண்ணது தப்புன்னு தோணுது.''

''என்னடா தப்பு'' டக்கென்று கோபத்துடன் டம்ளர்களை மேஜைமேல் வைத்தாள்.

''என்னதான் நடக்கிறதுன்னு கொஞ்சம் வேடிக்கை பார்க்கவாவது நாம் போயிருக்கலாம்.''

''ஆமாம் அம்மா. மித்திரன் சொல்றது உண்மைதான். அப்பா, மன்னி, அண்ணா மூணு பேரும் போய் நல்ல பேரைச் சம்பாதித்துக் கொண்டுட்டாங்க. நாம் மட்டும் பொல்லாதவர்களாயிட்டோம்'' மாலதி ஒத்துப் பாடினாள்.

''ரிஸப்ஷனுக்காவது போய் வேடிக்கை பார்க்கலாமே. இத்தனை வயசிலே பெண்ணும் மாப்பிள்ளையும் சம்பந்தி முன்னாடி மாலையும் கழுத்துமாய் நிக்கப் போற நீலகண்டனை வேடிக்கை பார்க்கலாமே.''

''இந்தக் கல்யாணத்துக்கு யார் யார் வராங்கன்னும் பார்க்கலாமே!'' மாலதி மறுபடியும் தன் சகோதரனுடன் ஒத்து ஊதினாள்.

உள்ளூர கௌரிக்கும் அதே எண்ணம்தான். வெறும் ஜம்பத்திற்காக, தான் கோபப்படுவதாக ஒரு நாடகம் ஆடிக் கொண்டிருந்தாள்.

''மனுஷாளுக்கு விவஸ்தையே கிடையாது. கட்டாயம் ரிஸப்ஷனுக்கு ஒரு பெரிய கூட்டம் வரும். ஏன்னா அவர் பெரிய மனுஷர். அவருக்கு ஜால்ரா போடவே ஒரு கும்பல் இருக்குமே!''

''நாமும் அந்தக் கும்பலோடு கோவிந்தா போடுவோமே அம்மா!'' மித்திரன் தூண்டி விட்டான்.

''சரி தொலையுங்கள். கோதண்டமும் ரம்யாவும் ராத்திரி தான் திரும்பி வருவாங்களாம். சொல்லிட்டுப் போய் விட்டாங்க. உங்கப்பா விருந்து சாப்பிட்டுட்டு மெள்ள இரண்டு மணிக்கு மேல்தான் திரும்புவார். ரிஸப்ஷனுக்கு நாம் கிளம்பினால் அவரை வீட்டைப் பார்த்துக்கக் காவல் வச்சிட்டுத்தான் போகணும்.''

''ஏதாவது பரிசு எடுத்துக்கொண்டு போகணுமா அம்மா?'' மாலதி மெல்லிய குரலில் கேட்டாள்.

''மண்ணாங்கட்டி. அது ஒண்ணுதான் பாக்கி. நாமெல்லாம் ஒரு டாக்ஸி பிடிச்சுக் கொண்டு அங்கே போய்க்



கொஞ்சம் வேடிக்கை பார்த்துட்டுத் திரும்புவோம். அவ்வளவுதான்.''

''அப்பா பாவம். அவரும் வரட்டுமே!'' மித்திரன் இரக்கப்பட்டான்.

''வேண்டாம். ஊர் கெட்டுக் கிடக்குது. வீட்டை ஒரே முட்டாய்ப் பூட்டிட்டுப் போக முடியாது. அப்பா வீட்டுக்குக் காவல் இருக்கட்டும்'' என்று கடுமையாக அதட்டினாள்.

அன்று மாலை குறித்த நேரத்திற்குக் கிரிஜா ஹோட்டலில் நடக்கப்போகும் வரவேற்புக்கு அவர்கள் மூவரும் தயாரானார்கள். டாக்ஸி பிடித்துக்கொண்டு விரைந்து வந்தான் மித்திரன்.

வழி நெடுகிலும் வாய் ஓயாமல் முணுமுணுத்துக் கொண்டு வந்தாள் கௌரி. ''இந்தக் கண்றாவிக் கல்யாணத்துக்கு ஒரு வரவேற்புத்தான் குறைச்சலாய் இருந்தது? அப்புறம் மனுஷன் புதுப் பெண்டாட்டியோட தேன் நிலவுக்குக் கிளம்பிடுவான்.''

''ஏம்மா அவருக்குத்தான் இது இரண்டாவது கல்யாணம்... அவளுக்கு முதல் கல்யாணம் இல்லையா?

என்ன கர்மமோ... எனக்கு அங்கே போய் அவர்கள் முகத்திலே முழிக்கக்கூட வெட்கமா இருக்கு.'' டாக்ஸியிலிருந்து இறங்கி உள்ளே நுழைந்தாள் கௌரி. அவள் எதிர்பார்த்த படி கூட்டம் அதிகம் இருக்கவில்லை. நீலகண்டன் வேலை பார்த்த நிறுவனத்திலிருந்து சிலரும் சில உறவினர்களும் நண்பர்களும் தமது மனைவி மக்களுடன் வந்திருந்தனர்.

சிற்றுண்டிகள் பரிமாறப்பட்டிருந்த ஹாலின் வாயிலில் நின்ற இரண்டு சிறுமிகள் பன்னீர் தெளித்து, மல்லிகை பூச்சரத்தை வழங்கி சந்தனப் பேலாவை நீட்டிக் கொண்டிருந்தனர். ஒரு சிறு கல்கண்டு துண்டை வாயில் போட்டுக் கொண்டு மெல்ல நடந்து உள்ளே சென்றவள் சோபாவில்

மாலையும் கழுத்துமாகத் தம் இளம் மனைவியுடன் உட்கார்ந்திருந்த சம்பந்தியை ஓரக் கண்ணால் பார்த்தாள்.

திக்கென்ற உணர்வில் திரும்பி நின்றபடி அவர் அருகே உட்கார்ந்திருந்த அந்த அழகான இளம் பெண்ணை ஏற இறங்கப் பார்த்தாள். நெஞ்சு பக்பக்கென்று அடித்துக் கொண்டது.

ரம்யாவின் வைர நகைகள் அத்தனையும் அந்தப் பெண் மேல் பூட்டப்பட்டிருப்பதைக் கண்டபோது ஆத்திரத்தில் கொதித்துப் போனாள்.

அவளுக்கு ரம்யாவின் வைர நகைகள் அத்தனையும் நன்றாக அடையாளம் தெரியும். வைர அட்டிகையில், பதக்கத்துடன் நடுவில் பெரிய ஜெய்ப்பூர் பச்சைக்கல் பதித்திருந்தது. வைர வளையல்களில் இரண்டுக்குமே அப்படியே கழற்றும்படி திருகுகள் வைக்கப்பட்டிருந்ததை அறிவாள். 'இதெல்லாம் வேறு இளைய மனைவிக்கு அப்பா செய்து போட்டார்கள்' என்று ரம்யா பொய் சொல்ல முடியாது.

இது ரொம்ப அக்கிரமம். பெண்ணின் நகைகளைக் கொஞ்சமும் பயமின்றி மனுஷன் தன் இளையாளுக்குப் போட்டு அலங்காரம் செய்து எல்லார் முன்னிலும் நிறுத்தி விட்டிருக்கானே! அதற்குப் பிறகும் அவளுக்கு அங்கே இருக்கவே பிடிக்கவில்லை. வரட்டும், கோதண்டமும் ரம்யாவும்! இதற்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும். மனத்திற்குள் கறுவிக் கொண்டாள்.

''அம்மா, டிபன் சாப்பிட்டுப் போகலாம், பாதாம் அல்வா விஜிடபிள் பஃப்னு ஏகப்பட்ட ஐயிட்டங்கள் இருக்கு.'' மித்திரன் சீக்கிரம் எழுந்து வரவில்லை.

''சரியான பக்கிடா நீ. இதுக்கு முன்னாடி பாதாம் அல்வாவைப் பார்த்ததில்லை போல. கர்மம்!'' கடுகடுத்துக் கொண்டாள் அம்மா.



ஐஸ்க்ரீம் வரை இருந்து சாப்பிட்டு விட்டு, பழம் பாக்கு வெற்றிலைப் பையுடன்தான் அவன் அம்மாவுடன் வெளியேறினான்.

வீட்டுக்குள் கால் வைக்கும்வரை அவள் மௌனமாகக் குமுறிக் கொண்டிருந்தாள். செருப்புகளை நடையில் விட்டு விட்டு உடம்பையும் உள்ளத்தையும் உறுத்திய பட்டுச் சேலையைக் களைந்து கொடியில் கிடந்ததொரு சுங்கிடிப் புடவையை உடுத்துக்கொண்டு முன்னறைப் பக்கம் வந்தவள் எரிமலையாக வெடித்தாள். ''உங்க சம்பந்தி பண்ணியிருக்கிற மோசடி உங்க கண்ணில் படலையா?'' ஆத்திரமாகக் கத்தினாள்.

''ஆமாம் அம்மா. நானும் பார்த்தேன். ரம்யா மன்னி நகைகள் அத்தனையும் கல்யாணப் பெண் போட்டுக் கொண்டு இருந்தாள்.'' மாலதி தூண்டிக் கொடுத்தாள்.

''இதை நான் சும்மா விடப்போவதில்லை. கோதண்டம் வரட்டும்.'' என்று கறுவியபடி காரியங்களைக் கவனிக்க உள்ளே சென்றாள் கௌரி.

இரவு பத்து மணிக்குமேல்தான் கோதண்டம் தன் மனைவியுடன் திரும்பினான்.

அதுவரை கண்களைக் கொட்டாமல் கௌரி காத்திருந்தாள். கார் கதவு மூடப்படும் சத்தம் கேட்டதுமே தலைமுடியை வாரிச் சுற்றி முடிச்சிட்டுக் கொண்டு அறைக் கதவைத் திறந்து கொண்டு வாயு வேகத்தில் விரைந்து வாயிற் கதவைத் திறந்தாள்.

அம்மாவின் முகத்தில் தெரிந்த அனலைக் கண்டு கோதண்டராமன் அதிர்ந்து போனான்.

# 10

"ரம்யா! இப்படி வந்து நில்லு. உள்ளே போய் நீ ஒளிஞ்சுக்கிறதுக்குள்ளே நான் உன்னை ஒண்ணு கேட்கணும்." கௌரி போட்ட சத்தத்தில் அரைத் தூக்கத்தில் புரண்டு கொண்டிருந்த சபேசன் எழுந்து முன்னறைப் பக்கம் வந்து விட்டார்.

தோட்டத்திற்குள் கார் நுழையும் சப்தம் கேட்டதுமே மாலதி விழித்துக் கொண்டு ஜன்னல் வழியே பார்த்து விட்டாள். அம்மா பெருத்த ஆவேசம் எடுக்கப் போகிறாள் என்பதை வேடிக்கை பார்க்க அவள் மெல்ல மாடியிலிருந்து இறங்கி வந்தாள்.

வீட்டிலே நடக்கப்போகும் யுத்தத்தை ஆவலுடன் எதிர் பார்த்துத் தொலைக்காட்சிப் பெட்டியை டபக்கென்று மூடினான் மித்திரன்.

பரக்கப் பரக்க விழித்துக் கொண்டு முன்னறைக்குள் வந்து நின்றாள் ரம்யா.

அம்மாவின் திடீர் தாக்குதலை எதிர்பார்த்துக் கொண்டே உள்ளே வந்த கோதண்டம், மனைவிக்குத் துணையாக அருகில் வந்து நின்று கொண்டான்.

"உன் நகைகள் அத்தனையையும் உன் சித்திக்குப் போட்டு உன் அப்பா ரிஸப்ஷனில் அவளை மினுக்க விட்டிருப்பதன் அர்த்தமென்ன?" ஆவேசமாகக் கத்தினாள் கௌரி.

"கல்யாணத்துக்கு அவசரமாக நகைகள் செய்ய நேரம் இல்லை. என்னுடையதுகளை எடுத்து உபயோகித்துக் கொண்டிருக்கிறார்..." கிணற்றுக்குள்ளிருந்து பேசுவது போல ரம்யாவின் குரல் தீனமாகியது.

"ஊரார் மெச்ச இரவல் நகைகள் போட்டு ரிஸப்ஷன் கொண்டாட்டமா? உங்கப்பாவுக்கு வெட்கமில்லை? என்ன



துணிச்சலில் உன் நகைகளை எடுத்துப் போட்டாராம்? யாரைக் கேட்டுக் கொண்டு இந்தக் காரியத்தைச் செய்தாராம்?"

"இதில் என்னம்மா தப்பு? வந்ததும் வராததுமா இப்படி ஏன் கோவிச்சுக்கிறே?" மகன் சாவதானமாகக் கேட்டான்.

"மாலதியைப் பெண் பார்க்க வரப் போறாங்கன்னு நகைகளை எடுத்து வரச் சொன்னப்போ, இரவல் நகையெல்லாம் போடக்கூடாதுன்னு நியாயம் பேசினியே! இப்போ உன் மாமனார் என்ன செய்திருக்கார்? எனக்கு ஒரு நியாயம், அவருக்கு வேறே ஒரு நியாயமா?" அம்மா மகனைப் பார்த்து ஆத்திரத்துடன் கூச்சலிட்டாள்.

"தப்பெடுத்துத் தாடையிலே போடணும்னு நாங்க வரவரை தூங்காமல் காத்துக் கொண்டிருந்தாயா? நாளைக்கு இதைப்பத்திப் பேசலாமா? எனக்குரொம்பக் களைப்பா இருக்கு" என்றான் கோதண்டம்.

"போய் அவங்க ரெண்டு பேரும் தூங்கட்டும். நாளைக்கு அந்தக் குழந்தை விடிகார்த்தாலே எழுந்து வீட்டு வேலைகளையெல்லாம் கவனிக்கணும். இந்தச் சாதாரண சங்கதியை ஏன் பெரிசு பண்றே? அக்கம் பக்கத்தார் காதிலே பட்டா அசிங்கம்." சபேசன் கொஞ்சம் துணிவுடன் பேசி விட்டார்.

அவ்வளவுதான் கௌரியின் படபடப்பும் கோபமும் கட்டுக்கடங்காமல் போய்விட்டன. "நீங்க இதில் தலையிடத் தேவையில்லை. உங்களுக்குச் சம்பந்தி மனுஷன் தெய்வத்துக்குச் சமம். அவரை வலம் வந்து விழுந்து கும்பிடுங்க. எனக்கு அந்த மனுஷன் ஒரு தூசிக்குச் சமம். தெரிஞ்சுக்குங்க. பணத் திமிர் பிடிச்சவன். எது வேணாலும் செய்யலாம்னு கர்வம். நான் இதைச் சும்மா விடப்போவதில்லை."

"இப்போ என்ன தலை போயிட்டது? இப்படி இரைச்சல் போடறே?"

''நம்மை உன் மாமனார் எத்தனை அசட்டை பண்ணி யிருந்தால் இந்தக் காரியத்தைச் செய்வார்? ஒரு வார்த்தை நம்பகிட்டே கேட்டாரா? தன் லாக்கரில் வச்சிருக்கிறோம் என்கிற அகம்பாவம்தானே? ரிஸப்ஷனுக்கு வரவங்க பார்த்தால் மதிப்பாய் இருக்கணும் என்கிறதுக்காக என்னை ஒரு வார்த்தை உத்திரவு கேட்கலை - உன்னைக் கேட்கலை. ரம்யாவைக் கேட்டாரா?'' கூச்சலிட்டாள்.

''என்னைக் கேட்கலை. ஆனால் அதை நான் பெரிய தப்பாய் எடுத்துக்கலை அம்மா! சித்திக்கு நகைகள் செய்து போட அப்பாவுக்கு நேரம் கிடைக்கவில்லை. அதனாலே ரிஸப்ஷன்போது போட்டுக்கச் சொல்லிக் கொடுத் திருக்கார்.''

''கல்யாணம் பண்ணிக்க ஏற்பாடுகளைச் செய்ய நேர மிருந்தது. வரப்போறவளுக்கு நகை பண்ணித்தர நேரம் இல்லை. நான் இதை நம்பப் போவதில்லை. மனுஷன் வெளிக்குத்தான் பணக்கார வேஷம் போடறார். உள்ளே போண்டி போல இருக்கு.''

''அம்மா, கொஞ்சம் மெதுவாகப் பேசறயா? எனக்குத் தலைவலிக்கிறது'' பெரிய மகன் சீறினான்.

''கேட்கப் பிடிக்காட்டா நீ போய்த் தூங்கு. முழு விவரத்தையும் எனக்கு ரம்யாகிட்டே கேட்டாகணும்.''

''சரியம்மா, உன் இஷ்டம். இந்தச் சங்கதியை வீணா பெரிசு பண்றே. எனக்கு இது பெரிய தப்பாவே தெரியலை.''

''மாமனாருக்கு ஜால்ரா போடற மாப்பிள்ளை நீ. அவர் கல்யாணம் பண்ணிக்கொண்டதும் உனக்குத் தப்பாப் படலை. பெண்ணுக்குச் சீராய்க் கொடுத்த நகைகளை அள்ளி இளையாளுக்குப் போட்டு அழகு பார்க்கிறதும் தப்பாத் தெரியலை. போடி நீ போய்ப் படுத்துத் தூங்கு. ரம்யா நகைகள் நம்ப வீட்டுக்கு வரப்போறதில்லை'' உறுமி



விட்டுத் தன் மற்ற இரு குழந்தைகளையும் கோபத்துடன் பார்த்தாள். ''போங்க மாடிக்கு. இங்கே என்ன வேடிக்கை?'' என்று அதட்டினாள். ''உள்ளுக்கும் நடைக்கும் நீங்க ஏன் நடக்கறீங்க? போய்ப் படுங்க. நான் ரம்யாகிட்டே தனியாக் கொஞ்சம் பேசணும்'' உத்தரவிட்டாள் கணவனுக்கு.

பக்கத்தில் துணையாக யாருமில்லாதபோது வசமாகத் தன் மாமியாரிடம் மாட்டிக்கொண்டு விட்டதொரு பயங்கர உணர்வில் ரம்யா ஒடுங்கிக் கொண்டு நின்றாள். அப்பா அவளிடம் ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம். அவள் இரவல் கொடுக்க மறுத்திருக்க மாட்டாள். ஆனால் அவர் ஏன் கேட்க வில்லை? விவரிக்க முடியாத குழப்பத்தில் காத்துக் கொண்டு நின்றாள்.

''நாளைக்கு நீ ஒரு காரியம் செய்யணும். தெரிஞ்சுதா?'' மாமியார் அதட்டியபோது தலையை ஆட்டினாள் ரம்யா.

யாரையும் எதிர்த்துப் பேசத் தெரியாத ஓர் அப்பாவித் தனம் அவளுடன் கூடப் பிறந்தது. ரிஸப்ஷன்போது சித்தி ரேவதி தன் நகைகளைப் போட்டு மினுக்கிக் கொண்டு வந்ததைக் கண்டு அவளும் அதிர்ந்து போனாள். அவளைக் கேட்காமல் அப்பா அவைகளை ரேவதியிடம் கொடுத்தி ருந்தது பற்றி மனம் வெகுவாக உறுத்தியது.

தனக்குள் ஏற்பட்ட கவலையைக் கணவனிடம் சொல்லக்கூட அவளுக்கு அச்சமாக இருந்தது.

'அப்பா, என் நகைகளைச் சித்திக்கு இரவல் கொடுத் திருக்கிறீர்களே, என் புக்ககத்தார் பார்த்தால் கோபிப்பார் களே' என்று கேட்க நேரம் இருக்கவில்லை.

ஒட்டல் ஹாலுக்குள் மாமியார் நுழைவதைக் கண்டதுமே அவளுக்கு அஸ்தியில் ஜுரம் வந்து விட்டது.

கட்டாயம் அந்த நகைகள் ஒரு பூதாகாரமான பிரச்சினை யைத் துவக்கப் போகிறது என்று அவள் உணர்ந்து

கொண்டாள். கணவனிடம் பேசி தன் கவலைகளைப் போக்கிக் கொள்ளலாம் என்றாலோ அதுவும் பயமாக இருந்தது.

'உங்கப்பாவுக்கு என்ன துணிச்சல்! ஏன் இது மாதிரி நடந்து கொள்கிறார்?' என்று வந்த இடத்தில் அவன் கோபிக்க ஆரம்பித்தால்...

ரிஸப்ஷன்போது அவளுக்கு நெஞ்சுவரை அழமாட்டாத துக்கம். இந்தப் பக்கம் அந்தப் பக்கம் திரும்பாமல் லாடம் கட்டிய குதிரைபோல அவள் அசட்டுச் சிரிப்புடன் வந்தவர்களை வரவேற்றுக் கொண்டிருந்தாள்.

''நீ காத்தால எழுந்ததும் சீக்கிரம் குளிச்சிட்டுக் காப்பியை மட்டும் கவனிச்சால்போதும்,'' மௌனமாக மருமகள் தலையை அசைப்பது கௌரிக்கு மிக்க எரிச்சலாக இருந்தது.

''நாளைக்கு உன் அப்பா வீட்டிலே தானே இருப்பார்?''

''அப்பாவும் சித்தியும் சாயங்காலம் விமானத்திலே டெல்லி போகப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தாங்க. திருப்பி வரப் பத்து நாள் ஆகுமாம்.''

''அடி சக்கை! ஹனிமூனுக்குக் கிளம்பறாரா மனுஷன்...? அவர் போறதுக்கு முன்னாடி நீ உன் பிறந்த வீட்டுக்குப் போய் உன் சித்தி போட்டுக் கொண்டிருந்த உன் நகைகளை எல்லாம் வாங்கிக்கொண்டு வீடு வந்து சேரணும், தெரிஞ்சுதா?''

ரம்யா தலையை ஆட்டினாள்.

''எல்லாத்துக்கும் பெருமாள் மாடாட்டமாய்த் தலையை ஆட்டித் தொலைக்காதே! காரியத்திலே கண்ணா இரு. சமத்து தொட்ட கையாலே பிரமன் உன்னைக் கொஞ்சங் கூடத் தொடலை. என் தலை எழுத்து.'' பற்களைக் கடித்துக் கொண்டு தன் அறைக்குள் சென்று கதவைப் படாரென்று சாத்திக் கொண்டாள் கௌரி.



# 11

மறுநாள் காலை வேலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த கோதண்டம், கூடவே மனைவியும் தன்னுடன் வரக் காத்திருப்பதைக் கண்டு வியப்படைந்தான்.

''போகும் வழியிலே உன் மாமனார் வீட்டிலே கொண்டு இவளை இறக்கிட்டுப் போ. திரும்ப அவர் தம் காரில் நகைப் பெட்டியோட அனுப்பட்டும். புரிஞ்சுதா?'' கௌரி மகனுக்கு உத்தரவிட்டாள்.

''விடிஞ்சதும் விடியாததுமாய் போய் நின்னால் நன்றாய் இருக்குமா அம்மா?''

''அவர் செய்த காரியம் நன்றாய் இருக்கறப்போ, நாம் செய்கிற காரியம் ஒண்ணும் தப்பில்லை.''

கோதண்டத்துக்குத் தலைமேல் பல வேலைகள் இருந்தன. அடுத்தபடியாக அவன் செய்ய வேண்டிய சுற்றுப் பயணங்களைப் பற்றி டைரக்டரிடம் பேசித் தீர்மானித்து, எடுத்துப் போகவேண்டிய பைல்களை ஒழுங்காகச் சேகரித்துக் கொண்டு, பயணத்திற்கு வேண்டிய சங்கதிகளை கவனித்து... தலையில் பல விஷயங்கள் அமுக்கிக் கொண்டிருந்தன.

அம்மாவிடம் விவாதிக்காமல் மனைவியைத் தன் மாமனார் வீட்டு வாசலில் இறக்கி விட்டு விட்டுப் போய் விட்டான்.

தன்னுடைய பிறந்த வீட்டுக்குள் ரம்யா ஓர் அன்னிய மனுஷியைப் போல பயத்துடன்தான் நுழைந்தாள். இனி அந்த வீட்டுக்குச் சித்தி ரேவதிதானே எஜமானி என்ற உண்மை அவளுக்கு அச்சத்தைத் தந்தது.

வரவேற்பறையைத் தாண்டி மெள்ளச் சாப்பாட்டறைப் பக்கம் வந்தபோது அப்பா தம் புது மனைவியுடன் காலை டிபன் சாப்பிட்டுக் கொண்டு குஷியாகப் பேசிச் சிரித்துக்

கொண்டிருந்தார். சமையற்கார ராமு உற்சாகமாக அவர்களை உபசரித்தபடி ஓடிக் கொண்டிருந்தான்.

''வாம்மா, வா! எங்களோட உட்கார்ந்து சாப்பிடு. என்ன இந்தக் காலையிலே?'' என்று அப்பா மலர்ந்த முகத்துடன் வரவேற்றார். குற்ற உணர்வில் தவித்தபடி அப்பாவின் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

சித்தி ரேவதியின் கழுத்தில் இப்போது அவளுடைய நெக்லஸ் தொங்கிக் கொண்டிருந்தது. மற்ற நகைகளை எல்லாம் கழற்றி பீரோவில் வைத்திருக்கிறாள் போலிருக்கிறது. ராமு கொண்டு வந்து வைத்த காப்பியைச் சாப்பிட்டாள்.

''முறுக்கலாய்த் தோசை வார்த்துப் போடறான் ராமு. ஒண்ணு எடுத்துக்கோயேன் அம்மா'' அப்பா உபசரித்த போது அவள் தலையை ஆட்டினாள்.

''நாங்க இன்னிக்குச் சாயங்காலம் டெல்லி போவதாக இருந்ததை ரத்து செஞ்சுட்டோம். உன் சித்திக்கு ரொம்பக் களைப்பா இருக்காம். நாளைக் காலை ஃப்ளைட்டில்தான் போகப் போறோம். நீ இருந்து சாப்பிட்டு விட்டுப் போகலாம். அவசரப்படாதே,'' அப்பா மிகவும் பிரியமாகப் பேசினார்.

சித்தி ரேவதி புன்னகைத்தாள். ''எனக்கு இந்த வீடு ரொம்ப புதுசா இருக்கு. என்னோட கொஞ்சம் இருந்துட்டு நீ போகலாம். உன் மாமியாருக்கு வேணுமானால் போன் செய்,'' கொஞ்சிக் குழைந்தாள்.

அப்பா எழுந்திருந்து கைகளைக் கழுவிக் கொண்டு வாயைத் துண்டால் துடைத்துக் கொள்வதைக் கண்டதும் வேகமாக அவரை நெருங்கினாள் ரம்யா.

''உங்ககிட்டே ஒரு நிமிஷம் தனியாப் பேச வந்திருக்கேன் அப்பா'' சொல்லி முடிப்பதற்குள் நெஞ்சு இரண்டாகி விடும் போலப் படபடத்தது.



''வா, முன்னால் போய் உட்கார்ந்துகொண்டு பேசுவோம்'' அப்பா வரவேற்பறை சோபாவில் சாய்ந்து கொண்டார்.

''என் மாமியார், என் நகைகளை எடுத்துக் கொண்டு வரும்படி அனுப்பியிருக்கார் அப்பா. அதனால்தான் அவசரமா வந்திருக்கேன்.'' சொன்னபடி எதிரே கிடந்த தொரு நாற்காலியில் பட்டும் படாமலும் உட்கார்ந்தாள்.

அப்பாவும் பெண்ணும் ஏதோ தாழ்ந்த குரலில் பேசுவதைக் கண்டு ரேவதி ஒதுங்கிக் கொண்டு உள்ளே போய் விட்டாள்.

''இந்த நகைகளை நான் உன் சித்திக்குப் பரிசாகக் கொடுத்து விட்டேன் அம்மா. திருப்பிக் கேட்கிறது நன்றாயிருக்காது.''

''அப்பா!'' திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள். அவளது நாக்கு வறண்டு போயிற்று.

''இதுகள் உன் நகைகள்தான், ஒத்துக்கிறேன். என் வயசைப் பொருட்படுத்தாமல்,என்னைக் கல்யாணம் செய்து கொண்டு எனக்கு வாழ்க்கைத் துணையாக இருக்க வந்திருக்கிறாள் ரேவதி. அதுக்கு நான் ஈடு செய்ய வேணுமா இல்லையா? என்கிட்டே இருந்த முதல் முக்கால் வாசியும் போட்டு உன்னை நல்லபடியாகக் கல்யாணம் செய்து கொடுத்தேன். உன் கல்யாணத்தின்போது உன் அம்மா நகைகள் சிலதான் இருந்தன. பெரிய உருப்படிகளை வித்து நான் தாம்பரத்திலொரு பெரிய பூமி வாங்கிப் போட்டேன். உனக்கு அதெல்லாம் பத்தித் தெரிய நியாயமில்லை. உன் கல்யாணம் கூடினபோது உன் மாமியாரைத் திருப்திப்படுத்த விலையுயர்ந்த நகைகளை உனக்கு வாங்கிப் போட்டேன். ரேவதியைத் திருப்திப்படுத்த அதுபோல வாங்கிப் போடக் கையில் பணமில்லை. அதனால் உன்னுடையதை எடுத்து அவளுக்குப் போட்டு விட்டேன். அவைகளைத் திருப்பித் தரச்சொல்லி அவளை நான் மோசம் பண்ண மாட்டேன்.

தாம்பரம் பிராப்பர்ட்டியை நல்ல விலை கிடைச்சதும் விக்கப் போகிறேன். அப்போ உனக்கு ஒரு செட் நகைகள் வாங்கிப் போட்டு ஈடு செய்துடறேன்.''

கண்களில் புரண்ட கண்ணீரைச்சமாளித்துக் கொண்டாள் ரம்யா. ''சரியப்பா, உங்கள் இஷ்டப்படியே செய்யுங்கள். என் மாமியார்தான் கொஞ்சம் மனத்தாங்கல்படுவார்.''

''நீ கவலைப்படாதே. கோதண்டம் நல்ல பையன். நிலைமையை எடுத்துச் சொன்னால் ஒத்துக்குவான்.''

உடனே வீட்டுக்குத் திரும்ப ரம்யாவுக்கு அச்சமாக இருந்தது. வெறுங்கையுடன் திரும்பினால் மாமியார் இரைவாள் என்ற பயம். ''நான் சாயங்காலம் வரை இங்கேயே இருந்துட்டுப் போக ஆசைப்படறேன் அப்பா.''

''இதென்ன அசட்டுக் கேள்வி! இது உன் வீடு. இங்கே நீ எப்போ வேணுமானாலும் வந்து தங்கலாம். எத்தனை நாள் வேணுமானாலும் தங்கலாம். நாளைக்குத்தானே நாங்க டெல்லிக்குப் போகப் போறோம்? எங்களோட இருந்து சாப்பிட்டுட்டு, சாயங்காலமா நீ போகலாம். நேத்திக்கு நீ ரொம்ப வேலை செஞ்சிருக்கே. களைப்பா இருக்கும். போய் ரெஸ்ட் எடுத்துக்கோ. நான் ஆபீஸ் போய்ட்டுச் சீக்கிரம் திரும்பிடுவேன். பொழுது போகாட்டா சித்தியோட பேசிட்டிரு.''

அருகில் வந்து உட்கார்ந்த ரேவதியுடன் அவள் பேச மனம் ஒன்றவில்லை. அப்பா தமக்குத் துணை வேண்டுமென்று ஒரு சின்னப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு விட்டிருக்கிறார் என்பதைப் பற்றி அவள் இப்போது கவலைப்படவில்லை. அவளது நகைகளை எடுத்து அந்தப் பெண்ணுக்குப் பரிசாகத் தந்து விட்டிருக்கிறாரே! அது அநியாயமல்லவா? ஒரு சமயம் அப்பாவால் நகைகள் வாங்கிப் போட்டு ஈடு செய்ய முடியாமல் போனால்...

அவளுக்கு அழுகை நெஞ்சை அடைத்தது. ''எனக்கு ரொம்பக் களைப்பா இருக்கு. மன்னிச்சுக்குங்க'' என்று



மழுப்பி விட்டு, தான் வழக்கமாக உபயோகிக்கும் அறைக்குள் சென்று படுக்கை மீது சாய்ந்து கொண்டாள்.

அப்பாவிடம் இனி வற்புறுத்தலாக எதுவும் பேச முடியாது. மாமியாரிடம் என்ன பதில் சொல்வது? தாங்க முடியாத குழப்பத்தில் வேதனையால் தவித்துப்போய் அவள் வெகு நேரம் விசும்பி அழுது கொண்டிருந்தாள்.

பொழுது அமிழ்ந்து சாலை விளக்குகள் பளிச்சிட ஆரம்பித்தபோதுதான் அவள் வீட்டுக்குத் திரும்பினாள்.

வழக்கம்போல அப்பா அவளைக் கூடை நிறைய ஆப்பிள் ஆரஞ்சுப் பழங்களும் அட்டைப் பெட்டி நிறைய மிட்டாய் வகைகளுமாக அனுப்பி வைத்தார்.

அவளுக்கு முன் வீட்டுக்கு வந்து விட்டிருந்தான் கோதண்டம். குளித்து விட்டு லுங்கி- பனியனில் முன்னறையில் காலைப் பத்திரிகையை மேலெழுந்தவாரியாகப் புரட்டிக் கொண்டிருந்தான்.

வாசல் பக்கம் பல தடவை எட்டிப் பார்த்து அலுத்துப் போய் விட்டிருந்தாள் கௌரி. அவளுக்குத் தானே சம்பந்தி வீட்டிற்குப் போன் செய்து விசாரிக்க மனமிருக்கவில்லை. ரம்யா தானாகத் தொலைபேசியில் அழைத்துப் பேசுவாள் என எதிர்பார்த்து ஏமாந்து விட்டிருந்தாள்.

டிரைவர் பழங்கூடையையும், மிட்டாய்ப் பெட்டியையும் கொண்டு வந்து நடையில் வைத்தபோது அவள் முகத்தை வளைத்துக் கொண்டாள். ''இதுக்கொண்ணும் குறைச்சலில்லை'' என்றபடி அவைகளை அசட்டையாகத் தூக்கிக் கொண்டு போய்ச் சாமான் அறைக்குள் வைத்தாள்.

காரின் கதவைத் தாண்டி உள்ளே வந்து நின்ற ரம்யாவைத் திகைப்புடன் பார்த்தாள்.

''நகைப் பெட்டியைக் கூடவா டிரைவர் எடுத்துக் கொண்டு வரணும்? நீயே எடுத்துக் கொண்டு வரத்துக்

கென்ன?'' மாமியார் அதட்டியபோது ரம்யா நடுக்கத்துடன் விழித்தாள்.

வாயிலில் நின்ற கார் வேகமாகத் தோட்டத்தைத் தாண்டிச் சாலைக்குள் வழுக்கிக் கொண்டு மறைவதைக் காண பிரமித்துப் போனாள் கௌரி.

''அப்பா என் நகைகளை அவசரத்தை முன்னிட்டுச் சித்திக்குக் கல்யாணப் பரிசாகப் போட்டு விட்டாராம். பின்னால அதைப் போல ஒரு செட் செய்து எனக்குத் தந்துடறதாகச் சொல்லியிருக்கார். அதனாலே...''

''அடிப்பாவிப் பெண்ணே. வெறுங்கையோட வந்து நிக்கறியே! இந்தப் பழத்துக்கும் மிட்டாய்க்குமா உன்னைக் காலங்கார்த்தாலே அனுப்பிவச்சேன்? உன் நகைகளை அவர் எப்படி எடுத்துத் தன் இளையாளுக்குப் பரிசாகக் கொடுக்க முடியும்? கோதண்டம், இங்கே வா'' என்று அலறினாள் கௌரி.

அவள் போட்ட சத்தத்தைக் கேட்டு எல்லோரும் முன்னறைக்கு ஓடி வந்து விட்டனர்.

''உன் பெண்டாட்டி செய்திருக்கும் காரியத்தைப் பார்த்தியா? தன் நகைகளை எடுத்துக் கொண்டு உடனே வீடு திரும்பச் சொல்லி நான் அனுப்பினதுக்கு... புது சித்தியோட சாப்பிட்டு உறவு கொண்டாடி விட்டு வெறுங்கையோட திரும்பி வந்திருக்காள். சம்பந்தி மனுஷன் இவள் நகைகளை எடுத்துத் தன் இளையாளுக்குப் பரிசாகக் கொடுத்துட்டா ராம். அவர் எப்படிச் செய்ய முடியும்? கேட்பார் கிடையாது என்கிற திமிரா? பெரிய ஏமாத்துப் பேர்வழின்னு எனக்கு முன்னமே தெரியும். தன் பாங்க் லாக்கரில் வச்சுப் பூட்டிக் கொண்டு, அப்புறம் ஆகட்டும்னு தட்டிக் கழிச்சப்பவே இதில் ஏதோ சூது இருக்குன்னு நினைச்சேன். சரியாப் போச்சு...'' கத்தினாள் உரத்த குரலில் கௌரி.

''என் அப்பா ஏமாத்த மாட்டார் அம்மா. கையிலே பணம் வந்ததும் முன்னால் போட்ட அத்தனை நகைகளையும் புதுசா வாங்கிக் கொடுத்திடறேன்னு வாக்குக் கொடுத் திருக்கார்.''



''அவர் கொடுத்த வாக்கைக் குப்பைத் தொட்டியில் கொண்டு போடு. பெரிய தகடுதத்தன் உங்கப்பா. இனி மேலே நான் நம்புவேனா? எனக்குத் தெரியாது. நீ என்ன செய்வியோ! இந்த நிமிஷம் உன் நகைகள் இங்கே வந்தாகணும்.''

அது எப்படி முடியும். அப்பாதான் முடிவாய்ச் சொல்லிட்டாரே?'' துக்கம் தாங்க முடியாமல் விசித்து அழுதாள் ரம்யா.

கோதண்டம் சட்டென்று தன் மனைவி அருகில் வந்தான். ''அழாதே. என்ன நடந்ததுன்னு விவரமாச் சொல்லு. அம்மா மனம் திருப்தியடைஞ்சுடுவாங்க.''

''அவசரத்துக்கு நான் உன்னைக் கேட்காம உன் நகைகளை எடுத்து உபயோகித்தது உண்மை. உன் சித்திக்கு அவைகளைப் பரிசாய்க் கொடுத்திட்டேன். திருப்பிக் கேட்க முடியாது. என் கையில் தாராளமாய் பணம் இல்லாததுதான் காரணம். உன்னை ஒரு நல்ல பையனுக்குக் கல்யாணம் செய்து கொடுக்க வரதட்சணை, வீடு, கார் நகைன்னு வாரிக் கொடுத்தேன். எதுக்கு? உனக்கு ஒரு நல்ல வாழ்வு அமையணும்னுதானே? அது போல இளமையான ஒரு பெண் என்னைக் கல்யாணம் பண்ணிக்க, என் வாழ்கையைச் சீராக்க முன் வந்திருக்காளேன்னு அனுதாபப்பட்டு அவளுக்கு அந்த நகைகளைப் பரிசாய்க் கொடுத்து அவளைச் சந்தோஷப்படுத்த முயன்றேன். அவ்வளவுதான். எனக்காக நீ கொஞ்சம் பொறு. ஒரு சின்ன அட்ஜெஸ்ட்மெண்ட் பண்ணிக்கோ. அப்படின்னு அப்பா கெஞ்சி கேட்டப்போ நான் என்ன பதில் சொல்லுவேன்? யோசிச்சுப் பாருங்க. அப்பா பாவம்... இனியாவது வாழ்க்கையில சுகப்பட ணும்னு நினைச்சு, அவர் சொன்னதை கேட்டு ஒப்புக் கொண்டு திரும்பிட்டேன். என்னை வாழ வைக்க அவர்

ரொம்பப் பாடுபட்டார். இப்போ அவரை வாழ வைக்க நான் ஒரு சின்ன தியாகம் பண்ணினதாக நினைச்சுக் கொண்டேன்.'' விம்மலும் விசும்பலுமாக முடித்தாள்.

''இந்த அழுகை, இந்த ஜாலம், இந்த நாடகப் பேச்சு இதெல்லாம் இங்கே ஒண்ணும் செல்லுபடியாகாது. போ இப்பவே. உடனே உன் அப்பன் வீட்டுக்குப் போய் அந்த நகைகளை உடனே வாங்கிட்டு வா. தர மறுத்தால் கேஸ் போட்டு மானத்தை வாங்குவேன்னு சொல்லு. அதுகள் உன் சொத்து. அதை எடுத்து இளையாளுக்குப்போட அவருக்கு உரிமை கிடையாது. இந்தச்சங்கதியைப் பேப்பரில் போட்டு மானத்தை வாங்கிடுவேன்னு சொல்.''

''எங்கப்பாகிட்டே எப்படி அம்மா இந்த மாதிரிப் பேச முடியும்? அவர் ஒரு தடவை சொன்னால் சொன்னதுதான்.''

''நானும் அவரைவிட ரொம்பப் பிடிவாதக்காரி. இங்கே அழுது ஆகாத்தியம் பண்ணிக்கொண்டு நிக்கறதிலே பிரயோஜனம் இல்லே. போ, இப்பவே போ... நகை களோட வந்தா வீட்டுக்குள்ளே கால் வைக்கலாம். இல்லாட்டா உன் பிறந்த வீட்டிலேயே இரு. போடின்னா ஈச நாட்டுக்கள்ளிபோல முழிச்சுட்டு நிக்கறே! போ வெளியே போ.'' என்று ஆவேசம் வந்தவளாகக் கத்திய கௌரி, ரம்யாவின் கரத்தைப் பற்றித் தரதரவென்று இழுத்து கதவைத் திறந்து வராண்டாவில் தள்ளி விட்டாள்.

''ஐயோ, அம்மா...'' என்று கிரீச்சிட்டு அலறித்துடித்தாள் ரம்யா.

கோதண்டம் தன் தாயை அப்பால் ஒதுக்கி நகர்த்தி விட்டு வராந்தாவிற்குள்ளே தாவலாக வந்தான். தரை மீது சரிந்து கிடந்த மனைவியைத் தூக்கி நிறுத்தினான். அவளது கண்ணீரைத் தன் மேல் துண்டால் துடைத்து விட்டான்.

''ரம்யா, நீ உள்ளே போ. நான் சொல்கிறேன் போ'' என்று கர்ஜித்தான்.



''என்னடா திடீர்னு அவளுக்குப் பரிஞ்சு கொண்டு... அப்பாவோட சேர்ந்து நாடகம் போடறாள் அவள்.''

''அம்மா, யாரையும் எதிர்த்துப் பேசத் தெரியாத ஏமாளி அவள்னுட்டு நீ இப்படி இரக்கமில்லாமல் அவளை வெளியே துரத்தறியே, இந்த வீடு அவளுடையது. அதிலே வந்து வசதியாத் தங்கிட்டு அவளையே வெளியே விரட்ட ணும்னா உங்களுக்கு ரொம்பவே துணிச்சல்தான். எல்லாரும் ஒண்ணு கேட்டுக்குங்க. நான் இதை மறுபடி திருப்பிச் சொல்லப்போவதில்லை. என் மாமனார் ஒரு தவறு செய்துட்டார். என்கிட்டே முன்னதாகச் சொல்லியிருக்க லாம். போகட்டும். அதனுடைய லாப நஷ்டங்கள் என்னையும் ரம்யாவையும்தான் பாதிக்குமே தவிர, உங்க யாருக்கும் இதனால் நஷ்டம் ஏதும் கிடையாது. ரம்யா பெரிய இடத்துப் பெண்தான். ஆனால், அதைப்பத்தி என்னிக்காவது கர்வப்பட்டிருக்காளா? தன் வீட்டு அந்தஸ்து திமிரை நம்ப யார்கிட்டேயும் காட்டியிருக்காளா? யாரையாவது அவமதிச்சிருக்காளா? அவங்க வீட்டிலே தொட்ட சொம்பை இந்தப் பக்கம் நகர்த்தி வைச்சுப் பழக்க மில்லாமல் சொகுசா வளர்ந்தவள்.

நம்ப வீட்டிலே வந்து மாடுபோல உழைக்கிறாள். இதையாவது நினைச்சுப் பார்த்தியா அம்மா? ஆரம்பத்திலே நீங்க பணத்துக்கும் இந்தப் பங்களாவுக்கும் ஆசைப்பட்டு இவளைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி நிர்ப்பந்தப் படுத்தினீங்க. அப்போ நான் உங்களை வசதியாய் வாழ வைக்க என்னை வித்துக்கிறது ஒரு கடமைன்னு நினைச் சேன். இப்போ என்னையே நம்பி வந்திருக்கிற இவளைச் சந்தோஷமா வச்சுக்கிறது என் கடமைன்னு நினைக்கிறேன். ரம்யா என் மனைவி. இந்த வீட்டுக் கொத்தடிமை இல்லை. புரிஞ்சுக்குங்க. என் மாமனார் வசதி குறைஞ்சு போய் அந்த நகைகளைத் திருப்பிப் போடாட்டி அக்கறை இல்லை. ஒரு நல்ல குணமான பெண்ணை எனக்குக் கொடுத்தாரே,

அதுவே போதும். இந்த நகைகள் இல்லாட்டா போகட்டும். அவள் புன்னகையோட இங்கே என்னோடு வாழ்ந்தால் போதும்...''

படபடவென்று பெரிய மகன் பேசியதைக் கேட்டு வாயடைத்து நின்றாள் கௌரி.

''என்ன சொல்லிட்டேன்னு இப்படிக் கத்தறே?'' கௌரி மெல்லிய குரலில் மிரட்சியுடன் கேட்டாள்.

''சொன்னதெல்லாம் கேட்டுக்கொண்டு தானே நின்னீங்க. என் மனைவியைப் பாசமும் அன்புமா நடத்தி எங்களோடு இருங்கள். இல்லாட்டா, தனிக்குடித்தனம் கிளம்பிடுங்க. மாதச் செலவுக்குப் பணம் நான் தந்துடறேன். ரம்யா கண்ணிலிருந்து இனி ஒரு பொட்டுக் கண்ணீர் வந்தாலும் நான் பொல்லாதவனா இருப்பேன் புரிஞ்சுதா?'' என்றான்.

திக் பிரமையுடன் அவர்கள் நால்வரும் நின்றனர்.

''ரம்யா, உள்ளே போய் உட்கார்ந்து கொள். நான் கொஞ்சம் சூடாய்ப் பால் எடுத்துக் கொண்டு வந்துதரேன். குடிச்சுட்டுத் தூங்கும்மா'' என்று கனிவுடன் கூறியபடி தன் மனைவியை அணைத்துக் கொண்டு மகன் உள்ளே செல்வதைக் கண்டாள் கௌரி.

அவளது ஆர்ப்பாட்டங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது என்பதை அவர்கள் அனைவரும் அந்த நிமிடமே உணர அயர்ந்து போய் நின்றனர்.

●

# அழகின் ஆராதனை

மாலை நேரத்துக் கதிரவன் மணலில் விளையாடிக் கொண்டிருந்தான். கடற்கரைக் காற்றின் தண்மையில் தம்மை மறந்து காலாற மணலில் புதைய புதைய நடை பயின்றனர் பலர். ஆங்காங்கே சிறுசிறு கூட்டங்களாக அரட்டைக் கச்சேரியும் கூடி இருந்தன. மாலை நிறத்து மஞ்சள் வெயிலில் மினுமினுப்போடு நடந்த இளம் யுவதிகளை, சிறிது அலட்சியம், சிறிது கவர்ச்சி, சிறிது அதிசயத்துடன் ரசித்துக் கொண்டிருந்த இளைஞர்களும் இருந்தனர். மணலைக் கண்டதும் வாரி இறைத்து உற்சாகமாக கூவியபடி விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள்... வயதானவர்கள்... எனப் பல்வேறு மக்கள் அலைகளுடன் போட்டியிட்டபடி, அங்கு மோதிக் கொண்டிருந்தனர்.

காமேசன் கடல் அலைகளை வெறித்தபடி அமர்ந்திருந்தான். அவனால் எதையுமே ரசிக்க முடியவில்லை. மஞ்சள் நிறவெய்யில், தங்க நிற மணல், நீலவானத்தைத் தொட முயன்ற அலை வரிசைகள்... ஊஹும் உள்ளம்தான் அலை மோதுகிறதே!

கையிலிருந்த கடிதத்தை ஒருமுறை உற்றுப் பார்த்தான். ஊரிலிருந்து அம்மா

எழுதியிருந்தாள். ''சுகந்திக்கு தலை தீபாவளி வருகிறது. நினைப்பில் இருக்கும் என்று நம்புகிறேன்.''

சுகந்திக்குத் தீபாவளி கொண்டாட கணிசமாக ஒரு தொகை தேவை. அதை அனுப்பி வைக்கவும் என்ற பொருளை அவனால் ஊகிக்க முடிந்தது. அலுவலகத்து முகவரிக்கே 'டாண்' என்று வந்து விட்ட கடிதம். அவனது பிரம்மச்சாரி குடியிருப்புக்கு அம்மா கடிதம் எழுத மாட்டாள். அத்தனை அவ நம்பிக்கை. நான்கைந்து பிரம்மச்சாரிகள் குடி இருக்கும் அறை. ஒருத்தர் பெயருக்குக் கடிதம் எழுதி அதில் எவர் கையிலாவது கிடைக்கலாம். கிழித்துப் போடலாம். அலுவலகம் என்றால் இந்தத் தொல்லை இராதே.

அம்மா பணம் கறப்பதில் எப்பொழுதுமே சாமர்த்திய சாலி. அப்பா சம்பாதித்த காலத்தில் கைக்கும் வாய்க்கும் பற்றாத நிலை. அவர் மருந்துக் கடை ஒன்றில் கம்பவுண்டராக இருந்தார். கொண்டு வரும் வருமானத்தில் மளிகை, வீட்டு வாடகை என்று பிய்த்துக் கொண்டது போக பால், காய்கறி என அன்றாட உணவுக்கும் வகை செய்ய வேண்டும்.

திருச்சி தாலுகாவில் உள்ள கிராமம் அவனுடையது. வீட்டுக் கொல்லையில் வளரும் கீரை, புடலை, பறங்கி பூசணிகளுக்குள்ளேயே அம்மா அவர்களது உணவுத் தேவையை முடிப்பாள். ஒரு கறவைமாடு கொட்டிலில் இருந்தது. அம்மாவின் வியாபாரத்திற்கு மாடு உதவிற்று. பால்விற்ற பணத்தில்தான் பெரியவள் பரிமளா, சுகந்தி, தாமோதரன், ஏன் மூத்த பிள்ளையான காமேசனும் வளரத் துவங்கினார்கள்.

காமேசன் பட்டம் பெற்று, சென்னைக்கு வேலை கிடைத்துப் புறப்படும்போது அம்மா கண்டித்துக் கூறி விட்டிருந்தாள். ''வீட்டுக்கு மூத்த பையன் நீ. அதை மறந்திடாதே. பட்டணத்தில் கெட்டுப்போக நிறைய வழி



இருக்குது. தங்கச்சிங்க வயசுக்கு வந்து வீட்டோட இருக்காங்க. அவங்க கல்யாணம், தம்பி படிப்பு எல்லாம் உன் பாரம்கிற பொறுப்பு உனக்கு இருக்கணும். அங்கே போய், இதையெல்லாம் மறந்திட்டே, பெத்த தாயையே மறந்தா மாதிரி.''

பலமுறை அம்மாவை அவன் நினைத்துக் கொள்வான். சினிமா போன்ற கேளிக்கைகளுக்கு, சிகரெட் போன்ற உல்லாச மயக்கங்களுக்கு அவன் ஒருபோதும் அடி பணிந்ததே இல்லை. ஒரே அறையில் குடி இருக்கும் இதர வாலிபர்களுக்கு ஏற்பட்ட இயற்கையான அரட்டைப் பேச்சுக்களில்கூட அவன் நாட்டம் கொண்டதில்லை.

அவர்களை வாடகைக்கு அமர்த்திக்கொண்ட வீட்டுக் காரர் அவனுக்கு வைத்திருந்த பெயர் ''நல்லதம்பி'' உடன் வசித்த தோழர்கள் வைத்திருந்த பெயர் ''சன்யாசி.''

அவனிடம் சற்று சகஜமாக உரையாடிக் கொண்டிருப்பவன் ரவி மட்டுமே. இதரர்கள், தங்கள் சம்பாஷணையில் அவனை ஓரம் கட்டி வைத்திருந்தனர்.

அம்மாவின் கடிதம் படித்ததுமே அவன் மனம் ஆடிப் போய் விட்டிருந்தான். பரிமளாவின் கல்யாணம் பிள்ளைப் பேறு என்று பட்டிருந்த கடன்கள் ஓய்ந்து சுகந்தியின் திருமணம் என்ற பெயரில் கடன் அரக்கன் அவனை வதைப் படுத்திக் கொண்டிருந்தான். கடந்த ஏழு வருடங்களில் குடும்பச் சுமை அவனை மிகப் பாரத்துடன் அழுத்திக் கொண்டிருந்தது. பல சமயங்களில் மூச்சு விடத் திணறும் படியாகக் கூட அவதிக்குள்ளாகியிருக்கிறான்.

அவன் வேலை ஏற்றுக் கொண்டிருந்த கம்பெனி அப்படி ஒன்றும் பிரபலமானதல்ல. திடீர் உணவு வகைகளைத் தயாரித்து விற்பனை செய்து வந்த ''டேஸ்டி மேக்கர்ஸ்'' என்ற நிறுவனம். விற்பனைப் பகுதியில் படிப்படியாக உயர்ந்து மேலாளராக வந்திருந்தான் அவன். கம்பெனியின் வளர்ச்சிக்குத் தக்கபடிதான் சம்பள உயர்வும் இருந்தது.

வருகிற ஆயிரத்தைந்நூறு ரூபாயில் தன் செலவுகளைச் சுருக்கிக் கொண்டு மீதியை அப்படியே அம்மா பெயருக்கு அனுப்பி வைப்பான். இடையில் அப்பாவின் உடல்நிலை, அவரது மறைவு என்ற காரணங்கள், அவனது செலவினத்தை அதிகரித்திருந்தன. பரிமளாவின் கல்யாணம், தாமோதரன் படிப்பு என எத்தனையோ இடறுகளைத் தாண்டி வந்தவனுக்கு, இப்போதெல்லாம் சலிப்பு தட்டத் துவங்கி இருந்தது.

''எம்ப்பா காமேஷ்! நான் கேட்கிறேன்னு தப்பா நினைச்சுக் கொள்ள மாட்டியே'' கணக்குப் பகுதி தங்கதுரை எடுத்த எடுப்பிலேயே வினவினார்.

அவன் சிரிக்க முயன்றான்.

''வருஷம் தவறாம ஆபீஸ்ல 'லோன்' வாங்கற ஆசாமி நீ ஒருத்தன்தான்னு நினைக்கிறேன். இந்த சின்ன வயசுல உழைச்சு ரெண்டு காசு சேர்த்தாதான், நல்லது ஆமா... உனக்கு என்ன வயசாகுது? நான் பெரியவன் அனுபவப் பட்டவன் கேக்கறேன்'' கண்ணாடி வழியே அவனை உற்றுப் பார்த்தார்.

தடுமாறிப் போனான் அவன். அலுவலக விவகாரங்களை விட்டு விட்டு, இந்த மனிதர் எதற்காக சொந்த குப்பையைக் கிளறுகிறார்? ''இந்த ஜனவரிக்கு முப்பது ஆயிடும்.'' முகத்தைக் கைக்குட்டையால் ஒத்திக் கொண்டான். ஏதானும் பெண் இருக்கிறதோ இந்த மனிதருக்கு?

''காலா காலத்தில் ஒரு கால் கட்டு வேணாமா?''

''வேண்டாம் சார். இருக்கிற கட்டுகள் போதும்'' சிரித்தான் அவன்.

''அப்படி சொன்னா எப்படி? சம்பாதிக்கிற பெண்ணா பார்த்து கல்யாணம் செய்துகொள்ளு. ரெண்டு பேர் சம்பாதிச்சா கடன் சுமையும் குறையுமே. இந்தக் காலத்தில் இது சகஜமான விஷயம்'' தங்கதுரை முற்றுப் புள்ளி வைத்தார்.



சம்பாதிக்கின்ற மனைவி அவனுடைய குடும்பச் சுமையை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பாளா? அவனுக்கு சிரிப்பும் கோபமுமாக வந்தது. அவன் வாழ்க்கையில் நடை பெறக் கூடியதா?

'களுக்'கென்ற சிரிப்பு ஒலி. திடுக்கிட்டுத் திரம்பினான் அவன். சற்று தூரத்தில் சிறு கும்பல் அமர்ந்தபடி உரத்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

''மஞ்சு! உனக்கென்னம்மா. பார்த்தா ஆள் அம்சமா அழகா இருக்கே. கல்யாண மார்க்கெட்ல கொத்திக் கிட்டு போயிடுவாங்க. என்னைப் போலயா?'' ஒருத்தி கிண்டல் செய்து சிரித்துக் கொண்டிருந்தாள்.

''ஏன் உனக்கு மட்டும் படிப்பு? அழகு எல்லாம் இல்லையா?'' மஞ்சு என்றழைக்கப்பட்ட பெண் கேட்டபடி புன்னகை புரிந்தாள்.

''வேலை கிடைக்கலியே. இப்பல்லாம் வேலைக்குப் போகிற மனைவிகளுக்குத்தான் கல்யாண மார்க்கெட்டில் கிராக்கி'' மற்றவள் உரத்துச் சிரித்தாள்.

''போடி- கிராக்கு!'' மஞ்சுளா அவளை பரிகசித்து விட்டுத் திரும்பி, ''என்ன ரவி நீங்க சொல்லுங்க இவ சொல்றது சரியா?'' என்றாள்.

தூக்கிவாரிப் போட்டவனாய் மணலைத் தட்டிக் கொண்டு எழுந்தான் காமேசன். அந்த அவசரத்தில் காற்று வாக்கில் கையிலிருந்த அம்மாவின் கடிதம் பறந்து சென்றது. பின்னாலேயே ஓடியவன் பெருங் குழப்பத்துடன், நின்று விட்டான். ஏனெனில் அந்தக் கடிதம் மஞ்சு கும்பலிடையே தஞ்சமடைந்திருந்தது.

''மன்னிக்கனும்! என் கையில் இருந்து நழுவிட்டது. காத்து வாக்கில...'' குழைவுடன் கை நீட்டி கடிதத்தை வாங்கியவன், உற்றுப் பார்த்தான். சந்தேகம் இல்லை. அவன் அறைத் தோழன் ரவியேதான் உட்கார்ந்திருந்தான்.

''ரவி! நீ எங்கே... இங்கே...''

''வாப்பா தோழா! இங்கே காத்து வாங்க வந்தியா, ரொம்ப அபூர்வமா இருக்குதே?'' கேலியுடன் அவனை சுற்றி இருந்தவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தான் ரவி.

''இது என் பெரியம்மா பெண் மஞ்சுளா. நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் இருக்கிற எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தில் வேலை பார்க்கறா. இது என் சித்தி பெண் சாந்தா... இது...''

காமேசன் காதுகளிலும், கண்களிலும் மஞ்சுளாவே நிறைந்திருந்தாள். அவனுடைய தேவைக்கு, மஞ்சுளா போன்ற பெண் தக்கவளாக இருப்பாள். மனதில் சுயநலம் என்ற அரக்கன் புகுந்து கொண்டு திட்டங்கள் தீட்டத் துவங்கினான்.

''வணக்கம். உங்களைப் பாத்ததில் ரொம்ப மகிழ்ச்சி.'' அவன் உதடுகள் முணுமுணுத்தன. உள்ளத்தில் பன் மடங்கு மகிழ்ச்சி பெருகிற்று. மனம் இலேசாகிப் போன உணர்வு.

இரண்டு நாட்கள் பொறுமையுடன் பற்களைக் கடித்துக் கொண்டிருந்தான். அம்மா கேட்ட பணத் தேவையைப் பூர்த்தி செய்து விட்டான். தங்கதுரையின் வார்த்தைகள் அவனை உந்தி விட்டன. ''சம்பாதிக்கிற மனைவி இருந்தால் உன் சுமையும் குறையுமே.''

மெல்ல ரவியிடம் பேச்சுக் கொடுத்தான் ''மஞ்சுளாவுக்கு வரன் பார்க்கறாங்களா?''

''உனக்கு எதுக்கப்பா அந்த விவகாரமெல்லாம். நீதான் கல்யாணம்னா ஒதுங்குகிறவனாச்சே'' ரவி சூள் கொட்டினான்.

''இல்லே... அம்மா கடுதாசி போட்டிருக்காங்க. நல்ல பெண்ணா கிடைச்சா... கல்யாணம்'' காது மடல்கள் வெட்கத்தால் சூடேற, முகத்தை இறக்கிக் கொண்டான் காமேசன்.

வியப்புடன் ரவியின் கண்கள் விரிந்தன. ''என்னது? நீயா... கல்யாணம் செய்துக்கப் போறியா'' அடுத்த விநாடி அறையில் கேலியும், கும்மாளமும் இரண்டுபட்டன.



''ஆஹா வந்திடுச்சு...'' என்று ஒருத்தன் கட்டைக் குரலில் பாடினான்.

சிரிப்பும், அமர்க்களமுமாக அன்றைய பொழுது கழிந்தது. ரவி துரிதமாக செயல்பட்டான். மஞ்சுளாவின் பெற்றோருக்கும், காமேசனைப் பற்றி எந்தவிதமான தடங்கலும் இருக்கவில்லை.

''ஊர்ல, பெரியவங்க அவங்கம்மாகிட்டே ஆலோசனை கேட்டு, சம்மதம் வாங்கிட்டு வரட்டும். பிறகு நாள் பார்த்திடலாம்'' என்றார் மஞ்சுளாவின் தந்தை தணிகாசலம்.

மஞ்சுவின் அம்மா அமிருதவல்லிக்குப் பரம திருப்தி! உள்ளூரிலேயே, பார்க்க கௌரவமாக இருக்கிற பிள்ளையாண்டான் கிடைத்து விட்டானே! ஊருக்குப் புறப்பட்டுச் சென்ற காமேசனுக்கு மட்டும் விஷயம் அத்தனை எளிதாக முடியவில்லை.

''உன் கல்யாணத்துக்கு இப்ப என்ன அவசரம் தம்பி. தாமோதரன் படிப்பு முடிஞ்சு இன்னம் ரெண்டு வருஷத்திலே வேலைக்குப் போய்டுவான். பிறகு...''

'தலையெல்லாம் நரைத்து கிழவனான பிறகு என்ன கல்யாணம்' மனதிற்குள் வெகுண்டவன் ''எதுக்குக் கவலைப்படறீங்க'' என்று கேட்டான்.

''நாளைக்கு நீ கல்யாணம் கட்டிக்கிட்டா, குடும்பம் பிள்ளை குட்டின்னு உன் பொறுப்பு அதிகமாகிடுமே, அப்புறம் எங்களை யார் கவனிப்பாங்க'' அம்மா பண விஷயத்திலேயே குறியாக இருப்பவள் என்பதை காமேசன் அறிவான். ஆனால் இப்படியா...?

''என் கல்யாணத்தால், உங்களுக்கு அனுப்ப வேண்டிய பணம் தடைப்படாது. அந்தப் பெண்ணும் சம்பாதிக்கிறவ தான்.''

''அதுக்காக, இந்த வீட்டுப் பொறுப்பை விட்டுட்டு அங்க வந்து சமைச்சுப் போட்டுக்கிட்டு என்னால இருக்க

முடியாது. இந்தக் கிராமத்து வீட்டிலே உன் தங்கச்சிங்க வந்து பிறந்த வீடுன்னு சொந்தம் கொண்டாடலாம். சின்னவன் நாளைக்குக் கல்யாணம், வேலை வெட்டின்னு போனாலும் இங்கே வரலாம். ஏன் உனக்கே குடும்பத்தோட வரலாம்'' அம்மாவின் பேச்சில் சுதந்திரத்தின் கடுமை இருந்தது. காமேசன் அதற்கு மேல் எதுவும் பேச விரும்பவில்லை.

மீண்டும் சென்னை வந்ததும், திருமண ஏற்பாடுகள் நடக்க ஆரம்பித்தன. சேலை வாங்கும் சாக்கில் மஞ்சுளாவிடம் மெல்லக் குடும்ப நிலையை விவரித்து விட்டு, ''நாம ஒரு நல்ல நிலைக்கு வரவரைக்கும், நீயும் வேலையை விடாமல் இருக்க வேண்டி இருக்கும் மஞ்சு'' என்றான்.

அவள் நாணத்துடன், ''அதனால் என்ன? இனிமே உங்க கஷ்டம்தான், என் கஷ்டமும், உங்க சுகம்தான் என் சுகமும். எதுக்குக் கவலைப்படறீங்க?'' என்றாள் ஆறுதலாக. ஆனால், இருவருமே வரப்போகும் துன்பத்தைப்பற்றி அறியமாட்டாதவர்களாக இருந்தனர்.

## 2

அன்று காலை மஞ்சுளா வழக்கம்போல அலுவலகத்திற்குப் புறப்பட்டு விட்டிருந்தாள். வாடகை வீடு. இரண்டே அறைகள் கொண்ட குடித்தனம் என்றாலும், இந்தக் காலத்து ஃப்ளாட் முறையில் கட்டப்பட்டிருந்ததால் வாடகை அறுநூறு ரூபாயைச் சுளையாக விழுங்கிக் கொண்டிருந்தது.

மாதம் பிறந்தால், காமேசனது வருமானத்தில் ஆயிரம் ரூபாய்கள் அம்மாவின் பெயருக்கு அனுப்பப்பட்டு விடும். எஞ்சியது, கடன்கள் பிடித்தம் போக, ஒரு சில நூறுகள் மளிகை, பாலுக்குப் போகும். மஞ்சுளாவின் கணிசமான வருமானம்தான் வாடகை போன்ற இதர வசதிகளுக்குக் கைகொடுத்தது.



காலை புறப்படுமுன், இரவுக்கு வேண்டியதற்கும் சேர்த்து உணவைத் தயாரித்து விடுவாள் மஞ்சு. கடனில் வாங்கி விட்டிருந்த குளிர்சாதனப் பெட்டி பெரிதும் உதவியது. அவசரமாக டிபன் டப்பாக்களில் அடைத்துக் கொண்டு, ஒரே வாயில் உணவை முடித்துக் கொண்டு இருவரும் அலுவலகம் கிளம்பி விடுவார்கள். இரவுக்கு வேண்டிய எஞ்சிய உணவை, குளிர்சாதனப் பெட்டியில் வைத்து மூடிவிட்டு இரவு திரும்பியதும், சூடு செய்து சாப்பிடுவார்கள்.

சில சமயங்களில் சிந்தாதிரிப்பேட்டையிலிருந்து அம்மா அமிர்தம், சில உணவு வகைகளைக் கொடுத்தனுப்புவாள்.

''என்ன இன்னைக்கு, இடைவேளையில் பிறந்த வீட்டுக்குப் போனியோ'' காமேசன் கேலி செய்வான். ''ஆமாங்க, மிளகுக் குழம்பும், கத்தரிக்காய் பொறியலும் செய்தாங்க. உங்களுக்குப் பிடிக்குமேன்னு குடுத்து விட்டாங்க. மாலையில், ஆபீஸ்ல இருந்து திரும்பி வரும்போது எடுத்திட்டு வந்திட்டேன்'' மஞ்சு மகிழ்வுடன் சிரிப்பாள்.

சிறிது சிறிதாக, சாப்பாட்டு மேஜை, டி.வி. சோபா என்ற நவீன கால வசதிகள், அந்த இரண்டு அறைக் குடித்தனத்திற்குள் அமர்ந்து கொண்டன.

''எதுக்காக மஞ்சு இதையெல்லாம் தவணை முறையில வாங்கறே? நாம வீடு கட்டிக்கிட்டுப் போறச்சே வாங்கலாமே'' காமேசன் சொல்லிப் பார்த்தான்.

''சம்பாதிக்கிறோம். சௌகரியமா இருக்கலாமே, எதுக்குக் கஷ்டப்படணும் சொல்லுங்க'' மஞ்சு அவனை நைச்சியமாகப் பேசி மடக்குவாள்.

புதிதாக இல்லறம் துவங்கிய சமயம். அநாவசியமான சண்டை சச்சரவுகளுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்ற எண்ணத்தில் மௌனம் சாதித்திருந்தான். மேலும் அவளது வருமானத்தில் கூடுதலான வசதிகளும் பெருகி வருகின்றன என்ற உண்மை அவனுக்குப் புரிந்திருந்தது.

அவனுடைய அம்மா திருமணத்திற்காக மட்டும் தலை காட்டி விட்டுப் போனவள்தான். பிறகு மகனிடம் பணம் மட்டும் வந்தால் போதும் என்ற நோக்கிலேயே குறியாக இருந்து விட்டிருந்தாள்.

காமேசனும் அவசரமாக மனைவிக்குக் கூட ஒத்துழைத்தான். டிபன் டப்பாக்களைத் தனித் தனியாக பிளாஸ்டிக் பைகளில் போட்டு வைப்பான். காய்கறி வாங்குவது, தண்ணீர் பிடிப்பது வரை எல்லாம் அவன் உதவினான்.

மஞ்சுளா, திருமணத்தின்போது, புக்ககத்து மனிதர்களைக் கண்டு நெஞ்சம் பதறிப்போனாள். மாமியாரின் கடுமையான முகம், நாத்திகளின் அலட்சியப் போக்கு.

சின்ன மைத்துனனின் ஒட்டாத தன்மை யாவும் அவளுக்கு விசித்திரமாக இருந்தன.

''ஒட்டெட்டாம் புல்லாட்டம் இருப்பாங்க போல இருக்குது இவங்க குடும்பம். சம்பந்தி அம்மா பிடி குடுத்துக்கூட பேசமாட்டேங்கறாங்களே'' அமிர்தம்மாள் வியந்து போனாள்.

சம்பந்தி மரியாதையுடன் ஊருக்குப் புறப்பட்டுச் சென்றவர்கள்தான். காமேசன் இரண்டு முறை ஊருக்குப் போய் வந்தவன், அவளை அழைத்துப் போகவே இல்லை. மஞ்சுளா அதைப்பற்றி எதுவும் கேட்காமலே இருந்தாள்.

''என்னங்க? கிளம்புவோமா?'' கைப்பைக்குள் டிபன் டப்பாவை திணித்தாள் மஞ்சுளா. கஞ்சி போட்ட நீல வாயில் சேலை முரமுரப்புடன் நிற்க, பளிச்சென்று விளங்கினாள் அவள்.

''இதென்ன?'' மஞ்சுளாவிற்குத் திடும்மென்று வயிற்றைப் புரட்டியது. ஓடிச்சென்று குளியல்றைக்குள் புகுந்தவள் மனதில் அந்த உண்மை உறைத்தது. கொஞ்ச நாட்களாகவே அவளுக்கு உணவுகளில் சுவை வேறுபாடு இருந்தது.



மனைவியின் உபாதையைக் கண்டு மனம் பதறிப் போனான் காமேசன். குளியலறையிலிருந்து முகம் கழுவி மீண்டும் இலேசாக பவுடரைப் பூசி, நெற்றியில் திலகம் வைத்தவளை வியப்புடன் பார்த்தான்.

''ஏதானும் வயித்துக் கோளாறா. டாக்டர் கிட்டப் போகணுமா மஞ்சு?'' பதட்டமாக வினவினான்.

''டாக்டர் கிட்டத்தான் போகணும். ஆனா வயித்துக் கோளாறு இல்லே...''

''என்ன சொல்றேன்னு விளங்கலியே.''

''நீங்க அப்பா ஆகப் போறீங்க'' முகம் சிவந்தவளாய் மஞ்சு, அலுவலகத்திற்கு ஆயத்தமானாள்.

காமேசன் திகைப்புற்றான். குழந்தையா? அதற்குள்ளாகவா? திருமணத்தின் சுமைகூட மாறாத நிலை. மீண்டும் குடும்பச் சுமை. ஏற்கனவே பட்ட கடன் சுமை கடமைச் சுமையில் இதுவும் தேவைதானா? பலவாறு எண்ணி முகம் கறுத்துப் போனான் அவன்.

''என்ன? ரொம்ப சந்தோஷமான சமாச்சாரம் சொல்லிட்டிருக்கேன். நீங்க காதிலேயே போட்டுக்காம'' குறைபட்டுக் கொண்டிருந்தாள் மஞ்சு.

''எதுக்கும் டாக்டர் ரேவதி கிட்ட காட்டிப் பரிசோதனை செய்தபின்பு யோசிக்கலாமே.''

''யோசனையா? எதுக்கு?''

அவன் ஆழ்ந்த சிந்தனையில் மௌனம் சாதித்தான். மஞ்சுளாவிற்கு அவனது செய்கை மிக வருத்தத்தைத் தந்தது.

அன்று அலுவலகத்தில் அவனுக்கு வேலையே ஓடவில்லை. தங்கதுரை அவனிடம் கேட்டு விட்டார். ''என்ன முகமெல்லாம் வாடி இருக்குது. புதுக்கல்யாணக்களை ஒரு வருஷத்துக்காவது இருக்க வேணாமா? அதிலயும் கை நிறைய சம்பாதிக்கிற மனைவி, குஷாலா இருக்கறதை விட்டுட்டு...''

''கொஞ்சம் தலைவலி'' மெல்ல நழுவினான். டாக்டர் ரேவதியிடம் முதலிலேயே போன் செய்து கூறி விடலாமா? குழந்தைக்கு அவசரமில்லை என்று கூறி அதற்கு வழி செய்து விட்டால்...?

தற்சமயம், பாங்க் கணக்கில் அவர்கள் இருவரும் சேர்ந்து ஒரே கணக்கில் போட்டு வரும் சேமிப்பில் இருந்து குழந்தை என்று வந்து விட்டால் செலவு சேருமே! மீண்டும் புதிய பொறுப்பு... எண்ணிப் பார்க்கவே அவனுக்கு நடுக்கமாக இருந்தது.

இப்போது என்ன செய்யலாம்? மஞ்சுளாவிடமே விஷயத்தை உடைத்துச் சொல்லி விடலாமா? அவள் அதை எப்படி ஏற்றுக் கொள்வாள்? திருமணம் ஆகி ஒரு சில ஆண்டுகளாவது நாம் சௌகரியமாக வாழலாம் என்று சொல்லி விடலாமா?

பலவாறு எண்ணியவனாய் அலுவலகத்தில் பொழுதைப் போக்கி விட்டு வீடு திரும்பினான். இவன் உணர்ச்சிக் குவியலில் மூச்சுத் திணறியதற்கு மாறாக மஞ்சு உற்சாகத்தில் இருந்தாள்.

அலுவலகத் தோழி உமா அவளைக் கேலி செய்தது கூட அவளுக்கு உறைக்கவில்லை.

''என்ன வருஷம் ஒண்ணாக வில்லை. அதுக்குள்ள குழந்தைக்கு அவசரமா?'' ஏனெனில் உமாவும், அவள் கணவனும் திருமணமாகி மூன்று வருடங்களுக்குப் பிறகு தான் குழந்தை வேண்டும் என்று கொள்கை உடையவர்கள். முதல் குழந்தை அரவிந்தன் இப்போதுதான் நர்ஸரி செல்கிறான். அடுத்ததற்கு அவசரமே இல்லை என்று நினைப்பவர்களுக்கு , மஞ்சுளாவின் நிலை வியப்பை ஏற்படுத்தியது.

''அவசரமா இல்லையான்னு சொல்ல நாம்ப எப்படி'' மஞ்சு முடிக்குமுன், ''ஏய்! இந்த உதார்' விடற வேலை



என்கிட்ட வேணாம்'' தோழி இடைமறித்துக் கேலி செய்தாள்.

''உமா! உங்கிட்ட சொல்லறதில என்ன தப்பு. எனக்கு இருபத்தெட்டு வயசில் திருமணம் ஆயிருக்கு. இப்ப ஒரு குழந்தை பிறந்துட்டா பிறகு வளர்க்கறதைப் பத்திக் கவலைப்பட வேணாம். உடம்பிலயும் தெம்பு இருக்கும் இல்லையா?''

''என்னையே மடக்கிட்டே.''

''இத்தனை வருஷமா எங்கூட வேலை செய்யறே. என் குணம் உனக்குத் தெரியலே.''

''அதுக்காக சொல்லலே. உன்னுடைய அவர் இதை எப்படி வரவேற்கிறார்? விருப்பா அல்லது மறுப்பா?''

''அவரே பெரிய குடும்பத்தில் பிறந்தவர். ஒருநாளும் மறுப்புத் தெரிவிக்க மாட்டார்'' உறுதியுடன் கூறினாள் மஞ்சு.

மாலை, சிந்தாதிரிப்பேட்டைக்கு விஜயம் செய்தபோது அம்மா மனம் குளிர்ந்து போனாள். அப்பாவிற்கு ஏக மகிழ்ச்சி.

''சீக்கிரம் ஒருபேரனோ, பேத்தியோ என் மடியில பெத்துப் போட்டுடு. நான் பார்த்துக்கறேன்.''

டாக்டர் ரேவதியிடம் சென்று பரிசோதனை செய்து கொண்டு மீண்ட பிறகு, புதிய கனவுகளுடன் அவள் வீடு திரும்பி இருந்தாள்.

''உங்க மாமியாருக்குக் கடுதாசி போடணும். ஒரு நல்ல நாள் பார்த்து பூ முடிச்சிட ஏற்பாடு செய்யச் சொல்லு. நானும் எழுதிப் போடறேன்.'' அமிர்தம்மாள் மகளை வாஞ்சையோடு வழியனுப்பினாள்.

''உடம்பைப் பார்த்துக்கம்மா. வாய்க்கு ருசியா ஏதாச்சும் வேணும்னா, அம்மா செய்து தருவா... நெடுந்தூரம்

அலைஞ்சு உடம்பைக் கெடுத்துக்காதே.'' அப்பா உபதேசித்தார்.

காமேசன் மட்டும் என்ன சொல்லப் போகிறான். ''மஞ்சு! உடம்பைப் பார்த்துக்க. நான் எல்லா வேலையையும் செய்யறேன். எங்கம்மா கேட்டா பூரிச்சுப் போயிடுவாங்க'' என்பான்.

சிரித்தபடி கணவனை வரவேற்றவள் அதிர்ந்து போனாள். 'ஏன் இப்படி வாடி போயிருக்கிறார்?'

''உடம்புக்கு ஏதாச்சுமா?'' கவலையுடன் விசாரித்தாள்.

''ஒண்ணுமில்லே. டாக்டரம்மா என்ன சொன்னாங்க.''

''நீங்க அப்பாவாகப் போறது உறுதின்னாங்க'' நாணத்தால் முகம் சிவந்தாள் மஞ்சு.

அவன் முகம் இறுகியது.

''உங்கம்மாவுக்கும் கடிதம் போடணும்னு எங்கம்மா சொன்னாங்க. ஏன்னா, சந்தோஷசெய்தி, உடனே அறிவிக்கணும்னாங்க'' அவள் நகைத்தாள்.

''பட்டத்துக்கு வாரிசு பிறக்கப் போவுதுன்னு எழுதணுமா?

''கேலியைப் பாரு''

''உண்மையைத்தான் சொல்றேன் மஞ்சு, ராஜ்யமே இல்லாத நமக்கு இப்ப ஒரு வாரிசு தேவையா?'' காகரத்தான் காமேசன்.

மஞ்சு தூக்கிவாரிப்போட நிமிர்ந்தாள். ''என்ன சொல்றீங்க?''

''நமக்கு இப்ப குழந்தை தேவையில்லை.''

அவளுக்கு அவன் எண்ணம் விளங்கி விட்டது. அடி வயிற்றில் சுரீர் என்று கத்தியால் குத்தியது போன்ற வலி. ''உங்கம்மாவுக்குத் தெரிஞ்சா...''

''எங்கம்மா சந்தோஷப்படமாட்டாங்க. பெரிய குடும்பத்தை கட்டிக் காத்துப் பாடுபட்டவங்க. அதனால்



தான் இப்ப எனக்குக் கல்யாணம் செய்யறதையே அவங்க விரும்பலே. இதில நம்ம குடும்பம் பெருகப் போவுதுன்னு தெரிஞ்சா, வேதனைப்படுவாங்க'' சலனமின்றிப் பேசினான் அவன்.

மஞ்சு மனம் பதறிப் போனாள். அவளுடைய முதல் குழந்தை. பிஞ்சு கையும், காலுமாகக் கண் முன் தோன்றி 'அம்மா! என்னை விட்டு விடாதே' என்றலறி அழுவது போல ஒரு பிரமை. என்ன விசித்திரமான குடும்பம். அவர்கள் பெரிய குடும்பத்தில் துன்பப்பட்டார்கள் என்பதற்காக, இந்தச் சின்னஞ்சிறு உயிரை வெறுத்து விடுவார்களாமா? சே? நெஞ்சினுள் முள் நெருடியது.

''உங்கம்மாவுக்குப் பிடிக்காட்டி எழுத வேணாம். அதுக்காக நீங்க ஏன் மனம் பதறிப் போறீங்க.'' சமாதானப் படுத்திப் பார்த்தாள்.

''இல்லே மஞ்சு. இந்தக் குழந்தை நமக்கு வேண்டாம். டாக்டர் ரேவதியிடம் சொல்லி...''

மஞ்சு உரக்கக் கத்தினாள். ''நோ! இந்தக் குழந்தை அதிலயும் முதல் குழந்தை. நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்.''

காமேசன் கடுமையுடன் பார்த்தான். ''நாம ரெண்டு பேரும் ஆபீஸ் போறவங்க. குழந்தை பிறந்தா அதைப் பார்த்துக்கறது கஷ்டம். சொன்னா கேளு.''

''நீங்க பாத்துக்க வேண்டாம். நான் ஆள் போட்டுப் பார்த்துக்கறேன். இல்லே வேலையை விட்டுட்டு வீட்டோட இருக்கேன்'' அவள் சீறினாள்.

''குஷாலா வீட்டோட இரு. அதுக்கு முன்னே டி.வி. சோபாசெட், கடன்கள், பிரசவ சமயம் ஏற்படும் கடன்கள் எல்லாத்துக்கும் வழி செய்திட்டுப் பிறகு வேலையை விட்டுக்க'' எரித்து விடுபவன் போல் மனைவியைப் பார்த்து விட்டு எழுந்து சென்று விட்டான் அவன்.

மஞ்சுளா மனம் இடிந்து போனாள். 'காதலன் ஒருவனை கைப்பிடித்து அவன் காரியம் யாவினும் கை கொடுக்கும்' மனைவியாக அவள் இறுமாந்திருந்தாள். இப்போது வேஷம் கலைந்து விட்டதா? அவளின் உற்சாகத்தில் பங்கு கொள்ளாதது மட்டுமல்ல, இப்போது 'காதலியைக் கை விட்டுச் சென்ற' நளனைப் போல, கையை விரித்து விட்டானே!

அவளது பெற்றோருக்குத் தெரிந்தால் எத்துணை மனச் சஞ்சலம் அடைவார்கள்? 'என் கணவர் குழந்தை வேண்டாம் என்கிறார்' என்று கூறுவது எவ்வளவு கேவலம்?

பத்து மாதம் சுமந்து அவதியுற்று, அவள் ஒரு குழந்தைக்குத் தாயாகத் தயாராய் இருந்தாள். அவனோ எந்தவித வேதனையும் இல்லாமல், தகப்பன் என்ற பொறுப்பையே வெறுத்து ஒதுக்க முயல்கிறான்.

தாம்பத்தியத்தின் முதல் விரிசல் அவர்கள் வாழ்வில் விழத்துவங்கி விட்டது. அன்றிரவு சாப்பிடாமலே காமேசன் படுக்கப் போனான்.

''அதென்ன அப்படி ஒரு பிடிவாதம்? இவருக்கு வேண்டா விட்டால் வேண்டாம். என் குழந்தையை நானே வளர்க்கிறேன். என் கால்களில் நானே நிற்கும்போது இவர் எதற்காக?'' மனம் குமுறியது. அன்றிரவு முழுவதும் ஆத்திரம் தீர அழுது தீர்த்தாள் அவள்.

## 3

''கன்னியம்மா! குழந்தையை இப்படித் தரையில விட்டுட்டு என்ன வேடிக்கை பாத்திட்டிருக்கே'' மஞ்சுளா உரத்துக் குரல் கொடுத்தாள்.

குழந்தை பூஜா, எழுந்து உட்கார முயன்று தரையில் விழுந்து வீரிட்டுக் கொண்டிருந்தாள். குழந்தையைத் தூக்கி, ''அழாதே கண்ணு! அழாதே'' என்று சமாதானப் படுத்தினாள்.



''வர,வர நீ அண்டை அயல் விடுகள்ளே வேடிக்கை பார்க்க போயிடறே. எனக்கு இது பிடிக்கலே.'' மஞ்சுளா கடுகடுப்புடன் கூறியபடி சமையலறைக்குள் விரைந்தாள்.

''எனக்கு இன்னைக்கி ஆபீஸுக்கு சீக்கிரம் போகணும் தெரியுமில்லே'' காமேசன் சினந்தபடி, உடை உடுத்த படுக்கையறைக்குள் புகுந்து கொண்டான். வரவேற்பு, சாப்பாடு என்று கதம்பமாக விளங்கும் அறையில், சாப்பாட்டு மேஜை மீது தட்டுக்களைப் பரப்பினாள் அவள்.

முன்னைப் போல் வீட்டு வேலைகளில் அவள் கணவன் அவளுக்கு உதவ முன் வருவதில்லை என்பதை பூஜா வந்த சில தினங்களுக்குள்ளேயே உணர்ந்து கொண்டு விட்டிருந்தாள்.

பேறு காலத்தில் பிறந்த வீட்டுக்குப் போவதுதான் முறை என்று தணிகாசலம் கூறிப் பெண்ணை அழைத்துச் சென்றார். அமிர்தம்மாள் தன் தேகத்தைப் பாராது மகளை அருமையும் பெருமையுமாகக் கவனித்துக் கொண்டாள். அதே சமயம் மகளின் புக்ககத்து மனிதர்கள் எவரும் பிறக்கப் போகிற குழந்தையை வரவேற்கவில்லை என்பதைப் புரிந்து வெறுப்படைந்திருந்தாள்.

''என்ன மனுஷங்க இவங்க. ஒரு குழந்தை பிறக்கப் போவுதுன்னு, ஒத்தொருத்தர் ஆனந்தப்படுவாங்க. மனுஷ குணமே இல்லாதவங்க போல இருக்கு வீடு'' வியப்புடன் விரக்தியாகப் பேசினாள். ''மருமகப் பிள்ளையாவது குணமா இருக்காரே அது போதும்.''

மஞ்சுளா மௌனம் சாதித்தாள். ''உன் மருமகனும் அதே குட்டையில் ஊறிய மட்டைதானம்மா'' மனம் மட்டும் அலறியது.

நாட்கள் செல்லச் செல்ல காமேசனது வருகை குறையத் துவங்கி விட்டிருந்தது. மனைவி பிறந்தகம் போன சமயம் அவளது வேண்டுகோளுக்காக, வாரம் இருமுறை போய்ப் பார்த்து வந்தான். பிறகு ஒருமுறை, பிறகு அதுவும் குறைந்து

போக ஆரம்பித்ததும், அமிர்தம்மாள் நச்சரிக்கத் துவங்கினாள்.

'ஏம்மா! மருமகப்பிள்ளை ஆபீஸ்ல நிறைய வேலையோ? வந்து ஒருவாய் சாப்பிட்டுப் போகக் கூடாதோ.''

''ஒரு சமயம் மாசம் ஆயிட்டா, அவரும் இங்கே இருந்தா எனக்கு உதவியாக இருக்கும். பாதி ராத்திரியில வலி எடுத்திட்டா, ஆஸ்பத்திரிக்குப் போக டாக்ஸி பிடிச்சு வரவாவது ஆண் துணை வேணாமா?'' அப்பா ஒத்துப் பாடினார்.

''ஆபீஸ்ல ரொம்ப வேலைம்மா அவருக்கு. நேரம் கெட்ட நேரத்தில் இங்க வந்து தொல்லை குடுப்பானேன்னு ஹோட்டல்ல சாப்பிட்டுப்பாரு.'' மனமறிந்து பொய் சொல்வாள். பல சமயங்களில் ''இன்னிக்கு போன்ல பேசினாரும்மா. அவருக்கு வரவே முடியலியாம்'' என்று கதையளப்பாள். வேறு சில சமயங்களில் அவளே அவனை போனில் கூப்பிட்டு ''என்னங்க? நீங்க வீட்டுப் பக்கம் வந்திட்டுப் போங்க. அம்மாவும் அப்பாவும் அடிக்கடி கேக்கிறாங்க. தயவாய் கேட்டுக் கொள்வாள். என்றாவது மனமிறங்கி அவன் சிந்தாதிரிப்பேட்டைப் பக்கம் தலை நீட்டினால் அன்று திமிலோகப்படும்.

மஞ்சுளாவின் வயிற்றுச் சுமையுடன் மனச் சுமையும் ஏறிக் கொண்டது. மாமியார் வீட்டவர்கள் கடிதம் எழுதா விட்டாலும் போகட்டும். காமேசன் ஏன் இன்னமும் பிடிவாதத்தைத் தளர்த்தாமலே இருக்கிறான்?

''மரியாதையா இனிமே 'லீவு' எடுத்துக்கிட்டு வீட்ல இருந்துடு. ஆபீஸுக்கு வயித்தையும் தூக்கிக்கிட்டு வராதே'' உமா கேலியும் கண்டிப்புமாகக் கூறினாள்.

கடைசிவரை வந்திட்டா, பிறகு ஆறுமாசம் சொஸ்தமா லீவு எடுக்கலாமே.'' மற்றொருத்தி கண்ணைச் சிமிட்டினாள்.



மஞ்சுளா எதுவும் பேசவில்லை. பிறந்த வீட்டில் வேலை எதுவும் இல்லாமல் அவளுக்கு 'போர்' அடித்தது. அலுவலகத்தில் அவளது மேற்பார்வையில் செய்ய வேண்டிய முக்கியமான பைல்கள் இருந்தன. கம்பெனி நிர்வாகத்தினர் அவள் மீது வைத்திருந்த பெருமதிப்பையும், நம்பிக்கையையும் அவள் சிதறடிக்க விரும்பவில்லை.

அவளுடைய இடத்தில் அவள் திரும்பி வரும்வரை நியமிக்கப்பட்டிருந்த இளைஞன் கோபி வேலைக்குப் புதியவன். அவனுக்கு வேலை கற்றுத்தர வேண்டிய பொறுப்பும் அவளுடையதாக இருந்து விட்டிருந்தது.

அலமாரியிலிருந்த பைல்களை, சுமக்க மாட்டாமல் அவளே எடுத்து வரும்போது கோபி ஓடிச்சென்று உதவுவான். ''மேடம்! நீங்க இந்த மாதிரி சிரமமான வேலைகளையெல்லாம் எதுக்குச் செய்றீங்க. உங்க ஸீட்ல உக்காந்து கிட்டு உத்தரவு போடுங்க போதும்.'' உரிமையுடன் கடிந்து கொள்ளும்போது, அவள் முகம் சிவந்து போனாள்.

''அவங்க நாம சொன்னா கேக்கமாட்டாங்க. நல்லா வேலை செய்யறவங்கன்னு மேல் எடத்துக்குத் தெரியும். அதனால் சக்கையா இந்தம்மாளை வேலை வாங்கறாங்க. இவங்களும் தன்னோட நிலைமை தெரியாம வேலை செய்யறாங்க. அவ்வளவுதான்.'' உமா கடிந்து கொண்டாள்.

அலுவலகத்து மானேஜர் முதல் பியூன் பொன்னுசாமி வரை, அவள்பால் காட்டிய ஈவு இரக்கம்கூட, அவளது உரிமைக் கணவரிடம் காணாதது குறித்து அவள் கவலை அடைந்திருந்தாள்.

தம்பதிகளுக்குள் பிணக்கு ஏற்படலாம். அது உடனே தீர்ந்தும் போகும் என்று பிறர் சொல்லக் கேட்டிருக்கிறாள். ஆனால் அவள் விஷயத்தில்...?

''கடவுளே என் பிரசவ சமயத்தை இரவு நேரத்தில் வைத்து விடாதே. நான் ஆபீஸிலிருந்து திரும்பி வரும்

வழியில், ஆஸ்பத்திரிக்குச் செல்லும் அதிர்ஷ்டத்தைக் கொடு'' மனமுருக இறைவனை வேண்டிக் கொண்டாள். 'இந்த ஒரு விஷயத்தில் ஆண்டவன் இவளுக்கு இரங்கினார்.

அலுவலகத்திலிருந்து புறப்படுமுன்பே அவளுக்கு ஆஸ்பத்திரி செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. உமாவும், மற்ற அலுவலகப் பெண்களும் அவளை டாக்டர் ரேவதியிடம் ஒப்படைத்து விட்டு அமிர்தம்மாளுக்கு அறிவித்து விட்டனர்.

அமிர்தம்மாள் அலறிப் புடைத்துக் கொண்டு வருவதற்குள் அழகே உருவான மலரைப் போல பூஜா பிறந்து விட்டிருந்தாள்.

''பாட்டி வர்ற வரைக்கும் பேத்தி காத்திருக்கலே'' டாக்டர் ரேவதி பரிகசித்தாள். அமிர்தம்மாளுக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. அவசரமாகக் கணவரைக் கூப்பிட்டு ''மருமகப் பிள்ளைக்குத் தெரிவியுங்கோ. அவங்கம்மாவுக்கு தந்தி குடுத்திடுங்கோ'' என உத்தர விட்டாள்.

பெண் குழந்தை என்றதும் காமேசனது ஒரு சிறிது உற்சாகத்திலும் மண் விழுந்தது போலாயிற்று. ஆஸ்பத்திரிக்கு வந்தவன் மனைவியிடம் அதிகம் பேசவில்லை.

''உடம்பைக் கவனிச்சுக்கொள்'' என்று ஒப்புக்காகக் கூறியவன், குழந்தை உறங்கும் தொட்டிலை எட்டிப் பார்த்தான். கொசு வலைக்குள், பெற்றோரிடையே தான் ஏற்படுத்திய பூசலை அறியாத அந்தச் சிசு உறங்கிக் கொண்டிருந்தது.

''எத்தனை அழகாக பொம்மை போல இருக்கா.'' மாமியார் பெருமையாகப் பேசியபோதும் அவனிடமிருந்து வந்தது ஒரு சிரிப்புதான்.

பிறகு ஆறு மாதங்களில் அவன் அவளது வற்புறுத்தலுக்கு இணங்கி அவ்வப்போது வந்து போவதுடன் சரி, இப்போது அலுவலகத்தில் சேரும் சமயம். இங்கே வந்தாயிற்று.



''குழந்தையை வச்சுகிட்டு எப்படி சமாளிப்பே. இங்கே விட்டுட்டுப் போ. நாங்க கவனிச்சுக்கிறோம். லீவு நாளிலே உங்க வீட்டுக்குத் தூக்கிட்டுப் போ'' அம்மா சொல்லிப் பார்த்தாள்.

அவளுக்கு அது சிறந்த யோசனைதான். என்றாலும் குழந்தையின் முகம் பாராமலே இருந்து விட்டால், காமேசன் ஒரேயடியாக மனம் மாறிப் போனாலும் போவான் என்ற பயம் இருந்தது. வெளிப்படையாகச் சொல்ல முடியாமல், ''ஒரு ஆளைப் பார்த்து வச்சுக் கொள்ளலாம்னு அவர் சொல்லிட்டாரும்மா'' என்று கூறி வைத்தாள்.

பூஜா வந்தது முதல், காமேசன் குணத்திலும் மாறுபாடு காணப்பட்டது. குழந்தையைக் கவனித்துக்கொள்ள சற்று வயதான பெண்மணியான கன்னியம்மாளை ஏற்பாடு செய்திருந்தாள் அவள். வீட்டு வேலைகளில் உதவவும், அவள் அலுவலகம் சென்று திரும்பி வரும்வரை குழந்தையைப் பார்த்துக் கொள்ளவும் என்று பேசி வைத்திருந்தாள்.

''மாசம் நூற்றைம்பது ரூபாய்க்குக் குறைய மாட்டேங்கறா. இந்தக் காலத்திலே அதுக்குக் குறைவா ஆள் எங்கே கிடைக்குது'' அவள் கூறியதும் அவன் முகம் சுளித்தான்.

''அவ குழந்தையைக் கவனிப்பாங்கறதுக்கு என்ன உத்தரவாதம்?''

கணவனே உத்தரவாதம் இல்லாதபோது கூலிக்கு வேலை செய்பவளின் நாணயத்தை எப்படி உத்திரவாதம் சொல்ல முடியும்?

''இல்லாட்டி அம்மாகிட்டே குழந்தையை விட்டு வைக்கணும்'' முணுமுணுத்தாள் அவள். அவளது தாய்க்கு இந்தத் தொல்லை வேறு தேவையா? குழந்தையின் முகம் பார்த்து அதன் மனம் மாறலாமே என்ற எண்ணம் அவளுக்கு

எந்தக் கஷ்டத்தையும் சகிக்கும் தன்மையைக் கொடுத்து விட்டிருந்தது.

''புள்ளை ரொம்ப அழுவுதும்மா. நீ கொஞ்சம் தூக்கி வச்சுகிட்டு குடேன்'' கன்னியம்மா அவளிடம் அதட்டினாள்.

வயதில் பெரியவளாய் இருந்தால் ஆதரவாக இருப்பாள் என்றல்லவா கன்னியம்மாளை வேலைக்கு அமர்த்தி இருந்தாள். இப்போது அவளையே...? கடும் கோபத்துடன், ''கன்னியம்மா! குழந்தையை நீ கவனி'' என்றவள், சாப்பாட்டு மேசைக்கருகில் கணவனைக் கவனிக்கச் சென்றாள்.

முன்பெல்லாம் அவனே எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிட்டு விடுவான். சமையலறையில் கூடவே பேசியபடி உதவுவான். இப்போது வேண்டும் என்று அடம் பிடிக்கிறானா? கால்மேல் கால் போட்டுக் கொண்டு, மஹாராஜாவைப் போல, இருந்த இடத்தை விட்டு அசையாமல்... என்ன ஆயிற்று இந்த மனிதருக்கு? மனதிற்குள் வெகுண்டாள் அவள்.

''குழந்தை அழறாளே. அவசரப்பட்டா எப்படி?'' பொறுமை இழந்தவளாய் கேட்டாள்.

''பெத்தவ நீதானே. சமாதானம் செய்'' தயாராக மேஜை மீது இருந்த உணவு டப்பாவைக் கையில் எடுத்துக் கொண்டு ஆபீஸிற்குக் கிளம்பி விட்டான்.

குழந்தைக்குத் தேவையான பால், மருந்து யாவற்றையும் எடுத்து வைத்தாள். கன்னியம்மாளுக்கு என்னென்ன செய்ய வேண்டும் என்று கட்டளையிட்டு விட்டு அவள் அலுவலகத்திற்குக் கிளம்பும்போது தாமதமாகி விட்டிருந்தது.

தெருவில் காலியாக நின்றிருந்த ஆட்டோவைப் பிடித்து ஆபீஸை அடையும்போது, நல்ல வேளை சரியாக இருந்தது.

''என்ன மஞ்சுளா? அவசரமா ஓடிவர்றே போல இருக்கு. தலையெல்லாம் கலைஞ்சி'' உமா அவளை வரவேற்ற



போதுதான், தான் எத்தனை அலங்கோலமாக ஆபீஸ் வந்திருக்கிறோம் என்பது அவளுக்கு விளங்கியது.

''குழந்தை ரொம்ப அழுதிட்டிருந்தா, தூக்கி சமாதானப் படுத்தக்கூட முடியலே. ஓடி வந்திட்டேன்'' இருப்பிடத்தில் அமர்ந்தபடி வேகமாகக் கூந்தலை ஒதுக்கி விட்டுக் கொண்டாள்.

அலுவலகத்திலே மிக்க கவனமாக உடை உடுத்தி கவர்ச்சியாக வருபவள் என்ற பெயர் வாங்கி இருந்தாள் அவள். இப்போதோ- நெஞ்சில் எழுந்த கசப்பை விழுங்க முயன்றாள்.

இந்த நிலைமை ஏன்? அவள் எதில் அவள் கணவனுக்கு குறை வைத்தாள்? எதனால் அவனுக்குக் குடும்ப வாழ்விலும், குழந்தை பேரிலும் பற்றுக் குறைந்தது.

''மேடம்! மானேஜர் கூப்பிடறாரு'' ஆபீஸ் பையனின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தாள்.

மானேஜர் அறைக் கதவை மெலிதாகத் தட்டியவள் மனதில் ஒரு விதமான திகில் உணர்வு- வேலையில் கவனக் குறைவு என்பாரோ? ''கம் இன்.'' கனத்த குரலில் அழைப்பு. உள்ளே நுழைந்தாள். ''குட்மார்னிங் ஸார்! கூப்பிட்டீங்களாம்.'' தயங்கினாள்.

''குட்மார்னிங், உட்காருங்க. உங்ககிட்டே முக்கியமா ஒரு விஷயம் பேசணும்'' அவர் கையைக் காட்டினார்.

எதிரே உள்ள ஆசனத்தில் அமர்ந்தவளின் நெஞ்சம் வேகமாகத் துடித்தது. ''சொல்லுங்க.''

''நீங்க லீவில் போய்ட்டீங்க. இல்லாட்டி முன்னாலேயே சொல்லி இருப்பேன்?''

''கோபிநாத் உங்க வேலையைக் கவனிச்சுக்கிட்டான். ஆனால் பையன் புதுசு. அனுபவம் பத்தாது. அதனால் அவனால் முழுதும் முடிக்க முடியலே. பைல்கள் எல்லாம் அப்படியே நிக்குது.''

''கவனிச்சுடறேன் ஸார்'' மென்று விழுங்கினாள் அவள்.

''அத்தோட மிஸஸ் மஞ்சுளா, நம்ம கம்பெனி எம்.டி. வரப்போகிறாரம். அதனால், அவர் வரதுக்கு முன்னே எல்லாம் பக்காவா இருந்திட்டா நல்லது.'' மானேஜர் வயதானவர், எப்போதும் வயதுக்குரிய நிதானமும், அழுத்தமும் அவரது பேச்சில் தொனிக்கும்.

''அதிகவேலை, அதிக நேரம் அலுவலகத்தில் இருக்க வேண்டி நேரும். கோபிநாத்தையும் உங்களுக்கு உதவி செய்ய ஏற்பாடு செய்கிறோம். சிரமம் இருக்காதுன்னு நினைக்கிறேன்'' அவர் புன்முறுவலித்தார்.

'நிறையவே சிரமம் இருக்கிறது' என்று நினைத்தவள் உள்ளத்தில் கிலி பற்றிக் கொண்டது. வீட்டில் பூஜா, கணவன், குழந்தையை என்ன செய்வாள்? அவளை அள்ளி அணைத்து மகிழக்கூட முடியாதபடி வேலை நேரம் அவளை விழுங்கப் போகிறது. களைத்துச் சோர்ந்து வீடு திரும்பும் அவளுக்குக் காமேசன் எத்தனை வரவேற்பு அளிப்பான்? இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தபடி எழுந்தாள் அவள். ஆபீசா? வீடா?

''உங்க வேலையிலே, அப்பழுக்கு இராது. நம்ம மெயின் ஆபீஸ்ல பரம திருப்தி. இதையும் கவனம் வச்சுக் கொள்ளுங்க.'' மானேஜர் அழுத்தமாகக் கூறிவிட்டு அவளை உற்று நோக்கினார்.

''எஸ் ஸார்!'' என்றவள், மீண்டும் தன் இருக்கையில் வந்து அமர்ந்தபோது, ஏனோ அழுகையாக வந்தது.

## 4

கன்னியம்மாள் அன்று 'திடும்'மென்று வராமல் இருந்து விட்டாள். காலையிலிருந்து மழை மூட்டமாக மேகங்கள் கவிந்து கொண்டு ஒருபுறம் பயமுறுத்தின.

குழந்தையைக் கவனித்துவிட்டு அதைப் பாயின்மீது படுக்க வைத்தவள் கணவனிடம் கூறினாள். ''பூஜாவைக் கொஞ்சம் கவனிச்சுக் கொள்ளுங்க.''



அரை மனதுடன் குழந்தையருகில் அமர்ந்தான். ''எனக்கு ஆபீஸ் உண்டு.''

''எனக்கும் இருக்குது'' வெடுக்கெனக் கூறிவிட்டு சமையலறைக்குள் நுழைந்தாள் மஞ்சுளா. இந்தக் குழந்தைக்கு இவரும் தகப்பன்தானே. பின் எதற்காக இத்தனை சலிப்பு.

பூஜா! மகளை நினைத்ததும் அந்தத் தாயுள்ளம் பச்சாதாபத்தால் உருகியது. அவள் பிறந்த வேளை சரியில்லையோ? அப்பாவும் சரி அப்பா வழி உறவினர்களும் சரி எவரும் அவளை மார்போடணைத்து மகிழவில்லை. குழந்தையின் கொள்ளையழகு அப்பாவின் மனதைக் கவர வில்லை. மாறாக, அவள் ஒரு பாரம், ஒரு சுமை என்ற எண்ணத்தையே உருவாக்கிக் கொண்டிருந்தார். என்ன துரதிருஷ்டம்.

கணவனது உதாசீனத்தை சட்டை செய்யாமல் அவள் மகளை முற்றுமாகக் கவனித்துப் பேணிப் பாதுகாத்து வளர்க்க ஆசைப்பட்டாள். ஆறுமாத காலம் பாலூட்டி சீராட்டியதோடு சரி. பிறகு...? பெருமூச்சு விட்டவள் மனம் இயந்திரமாகியது.

டிபன் டப்பாக்களைத் தயார் செய்து வைத்து விட்டு உணவைச் சாப்பாட்டு மேஜை மேல் வைத்தாள். காமேசன் சட்டென எழுந்து வந்து மேஜை அருகில் அமர்ந்து கொண்டான்.

தட்டு வக்கலையா? எரிச்சல் மிகுந்த குரலில் கேட்டான். தான் சாப்பிடப் போகும் தட்டைத் தன் கைகளால் எடுத்து வைத்துக் கொண்டால் தேய்ந்தா போய்விடும்? மனதுக்குள் சினந்தபடி, தட்டை மேஜை மீது வைத்து உணவைப் பரிமாறினாள்.

''இன்னிக்கு டாக்டர் ரேவதி, குழந்தைக்கு தடுப்பு ஊசி போடணும்னு சொல்லியிருக்காங்க.''

''அதுக்கு நான் என்ன செய்யணும்?''

''எதுவும் செய்ய வேணாம். கொஞ்சம் சீக்கிரமா வீட்டுக்கு வரணும். ஒரு சமயம், தடுப்பு ஊசி போட்ட பிற்பாடு குழந்தைக்குக் காய்ச்சல் இருக்கும்னாங்க.'' அவள் கவலை தெரிவித்தாள்.

''குழந்தைக்குக் காய்ச்சல்னா தாயார்தான் கவனிக்கணும். நான் என்ன செய்ய முடியும்?'' சட்டெனப் பதிலிறுத்து விட்டு எழுந்து கொண்டான் அவன்.

ஆத்திரத்தால் 'குப்'பென்று முகம் சிவந்தவளாய் சாப்பாட்டுத்தட்டை மேஜையிலிருந்து எடுத்தாள். குப்பைத் தொட்டியில் சோற்றை வீசி விட்டு, தட்டைக் கழுவித் துடைத்து வைத்தாள்.

'தாயார் மட்டும்தான் குழந்தையைக் கவனிக்கணுமா? அப்ப, எதுக்காகத் தாயார் அலுவலகத்திற்கு ஓடி ஓடிச் சென்று சம்பாதிக்க வேண்டும். வீட்டோடயே இருந்து கவனிச்சுக் கொள்ளலாமே.' உரக்கக் கத்திக் கூச்சலிட வேண்டும் என்ற ஆத்திரம் பொங்கியது அவளுக்கு.

''ஆபீஸ்ல ரொம்ப வேலையோ'' கிண்டலாகக் கேட்டாள். காமேசன் அவளை உறுத்துப் பார்த்தான்.

''ஆமாம். சாயங்காலம் நான் வர நேரமாகும். டிபன் டப்பாவை பிளாஸ்டிக் பைக்குள் திணித்துக் கொண்டு வெளியேறி விட்டான்.

மஞ்சுளாவிற்கு அழுகை பொங்கியது. பாயின்மீது உறங்கிக் கொண்டிருந்த பூஜா, கழுவப்படாமல் கிடந்த பாத்திரங்கள், சுத்தம் செய்யப்படாமல் இருந்த சாப்பாட்டு மேஜை, அழுக்குத் துணிகள், பெருக்காத தரை அவளுக்கு தலையைச் சுற்றியது. அவள் ஒருத்திக்கு மட்டும்தான் இந்த வீட்டுப் பொறுப்பா? ஏன் அவளது கணவன், அவளது உரிமையில் பாதி, அவனுக்கு மட்டும் இத்தகைய பொறுப்புகள் பாதிக்கவில்லையா?

இனி நின்றால் நேரமாகி விடும். அலுவலகத்தில் எம்.டி. வரப்போகும் நாள் வேறு நெருங்கிக் கொண்டிருந்தது.



அன்று காலை, புதிய 'பிராஜக்ட்' ஒன்றைப் பற்றி விரிவான திட்டங்களை அவள்தான் ஃபைல் தயாரித்தாக வேண்டும்.

தடுப்பு ஊசி போடுவதைத் தள்ளிப்போட்டு விடலாமா? கூடாது. வளரும் குழந்தை. அதற்குத் தேவையானவற்றை உடனடியாகக் கவனித்தே ஆகவேண்டும். அதை அவள் நிறுத்தப் போவதில்லை.

காரணமின்றி கன்னியம்மாள் மீது கோபம் வந்தது. இப்படியா திடுதிப்பென்று சொல்லாம கொள்ளாமல் வேலைக்கு மட்டம் போடுவார்கள்? அவளைத் தொலைத்துத் தலைமுழுக வேண்டும்.

சுவரில் மாட்டியிருந்த கடிகாரம் எட்டரை மணி என்பதை அறிவித்தது. மஞ்சுளா பறக்க ஆரம்பித்தாள். பாத்திரங்களை வாரி, சமையலறை 'ஸிங்கில்' போட்டு வைத்தாள். மேஜையை சுத்தம் செய்தாள். உணவுப் பொருட்களை குளிர்சாதனப் பெட்டியில் பத்திரப்படுத்தினாள். வீட்டில் கன்னியம்மாள் இருப்பாள் என்ற தைரியத்தில், பிற்பகல் பாலுக்கு ஏற்பாடு செய்திருந்தாள். குழந்தைக்கு புதிய பால் கிடைக்குமே என்ற ஆதங்கம். ஆனால் இன்று பால்கார னுக்கு என்ன சொல்வாள்? பூட்டி இருந்த வீட்டைப் பார்த்துவிட்டுப் போகட்டும்..

அம்மாவை வந்து இந்த வீட்டில் இருக்கச் சொல்ல முடியாது. சட்டென்று அவளுக்கு ஒரு யோசனை பளீரிட்டது. பூஜாவை அங்கு விட்டு விட்டு, அலுவலகம் போகலாம். வரும் வழியில் தடுப்பு ஊசியை முடித்துக் கொண்டு திரும்பி விடலாம்.

குழந்தையைத் தோளில் போட்டவள், பூட்டை இழுத்துப் பார்த்துத் திருப்தி அடைந்தாள். ஒரு தோளில் குழந்தைக்குத் தேவையானவை அடங்கிய பை, மறுபக்கத் தோளில் கைப் பை இத்யாதி. உறங்கும் குழந்தை அவளை அழுத்த, திணறலுடன் பஸ் நிலையத்திற்கு வந்தாள்.

அமிர்தம்மாள் மகளைக் கண்டதும் வியந்து போனாள். ''காலை இந்த நேரத்தில்...'' என்று ஆரம்பித்தவள் மகளின் முகத்தைக் கண்டதும் நிறுத்திக் கொண்டாள்.

''வேலைக்காரி வரலைம்மா. வீட்ல குழந்தையை வச்சுக்கலாம்னா, எனக்கோ லீவு கிடைக்காது. ஆபீஸ்ல ரொம்ப வேலை.''

''குழந்தையை விட்டுட்டுப் போ. நாங்க பாத்துக்க றோம்னா உனக்கு மனசு கேக்க மாட்டேங்குது. நீயே இழுத்துப் போட்டுக்கிட்டு, உடம்பையும் கெடுத்துக்கறே.'' தணிகாசலம் மகளைக் கடிந்து கொண்டார்.

''சரியா சாப்பிடறதே இல்லைபோல் இருக்குது'' அமிர்தம் கூறியபடி பூஜாவை வாங்கிக் கொண்டாள்.

பூஜாவின் பால், ஃபாரக்ஸ் உணவு, பழரசம் தருவது வரை விளக்கிவிட்டு அவள் புறப்பட்டாள். மனதில் பதைப்பு குறைந்திருந்தது. ஒருவேளை அம்மாவிடமே ஒழுங்காகக் குழந்தையை விட்டு விட்டு அழைத்துப் போய் இருக்கலாம். இதேபோலத் திண்டாடி இருக்க வேண்டாம். மனதினுள் குமைந்தபடி புறப்பட்டாள் மஞ்சுளா.

அன்று பிற்பகல் முழுவதும் நிச்சிந்தையாக அலுவலக வேலையிலேயே மூழ்கி இருந்தாள்.

இடைவேளை உணவு சமயம், உமா அவளருகே வந்தாள். ''இன்னைக்கி வெளியே போய் சாப்பிடலாமா?'' என்று கேட்டாள்.

''நேரமாயிடுமே. புது ப்ராஜக்ட் ஃபைல் தயாரிச்சு முடியலே. வேலை குவிஞ்சு கிடக்கு.'' அவள் மறுத்துப் பார்த்தாள்.

''சும்மா வேலை வேலைன்னு கிடந்தீனா உன் உடம்பைக் கவனிக்கிறது யாரு, சும்மா வா...'' காலையில் சரிவர சாப்பிடாத அவசரம் இப்போது பசி உருவில் வயிற்றை கிள்ளியது.

அருகிலிருந்த ரெஸ்டாரண்டில் சென்று அமர்ந்தபோது உமா சொன்னாள். ''அரவிந்தனுக்கு இரண்டு நாளாய் நல்ல காய்ச்சல். இன்றுதான் தேவலை, மனசு ரொம்பத் துடிச்சிட்டேன்.''



''அடடா! இப்ப எப்படி இருக்கான்.''

''ஆபீஸும் வீடும் ஒரே சமயத்தில் கட்டி ஆள முடியுதா? ரொம்பக் கஷ்டமா இருக்குது. நம்ம ஆபீஸ்ல எம்.டி. வரப்போறார்னு சக்கையா வேலை வாங்கறாங்க. வீட்ல என்ன கவனிக்க முடியும். கை கால் எல்லாம் ஓய்ஞ்சு போயிடுது'' உமா சலித்துக் கொண்டாள்.

''அப்ப வீட்ல யாரு பாத்துக்கறது?'' மெல்லக் கேட்டாள் மஞ்சுளா.

''யாரு, எல்லாம் எங்க வீட்டுக்காரர்தான். அவருக்கு நிறைய லீவு இருக்குது. அதனால் லீவு எடுத்திருக்கார். நான் போன பிற்பாடுதான் பாவம் அவருக்கு ரெஸ்ட்'' பலக்க சிரித்தாள் அவள்.

மஞ்சுளாவிற்குச் சற்றுப் பொறாமையாகக்கூட இருந்தது. குழந்தையை டாக்டரிடம் அழைத்துச் செல்ல வேண்டும் என்றபோது காமேசன் எப்படிப் பேசி விட்டான்.

''பாதாம் அல்வா இங்கே ரொம்ப ஜோராக இருக்கும் சும்மா சாப்பிடேன். நீ பணம் தர வேண்டாம். நான் தரேன் உம்'' கிண்டலாகக் கூறினாள் உமா.

''சே! எதற்காகப் பணம் தரணும். நானே தரேன்'' கூறிய படி பாதாம் அல்வாவை வாயில் போட்டவள் கரைந்து போனாள். வாழ்க்கைகூட இப்படி இனிப்பாக இருக்க லாகாதா?

''நானும் காலையில இருந்து உன்னைக் கவனிச்சுக்கிட்டு வரேன் மஞ்சுளா. என்னவோ கவலை புகுந்து கிட்டு மனசை வாட்டுது போலத் தோணுதே? உண்மையா'' உமா அதட்டினாள்.

''கவலைன்னா... கவலைன்னு இல்லே. குழந்தைக்கு தடுப்பு ஊசி போடணும் சமயம் பாத்து உதவிக்குன்னு வச்சிருந்த பெண் பிள்ளை மட்டம் போட்டுட்டா. ஒரே குழப்பம்.''

''அப்ப குழந்தை...''

''அம்மாகிட்ட விட்டுட்டு வந்தேன்.''

''ஏன்? உங்க வீட்டுக்காரர் பாத்துக்கிட மாட்டாரா'' அல்வாவைச் சப்புக் கொட்டியபடி வம்பளந்தாள் உமா.

''பாத்துக்கலாம். ஆனா அவருக்கு நேரம் எங்கே? ஆபீஸ் ஆபீஸ்னு போயிடறார். நானும் அப்படியே இருக்கறதால வாயை மூடிக்க வேண்டி இருக்குது'' சலித்தாள் மஞ்சுளா.

''அப்ப பேசாம அம்மா வீட்ல குழந்தையை விடு. சரியான வேலையாள் கிடைச்ச பிறகு குழந்தையைக் கூட்டிக்கிட்டு வரலாம். அதுதான் நல்லதுன்னு நான் நினைக்கிறேன்.''

அலுவலக ஆசனத்தில் அமர்ந்தபோது அவள் மனதில் ஒருவிதத் தீர்மானம் உருவாகி இருந்தது.

டாக்டர் ரேவதியிடமிருந்து குழந்தையுடன் வீடு திரும்பும் வழியில் அமிர்தம்மாள், ''பேசாம குழந்தையை இங்கேயே விட்டுட்டுப்போ. ராத்திரி காய்ச்சல் வந்து குழந்தை அவதிப்பட்டா, நீதான் தூக்கம் முழிக்கணும். காலையில் ஆபீஸுக்கு வேற ஓடணும். அதனால் நீ மட்டும் போய் வீட்டைக் கவனி'' என்று கண்டித்து கூறி விட்டாள்.

மஞ்சுளா வீட்டை அடைந்தபோது மணி ஏழுக்கு மேலாகி விட்டிருந்தது. கதவைத் திறந்து வீட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்தாள். சமையலறைப் பாத்திரங் களைக் கழுவித் துடைத்து வைத்தாள். அழுக்குத் துணிகளைத் தோய்த்து அலசிப்பிழிந்து உலர விட்டாள். உணவுப் பண்டத்தை சூடாக்கி, சாப்பாட்டு மேஜை மீது பரப்பும் பொழுது மணி ஒன்பதைத் தாண்டி இருந்தது.

அதுவரையும் வீடு திரும்பாத கணவனிடம் அவளுக்குக் கடுங்கோபம் வந்தது. தட்டுக்களைத் தயாராக வைத்து விட்டு அமர்ந்திருந்தாள் அவள்.

காமேசன் வீடு திரும்பியபொழுது ஒன்பதரையைத் தாண்டி விட்டது. கை கால் முகம் கழுவி, வேறு உடையை



மாற்றிக்கொண்டு வந்தவனுக்கு ஏதோ ஒரு வேற்றுமை உள்ளூர உணர்த்தியது.

மஞ்சுளா கோபத்தினால் மௌனம் சாதித்தாள். உணவைப் பரிமாறிவிட்டு, அவளும் சாப்பிட அமர்ந்தாள். டாக்டரிடம் ஊசி போட்டாகி விட்டதா? குழந்தையை என்ன செய்தாய்? வேலைக்காரிக்கு என்ன ஆயிற்று? ஏதேனும் கேட்பான் என்று எதிர்பார்த்தவளுக்கு ஒரே எரிச்சல்.

''என்ன மனிதர், வேளாவேளைக்கு சாப்பிட வேணும். அந்தச் சாப்பாட்டுச் செலவு எப்படி நடக்கிறது என்று அறிந்து கொள்ளக்கூடப் பிரயத்தனப்படாத ஆசாமி...!'' பற்களை கடித்துக் கொண்டாள்.

காமேசன் தொண்டையைச் செருமிக் கொண்டான்.

''குழந்தை தூங்குதா?''

''போகட்டும். அந்த மட்டுமாவது கருணை இருக்கிறதே' மனதினுள் குமுறினாள் மஞ்சுளா. ''அம்மா கிட்ட விட்டுட்டு வந்தேன். இங்கே ஆள் சரியா இல்லே. ஆபீஸ்ல வேலைத் தொல்லை. அதனால்...'' மெல்ல நிறுத்தி விட்டு, சாப்பாட்டுத் தட்டைக் கழுவும் சாக்கில் எழுந்து விட்டாள்.

வாஷ் பேஸினில் கை கழுவும்போது அவள் கண்கள் குளமாயின. பணம் என்ற பேராசையினால், பாசம்கூட இரண்டாம் இடத்திற்குத் தாவி விடுமா? கை நிறைய வாங்கும் கூலிக்காக, மடி நிறையத் தழுவும் மழலையைப் பிரிந்து, இதென்ன வாழ்க்கை. எத்தனை நாட்களுக்கு இப்படி ஒரு போராட்டம்...?

''உங்கம்மா கிட்டயே குழந்தையை விட்டு வச்சா நல்லதுதானே?'' காமேசன் மெதுவாகக் கேட்டபடி அருகில் வந்தான்.

''நாம பெத்த குழந்தையை அவங்க எதுக்கு வளத்து சிரமப்படணும். பொறுப்பு நம்மதுன்னு ஏன் உங்களுக்குப் புரியறதில்லே'' சிறிது சினத்துடன் வினவினாள் மஞ்சுளா.

''அதுக்குத்தான் முதலிலேயே உனக்கு எடுத்துச் சொன்னேன். நீ பிடிவாதமா இருந்தே, இப்ப அவஸ்தைப் படறே.''

கணவனது இரக்கமற்ற வார்த்தைகள் அவள் மனதைச் சுட்டன. ''நாம குழந்தையைப் பார்க்கறதுக்கு ஒரு நல்ல ஆள் பாத்து ஏற்பாடு செய்திட்டா போதுமே'' பிடிவாதம் தொனித்தது அவள் குரலில்.

''செய்'' காமேசன் கவலை இன்றி உறங்கப் போனான். அவள் கவலைகளில் உறங்க மறுத்தாள்.

## 5

மஞ்சுளாவிற்கு அலுவலகத்தில் இருப்புக் கொள்ள வில்லை. மணி ஆறடித்து விட்டது என்றதும் உள்ளத்தில் ஒரு பரபரப்பு. ஆனாலும் அலுவலகம் முழுவதும் ஜரூராக வேலையில் இருக்கும்பொழுது... அதிலும் அவளைப் போன்ற பொறுப்பான பதவியில் அமர்ந்திருப்பவள் ஓடிவிட முடியாதே.

குழந்தையை சிந்தாதிரிப்பேட்டையிலிருந்து வீட்டிற்குக் கொணருமுன், உதவிக்கு ஆளைப்பேசி அமர்த்தி இருந் தாள். பூமா பார்க்க ஒடிய ஒடிய உயரமான பெண். இளம் வயது. குணத்தில் நல்லவள் என்றும், அவள் கணவன் அவளைச் சரிவரப் பராமரிப்பதில்லை என்றும், கூட வந்தவள் கூறினாள்.

கன்னியம்மாள் தனக்கு உடல் நலம் இல்லை என்று போக்குக் காட்டி, சம்பளத்தைத் தீர்த்துக் கொண்டு போனாள். சின்னப் பெண், சுறுசுறுப்பாக வேலை செய்கிறாள். குழந்தையைப் பொறுமையுடன் அன்பாகக்



கவனிக்கிறாள். பூமாவிடம் திருப்தியடைந்த மஞ்சுளா சற்று நிம்மதியடைந்திருந்தாள்.

வீட்டு வேலைகளில் கூடமாட உதவிக்கும் பூமா வந்து கொண்டிருந்தாள். காமேசன், எப்போதுமே மஞ்சுளா வந்த பிறகுதான் அலுவலகத்திலிருந்து திரும்புவது வழக்கம். ஆனால், மஞ்சுளா முன்னதாக வந்து, பூமாவை வீட்டிற்கு அனுப்பி வைக்க முடிந்தது.

அன்று ஆறு அடித்தும் அலுவலகம் இயங்கிக் கொண்டிருந்தது. மறுவாரம் எம்.டி.யின் வருகையின் பரபரப்பு யாவரிடமும் தெரிந்தது. மஞ்சுளா முள் மேல் இருப்பவளைப் போலத் தவித்துக் கொண்டிருந்தாள்.

காமேசன் வீடு திரும்பி இருப்பான். குழந்தை என்ன செய்கிறானோ? மழைக்காலம் துவங்கிவிட்டதன் அறிகுறி யாக, குழந்தைக்கு அவ்வப்போது மார்புச்சளி, இருமல் என்று ஏதாவது ஒன்று மாற்றி ஒன்று வந்து கொண்டிருந்தது. எதற்கெடுத்தாலும் சிந்தாதிரிப்பேட்டைக்கு ஓட முடியுமா?

காலையில் புறப்படும்போதே பூமா கூறினாள் ''இன்னைக்கி எனக்குக் கொஞ்சம் சீக்கிரம் போகணும்மா. வீட்ல வேலை இருக்குது.''

''அதுக்கென்ன? நான்தான் ஐந்தரைக்கெல்லாம் வந்திடுவேனே. நீ போகலாம்'' சமாதானப்படுத்தினாள் அவள். ஆனால் சோதனையாக இதென்ன?

''மேடம்! மானேஜர் ஐயா கூப்பிடறாரு'' ஆபீஸ் பையன் கூப்பிட்டதும், சலிப்புடன் எழுந்து மானேஜர் அறைப் பக்கம் நுழைந்தாள்.

''ரொம்பக் கஷ்டப்பட்டு வேலை செஞ்சிருக்கீங்கன்னு தெரியும்மா. யு ஆர் க்ரேட். இந்த ப்ராஜக்ட் ரிப்போர்ட் ஃபைல், ரொம்ப நல்லாவே இருக்குது. கன்கிராட்ஸ்.'' மானேஜர் உற்சாகமாகப் பாராட்டினார்.

மஞ்சுளா ஒப்புக்குச் சிரித்தாள். உண்மையாக மனம் விட்டு சிரிக்கும் நிலையில் அவள் இல்லையே. ஒவ்வொரு

பெண்களின் இதயத்திலும் வீடு, குடும்பம், கணவன் என்ற வட்டத்தையல்லவா இறைவன் போட்டு வைத்திருக்கிறான். அந்த வட்டத்திற்குள் சுற்றிச் சுற்றி வரும் நாய்க்குட்டி போல பெண் வளைய வந்து கொண்டிருக்கிறாள். அதை விட்டு வெளியே வந்து சாதனைகளை அவள் புரிந்தாலும், அவளது மனதில் ஏன் அப்படி ஒரு குற்ற உணர்வு முள்ளாய் உறுத்துகிறது! குழந்தையைக் கவனிக்கவில்லை. வீட்டை புறக்கணிக்கிறோம். கணவனைப் பராமரிக்க இயலவில்லை. இதெல்லாம் ஒரு பெண்ணுக்கு மட்டும்தான் பொறுப்பானவையா? குடும்பத் தலைவன் என்ற ஆணுக்கு மட்டும் இல்லையா?

வீட்டினுள் சென்று கணவனிடம் ஆபீஸில் கிடைத்த பாராட்டுக்களைத் தெரிவிக்க வேண்டும். ஒரு சமயம் அதைக் கேட்டு அவன் மனம் மகிழலாம்.

''தாங்க்யூ'' ஒரே வார்த்தையில் வெளியே வந்தாள்.

வீட்டினுள் காலடி எடுத்து வைத்ததுமே பூஜாவின் அழுகையும் அலறலும் அவளை உள் பக்கம் ஓடச் செய்தன.

அழுது அழுது குழந்தை திணறிக் கொண்டிருந்தாள். காமேசன், குழந்தையைத் தோளில் போட்டபடி முன்னும் பின்னுமாக புலி போல் உலாத்திக் கொண்டிருந்தான்.

கைப் பையை, சாப்பாட்டு மேஜை மீது வீசிவிட்டு, குழந்தையை அள்ளி எடுத்துக் கொண்டாள். ''என் ராஜாத்தி ஸ்வீட்டியம்மா. ஏன் அழறே, அம்மா வந்திட்டேனே'' என்றபடி குழந்தையை ஆசையுடன் அணைத்தாள்.

தாயின் ஸ்பரிசம் பட்டதும், சட்டென அழுகையை நிறுத்தியது குழந்தை. ''பூமா போய்ட்டாளா?''

மனைவியை முறைத்துப் பார்த்தான் காமேசன். ''அவ அஞ்சரை மணிக்கே போயிட்டா. இன்னைக்கி சீக்கிரமா போகணும்னு சொல்லிட்டிருந்தாளாம்.''

''ஆமா, எனக்கு ஆபீஸ்ல வேலை முடியலையே.''



'என்னைக்குத்தான் வேலை முடிஞ்சிருக்குது' குத்தலாகக் கூறினான் காமேசன்.

''எங்க எம்.டி. வராரு. அதனால எல்லோருக்குமே வேலை ஜாஸ்தி இருந்திச்சு. நான் மட்டும் புறப்பட்டு ஓடி வந்திட முடியுமா என்ன?''

''ஓடி வரவேணாம். ஆபீஸ்லேயே தூங்கிட்டு வா. ஆனா, குழந்தையை இப்படி விட்டுட்டுப் போகாதே. நான் இன்னைக்குக் கொஞ்சம் முன்னால் வந்தேன். வேலைக்காரிக்குப் போக முடிஞ்சது. இல்லாட்டி.''

''நீங்க வந்தாச்சில்ல. அவளை அனுப்பிட்டு குழந்தையை பார்த்துக்க வேண்டியதுதானே?''

''உனக்கு வர, வர ரொம்பத் திமிர் அதிகமாகிகிட்டு வருதுன்னு நினைக்கிறேன். இல்லாட்டி, குழந்தையை பார்த்துக்க வேண்டியதுதானேன்னு கேக்குறியே, ஹூம்'' கொதித்தான் அவன்.

''இதில் என்ன தப்பாம்'' அலுப்புடன் சீறினாள் அவள்.

''எங்கம்மா ஒருக்காலும் எங்கப்பாகிட்டே இப்படிப் பேசினதில்ல. அவங்க கண்டிப்பும் கராரும் ஆனவங்கதான். ஆனா அத்தனை குழந்தைகளையும் அவங்களே கவனிச்சாங்க''

அவளது பொறுமை எல்லை மீற ஆரம்பித்தது. ''உங்கம்மா ஆபீஸ் போகலை. வீட்ல இருந்தாங்க.''

''என்ன சொல்றே நீ'' அதட்டினான் காமேசன்.

''நான் ஆபீஸ் போறேன். வேண்டாம்னு சொல்லுங்க விட்டுடறேன். வீட்டோட கிடக்கறேன்.''

''பேச்சு அதிகமாகுது. முதல்ல, தவணை முறைக் கடனையெல்லாம் முடிச்சிட்டுப் பேசு.''

ஒவ்வொரு முறையும் அவள் வாங்கிய தவணை முறைப் பொருட்களை சுட்டிக்காட்டி அவளை இடித்துரைப்பதே

அவனுக்கு வழக்கமாகி விட்டிருந்தது. மாதாமாதம் அவனது வருமானத்தில் கணிசமான பகுதி ஊருக்கு அனுப்பப்படுவதை அவள் சுட்டிக்காட்டினால்... புயல் வீசும்.

வீடு என்பது அவளது சுமை. அவனுக்கு அவனது மனிதர்களது சுமை, ஒரு கடமையா? வெறுப்புடன் குழந்தையை படுக்கை அறைக் கட்டிலில் கிடத்தினாள்.

இரவு சாப்பாடு முடிந்ததும் வழக்கம்போல் அவன் உறங்கச் சென்று விட்டான். அலுவலகத்தில் என்ன நடந்தது என்று சொல்லக்கூட அவளுக்கு நேரம் கொடுக்கவில்லை.

சலிப்பும் சோர்வுமாக, சமையலறையை சுத்தம் செய்தாள். விளக்கை அணைத்து விட்டு முன்னறைக்கு வந்தவள் கண்களில் சோபாவின் மீது கிடந்த கடிதம் தென்பட்டது.

உறையின் மேல், காமேசனது அலுவலக விலாசம். மெல்லக் கடிதத்தை உருவிப் பிரித்தாள். அவனது தாயாரின் கடிதம். வழக்கம்போல பெரியவள், சின்னவள், தம்பி ஆகியோரின் நலனுக்காகப் பணம் கோரி ஒரு கடிதம். பரிமளா இரண்டாவது பிரசவத்திற்கு வருவதால் பணம் கொஞ்சம் கூடுதலாகத் தேவை என்றும் குறிப்பிட்டிருந்தாள்.

கடிதத்தை மடித்துப் பழையபடி உறையில் இட்டவளுக்கு எரிச்சல் வந்தது. பணம், பணம் பணம் அவர்கள் வீட்டுக் குழந்தை பிறக்க, இங்கிருந்து பணம் அனுப்பியாக வேண்டும். இந்த வீட்டுக் குழந்தைக்கு எங்கிருந்து பணம் வரும்? எத்தனை சுயநலமான மனிதக் கும்பல்? இதில் போய், திருமணம் என்ற பெயரில் சிக்கியதே தவறோ? குழந்தை என்ற பாசத்தையும் உருவாக்கியது அதைவிடத் தவறோ? மனம் குழம்பிப் போனாள் அவள்.

ஆரம்ப காலங்களில் காமேசன் அவளிடம் எத்தனை ஆசையாக இருந்தான்! மஞ்சு! மஞ்சு!'' என்று சதா கூப்பிட்டபடியே இருக்கும் அவனுக்கு இப்போது என்ன



ஆயிற்று? அவர்களது அன்பின் சின்னமாக விளங்க வேண்டிய குழந்தை அன்பைச் சின்னாபின்னம் செய்யவா தோன்றியது?

பல்வேறு எண்ணங்களுடன், தூக்கமின்றிப் புரண்டு கொண்டிருந்தாள் மஞ்சுளா.

மறுநாள் காலை வழக்கம்போல எழுந்ததும் காமேசன் அவளிடம் அதிகம் பேசவில்லை. அவள் அதைப் பாராட்டாதவளைப் போல நடந்து கொண்டாள். சமையல் முடிந்து, டிபன் டப்பாக்கள் தயாரானதும், பூமா வந்து விட்டாள்.

''குழந்தையைப் பார்த்துக்க பூமா நான் சேலையை மாத்திக்கிட்டு வரேன்.''

''உங்ககிட்ட பேசணும்மா'' பூமா தயங்கியபடி கூறினாள். உள்ளே செல்லத் திரும்பிய மஞ்சுளா நின்றாள்.

''சொல்லு.''

''என்னை சாயரட்சையில ரொம்ப நேரம் நிறுத்தாதீங்க. எங்க வீட்டுக்காரர் திரும்பு முன்னே நான் போகணும்மா. நேத்து ரொம்ப கோவிச்சுக்கிட்டாரு.''

''உன் புருஷன் தான் சரிவர சாப்பாடு கூடப் போடறதில்லேன்னு சொன்னே'' மஞ்சுளா முடிக்குமுன் அவள் குறுக்கிட்டாள்.

''அதனால் எனக்குப் புருஷன் இல்லேன்னு ஆயிடுமாம்மா. நல்லா சொன்னீங்க'' வெற்றிலைக்காவி ஏறிய பற்களைக் காட்டினாள் பூமா.

காமேசன் உள்ளூர மகிழ்ச்சியடைந்தான். புல்லானாலும் புருஷன், கல்லானாலும் கணவன் என்று நினைக்கிற பெண் இவள். மஞ்சுவுக்கு இவளைப் பார்த்தாவது புத்தி வரட்டும்!

முதல் நாள் மாலை தங்கதுரை சொன்னது அவன் நினைவில் உறுத்தியது. ''திருமணம் என்பது ஒரு பெண்

ணுக்கு விரைவாக நடக்கணும். ஆனால் ஆணுக்கு மெள்ளத்தான் நடக்கணும்.''

''பாவி மனுஷா! எனக்கு மட்டும் கால் கட்டுப்போட அன்னைக்கு எப்படியெல்லாம் பகட்டாகப் பேசினீர்'' உரக்கக் கத்த வேண்டும்போல் இருந்தது. ஆனால் அதே சமயம், அவர் கூறிய ஒரு கருத்தை அவன் ஒப்புக் கொள்ளத் தான் வேண்டி இருந்தது.

மஞ்சுளாவைப் போன்ற கவர்ச்சியான பெண்கை நிறைய வருமானம் உடையவள், மனைவியாகக் கிடைத்தது அவனது பாக்கியம்தான். அவள் கிடைத்திருக்காவிட்டால் ஊருக்குக் கவலை இன்றிப் பணம் அனுப்பி இருக்க முடியுமா? வீட்டில் அவனது வசதிகள் பெருகி இருக்குமா? நண்பர்களுடன் ஒரு லாட்ஜ் அறையில் ஒரு ஓரத்தில் முடங்கிக் கொண்டு வாழ்க்கையைக் கழித்திருக்க நேர்ந்திருக்கலாமே. அம்மாவின் கடிதம் அவனை வெகுவாகப் பாதித்திருந்தது. திருப்தி எனபதே இல்லாத ஒரு பிறவி அம்மா. அதிலும் பண விஷயத்தில் எப்போதுமே அம்மாவிற்குப் பற்றாக்குறை பல்லவிதான்.

இத்தனை எரிச்சல்களுடன் வீடு திரும்பியவனுக்கு பூஜாவின் அழுகையும் வேலைக்காரியின் அவசரமும், ஆத்திரத்தைக் கிளப்பியதில் வியப்பில்லை. அதை யார் மீது காட்டுவது? மஞ்சுளாதான் கிடைத்திருக்கிறாளே.

காலையிலேயே மனைவியிடம் கண்டித்துக் கூறிவிட வேண்டும் என்ற கோபம் அவனுக்கு. ஆபீஸ் வேலை என்ற சாக்கில் அரட்டை அடித்துக்கொண்டு நிற்கும் சில பெண்களை அவன் பார்த்திருக்கிறான்.

காப்பியைப் பருகிவிட்டு, குளியலை முடித்துக் கொண்டு வந்து விட்டான். மஞ்சுளா, குழந்தையைக் குளிப்பாட்டி, மாற்றுடை அணிவித்தாள். பூமா கையில் குழந்தையைக் கொடுத்தபின், இதர வேலைகளை அவசரமாகச் செய்து முடித்தாள்.



''ஆபீஸ்ல எம்.டி. வர்ராருங்கறதாலே...'' மெல்ல அவள் ஆரம்பித்ததும் அவன் கோபமாகப் பார்த்தான்.

''எம்.டி. வரார், எம்.டி. வரார்... வரட்டுமே உனக்கென்ன ஆச்சு. பேசாம அஞ்சு மணிக்கே நாற்காலியை விட்டு எழுந்து வர வேண்டியதுதானே. அதை விட்டுப்புட்டு ஆபீஸ்ல அரட்டைக் கச்சேரி நடத்திட்டிருந்தா...''

''அரட்டையா? நானா?'' அரண்டு போனாள் அவள்.

''பொறுப்பு இருக்கணும். வீடு திரும்பணுமே. குழந்தை அழுதா வீட்ல யாரும் இல்லையே. வேலைக்காரி கையில் குழந்தையை விட்டிருக்கமேன்னு கருத்து வேணும்.''

''கருத்தில்லாமல்தான், இப்படி பேயாட்டம் அலைய றேன்'' அழவேண்டும்போல இருந்தது அவளுக்கு.

''இன்னும் ஒரு வாரத்திற்கு நான் வர லேட்டாகும். பூமா வீட்டுக்குப் போகட்டும். நீங்க கொஞ்சம் கவனிச்சு கொண்டா போதும்'' உள்ளூரப் பொருமியபடி மெதுவாகக் கேட்டாள் அவள்.

''மழை நாளு. சீக்கிரமா இருட்டிடுது. நினைப்பு வச்சுக்க.''

குழந்தைக்கு டாடா காட்டி விட்டு அவள் புறப்பட்ட போது மனம் சற்று சமாதானமடைந்திருந்தது. சிறிது பொழுதில் அவனும் அலுவலகத்திற்கு புறப்பட்டு விட்டான்.

அலுவலக வாயிலில் அவனை வரவேற்ற தங்கதுரை இலேசாக சிரித்தார். ''குட்மானிங், என்ன இது? வெளியே போய் சாப்பிடாம, எப்பவும் டிபன் டப்பாவோட வர்றீங்க...''

''வீணா ஓட்டலுக்கு செலவழிப்பானேன்னுதான்'' அவன் மழுப்பலாகச் சிரித்தான்.

''ரெண்டு என்ஜின் ஓடுது. எங்களைப் போலவா ஒருத்தரே சம்பாதிச்சி அத்தனை பேரும் உட்கார்ந்து திங்கறதுக்கு. நீங்க ரெண்டுபேர் சம்பாதிக்கிறீங்க. ஜாம் ஜாம்னு இருக்கலாமே...''

'ரெண்டுபேர் சம்பாதிக்கிறோம். ஆனா ஒருத்தர் வருமானத்தில் மட்டுமே வாழ்கிறோம். மற்றவர் வருமானத்தில் பெரும் பகுதி கிராமத்துக்குப் போய் விடுகிறது' என்ற உண்மையை அவனால் கூற முடியவில்லை.

அன்று மாலை வீடு திரும்பியவனுக்கு புதிய சோதனை ஆரம்பமாகியிருந்தது.

''குழந்தைக்கு உடம்பு கொதிக்குதுங்க. டாக்டர் கிட்ட எடுத்துக்கிட்டுப் போய் மருந்து வாங்கிட்டு வந்தேன்.'' பூமா மருந்து புட்டிகளை அவனிடம் காட்டினாள். ''இந்தாங்க டாக்டர் குடுத்த மருந்து சீட்டு. நான் வரேன்'' கிளம்பி விட்டாள்.

வாடிய மலரைப்போல படுக்கையில் கிடந்த குழந்தையைப் பார்த்ததும் அவன் ஒரு கணம் வேதனையில் ஆழ்ந்தான். இந்தப் பிஞ்சு உயிருக்கு எதற்காக இப்படி ஒரு தண்டனை?

பெற்ற தாயும் அருகிருந்து கவனிக்க முடியாமல் அவனும் உதவ வகையில்லாமல்- பலவாறு யோசித்தபடி அமர்ந்திருந்தான் காமேசன்.

வெளியே மழை இலேசாகத் தூற்றல் போடத் துவங்கி இருந்தது. அவர்கள் குடியிருப்புப் பகுதியில் இடி, மின்னல் தோன்றியதும், மின்சாரம் துண்டிக்கப்பட்டு விடுவது வழக்கமாகி இருந்தது. ஒரு சமயம் மின்சாரம் நின்று விட்டால், மஞ்சுளா எப்படி வீடு திரும்புவாள்? குழந்தைக்கு உடம்புக்கு அதிகமாகி விட்டால் டாக்டரிடம் எப்படிச் செல்வது? முதன் முதலில் அவன் கவலைப்பட ஆரம்பித்தான்.



காலடி ஓசை கேட்டதும் நிமிர்ந்தான். வாயில் கேட்டருகில் மஞ்சு. எழுந்து சென்று கதவைத் திறந்தான். குற்றம் குறுகுறுக்க, குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

முகம் கழுவித் துடைத்து உட் பக்கம் வந்தவளிடம், ''குழந்தைக்கு நல்ல காய்ச்சல்'' என்றான் சினம் ததும்பும் குரலில்.

''காய்ச்சலா?'' அதிர்ந்து போனாள் அவள்

# 6

அலுவலகத்தை விட்டு, வெளியே இறங்கும்போதே கடுமையான மழை பிடித்துக் கொண்டு விட்டது. மஞ்சுளா அவசரமாக வீடு திரும்பும் அவசரத்தில் இருந்தாள். ஆட்டோ ரிக்ஷாக்கள்கூட வர மறுத்து விட்டன.

''மழை நிக்கட்டுமே'' உமா சொல்லியும் அவள் கேட்கவில்லை. காலையில்கூட, காய்ச்சலில் கண்ணைத் திறக்காமல் கிடந்த பூஜாவை எண்ணியபடியே மனம் புலம்பியது.

காலையில் புறப்படும்போதே காமேசன் கண்டித்துக் கூறி விட்டிருந்தான். ''பூஜாவுக்கு இன்னமும் காய்ச்சல் இறங்கவில்லை. மூணுநாள் மருந்து கொடுக்க வேணும்னு டாக்டர் சொல்லி இருக்காராம். பூமா சொன்னாள்.''

''அப்படியா'' கலக்கத்துடன் குழந்தையருகில் சென்று தொட்டுப் பார்த்தாள். இரவு முழுவதும் கண் விழித்த களைப்பு, முதல் நாள் ஆபீஸின் வேலையின் கடுமை, யாவுமாக அசதியுடன் இருந்தாள்.

''இன்னைக்கு நீ லீவு போட்டுடு. யாராவது ஒருத்தர் குழந்தை பக்கத்தில் இருக்கிறது நல்லது'' அவள் திடுக்கிட்டுப் போனாள்.

மறுநாள் அவர்கள் அலுவலகத்தின் எம்.டி. வருகிறார். இன்றைக்குப் போகா விட்டால்நிலைமை என்ன ஆகும்? இங்கோ, குழந்தை கண்ணைத் திறக்காமல் கிடக்கிறாள். பெற்றோர்கள் கவனிப்பின்றி, வேலைக்காரி கையில் உடம்பு சுகமில்லாத குழந்தையைக் கொடுத்து விட்டு, எப்படிப் போக முடியும்?

தவிப்புடன் கணவனைப் பார்த்தாள். அவளுக்கு மட்டும் குழந்தையருகில் அமர்ந்திருக்க வேண்டும் என்ற ஆசையில்லையா என்ன?

''இதோ பாருங்க. இன்னைக்கு எனக்கு லீவு எடுக்க முடியாது. கேட்டாக்கூட தரமாட்டாங்க; என்னால'' அவள் முடிக்குமுன் அவன் ஆத்திரத்துடன், ''எம்.டி. வராரு, அதானே'' என்றான்.

''எதுக்காக இப்படிக் கோபப்படறீங்க?''

''கோபமில்லாம சிரிப்பா வரும். ஒருவேளை நானே செத்திடறேன்னு வச்சிக்க.''

அவள் துடித்துப் போனாள். ''ஏன் இப்படி கண்டபடி பேசறீங்க. அதிலயும் குழந்தைக்கு உடம்பு காய்ச்சல்னு இருக்கும்போது...''

''அவ்வளவு அக்கறை இருக்கறவ, லீவு எடுத்திருக் கணும்'' கடுகடுத்து விட்டு உள்ளே சென்றான்.

''ஏன் இந்த ரெண்டே நாள் நீங்க லீவு போட்டுட்டு குழந்தையைக் கொஞ்ச நேரம் பார்த்துக் கொள்ளக் கூடாதா?''

''என்ன சொன்னே? எனக்கு வேறவேலை இல்லேன்னு நினைச்சியா?''

அவள் விக்கித்துப் போனாள். அக்கறையைப் பற்றி பேசினானே, அவனுக்கு மட்டும் குழந்தை மீது அக்கறை இல்லையா? மேலும் அவளது நிலைமையைப் புரிந்து கொண்டு, அவன் ஒத்துழைப்பு தருவான் என்றல்லவா அவள் எதிர்பார்த்தாள்.



''குழந்தையைப் பெற்ற தகப்பன் என்ற முறையில் அவன் இதுநாளும் ஆற்றிய கடமைதான் என்ன? இருக்கிற வேலைகளுடன் இன்னமும் அவனால் எதுவும் செய்ய முடியாது என்று திட்டவட்டமாகவல்லவா கூறுகிறான்.''

அவன் பேசாமல் தன் வேலைகளை முடித்துக் கொண்டு அலுவலகம் கிளம்பிச் சென்று விட்டான். அதிகம் வற்புறுத்தினால் வேண்டும் என்றே வீட்டிற்கு நேரம் கழித்து வந்தாலும் வருவான்.

அம்மாவிடம் கொண்டு குழந்தையை விடலாமா? யோசனை செய்தாள். குழந்தையைப் பார்க்கும் டாக்டர் இங்கே பக்கத்துத் தெருவில் இருக்கிறார். அதைவிட்டு சிந்தாதிரிப்பேட்டைக்குப் போனால் அம்மாவிற்குத்தான் சிரமம். அத்துடன் டாக்டரிடம் குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஓட அப்பாவால் இயலுமா? சிந்தித்தபடி, வேலைகளை முடித்தாள்.

மனதினுள் வேதனை பிடுங்கித் தின்றது. மெல்லக் குழந்தையருகில் வந்து எட்டிப் பார்த்தாள். ''என் கண்ணே! பணம் என்ற பித்துப்பிடித்து, அம்மா ஓடிக் கொண்டிருக் கிறாள் என்று நினைக்காதே. வேறு வழியில்லாம நான் உன்னை இப்படி விட்டுட்டுப் போய்ட்டு வர்றேன்'' மனதினுள் பேசியபடி, ஸ்வாமி விளக்கின் அருகில் வைத்திருந்த திருநீற்றுப் பொட்டலத்தை எடுத்து வந்தாள்.

பூஜாவின் நெற்றியில் திருநீறு பூசியபோது குழந்தை கண்ணைத் திறந்து பார்த்தாள். ''காய்ச்சல் கொஞ்சம் குறைஞ்சிருக்கம்மா. கவலைப்படாம போய்ட்டு வாங்க நான் பாத்துக்கறேன். சாயராட்சை மட்டும்...'' பூமா இழுத்தாள்.

''நிச்சயம் உன்னை வீட்டுக்கனுப்பிடறேன். எதுக்கும் எங்கம்மாவுக்கும் சேதி சொல்லிட்டா, ஒரு சமயம் அவங்ககூட இங்கே வருவாங்க'' கவலையுடன் சொன்னாள் மஞ்சுளா.

''எதுக்காக அவங்களையெல்லாம் அல்லல் படுத்தறீங்க. டாக்டர்தான் சொல்லிட்டாரே, இது வெறும் சளி, காய்ச்சல்னு. மருந்து குடுத்திடறேன்.''

''நான் என்ன செய்வேன் பூமா. இன்னைக்கும் நாளைக்கும் ஆபீஸ் போகாம முடியாது. எதுக்குடா வேலைக்குப் போறோம்னு இருக்குது'' அங்கலாய்த்தாள்.

''படிச்சவங்க நீங்கள்ளாம் இப்படிச் சொல்லிட்டா எப்படி?''

''இல்லே பூமா, படிச்சாலும், வேலைக்குப் போனாலும் பொம்பிளைகளுக்கு சுதந்திரமே கிடையாது. சொல்லப் போனா வேலைக்குப் போறவங்களுக்கு இரண்டு பங்கு தண்டனை. வீட்டுப் பொறுப்பு, அதில் படற இடி, இம்சை எல்லாத்தையும் பொறுத்துக்கணும். ஆபீசுக்குப் போனா அங்கே மத்த ஆம்பளைங்க செய்யற கேலி, அதிகாரம் எல்லாத்தையும் சகிச்சுக் கொள்ளணும். இதைவிட உன்னாட்டமா இருந்திருக்கலாம்'' மஞ்சுளா சிரித்தாள்.

''என் குறையே... எம் புருஷன்காரன் ஒரு தினுசும்மா. எனக்கு ஒழுங்கா சோறு தண்ணி குடுக்காட்டியும் அதிகாரத்துக்குக் குறைச்சல் இல்லே, தெரியாம சொல்றீங்களே.''

மஞ்சுளா பெருமூச்சு விட்டாள். அவள் கதியும் அதே தானா? படிக்காமல் உழைத்து வேலை செய்யும் பூமாவானாலும், பட்டம் பெற்று அலுவலகத்தில் பணியாற்றும் மஞ்சுளாவானாலும் பெண்களின் நிலை ஒன்றுதானா? ஆண்கள் யாவரும் ஒரே ரகம்தானா? உமாவின் நினைப்பு வந்தது. அவளது கணவர் அப்படி அல்லவே.

எத்தனையோ முறைகளில் உமா அவளது கணவனைப் பற்றிப் புகழ்ந்திருக்கிறாள். ''எனக்கு ஒரு தலைவலின்னாலும் அவரால் பொறுத்துக்க முடியாது. உடனே மருந்தை சாப்பிடுன்னு தொல்லை செய்திடுவார். வீட்ல வேலை செய்ய விடமாட்டார். அரவிந்தனுக்கு ஒரு சமயம்,



பொன்னுக்கு வீங்கி வந்துட்டது. வீட்ல உதவிக்கு யாரும் இல்லே. எனக்கு ஆபீஸ்ல 'ஆடிட் இன்ஸ்பெக்ஷன்' சமயம் லீவே தரமாட்டேனிட்டாங்க. பாவம் பதினைஞ்சு நாள் லீவு போட்டுட்டு அவர்தான் வீட்ல கவனிச்சுக்கிட்டாரு. ஒரு குடும்பம்னா, ஒத்தருக்கொருத்தர் விட்டுக் குடுக்காட்டி இப்படி வேலைக்கெல்லாம் வர முடியுமா?''

'என் கணவருக்கு வேலையும் வேணும். அதில் நான் கொண்டு வரும் கணிசமான தொகையில் வசதியாக வாழவும் வேணும். ஆனால் ஒத்துழைக்க முன்வராத எஜமானர். உள்ளத்தில் கொதிக்கும் வார்த்தைகளை உதட்டைக் கடித்து விழுங்கிக் கொண்டாள்.'

''பேசாம உங்கம்மா கிட்டயே பூஜாவை விட்டுட்டு ஆபீஸ் வரதுதானே. நிம்மதியாக வேலை செய்யலாம். வேலையாள் கையில் குழந்தையை விட்டுட்டு, எப்படி நிம்மதியா இருக்க முடியும். இந்தக் காலத்தில் எத்தனையோ கதைகளைக் கேக்கறோம். பத்திரிகையில் படிக்கிறோம். நம்ப முடியறதில்லியே'' என்று மற்றொருத்தி கூறும்போது பயத்தால் உடல் சில்லிட்டுப் போவாள் மஞ்சுளா.

குழந்தையை வீட்டில் விட்டுச் செல்லும் நேரம் ஒருசில மணி நேரங்கள்தான் என்றாலும் அவளால் உணர்ச்சி வசப்படாமல் இருக்க முடிவதில்லை.

அலுவலகத்தில் வேலை செய்யும் பெண்கள் எல்லாருமே அவளைப் போலத்தான் மனதினுள் அழுதிருப்பார்களோ? முதன் முதல், குழந்தை தவழ்வதைக் காண முடியாதபோது முதன் முதல் தத்தித் தத்தி நடைபயில அடியெடுத்து வைக்கும்போது தாய் என்ற பாசப் பிணைப்பின் சில நுண்மையான உணர்வுகளை அவளைப் போன்றவர்கள் வெட்டி எரியத்தானே வேண்டி இருக்கிறது.

''நீங்கள் போங்கம்மா, குழந்தையைக் கவனிச்சு மருந்து குடுக்கிறேன். சீக்கிரமா திரும்பிடுங்க'' பலமுறை கூறி வழியனுப்பி வைத்தாள் பூமா.

அலுவலகத்தில் இருந்த வேலைகளினூடே அவள் தன்னை மறந்து போயிருந்தாள். இடைவேளை சாப்பாட்டு நேரத்தில்கூட கோபிநாத்தின் சந்தேகங்களைத் தீர்த்து வைப்பதிலும், மானேஜர் கூப்பிட்ட குரலுக்கு ஓடிச் சென்று, பதில் கூறுவதிலுமாகப் பொழுது போய் விட்டது.

மாலை எப்போது ஐந்து அடிக்கும் என்று சுவர்க்கடியாரத்தின் மீது விழியாக இருந்தவளை சரியாக ஐந்து மணிக்கு மானேஜர் கூப்பிட்டார்.

''அந்த புது ப்ராஜக்ட் ரிப்போர்ட் ஃபைலை நீங்கதான் நாளைக்கு எம்.டி.கிட்ட விளக்கம் செய்யணும்னு விரும்பறேன்.''

''ஸார்! நான் வந்து...'' வார்த்தைகள் தொண்டைக் குழியில் சிக்கிக் கொண்டன. 'என் குழந்தைக்கு உடம்பு சரியில்லை. நான் போகவேண்டும்' என்று கூற வந்தவள், திடுமென தடுமாறினாள். 'குழந்தை, குட்டி, குடும்பம்னு சதா அதையே நினைச்சுக்கிட்டு எதுக்காக ஆபீஸ் வரீங்க. பேசாம வீட்டோட கிடக்கறதுதானே. சம்பளம் கைநிறைய, போட்டி போட்டுக்கிட்டு வாங்கறச்சே நல்லா இருக்கோ. ஆணுக்கு பெண் சமம்னு போர்க்கொடி உயர்த்த மட்டும் தெரியுதே. இப்ப வேலைன்னதும் பின் வாங்கறீங்களே.' மானேஜர் கன்னா பின்னாவென்று பேசி விட்டால்...? தடுமாறினாள்.

''எதுக்குப் பயப்படறீங்க மிஸஸ் மஞ்சுளா. உங்களோட திறமை எம்.டி.க்குத் தெரியணும். அதனால அவர் புதுசா ஆரம்பிக்கப்போற பிளாஸ்டிக் கம்பெனி ப்ராஜக்ட் ரிப்போர்ட்தான் இப்ப நீங்க தயார் செய்திருக்கிறது. உங்க வாயாலேயே விவரமா கூறினா அவர் சந்தோஷப்படுவார். எனக்கும் ரொம்ப மகிழ்ச்சியா இருக்கும்.''

மீண்டும், அவள் ஆசனத்தில் வந்து அமர்ந்தபோது மணி ஐந்தரை, வீட்டில் குழந்தைக்கு எப்படி இருக்கிறதோ? பூமா



என்ன செய்தாளோ? காமேசன் வீடு திரும்பியாயிற்றோ... கவலைகள் அழுத்த, ஃபைல்களை அடுக்கத் துவங்கினாள்.

''மழை வேற வரும் போல இருக்கு'' உமா கூறியபடி கைப்பையிலிருந்த மடக்குக் குடையை வெளியே எடுத்தாள்.

''அதனால்தான் நான்கூட என் மழைக்கோட்டை எடுத்து வந்திட்டேன்'' கோபிநாத் சிரித்தான்.

மஞ்சுளாவிற்குத் 'திக்' என்றது. குடையை எடுத்து வர மறந்து விட்டாளே! எப்படியாவது பஸ் நிலையத்தில் ஆட்டோ பிடித்து விட்டால் போதும். பணம் போனாலும் வீடு சேர்ந்து விடலாம்.

மழை பயங்கரமாகப் பிடித்துக் கொண்டு விட்டது. ''நீங்க புறப்படுங்க மேடம். நான் மேஜையைப் பூட்டிக்கிட்டு வரேன்'' கோபிநாத் கூறியதும் ஓட்டமும் நடையுமாகப் பஸ் நிலையத்திற்குள் போய்ச் சேர்வதற்குள் தெப்பலாக நனைந்திருந்தாள். மழைச் சகதி சேறு. ஆறு மணிக்கு மேலாகி விட்டதால் பஸ்கள் சாய்ந்த நிலையில் தொங்கி வழியும் மனிதர்களுடன், நிறைமாத கர்ப்பிணி போல உறுமிக் கொண்டே சென்றன.

''எல்லா ஆபீஸூம் விடற சமயம். தியேட்டர் விடற சமயம். இப்போதைக்குப் பஸ் பிடிச்சு வீடு போனாப்பல தான்'' பஸ் நிலையத்தில் எவரோ சலித்துக் கொண்டபோது அவளுக்கு 'நறுக்'கென்றது.

இப்போது என்ன செய்வது. மழை இருட்டு. தெரு விளக்கின் வெளிச்சம் இன்னும் வராத நிலை, உடை நனைந்து குளிரில் நடுங்கியபடி, பீதியும் கவலையுமாக நின்றிருந்தாள் அவள்.

''ஹலோ மேடம். இன்னமுமா வீட்டுக்குப் போகலை'' கோபிநாத் ஸ்கூட்டரில் அருகில் வந்து இறங்கினான்.

''பஸ்சில இடம் கிடைக்கலே. எனக்குக் கூட்டத்தில் முண்டியடிச்சு ஏறத் தெரியாது. ஆட்டோக்காரங்க வர மறுத்திட்டாங்க. டாக்ஸி கட்டுப்படியாகாது'' சிரிக்க முயன்றாள் அவள்.

''உங்களுக்கு ஆட்சேபணை இல்லேன்னா, என் ஸ்கூட்டர்ல கொண்டு விடறேன். வர்றீங்களா மேடம்'' கோபிநாத் தயக்கத்துடன் கேட்டான். ஒரு சமயம் அவள் வெடுக்கெனப் பதிலளித்து விட்டால் என்ன செய்வது என்ற பயமாக இருக்கலாம்.

பஸ் நிலையத்தில் அடித்துப்பிடித்து பஸ்களைப் பிடித்துப் போனவர்கள் போக, எஞ்சியவர்கள் கூட்டாக டாக்சியிலே பறந்தாகி விட்டது. இனி தன்னந்தனியே அங்கு நிற்பதால் யாராவது முரடர்களின் சீண்டலுக்கு அவள் காரணமாகலாம். மழைச் சத்தத்தில் அவள் உதவி கோரி கூப்பிட்டாலும் யார் காதிலும் விழாமல் போகலாம். ஆட்டோ, டாக்சி யாவும் மழைக்குப் பயந்து மூடிக்கொண்டு இருப்பதால் எதுவும் தெரிய சந்தர்ப்பம் இருக்காது. மேலும் குழந்தை...? பூஜா உடல்நிலை எப்படி இருக்கிறதோ?

''என்ன யோசிக்கிறீங்க. மேடம் நான் வற்புறுத்தினதாக தப்பா நினைச்சுடாதீங்க'' அவன் சிறிது வருத்தத்துடன் ஸ்கூட்டரை உதைத்தான்.

''அ! அப்படி இல்லே, இந்த மழையில உங்களுக்குக் கஷ்டமாச்சேன்னு...''

''நான் மழைக்கோட்டோடதான் ஓட்டறேன். உங்களுக்குத்தான் கஷ்டம். பரவாயில்லை. பின்னால கம்பி இருக்குது கெட்டியா பிடிச்சுக் கொள்ளுங்க, மெதுவா ஓட்டிப் போறேன். கவலைப்படாதீங்க'' அவன் சிரித்தான்.

இவன் வயதில் என் தம்பி போன்றவன். இங்கே நிற்பதைக் காட்டிலும், இவனுடன் வீடு போவதே உத்தமம். எண்ணியவளாய், ஸ்கூட்டரின் பின்னால் அமர்ந்தாள்.



வீட்டு வாயிலை அடைந்ததும் அவனுக்கு நன்றிகூறி விட்டு, உள் பக்கம் வந்தவள் உறைந்து போனாள். காமேசன், ஆங்காரத்துடன், கண்களில் சீற்றம் பொங்க நின்றிருந்தான்.

''மழை வந்திட்டுது. குடை எடுத்திட்டுப் போகலே.''

''ஏன் ஆட்டோக்காரன் எவனும் கிடைக்கலயா?''

''கிடைக்கலே.''

''டாக்ஸி?''

''ரொம்ப ஆகும்னு தயக்கமா இருந்திச்சு.''

''இன்னொரு ஆம்பிள்ளை பின்னாலே ஸ்கூட்டர்லே வரத் தயக்கமா இல்லியாக்கும்.''

''அந்தப் பையன் எங்க ஆபீஸ்ல இருக்கிறவன். இன்னொருத்தன் இல்லே'' அவள் சிறிது கோபத்துடன் பதிலிறுத்தாள்.

''ஓகோ! அதுதான் இப்படிச் சொட்டச் சொட்ட ஈரச் சேலையோட சினிமாக் கதாநாயகிபோல ஊர்வலம் வந்திங்களோ'' அவனது குத்தலை அவளால் சகிக்க முடியவில்லை.

''நிறுத்துங்க, இப்போ என்ன நடந்திட்டுதுன்னு குத்திக் காட்டறீங்க.''

''என்ன நடக்கலை? வீட்ல உடம்பு சரியில்லாத குழந்தையை வேலைக்காரிகிட்ட விட்டுட்டு நீ உல்லாசமா இப்படி வந்து நிக்கறியே. இது ஒண்ணே போதாது'' பற்களைக் கடித்தான் அவன்.

''வார்த்தைகளை அளந்து பேசுங்க. அந்தப் பையன் என் தம்பி மாதிரி. ஆபீஸ்ல வேலை செய்யற பெண்கள்ன்னா கேவலம்னு பேசற சில ஆண்களைப்போல நீங்களும் பேசறதைப் பார்த்தா...'' சீறினாள் அவள்.

''பேசவே வாணாம், அதுதான் பாத்திட்டேனே''

''நிறுத்துங்க. கண்டபடி பேசினா நான் பொல்லாதவளா மாறிடுவேன். உரக்கக் கூவ வேண்டும் போல இருந்ததைக் கட்டுப்படுத்தினாள்.''

''குழந்தைக்கு எப்படி இருக்குது?''

''அந்த நினைப்புக்கூட இருக்குதா?''

அவள் உடைகளை மாற்றி, நனைந்த கூந்தலை ஒரு துவாலையால் துடைத்தபடி, குழந்தையருகில் வந்தாள். ''நீங்க சீக்கிரம் வந்திட்டீங்க போல இருக்கு.''

''நானும் ஏழு மணிக்குத்தான் வந்தேன். பூமாவுக்கு ஒரே கோபம். குழந்தையைக் கொடுத்திட்டு உடனே புறப்பட்டுப் போய்ட்டா. கூலிக்கு வேலை செய்யறவ எத்தனை நேரம் உட்கார்ந்திருப்பா'' எரிச்சலுடன் கூறினான் அவன்.

பூஜா கண் விழித்து விளையாடிக் கொண்டிருந்தாள். அவளுக்குக் கொடுக்க வேண்டிய மருந்து, பால் எல்லாவற்றையும் கொடுத்தாகி விட்டதா என்று அவனிடம் கேட்க அவளுக்கு அச்சமாக இருந்தது.

''எனக்குப் பசிக்குது.''

சோற்றை எடுத்துப் போட்டுத் தின்னக்கூட முடியாதவனாகி விட்டானே அவள் கணவன் என்ற ஆத்திரம் அவளுள் வெடித்தது.

''இன்னும் குளிர் பெட்டியில இருந்து சூடு செய்யலே மழையில் 'ஜில்'னு சாப்பிட முடியாதே''

''சூடு செய்து மேஜை மேல் வை'' அவனது அதிகாரக் குரலில் எரிச்சலடைந்தவளாய் 'விருட்டென' எழுந்தாள் அவள்.

ஏன்? இவருக்குக் கை என்ன நொண்டியா? காஸ் அடுப்பு, குழம்பு, ரசம், சோறு என்று பிரஷர்குக்கரில் அடுக்கி வைத்துச் சுடவைக்கத் தெரியாதா என்ன?

ஆத்திரத்துடன், மேஜைமீது தட்டுகளைக் கழுவி வைத்தாள். வேலையில் ஒத்துழைப்புத்தான் இல்லை. மனைவி மீது சந்தேகப்படாமல் இருக்கக் கூடாதா?



சாப்பிட்டபடியே மனைவியைக் குரோதமாகப் பார்த்தான் காமேசன். ''நல்லாத்தான் இருக்கே. அதான் ஆபீஸ்ல உனக்கு நல்ல திறமைசாலின்னு பேரு கிடைச்சிருக்கு.''

சுடச்சுடக் குழம்பை எடுத்து அவள் முகத்தில் வீசியது போல துடித்துப் போனாள் அவள். ''என்ன, பேச்சுப் பேசறீங்க. உங்களுக்கு வரவர என்ன ஆயிட்டுது'' அதட்டினாள் சினத்துடன்.

''வரவர, எல்லா உண்மையுமே புரிய ஆரம்பிச்சுட்டுது'' விகாரமாக அவன் சிரித்தபோது, அவள் இடியுண்டவளைப் போல நடுநடுங்கிப் போனாள்.

# 7

சிந்தாதிரிப்பேட்டைக்குப் போய் அம்மாவிடம் குழந்தையை விட்டு வருவோம் என்றால் அதற்கு அவளுக்கு நேரம் இருக்கவில்லை.

பேசாமல் அன்றே அம்மா கெஞ்சினாள். குழந்தையை அவர்களிடம் விட்டு விட்டு, லீவு நாட்களில் எடுத்து வந்து கொஞ்சி மகிழ்ந்திருக்கலாம். அதை விட்டு இப்போது பிடிவாதமாக தன்னுடன் வைத்துக் கொண்டதில் அவளுக்கு என்ன லாபம் கிடைத்தது?

வேலை செய்பவர்களை இரண்டுமுறை மாற்றியாகி விட்டது. அத்துடன் அவர்களது தயவை நாடி, அவர்கள் சொன்னபடி கேட்க வேண்டிய நிலைமை வேறு. குழந்தை முகம் பார்த்துக் கணவன் மனம் மாறி விடுவான் என்று நினைத்ததும் தவறாகி விட்டது. அவன் குணம் குரங்காகிப் போகிறது என்பதை உணர்ந்து வேதனையடைந்தாள் அவள்.

அன்றைய காலைப் பொழுது இருவருக்கும் மௌனமாகவே விடிந்தது. அவன் கடுங்கோபத்துடன் வீட்டில் காப்பிகூட அருந்தாமல், வெளியேறி விட்டான். அழுதழுது உப்பிய முகமும் வீங்கிய கண்களுமாக, மஞ்சுளா, அலுவல

கம் புறப்பட ஆயத்தமானாள். சாப்பிடவே தோன்றாத நிலையில் சமையற்கட்டுப் பக்கம் கூடச் செல்ல விருப்பமில்லாமல் இருந்தாள்.

''என்னம்மா, சமைக்கலையா நீங்க, ஏன் இன்னிக்கு ஆபீஸ் போகலே?'' கேட்டபடி உள்ளே வந்த பூமா திடுக்கிட்டாள்.

''ஐயையோ, காய்ச்சலா? ஏன் இப்படி முகமெல்லாம் வாடி கண் சிவந்திருக்கு. டாக்டர்கிட்ட போனீங்களா?'' அனுதாபமாக வினவினாள்.

''ராத்திரி மழையிலே நனைஞ்சிட்டு வந்திட்டேன். அது ஒரே தலைவலி, ஜலதோஷம்'' அவள் சமாளித்தாள்.

''மழையில மாட்டிக்கிட்டீங்கன்னு தெரிஞ்சதும்மா. என் புருஷன், லவ, லவன்னு அடிச்சுக்கும். அதான் ஐயா வந்ததும் ஓடிட்டேன். அப்படியும் நேரமாயிட்டதுன்னு ஒரே சத்தம் போட்டுச்சு. அதுக்கு உடம்புக்கு ஊத்திக்க சுடு தண்ணி போடலேன்னு அடிக்கவே வந்திடுச்சு'' அலுத்துக் கொண்டபடி பூமா, குளியலறைக்குள் புகுந்து துணிகளைத் துவைக்க ஆரம்பித்தாள்.

வீட்டு வேலை முடிந்து, குழந்தையை பூமாவிடம் ஒப்படைக்கும்போது அவள் கூறினாள். ''தயவு செய்து இன்னிக்கு ஒரே ஒரு நாள் எனக்காகப் பொறுத்துக்க பூமா. நாளையில் இருந்து உனக்கு இந்தத் தொந்திரவு இருக்காது.''

''நான் என்னம்மா செய்யட்டும்.''

''உன்னை நான் எதுவுமே சொல்லலை பூமா. நீ எனக்காக, இந்த ஒரே ஒருநாள் பொறுத்துக்க. இல்லாட்டி உன் புருஷன் கிட்ட நான் வந்து கேட்கவா?''

''ஐயையோ வேணாம்மா, உங்களை ஏதாச்சும் பேசிப்புடும். அது ஒரு முசுடு. மட்டு மரியாதை இல்லாத ஆம்பிளை, விடுங்க.'' அவள் ஆறுதல் கூறவும், குழந்தையின் முகத்தில் முத்தம் கொடுத்து விட்டு எழுந்தாள்.



''இன்னைக்கு மட்டும் கண்ணு அப்புறம் பாரேன். அம்மா உன்கிட்ட உக்காந்துக்கப் போறேன்.'' பிஞ்சுக் கையைத் தொட்டு விட்டுக் கிளம்பினாள். பஸ் நிறுத்தத்தில் நின்றபோது கண்களைக் கண்ணீர் மறைத்தது. எதற்காக இப்படி ஒரு குற்ற உணர்வில் அவள் தவிக்க வேண்டும்? அவளுக்கே விளங்காத ஒரு அனுபவமாக இருந்தது.

ஆட்டோ பிடித்துதான் போக வேண்டும். பஸ்ஸிற்குக் காத்திருப்பதால் நேரம்தான் போகும். மேலும், எம்.டி. வரப் போகிறார் என்பதால் அலுவலகத்தில் உள்ள அத்தனை பேரும், சிரத்தையுடன் உடை உடுத்தி வருவார்கள் என்பது அவளுக்கும் தெரியும். அதனால் அவளும் பளிச்சென உடுத்திக் கொண்டு புறப்பட்டு விட்டிருந்தாள். நீல நிற சைனா சில்க்கும், ரவிக்கையும் அவளது கம்பீரத்தை அதிகரித்து இருந்தன. மனதினுள் இருந்த குமுறலையோ, நெஞ்சத்தில் கொந்தளித்த கசப்பையோ வெளியே தெரியாதபடி, தோற்றம் அமுக்கிக் கொண்டிருந்தது. உடைகள் நலுங்காமல் போகவேண்டுமானால் பஸ் பயணம் சிறந்ததல்ல. முடிவில் ஆட்டோ பிடித்தாள்.

அலுவலகத்திற்குள் சென்றதும் உமா ஆண்பிள்ளைத் தனமாக சீழ்க்கை அடித்தாள். ''வாவ்! உங்க வீட்டுக்காரர் அப்படியே மயக்கம் போட்டு விழுந்திட்டாராமே?''

''எதுக்கு?''

''உன் டிரஸ்ஸைப் பார்த்து. நம்ம மனைவி இத்தனை அழகான்னு...'' கண்களைச் சிமிட்டினாள் உமா.

''மயக்கமா, பொறாமையால் பொங்குவார்.'' உள்ளூர நினைத்தவள் மெல்லச் சிரித்தாள்.

''இன்னைக்கி நமக்கெல்லாம், மனோகராவில் 'லஞ்ச் தெரியுமா?'' பரபரப்புடன் கோபிநாத் கூறினான். ஐந்து நட்சத்திர ஓட்டல் சாப்பாடானால் என்ன? அவளைப் பொறுத்தவரை எல்லாம் ஒன்றே.

''அப்படியா?'' ஒப்புக்குக் கேட்டுவிட்டு அவள் வேலையில் முனைந்தாள்.

''நேத்து நல்லாவே மழையிலே நனைஞ்சுட்டாயாமே? கோபிநாத் சொன்னார். உங்க வீட்டுக்காரர் கோவிச்சிருப்பாரே, இப்படி மழையிலே நனைஞ்சுக்கிட்டு வந்தா உடம்பு கெட்டுப் போகும்னு'' உமா கேட்டாள்.

''அவர் உள்ளம்தான் கெட்டுப் போயிட்டதே' என்று எண்ணியவள், ''உம்! உம்! ரொம்பக் கோவிச்சுக் கொண்டார்'' என்று முடித்து விட்டாள். சுமார் பதினொரு மணியளவில் சிவப்பு நிற மாருதி வேனில் எம்.டி. வந்து இறங்கினார். ஆபீஸ் சூழ்நிலையில் ஓர் இறுக்கம், மௌனம். குண்டூசி விழுந்தாலும் கேட்கும் ஓசை. அவரவர் மூச்சே அவரவர் காதில் பலமாக ஒலிக்குமோ என்ற அளவிற்கு யாவர் மனதிலும் பயம்.

''மிஸஸ் மஞ்சுளாம்மா! மானேஜர் ஸார் ஃபைலோட வரச்சொன்னார்.''

மஞ்சுளா உடல் பதற, ஃபைல்களுடன் அறைக் கதவை லேசாகத் தட்டினாள்.

''கம் இன்'' மானேஜரின் வழக்கமான குரலைக் கேட்டதும் தெளிவுடன் உள்ளே நுழைந்தவள், ''குட்மார்னிங் ஸார்'' என்றாள்.

எம்.டி. வயதானவராக இருக்கவில்லை. நாற்பது வயதிற்குள் இருக்கலாம். இதற்கு முன் வந்தவர்களைக் காட்டிலும் இவர் இளைஞர்தான். பெரிய பட்டமெல்லாம் வாங்கியவர். வெளிநாட்டில் கற்றுத் தேர்ந்தவர் என்று அலுவலகத்தில் பரவலாகப் பேசிக் கொண்டனர்.

''ப்ளீஸ்!'' எதிரே இருக்கையைக் காட்டியதும் நன்றி கூறி விட்டு அமர்ந்து கொண்டாள் அவள்.

''உங்க ப்ராஜக்ட் ரிப்போர்ட்டைப் பார்த்தேன்.''

''எங்கிட்ட ஒரு காப்பி வச்சிருக்கேன் ஸார்.''



''ஸார் மோரெல்லாம் பழைய காலம். என்னை மிஸ்டர் சௌத்ரி என்று பேர் சொல்லிக் கூப்பிடலாம்.''

''எஸ் மிஸ்டர் சௌத்ரி'' என்று ஆரம்பித்தவளுக்குப் பயம் தணிந்திருந்தது. மேஜை மீது அவள் குறிப்பு வைத்திருந்த பைலைத் திறந்தாள். மெல்ல மெல்ல அவள் விவரிக்க துவங்கியதும், சௌத்ரியின் கண்களில் வியப்பும் மதிப்பும் மாறி மாறித் தோன்றலாயின...

''ஃபென்டாஸ்டிக் மிஸஸ் மஞ்சுளா. இதை ஸ்டடி செய்யவே ஒரொருத்தர் திணறிப் போவாங்க. நீங்க அனாயசமா, கூறிட்டீங்களே, மானேஜர் உங்களைப் பத்தி சொன்னது எதுவும் தவறில்லை. வெர்ரி கரெக்ட்'' உற்சாகத்துடன் கூவினார் அவர்.

பிற்பகல் ஐந்து நட்சத்திர ஓட்டல் சாப்பாட்டிலும் அவள் மனம் லயிக்கவில்லை. வீடு, கணவன், குழந்தை இவையே மனதினுள் வளைய வந்து கொண்டிருந்தனர். பூஜா உடல் நிலை குணமானதும், முதலில் கொஞ்ச நாளைக்கு லீவு எடுத்துக்கொண்டு விட வேண்டும். சம்பளமில்லாத லீவானாலும் பரவாயில்லை. குழந்தைதான் முக்கியம். மனத்திற்குள் தீர்மானித்தவள், சற்று நிம்மதி அடைந்தாள்.

மிஸ்டர் சௌத்ரி மிகுந்த உற்சாகத்துடன் காணப்பட்டார். எல்லோரிடமும் கூப்பிட்டு வைத்துப் பேசினார். அலுவலகமே அவரது நடத்தையில் சொக்கிப் போய் விட்டது.

மாலை நடந்த பார்ட்டியிலும், சௌத்ரி எல்லோரையும் பாராட்டி விட்டுப் புறப்பட்டுச் சென்று விட்டார். கடைசியில் தமது மாருதி வேனில் ஏறும்போது மஞ்சுளாவிடம் வேடிக்கையாக, ''யங் லேடி! உங்களது திறமை நிச்சயமாகப் பிரகாசிக்கப் போகிறது'' என்றார் சிரித்தபடி.

எம்.டி. போனதும் யாவரும் ஆரவாரத்துடன் அவரைப் பற்றிப் புகழ்ந்து பேசியபடி நேரத்தைத் தள்ளிக் கொண்டிருந்தனர்.

''ரொம்ப உயர்ந்த மனுஷர் எல்லார்கிட்டயும் வித்தியாசம் இல்லாம பழகறாரு. இதுக்கு முன்ன வந்த வங்க, மானேஜர் ரூம் வரைக்கும் வந்திட்டு அப்படியே போயிடறது வழக்கம்'' உமா மகிழ்ந்து போனாள்.

ஆபீஸ் பையன், ''ஐந்து நட்சத்திர ஓட்டல் சாப்பாட்டில் எனக்கும் கூடவல்லவா பங்கு கிடச்சிட்டது'' என்றபடி சப்புக் கொட்டினான்.

சற்று நேரத்தில் மானேஜர் அறையிலிருந்து மஞ்சுளா விற்கு அழைப்பு வந்தது.

''உம், உம், போ. பிராஜக்ட் ரிப்போர்ட் எழுதிக் குடுத்ததுக்கு சன்மானமா இருக்கும்'' என்றாள் உமா கேலியாக.

''மேடம்! இன்னொரு பைவ் ஸ்டார் ஹோட்டல்ல ட்ரீட், மறந்திடாதிங்க.'' கோபிநாத் சிரித்தான்.

''உழைச்சதுக்கு சன்மானம் கிடைக்குது. நமக்கு என்ன உரிமை இருக்கு 'ட்ரீட் கேட்க'' என்றாள் மற்றொருத்தி. பல தலைகள் அவளையே திரும்பிப் பார்த்தன.

குழப்பத்துடன் மானேஜர் எதிரில் நின்றவள் திகைத்துப் போனாள். மானேஜர் அவளை உற்றுப் பார்த்துப் புன்னகை செய்தார்.

''என்னோட இடத்துக்குப் போட்டியா வந்து சேரப் போறீங்க, மிஸஸ் மஞ்சுளா!''

திக்பிரமையுடன் நின்றாள் அவள். பதவி உயர்வு அவளுக்கு.

''ஆபீஸ் கார், போன் எல்லாம் குடுப்பாங்க. வீடுகூட கொஞ்சம் வசதியா பார்த்துக் கொள்ளுங்க. என்ன அப்படியே நின்னுட்டீங்க, மிஸஸ் மஞ்சுளா! இது நிஜம் நம்புங்க. இன்னம் இரண்டு நாளில் 'ஆர்டர்' வந்திடும். எம்.டி.வாயாலே சொல்லி விட்டுப் போனார். உங்க கிட்ட நேரா சொல்ல அவருக்கு நேரம் இருக்கலே. அல்லது



எல்லார் எதிர்லயும் சொல்ல வேணாம்னு போயிட்டிருப் பாரோ எப்படியானாலும் என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.''

அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தவளுக்குத் தலை சுற்றியது. இதெல்லாம் என்ன? வேலை வேண்டாம், சம்பளமில்லாத லீவு போதும் என்று நினைத்தவளுக்கு, பதவி உயர்வு, அதிக வேலை...?

''என்ன... என்ன'' என்று ஆவலுடன் சூழ்ந்து கொண்டவர்களிடம் உண்மையை மறைக்க இயலவில்லை.

''எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?'' உமா தோழமையுடன் அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

''அப்பாடா! மேடத்தோட 'ஸீட்' எனக்குக் கிடைச் சிடும்.'' கோபிநாத் வேடிக்கையாகக் கூறவும் எங்கும் கொல்லென்ற சிரிப்பு அலை மோதியது.

''உங்க வீட்டுக்காரர் இதைக் கேட்டா அவ்வளவுதான்'' உமா கண்களைச் சிமிட்டினாள்.

''ஆமா அவ்வளவுதான்'' மனதினுள் கசந்தபடி தன் சந்தோஷத்தைக் கொண்டாட முடியாதபடி செய்து விட்ட தெய்வத்தை நொந்து கொண்டாள்.

இனிமே உனக்கென்ன, பெரிய மானேஜர் அம்மா என்று அவள் கணவன் குத்திக் காட்டலாம். சதா அவளை வார்த்தைகளால் துன்புறுத்தலாம். அல்லது சம்பள உயர்வு என்று வந்து பணத்தையெல்லாம் கிராமத்திற்கு அனுப்ப வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கலாம்.

பெருமூச்சுடன் இருக்கையில் அமர்ந்தாள். உற்சாக அலையில் மிதந்தபடி அலுவலகம் வேலையில் மும்முர மாக இருந்தது.

''வருங்கால 'மானேஜர் அம்மா'வை நல்லா கவனிங்க. இல்லாட்டி நம்மளை அவங்க கவனிக்கமாட்டாங்க'' என்ற ஆபீஸ் பையனது 'ஜோக்'கிற்கு யாவரும் சிரித்து ஆர்ப்பரித் தனர்.

அவளது கணவன், இவர்களைப் போல உற்சாகமும் மகிழ்ச்சியுமாக அவளது பதவி உயர்வைக் கொண்டாடி அகமகிழ்வானா?

அவளுக்குச் சட்டென சிந்தாதிரிப்பேட்டை நினைவுக்கு வந்தது. அம்மாவும் அப்பாவும் எப்படி ஆனந்தப்படுவார்கள். நிச்சயம் போகும் வழியில் இறங்கி அவர்களிடம் சொல்லிட்டுப் போக வேண்டும்.

சிந்தாதிரிப்பேட்டையில், அப்பா விஷயத்தைக் கேட்டுத் திக்கு முக்காடிப் போனார். அமிர்தம்மாள் பெண்ணுக்கு ஓடிச் சென்று 'திருஷ்டி' சுற்றிப் போட்டாள். ''ஒத்தர் கண்போல இருக்காது. நல்ல புருஷன், குழந்தை, பதவியெல்லாம் அமைஞ்சிருக்குது. வயிற்றெரிச்சல் படுவாங்க'' என்றாள் பெருமை பொங்க.

''குழந்தையை இனிமே இங்க கொண்டு வந்து விட்டுடும்மா. எதுக்காக வேலையாட்களிட்ட வளர விடறே. உன் உடம்பும் கெட்டுப் போவுது. மத்தியான நேரத்தில் இங்க வந்து ஒரு பிடி சாப்பிட்டுப் போ, உடம்பும் தேறும்'' அம்மா உபதேசித்தாள்.

''எப்பேர்ப்பட்ட மருமகள்னு, இனிமேயாவது சம்பந்தி வீட்டுக்காரங்க புரிஞ்சு கொள்ளட்டும். என் மகளை மருமகளா அடைய அவங்க குடுத்து வச்சிருக்கணும்.'' அப்பா கர்வப்பட்டார்.

''வரேம்பா'' என்றதும், அப்போதுதான் அவசரமாகக் கிளறி இறக்கிய ரவா கேசரியை ஒரு டப்பாவில் போட்டு மகளிடம் கொடுத்தாள் அமிர்தம்மாள்.

''இனிப்பான செய்தி, இனிப்போட உன் வீட்டுக்காரருக்குச் சொல்லு. சுடச்சுட இருக்குது. தோள் பையில் போடாதே. இந்தத் துணிப் பையில் போட்டுக் கிட்டுப் போ.'' துணிப்பை ஒன்றினுள் டப்பாவைத் திணித்து வழியனுப்பி வைத்தாள், அவள்.



வீடு வந்து சேர்ந்ததும் நல்ல வேளையாக பூமா வீட்டில் தானிருந்தாள். ''எங்கே நேரம் கழிச்சு வருவீங்களோன்னு பயந்திட்டிருந்தேன்'' மெல்ல கூறினாள் அவள்.

''குழந்தைக்கு எப்படி இருக்கு பூமா?''

''காய்ச்சல் விட்டிருக்குது. நல்லா கண்களை முழிச்சுகிட்டு விளையாடறா, கவலைப்படாதீங்கம்மா.''

அவளுக்குப் போன உயிர் மீண்டது போன்ற உணர்வு ''ஐயா...'' மெல்ல வினவினாள்.

''இன்னும் வரல்லே. நான் கிளம்பட்டுமாம்மா'' பூமா சென்ற சிறிது நேரத்தில் பரபரப்புடன் வீட்டைக் கவனிக்கத் துவங்கினாள் அவள்.

மேஜை மீது கேசரி டப்பாவைத் தயாராக வைத்திருந்தாள். இரவு உணவைத் தயார் செய்து விட்டு, குழந்தையை எடுத்துக் கொஞ்சியவள் மனம் இலேசாகிப் போனது போன்ற உணர்வு ஏற்பட்டிருந்தது.

காமேசன் வழக்கத்திற்கு விரோதமாக அன்று ஏழு மணிக்கு மேல் வீடு திரும்பி இருந்தான். அலுவலகத்தில் தங்கதுரை அவனை சீண்டியிருந்தார். ''அவருக்கென்னய்யா அவர் சம்சாரத்துக்கு ஆபீஸ்ல நல்ல பெயராம். வேலையிலே படுகெட்டின்னு பேர் வாங்கியிருக்கிறதா எங்க தெருவில குடி இருக்கறவர், அதே ஆபீஸ்ல வேலை செய்யறவர் சொன்னாரு. மனைவி அமைஞ்சாலும் அப்படி அமையணும். குடுத்து வச்ச புண்ணியவான்.''

இந்த மனுஷன் என்ன பிள்ளையையும் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டுகிறார். ஆத்திரம் வந்தது அவனுக்கு. ஏற்கனவே பதவி உயர்வு பட்டியலில் அந்த வருடத்தில் அவன் பெயர் வரவில்லை என்ற எரிச்சல்.

நிர்வாகப் பிரிவுத் தலைவர் ரங்கசாமி அவனை மேலும் கீழும் பார்த்தார் ''எட்டு வருஷ சர்வீஸுக்கு எட்டு நாள்

வித்தியாசம். நீங்க லேட்டா வேலைக்குச் சேந்ததிலே, இந்த வருஷம் பிரமோஷன் தள்ளிப் போயிட்டுது. பெட்டர் லக் நெக்ஸ்ட் டைம். கம்பெனி ரூல்ஸ் அப்படி.''

இந்த வருடம் சம்பள உயர்வு கிடைத்தால் அவனுக்குக் கணிசமாகக் கையிருப்பு இருக்கும் என்று கணக்குப் போட்டு விட்டிருந்தான். இப்போது நாள் கணக்கை காட்டி அவனைத் தட்டிக் கழிக்கப் பார்க்கிறார்களே என்ற ஆத்திரம் ஏமாற்றமாக வடிந்தது.

''அதனால் என்ன காமேசன். ஆண்டவன் ஒண்ணு இல்லாட்டி இன்னொன்னு செய்திடுவான். உங்களுக்கு வராத பிரமோஷன், ஒரு சமயம் உங்க மனைவிக்குக் கிடைக்கலாமே, யார் சம்பாரிச்சா என்ன?'' தங்கதுரை அவனது கோபத்தை மேலும் கிளறி விட்டார்.

சோர்வும், ஏமாற்றமுமாக வீடு திரும்பியவன், வீட்டைப் பார்த்ததும் ஏனோ எரிச்சல் அடைந்தான். சுத்தமாக இருந்தது வீடு. உள்ளே ஊதுவத்தி மணம் நாசியைத் துளைத்தது.

கார்டன் ஸில்க் சேலையில் அலங்காரமாக நின்ற மனைவியை வெறித்தான் அவன். முதல் நாள் நடந்த சண்டையை மறந்தவளாக அவள், ''கைகால் கழுவிக் கிட்டு வாங்க. ஒரு சமாச்சாரம் சொல்லணும்'' என்றாள் மலர்ச்சியுடன்.

சாப்பாட்டு மேஜை மீது இருந்த டப்பாவில் இருந்த கேசரியைத் தட்டுக்களில் வைத்தாள். இரு ஸ்பூன்களையும் போட்டுத் தயாராக வைத்தாள்.

முகத்தைத் துடைத்துக் கொண்டு வந்தவனிடம் ''இந்தாங்க ஸ்வீட், சாப்பிடுங்க'' என்றபடி கொடுத்தாள். இன்னொரு தட்டைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

''என்ன இதெல்லாம்?''

''எனக்கு ஆபீஸ்ல 'பிரமோஷன்' வரப்போகுது. அதுக்காகத்தான்.''



இடியோசை கேட்ட நாகம்போல மனம் துவண்டது அவனுக்கு. அவனுக்கில்லாத பதவி உயர்வு அவளுக்கு! தங்கதுரையின் கேலி செய்யும் முகம் கண்முன் நிழலாடியது! அவனைவிட அவள் உயர் அதிகாரி.

''ஸ்வீட் வேணாம்'' சட்டெனத் தட்டை மேஜை மீது வைத்தான்.

அவள் அதிர்ந்து போனாள். ''என்னங்க இது. உங்களுக்கு சந்தோஷமில்லையா?''

''இல்லை.''

''ஏன்?''

''இன்னமும் ஆபீஸ், ஆபீஸ்னு கிடப்பே. லேட்டா வருவே... நோ... இதை என்னால தாங்கிக்க முடியாது'' சட்டென எழுந்து உள்ளே சென்றான்.

மஞ்சுளாவின் கண்களில் நீர் முட்டியது. சே! என்ன மனிதர் இவர்? மனைவியிடம் பொறாமையா? அல்லது பயமா? வாய் வார்த்தையாகக்கூட ''சந்தோஷம்'' என்று பாராட்டத் தெரியாத உணர்ச்சியற்ற ஜடமா? மனதினுள் குமிழியிட்ட உற்சாகமெல்லாம் 'டப்'பென்று உடைந்து போன உணர்வில் எழுந்து கொண்டாள் அவள்.

''அப்ப நாளைக்கே வேலையை வேணாம்னு ராஜினாமா செய்திடறேன்.''

''பயமுறுத்தலா? தாராளமா செய்துக்க. ஆனா வீட்டுச் செலவுக்கும், உன்னோட ஆடம்பரச் செலவுக்கும் என்னால ஈடுகட்ட முடியாது'' வெறுப்பை உமிழ்ந்தான் காமேசன்.

''எது ஆடம்பரம்? நமக்காக சோபா வாங்கி நமக்காக டி.வி. பிரிட்ஜ்னு வாங்கினதா எதைச் சொல்றீங்க.''

அவன் அவளை முறைத்தான். ''நல்லா யோசனை செய்துகிட்டு பதவி உயர்வைப் பற்றி யோசி. நானா... இல்லே உன் பதவி உயர்வா?''

அன்றிரவு அவள் தூங்கவே இல்லை.

# 8

மானேஜர் அவளை வியப்புடன் பார்த்தார். இப்படி ஒரு விசித்திரப் பிறவியை இப்போதுதான் பார்க்கிறோம் என்ற உணர்வு இருந்தது அவரது விழிகளில்.

''என்னம்மா இது. கிடைக்காத பதவி உயர்வு வரப்போகுது. வேறொருத்தரா இருந்தா எத்தனை மகிழ்ச்சியா வரவேற்பாங்க. நீங்க என்னடான்னா பதவி உயர்வே வேண்டாம்னு சொல்றீங்க.''

மஞ்சுளாவின் நெஞ்சைத் துயரம் கவ்வியது. அவளது குடும்ப மகிழ்ச்சிக்காக, பதவியைத் துறக்க வேண்டிய நிலை. பெரிய ராஜாதி ராஜாக்களே, காதலுக்காக பட்டத்தையே துறந்து விட்டார்களாமே. அவளது கணவனது மன நிம்மதிக்காக ஏன் பதவியைத் துறக்கக்கூடாது. அதில் தவறு எதுவும் இல்லையே.

ஒரு பெண்ணுக்குக் கணவன், குழந்தை, குடும்பம் என்பதுதானே வாழ்க்கை? அதன் மகிழ்ச்சிதானே முதலிடம் பெற வேண்டும்?

அப்பாவை நினைத்துக் கொண்டாள். அம்மா முகத்தில் எத்தனை ஏமாற்றம் நிழலாடும். ''என்னம்மா பைத்தியக்காரத்தனமா பேசறே'' என்பார் அப்பா.

''குழந்தையைத்தான் நான் கவனிச்சுக் கொள்கிறேனே? பெரிய பதவி, யாராச்சும் வேண்டாம்னு உதறுவாங்களா? இது திருஷ்டிதான்'' அம்மா புலம்புவாள்.

அலுவலகத்தில் உள்ளவர்களுக்கு விஷயம் தெரிந்தால் என்ன சொல்வார்கள். ''சரியான கிறுக்கு. வலிய வரும் ஸ்ரீதேவியை எட்டி உதைக்கிறாயே'' அதிசயிப்பார்கள்.

ஆனால் அவளைப் பொறுத்தவரை, ஒரு புறம் பதவி உயர்வை ஏற்றுக் கொண்டால் மறுபுறம் வாழ்வு சரிந்து விடும். நிச்சயமாக அவளது கணவன் அதை வரவேற்க



வில்லை என்று தெரிந்த பின்னும், அவள் எதையுமே உயர்வாக மதிக்கவில்லை.

''நல்லா யோசனை செய்யுங்கம்மா. அவசரப்பட்டு முடிவு எடுக்காதீங்கம்மா. ஆர்டர் வரதுக்குள்ளே உங்களுக்குத் திடமான ஒரு முடிவும் ஏற்படட்டும்'' ஆறுதல் கூறினார்.

''வீட்டில் ஏதாச்சும்... நான் கேட்கக்கூடாது. சொல்லலாம்னா சொல்லுங்க'' அவர் தூண்டினார்.

என்ன கஷ்டம் நேர்ந்தாலும், அலுவலகத்தவர்களிடமோ அக்கம் பக்கத்தவர்களிடமோ சொல்லக்கூடாது என்ற கொள்கை உடையவள் அவள். ஆனால், வயதில் பெரியவர், அவளுடைய முன்னேற்றத்தில் அக்கறையும் மகிழ்ச்சியும் கொண்டவர் கேட்கும்போது?

தொண்டையைச் செருமிக் கொண்டாள் அவள். ''முதல்ல சொல்ல விரும்பலே ஸார். ஆனா, இப்ப சொல்லித் தெளிவாக்க வேண்டிய நிலைமை வந்திட்டதாலே சொல்லிடறேன்.''

''உங்கண்ணனைப் போலன்னு நினைச்சுக்கங்க மிஸஸ் மஞ்சுளா!'' அவர் குரலில் பரிவு தொனித்தது.

''குடும்பப் பிரச்சினைகள்தான் காரணம். அங்க மகிழ்ச்சி நிலவணும்னா, இங்கே பதவி உயர்வை எட்டி உதைக்கத்தான் வேணும்'' மெல்லிய குரலில் ஆரம்பித்தாள் அவள்.

மானேஜர் அதிர்ச்சியுடன் கேட்டார். ''இந்தக் காலத்தில் கூடவா இப்படி... என்னாலே நம்பவே முடியலேம்மா. நான் வேணா வந்து உங்க கணவர் கிட்ட எடுத்துச் சொல்லட்டுமா?''

அவள் பதைபதைத்து ''வேண்டாம் ஸார், அவருக்கு இன்னும் கோபம்தான் வரும். என்ன செய்வது? அவர் சுபாவம் அப்படி. இப்படியெல்லாம் மனம் விட்டுப் பேசினேன்னு தெரிஞ்சாலே அவர் தவறாகப் புரிஞ்சு கொள்வார். ப்ளீஸ்!'' கண்களில் நீர் ததும்ப கெஞ்சினாள் அவள்.

''வேலையை ராஜினாமா செய்திடலாம்னு முயற்சி செய்தேன் ஸார்.''

''அதுக்கு ஒப்புக் கொண்டிருக்க மாட்டார். ஏன்னா சம்பாதிக்கிற அடிமை மனைவி தேவைன்னு நினைக்கிறவர் போலஇருக்கு. பெரிய குடும்பத்தில் அடிபட்டவர்னு சொல்றீங்க, சொந்த விஷயத்தில் கட்டுப் பெட்டியா இருக்காரே. ஐ ஆம் வெரி ஸாரி'' மனம் கரைந்து போனார் அவர்.

''தயவு செஞ்சு இவையெல்லாம் வெளியே தெரிய வேண்டாம் ஸார்'' அவள் தழதழத்தாள்.

''எவ்வளவு திறமையான ஒரு பெண் நீங்க. அநியாயமாக உங்க திறமையையெல்லாம் பாழடிக்கப் பார்க்கிறாரே அவர். அதை அவருக்கு யாராச்சும் உணர்த்தி விட்டா நல்லதுன்னு நினைக்கிறேன்'' சற்று காரமாகப் பேசினார் மானேஜர்.

''யார் சொன்னாலும் அவர் கேட்க மாட்டார். அவராகவே புரிஞ்சு கொள்றவரை நிலைமை அப்படித்தான் இருக்கும் சார். மன்னிச்சுக் கொள்ளுங்க.''

''இல்லையம்மா. உங்களுக்கு ஒரு வாரத்திற்கு அவகாசம் குடுக்கறேன். உங்களைப் போல திறமைசாலியான பெண்கள் நம்ம நாட்டிலே நிறையத் தேவைப்படறாங்க. பல பெண்கள் இப்படித்தான், குடும்பம் என்கிற வட்டத்துக்குள்ளேயே தங்களை மறைச்சுகிட்டு மங்கி மறைஞ்சுடறாங்க. நீங்க தைரியமாக உங்க வீட்டுக்காரர் மனசில பதியும்படி எடுத்துச் சொல்லுங்க. வாழ்க்கையில் இதுபோல வாய்ப்புகள் ஒரே ஒரு முறைதான் வரும். பிற்பாடு, நீங்களே இந்த சந்தர்ப்பத்தை உதறினதற்காக வருத்தப்படுவீங்க. ஒருவேளை அவரும் வருத்தப்படலாம். அதனால நல்லா யோசியுங்க. ப்ளீஸ்! இதை ஒரு சகோதரன் கூறுகிற புத்திமதியா நினைச்சு செயல்படணும். வெறும்



கோழையாக, நீதிக்குப் புறம்பான காரியங்களுக்கு நீங்க வளைஞ்சு கொடுக்கக்கூடாது'' என்று நீண்ட உபதேசம் செய்து முடித்தார்.

''பாக்கறேன் ஸார்'' மஞ்சுளா நின்றதும் மீண்டும் கூறினார். ''இதனால உங்க குடும்ப வாழ்க்கையை நான் குலைக்கிறதா நினைக்காதீங்க. நியாயமான முறையில் ஒருவருக்கொருவர் ஒத்துழைத்து நடத்தறதுதான் குடும்பம்னு நீங்க அவருக்கு உணர்த்த ஒரு சந்தர்ப்பம் கொடுக்கணும். அதற்கு வேண்டிய ஒரு தைரியமும் உங்களுக்கு வேணும்.''

மானேஜர் அறையை விட்டு வெளியே வந்தவள் மனம் குழம்பிப் போயிருந்தாள். குழந்தை பூஜாவின் எதிர்காலம், காமேசனது மனக்கோணல், அவளது வருங்காலம், மனதினுள் பல்வேறு எண்ணங்கள் அலைமோத... அவள் மனம் அலைந்து போனாள்.

ஏற்கனவே அவள் மீது சந்தேகமும், பொறாமையுமாகப் பார்க்க ஆரம்பித்திருப்பவன். இனி பதவி உயர்வில் எப்படி சகிப்பான்? முடியாது. அவள் தியாகம் செய்யத்தான் வேணும்.

தீர்மானித்தவளாய் வீடு திரும்பியவளுக்கு வேறு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. காமேசன் வந்து விட்டிருந்தான். சீக்கிரமாகவே வீடு திரும்பிய மனைவியைக் கண்டதும், அவன் எதுவும் பேசவில்லை.

வீட்டில் நிலவிய மவுனம் அவளை சித்திரவதை செய்தது. அவளாகவே ஆரம்பித்தாள் மெல்ல, ''நானே ஆபீஸ்ல சொல்லிட்டேன்.'' குழந்தையைத் தோளில் போட்டபடி அவன் அருகில் வந்தமர்ந்தாள்.

அவன் அவளை வெறுமையுடன் பார்த்தான்.

''எனக்கு பிரமோஷன் தேவையில்லேன்னு சொல்லிட்டேன்'' ஆவலுடன் அவன் முகத்தைப் பார்த்தாள்.

''மகத்தான தியாகம்'' பேச்சில் கிண்டல் தொனித்தது. அவளுக்கு சற்று எரிச்சல் வந்தது. ''தியாகமோ என்னவோ எனக்குத் தெரியாது. எனக்கு நம்ம குடும்ப மகிழ்ச்சிதான் முக்கியம்னு தோணிச்சு. அதனால்தான்'' பூஜாவைக் கட்டிலில் படுக்க வைத்து விட்டுத் திரும்பினாள்.

''மகிழ்ச்சிதான் முக்கியம்னு நினைச்சிருந்தா, பூஜாவே பிறந்திருக்க மாட்டாளே, இப்ப இந்த அவஸ்தையெல்லாம் பட்டிருக்க வேண்டாமே'' எகத்தாளமாகக் கேட்டான் அவன்.

''நீங்க சொல்றதையே சொல்றீங்க. நமக்கு ஒரு குழந்தை வேணும்னு நினைச்சதில் என்ன தவறு. பூஜாவுக்கு என்ன குறை? எதுக்காக அவளை ஒரு பெரிய சுமையா நினைக்கறீங்க.''

''உண்மைதான். நீ என்னைவிட அதிகம் சம்பாதிக்கறவ. உன் பெண்ணை உன்னால் காப்பாத்திக்க முடியும்.'' கண்கள் சிவக்க கோபத்துடன் உறுத்துப் பார்த்தான்.

இவனுக்கென்ன பித்தம் தலைக்கேறிப் போய்விட்டதா? மஞ்சுளா அச்சத்துடன் அவனைப் பார்த்தாள். எந்த வழிக்கும் வராத கணவனுடன் அவள் எப்படி வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்வாள்?

குழந்தையைத் தூக்கி மார்போடணைத்துக் கொஞ்சக் கூடத் தோன்றாத தகப்பன் அவன். தான், தன் நிலைமை, பணம், வரவு, செலவு என்ற பொருளாதார சுயநலத்திலேயே வாழ்கிறவனை, பாசம், பந்தம் என்ற பிணைப்பில் சிக்க வைப்பது அத்தனை எளிதல்ல என்று எண்ணியபோது மனம் சோர்ந்து போயிற்று.

''தயவு செய்து கண்டபடி பேசாதீங்க. மனம் விட்டுப் பேசுங்களேன். உங்க ஆபீஸ்ல ஏதாச்சும் தகராறா, மனக்கஷ்டமா? ஏன் எங்கிட்ட சொல்ல மாட்டேங்கறீங்க?'' அனுதாபத்துடன் பேச முற்பட்டாள்.

''உங்கிட்ட சொல்லிட்டா மட்டும் என் பிரச்சினை தீர்ந்துடுமா?''



''ஏன்? உங்களோட சுகதுக்கத்தில் எனக்குப் பங்கில்லையா என்ன?''

''ஓஹோஹோ'' உரக்கச் சிரித்தான் அவன். அவளுக்குச் சற்று அச்சமாக இருந்தது.

''எதுக்காக சிரிக்கிறீங்க?'' நெஞ்சுக் குழியில் திகில்.

''உனக்குத்தான் ஆபீஸ்ல ஏகப்பட்ட சிநேகிதங்க, ஆண், பெண் எல்லோரும் இருக்காங்க. மழையில நனைஞ்சா குடை பிடிச்சுக்கிட்டே பின்னாலே தாசானு தாஸனாக நடக்க எத்தனை பேர் தவசு கிடக்கறாங்க. என்னைப் பத்தி நினைக்க உனக்கு நேரம் இருக்குதா? எனக்கு என்ன ஆச்சுன்னு கவலைப்படக்கூட சமயம் கிடைக்குமா?'' அவனது குரல் உயர்ந்துகொண்டே போயிற்று. திகிலுடன் அவனது விழிகளையே பார்த்துக் கொண்டிருந்தாள் மஞ்சுளா.

''உனக்கு என்னைப் பற்றி நினைக்கக்கூட நேரம் இருக்காது. மானேஜர்... மானேஜர்'' அழுத்தந்திருத்தமாகக் கூறியவன் பற்களைக் கடித்தான்.

''உங்களுக்குப் பெருமை இல்லையா?''

''பெருமை... ஆமாம். மற்றவனுடன் ஸ்கூட்டரில் வந்து இறங்குவது எனக்குப் பெருமை. மானேஜர் அம்மாவின் அழகை மற்றவர் வர்ணிப்பதைக் கேட்டுப் பெருமை.''

''நிறுத்துங்க'' வீரிட்டாள் மஞ்சுளா. ''பொறாமை உங்க கண்ணை மறைச்சிட்டது. சந்தேகம் உங்க மனசைக் கெடுத்திட்டது. நான் உங்க மனைவி, உங்களோட குழந்தைக்கு தாய்ங்கறதைகூட மறந்திட்டு, கட்டினவளையே கொடூரமாய்ப் பேசறீங்களே, இது நியாயமா?'' கசப்புடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''அநியாயக்காரர்களுக்கு நியாயத்தைப் பத்திப் பேச உரிமையில்லே.''

''உண்மைதான். அநியாயமா பேசற உங்ககிட்ட எதையும் பேசறதிலே பொருளில்லே. நானும் எத்தனையோ

சமாதானமாய் போய்டனும்தான் முடிவு செய்தேன். யார் சொல்லியும் கேட்கக்கூடாதுன்னு வேலையை உதறிடக்கூட தீர்மானிச்சேன்.''

''பாவமே!'' நையாண்டி தொனித்தது அவன் குரலில்.

''ஆனா... இனிமே வேலையை விடற உத்தேசம் எனக்கு இல்லே. நானும் ஒரு முடிவுக்கு வந்திட்டேன். இனி நீங்களாக என்னைக் கூப்பிடும்வரை நான் இந்த வீட்ல இருக்கறதில அர்த்தமில்லை.''

''புரியுது. விவாகரத்து கேக்கற அளவுக்கு உனக்கு தோழர்கள் பெருகிட்டாங்களோ? ஊசியாகக் குத்திய வார்த்தைகள் அவளை வெகுண்டு எழச் செய்தன.'

''சந்தேகக் கண்களால் சல்லடையா துளைக்கிற உங்க கிட்ட இனி இருக்கறதிலே என்ன சுகம் இருக்க முடியும்.'' அழுதபடி ஓடிச் சென்று குழந்தையை வாரிப் போட்டுக் கொண்டாள்.

''இவ பிறந்தது முதல் உங்க குணமே கெட்டுப்போச்சு. என்னைக்கி இவளோட அப்பா நான்னு நீங்க என்னைத் தேடி வர்ரீங்களோ அன்னைக்குத்தான் இந்த வீட்டுப்படி ஏறுவேன்.'' சபதமிட்டபடி விசும்பிக்கொண்டே கிளம்பினாள்.''

''போ, போ... நான் வந்து ஒருக்காலும் உன்கிட்ட மன்னிப்புக் கேட்க மாட்டேன். நினைப்பு வச்சுக்க'' உரக்கக் கத்தி விட்டு வாயிற் கதவை மூடினான். அவள் வாடகை தந்த வீடு, வாங்கி வைத்த டி.வி. சோபா செட், ஏன் அவளது மதிப்புக்குரியவனாக மதித்த கணவன், யாவற்றையும் உதறி விட்டு அவள் திரும்பிப் பாராமல் நடந்தாள். இயல்பாக ஏற்பட்ட பழக்கத்தால், கைப்பையை மட்டும் தோளில் மாட்டிக் கொண்டிருந்தாள்.

வெளியே மழைக்காற்று சில்லென்று வீசிற்று. குழந்தைக்கு ஒரு போர்வைகூட எடுத்து வரவில்லை என்பது



நினைவிற்கு வந்தது. புடவைத் தலைப்பால் குழந்தையை போர்த்தியபடி, காலியாகச் சென்று கொண்டிருந்த ஆட்டோவை நிறுத்தி ஏறிக்கொண்டாள்.

திடும்மென்று வந்து நின்ற மகளையும், தோளில் தூங்கிக் கொண்டிருந்த பேத்தியையும் பார்த்த அவள் தகப்பனார் அரண்டு போய்விட்டார்.

''என்னம்மா இது...'' அவர் முடிக்குமுன், ''ஆட்டோ வாசல்ல நிக்குதுப்பா, சில்லறையைக் குடுத்துடுங்களேன்'' கைப்பையிலிருந்த பத்து ரூபாய்த் தாளை அவரிடம் நீட்டினாள். மறுபேச்சின்றி அவர் வாயிலுக்கு விரைந்தார்.

அமிர்தம்மாளுக்கு மகளின் முகத்தைப் பார்த்ததுமே சந்தேகம் பொறி தட்டியது. ஆனால் உடனடியாக எதுவும் கேட்கவில்லை. ''சாப்பிடறியாம்மா'' என்று கேட்டபடி தட்டைப் போட்டாள்.

''குழந்தை தூங்கறா பார். உங்கப்பாவோட கட்டில்ல படுக்க வை'' உசபரித்தாள். நெடு நாட்களுக்குப் பின் பசியின் வேகத்துடன், கோபத்தின் உச்சத்தில் அவள், அகோரப்பசி நோய் பிடித்தவளைப்போல சாப்பிட்டாள்.

கையைக் கழுவிக்கொண்டு வந்தவளைப் பார்த்ததும் அப்பா கேட்டார். ''ஏம்மா, என்னவோ மாதிரி இருக்கே. ஆபீஸ்ல ஏதாச்சும் தொல்லையா...?''

அதுகாறும் அடக்கி வைத்திருந்த துயரம் காட்டாற்று வெள்ளம் போலக் கரைபுரண்டு, கன்னங்களின் மீது கண்ணீராகப் பெருகி ஓடியது. அப்பா பதறிப் போனார். மருமகனின் பணப் பைத்தியம், சந்தேகப்பேய் இவைகளின் ஆட்டத்தால் அவரது அருமை மகள் எப்படியெல்லாம் அலைக்கழிந்திருக்கிறாள்?

''இதுக்கெல்லாம் அவனை சும்மா விடப் போறதில்லை. கிளியைப் பிடிச்சுப் பூனை கையில குடுத்த கதையா, ஆயிட்டுதே. பாவிப்பயல்'' உறுமினார் அவர்.''

''வலுவிலே ஓடிஓடி வந்து பெண் கேட்டாரே, நல்லா வச்சுக்கொள்வாருன்னு நினைச்சோம். அவங்க

மனுஷங்களைப் பார்க்கும்போது சந்தேகம்தான் எனக்கும். அந்தம்மா சம்பந்தியம்மா, எதிலயுமே ஒட்டாத ஒரு ஜென்மம். அவங்க பெத்த பிள்ளை பின்னே எப்படி இருக்கும்? தீர விசாரிக்காம அநியாயமா நம்ம பொண்ணோட வாழ்க்கையைப் பாழாக்கிட்டோங்க'' அமிர்தம்மாள் உடல் குலுங்கினாள்.

நீ எதுக்காக அழறே அமிர்தம். என் பொண்ணு ஆயிரம் ஆம்பிளைகளுக்குச் சமம். அவ புத்தியைப் பாராட்டித்தான், ஆபீஸ்ல மானேஜர் பதவி தேடி வந்திருக்கு. பாரேன். அவ எவ்வளவு பெரிய ஆபீஸராப் போகப் போறான்னு.'' கண்ணீரைச் சுண்டி எறிந்து விட்டு வீர முழக்கம் செய்தார் அப்பா.

மஞ்சுளா அழுதழுது ஓய்ந்து போயிருந்தாள். இனி எதிர் காலத்தைப் பற்றிஅவள் சிந்திக்க வேண்டியது நிறையவே இருந்தது. நல்லவேளை! வேலையைவிட வில்லை. பதவி உயர்வு ஆர்டர் கையில் வருமுன் நிராகரிக்கவில்லை. பெருமூச்செறிந்தாள். இனி முழு மூச்சுடன் அவளது பெண்ணிற்காக அவள் உழைக்க வேண்டும். அவளது மகளாவது அவளைப்போலக் கோழையாக வளராமல் உரிமைக்காகப் பாடுபடும் புதுமைப் பெண்ணாக வளரட்டும்.

''மஞ்சு!'' அம்மா குழைவுடன் அவளை அருகே இழுத்துத் தலையைக் கோதி விட்டபோது அவள் மனம் வெடித்து விடும் போலாயிற்று. ''அம்மா! நான் யாருக்கு எந்தத் தீங்கு செய்தேன். எனக்கு ஏன் இந்தத் தண்டனை சொல்லுங்க.'' அரற்றினாள்.

''அழாதேம்மா, மஞ்சு! எல்லாம் போதாத காலம். மருமகப்பிள்ளை இப்படியெல்லாம் நடந்துக்குவார்னு நாங்க எதிர்பார்க்கலைம்மா. கவலைப்படாம தூங்கு.'' அமிர்தம்மாள் மகளுக்கு ஆறுதல் கூறினாள். ஆனால் தூக்கம் மட்டும் மஞ்சுவிற்கு வரவே இல்லை.



# 9

**கா**மேசனுக்குப் புதிய பழக்கம் ஆரம்பித்து விட்டிருந்தது. மனதின் நெருக்கடியைத் தவிர்க்க அதைத் தவிர வேறு வழி அவனுக்குத் தெரியவில்லை. சதா புகை மண்டலத்திலேயே அமர்ந்திருப்பவனைப்போல சிகரெட்டை ஊதிக்கொண்டிருந்தான்.

காமேசனை இந்த நிலையில் பார்க்காத பூமா சற்று பயந்தாள். ''வெத்தலை பாக்குக்கூட போடாத இந்த மனுஷருக்கு என்ன வந்தது?'' மனதினுள் வியந்தபடி வேலையைக் கவனித்தாள்.

''அம்மா இல்லீங்கள?'' வியப்புடன் விசாரித்தவளைப் பாராதவன் போல முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

''பிறந்த வீட்டுக்குப் போயிருக்காங்க.''

''என்னங்க திடுதிப்புன்னு புறப்பட்டுப் போயிட்டாங்க. அவங்கப்பா அம்மாவுக்கு ஏதாச்சும்...''

''இல்லை, எல்லோரும் நல்லாத்தான் இருக்காங்க. நீ உன் வேலையைப் பார்த்துட்டுப் போ'' கடுமையாகப் பதில் கூறி விட்டு அலுவலகம் புறப்பட ஆரம்பித்தான் அவன்.

''சாப்பாட்டுக்கு என்ன செய்வீங்க ஐயா'' மரியாதையுடன் கேட்டாள் பூமா.

''முடிஞ்சா நீயே ஏதாச்சும் செய்திடு. இல்லாட்டி ஓட்டல்ல பார்த்துக்கறேன்.''

இரண்டு நாட்கள் அலுவலகம் போய் வருவதிலும், புதுப் பழக்கத்திலும் சென்று விட்டன. வீடு திரும்பியதும்தான் அவனுக்குத் தனிமையின் கஷ்டம் புரிய ஆரம்பித்தது. அத்துடன் இத்தனை நாட்களாகத் தெரியாத சூன்ய உணர்ச்சி இப்போது விளங்க ஆரம்பித்தது.

அவன் மனைவி அவனுக்குப் பிடித்தாலும் பிடிக்கா விட்டாலும் வீட்டில் தவழ்ந்து கொண்டிருந்த அவனது மகள்... வீடே வெறிச்சென்று போய் விட்ட உணர்வு,

மனதினுள் ஏதோ நெருடியது. சட்டெனக் குற்ற உணர்வை உதறியவனாய், விசிலடிக்க முயன்று தோற்றுப் போனான். பலநாட்கள் நகர்த்தி விடும்படியான நிலையில் ரசனை இன்றிப் பொய்க் கொண்டிருந்தன.

அன்றிரவு வீட்டின் முன்னறையில் அமர்ந்தவனுக்கு மனதில் வெறுப்பு உணர்வு முதன் முறையாகத் தன் மீதே ஏற்பட்டு விட்டது.

மஞ்சுளாவும் அவனுமாகக் கல்யாணமான புதிதில் எடுத்துக் கொண்ட புகைப்படம் சுவரில் தொங்கிக் கொண்டிருந்தது. மஞ்சு! உண்மையிலேயே தவறு என் மீதா? புகைப்படத்தை மறுபடியும் உற்றுப் பார்த்தான் காமேசன். கபடமற்ற குழந்தை முகம் அவளுடையது. அப்படிப் பட்டவள் அவனுக்குத் துரோகம் இழைக்க...சே! மஞ்சுவின் மீது அபாண்டம் சுமத்த முயன்றது பாவமான செயலோ!

மஞ்சு பலமுறை அவனிடம் சரளமாகப் பேச முயன்றது நினைப்பிற்கு வந்தது. குழந்தை பூஜாவிற்காக அவள் எத்தனை துயரங்களை அனுபவித்திருக்கிறாள். கணவன் என்ற முறையில் அவன் அவளுக்கு என்ன செய்தான்? கேவலம் ஒரு கைக்குட்டைகூட வாங்கியதில்லை! மாதம் பிறந்தால் 'டாண்' என்று அம்மா பெயருக்குப் பணம் அனுப்பிய வேகம்கூட மனைவிக்கு என்று ஒரு முழம் பூகூட வாங்கத் தோன்றவில்லை.

மஞ்சு இவனது பாரபட்சத்தை எப்போதாவது குத்திக் காட்டியிருக்கிறாளா? இல்லை. காமேசன் மனதினுள் ஏதோ சுட்டது. குளிர்சாதனப்பெட்டியைத் திறந்து குளிர்ந்த நீரைப் பருகினான். அந்த வசதிகூட மஞ்சுளா செய்ததுதான். அந்த வீடு, இதர வசதிகள் யாவும் ''மஞ்சு! மஞ்சு!!'' என்று புலம்புவதைப் போலத் தோன்றின அவனுக்கு.

ஐயோ! இந்த வீட்டில் அவனால் தனந்தனியாக வளைய வர முடியாது. வீட்டின் ஒவ்வொரு இடமும் மஞ்சுளா பார்த்துப் பார்த்து அழகுற வைத்துக் கொண்ட இடங்கள்.

காமேசன் உடனடியாக வீட்டைக் காலி செய்து விட்டு லாட்ஜுக்குப் போய் விடுவதுதான் சிறந்த வழி.



மறுநாள் ரவியைக் கண்டு பேசி விட்டு, லாட்ஜ் முதலாளியிடமே பேசுவது என்று தீர்மானித்து விட்டிருந்தான். காலையில் எழுந்ததும், அவசரமாகக் குளியலை முடித்துக் கொண்டு வாயிற்புரம் பூமாவின் வரவிற்காகக் காத்திருந் தான் அவன்.

''அநியாயத்தைக் கேளுங்க ஐயா. இந்த மனுஷன் என்னைப் போட்டு அடிஅடின்னு அடிச்சுக் கொல்றாரு'' 'ஓ' வென்று புலம்பியபடி, வீட்டினுள் அலங்கோலமாக வந்து நின்ற பூமாவைக்கண்டு, அதிர்ந்து போய் எழுந்தான் காமேசன்.

அவள் பின்னால் கொடுவாள் மீசையும், புஸ் தலையுமான ஒரு கட்டை குட்டை மனிதன் லுங்கியை இடுப்பில் மடித்துக் கட்டியபடி, முண்டா பணியனுடன் பயில்வான் பாவனையில் கையில் கத்தியுடன் நின்று கொண்டிருந்தான்.

''ஏய்யா பெரிய மனுஷா, நீதான் இந்த வீட்டு எஜமானா?'' உரக்க அவன் கூவியதில் சினத்தோடு திரும்பினான் காமேசன்.

''காலை வேளையில் என்ன இது கலாட்டா'' ஆத்திரத்தோடு அதட்டினான்.

''கலாட்டா நான் செய்யலே. நீதான் செய்தே தெரியுதா.''

''மரியாதையா பேசு. இல்லாட்டி போலீசைக் கூப்பிடுவேன்'' மிரட்டினான் காமேசன்.

''அதுக்கெல்லாம் மிரண்டு போற ஆசாமி நா இல்லை, தெரியுதா? முதல்ல உன் யோக்கியதை இன்னான்னு மத்த வங்க புரிசுக்கட்டும்'' மீசை ஒங்கிய குரலில் பேசினான்.

காமேசன் உதடுகள் கோபத்தால் துடிக்க கண்கள் சிவக்க அவனை விழித்தான். ''என்ன என் வீட்டுக்குள்ளே வந்து கலகம் செய்து விட்டு... வெளியே... போ'' உறுமினான்.

''எம் பொண்சாதியை வெளியே அனுப்பு, நான் போறேன்.''

PUBLIC LIBRARY

பூமா அழுதபடியே நின்றாள்.

''உம் பெண்சாதியா?''

''ஆமாய்யா நான்தான் பூமாவோட புருஷன்''

''அதான் அவளைத் தாறுமாறாப் போட்டு அடிச்சி ருக்கியா. நல்ல புருஷனப்பா நீ, முதல்ல வெளியே கையில கத்தியோட போயிடு.

பூமாவின் கணவன் எகத்தாளமாகச் சிரித்தான். ''ஏய்யா! உன் பொண்சாதி ஆபீஸ் போனா கண்ணை மூடிக்கிட்டி ருக்கா மாதிரி என்னையும் இருக்க சொல்றியா?''

காமேசன் உக்கிரமாகப் பார்த்தான்.

''அந்தம்மாளைச் சொன்னா உன் நாக்கு அழுகிடும். ஆமா'' பூமா ஆவேசமாக இடைமறித்தாள்.

''ஆமாண்டி! தனியா இருக்கிற இந்த மனுஷன் வீட்ல வேலை செய்யறே இல்லே, இப்ப புரியுது. நீ ஏன் இங்கே அதிக நேரம் நிக்கறேன்னு. ம்! வேலையும் வேணாம், ஒண்ணும் வேணாம் புறப்படுடி கழுதை. அவளை ஓங்கி அறைந்தான் மீசை. பூமா அலறித் துடித்து ''வீணா சந்தேகப்பட்டுக் கொண்டு என்னைக் கொல்லாதே, நீ நல்லாவே இருக்க மாட்டே போ.''

காமேசன் திக்பிரமையுடன் செயலற்றுப்போய் விட்டான். அவனால் எதுவும் செய்ய முடியவில்லை. ''இதபாரு, உன் பெண்டாட்டியை மகாராஜனாக கூட்டிக்கிட்டு போ. எனக்கு இதெல்லாம் பிடிக்காது. ஆமாம், அவளை இங்கே அடிச்சு கலாட்டா செய்தே...''

''போலீஸ்தானே! கூப்பிடு. நானும் சொல்றேன். இவ, இந்த மனுஷனோட் தனியே இந்த வீட்ல இருந்தா, எனக்கு சந்தேகம் வந்து உதைச்சேன்னு'' அரட்டலாகப் பேசினான் அவன்.

''பூமா! தயவு செஞ்சு நீ போய்டு. சம்பளக் கணக்குப் பாக்கி பாக்காட்டியும் பரவாயில்லே இரு.'' அவசரமாக கையில் கிடைத்த நூறு ரூபாய்த் தாளை அவளிடம் கொடுத்தான்.

''அம்மாகிட்ட நான் சொல்லிக்றேன். நீ போகலாம்.''



பூமா மூக்கை சிந்தி அழுது புலம்பியபடி கணவன் பின்னால் நடந்தாள். வெகு நேரம் அவன் சித்தப் பிரமைக்காரனைப் போல் அமர்ந்திருந்தான்.

பூமாவின் கணவன் கேவலம் அவன் மீதல்லவா சந்தேகப் பட்டு விட்டான். என்ன அநியாயம் இது. காமேசன் இயல்பாகவே பெண்களைச் சட்டென்று கண்ணெடுத்துப் பாராதவன். அதிலும் மஞ்சுளாவைப் போன்ற மனைவி அமைந்த பிறகு- சட்டென நினைவு தடுமாறிற்று.

மஞ்சுளா... அவன் மஞ்சுவை அவன் மட்டும் சந்தேகிக்க வில்லையா? ஒரு பெரிய அலுவலகத்தில் அத்தனை பேர் இடையில் வேலை செய்தவளை, சந்தேகக் கணைகளால் துளைத்து விட்டானே. அவனைவிட, தன்னந்தனியே அந்த வீட்டில் வேலை செய்ய வந்த பூமாவை சந்தேகித்த அவனது மீசைக் கணவனது கோபம் நியாயமானது! மனதில் பச்சாதாபம் தலை விரித்தாடத் துவங்கியது.

அவனுக்காக மஞ்சு எத்தனை பெரிய தியாகத்தையும் செய்யத் தயாராக இருந்தாள். ஆனால் அவனோ...?

இரண்டே நாட்களில் அவனுக்கு வீட்டு நிர்வாகம் புளித்துப் போயிற்று. பூமா வேலையிலிருந்து நின்று கொண்டாள். மஞ்சுவும் இல்லை. இப்போது அலங்கோலமான வீட்டைக் கண்டதும் தலையில் அடித்துக் கொண்டு அழ வேண்டும் என்ற ஆத்திரம் எழுந்தது.

அன்று காலை குப்பையாகக் கிடந்த வீட்டை அவனால் முடிந்தவரை சுத்தப்படுத்தினான். அலுவலகத்திற்கு ஒரு மாதிரி புறப்பட்டுச் சென்றவனுக்கு அம்மாவின் கடிதம் காத்திருந்தது.

''உன் மனைவிக்குப் பெரிய பதவியும், இதர வசதிகளும் தரப்போவதாக இங்கே செய்தி கிடைத்திருக்கிறது. அதனால், இனி உன் சம்பளத்தில் சற்று கூடுதலாக பணம் அனுப்பி வைக்கவும்.''

அவனுக்கு ஆத்திரம் மண்டியது. கழுகுக்கு மூக்கில் வியர்ப்பது போல், அம்மாவிற்கு யாரோ போய் விஷயத்தைப் பரப்பி விட்டார்கள். பண விஷயம் என்றதும் அட்டை உறிஞ்சுவதுபோல் அம்மா உறிஞ்ச ஆரம்பித்து விடுவாள். சம்பாதிக்கிறாங்களே, பணம் அனுப்பி வைக்கட்டுமே என சகோதரிகளும், தாயாரை உசுப்பி விடுவார்கள். தாமோதரனைப் பற்றிக் கேட்க வேண்டாம். வெறுப்புடன் கடிதத்தைக் கசக்கிப் பந்து போல் குப்பைக் கூடையில் எறிந்தான் அவன்.

''பெரிய பதவிக்குப் போகப்போன மனைவியை துரத்தியடித்து விட்டு, இங்கே குரங்குபோல் தனியே உட்கார்ந்திருக்கிறேன்.'' பதில் எழுதி விடலாமா? ஊஹூம்! கூடாது. அம்மாவின் விருப்பத்திற்கெதிராக அவனே தேடி முடித்த திருமணம். விவரம் தெரிந்தால் ''நான் அப்பவே சொன்னேனே, கேட்டையா? உன்னைவிட அதிகம் சம்பாதிக்கிறவ உனக்கு எதுக்குன்னு சொல்லிப் பார்த்தேன் நீ கேக்கலை'' அம்மா இடிப்பாள். தங்கைகள் பழிப்பார்கள்.

காமேசனுக்கு வாழ்க்கையின் மீதே விரக்தி வந்தது. அவனது கண்களை அவனே குத்திக் கொண்டது போல என்ன காரியம் செய்து விட்டான்.

''உடம்பு சுகமில்லையா? என்னமோ மாதிரி இருக்கியே'' தங்கதுரை கேட்டபோது, ''லேசா காய்ச்சல்' புளுகினான். மேலே பேச்சுக் கொடுத்து விட்டால் மனிதர் வாயைக் கிண்டி வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்வார். ஆனால் விடாப் பிடியாகப் பின்னால் வந்தார்.

''உங்க மிஸஸ்ஸுக்கு பிரமோஷன் கிடைச்சுட்டதாம். பெரிய வீடு, கார், போன்கூடக் கொடுக்கப் போறதாகக் கேள்வி. அதிர்ஷ்டக்காரரப்பா. ஆனா பலே கைகாரர். எங்கே எங்களுக்கெல்லாம் தெரிஞ்சா, 'ட்ரீட்' கேட்டுடுவோம்னு பயமா?''



''அப்படியெல்லாம் இல்லே'' வழிந்தான் அவன். உண்மை அவன் மனதை உதைக்க ஆரம்பித்திருந்தது.

''அப்படி இல்லை'' ஐயா ரங்கசாமி சிரித்தார். ''பெரிய வீட்டுக்குப் போனதும். நம்மை எல்லாம் கூப்பிட்டு பெரிய விருந்து கொடுக்கப் போகிறார்.''

அலுவலகத்திலிருந்து பிய்த்துக்கொண்டு, வெளியேறியவன், பித்துப் பிடித்தவனைப் போல மனம்போனபடி திரிந்து கொண்டிருந்தான். வீடு திரும்பினால் யார் இருக்கிறார்கள்? துணியும், குப்பையுமாக சூன்யக்காடு போல இருக்கும் வீட்டினுள் காலடி எடுத்து வைக்கக்கூட அவன் விரும்பவில்லை.

பேசாமல் பழையபடி, ரவி நண்பர்களோடு பிரம்மச்சாரிக் குடியிருப்பிற்குப் போய் விட்டால்... ஆனால், அவர்களுக்கு யார் பதில் சொல்வது? அதிலும் ரவி கேட்கும் கேள்விகளுக்கு என்ன பதில் கூற முடியும்?

'என் ஒன்று விட்ட சகோதரியைக் கல்யாணம் செய்து கொள்ள நடையா நடந்தியே, கடைசியில் அவளை இம்சித்து இந்தக் கதிக்கு ஆளாக்கி விட்டாயே! நீ எல்லாம் ஒரு மனுஷனா?'' என்று அடிக்கவே வந்து விடுவானோ என்னவோ?

பல நாட்கள் யோசித்து யோசித்து, யோசனையில் உழன்றான் அவன். இல்லாள் அகத்திருக்க இல்லாத தோன்றில்லை என்ற உண்மையை உணர அதிக நாட்கள் பிடிக்கவில்லை. என்றாலும் பிடிவாதத்தின் காரணமாக நாட்களை ஓட்டிக் கொண்டிருந்தான்.

அன்று காலை கண்ணாடியில் அவன் முகத்தைப் பார்த்த போது திடுக்கிட்டுப் போனான். கண்கள் பஞ்சடைந்து இலேசாகப் புறப்பட்ட தாடி, ஒட்டிய கன்னம், அவனா இது? பதறிப்போனவனாய் மீண்டும் கண்களை கண்ணாடியில் ஓடவிட்டான். சாட்சாத் அவனேதான். அவரவர் மனம்தான் அவரவர் முகம் பார்க்கும் கண்ணாடி என்பது எத்தனை

உண்மை! மஞ்சுளா அவனைப் பார்த்தால் மனம் துடித்துப் போய் விட மாட்டாளா?

மஞ்சுளா! இனி அவள் மனம் துடிக்கமாட்டாள். ஏனெனில் அவள் மனதை அவன்தான் ஒடித்து அனுப்பி விட்டானே. வேண்டாம் என்று உதறிய பதவி உயர்வையும் இதர வசதிகளையும் பெற்றுக் கொண்டு மஞ்சுளா உயர்ந்த இடத்தில் அமர்ந்திருப்பாள். அவளை இனி அவனால் எட்டிப் பிடிக்கக் கூட முடியாது.

நெஞ்சுக்குள் சுமையாகத் துயரம் அழுத்தியது. கூட இருந்த போது மனைவியின் அருமை பெருமையை உணராதவனாய் இருந்ததன் பலனை இப்போது அனுபவிக்கிறான். கணவன் என்ற முறையில் அன்புடன் அவளுக்கு ஒத்துழைப்பைக் கொடுத்திருந்தால், இப்போது வாழ்க்கை எத்தனை நிம்மதியாக அமைந்திருக்கும்.

அவன் துயரத்தில் உருகிப் போக ஆரம்பித்திருந்தான். அன்று மாலை கடற்கரை மணலில் அமர்ந்தவனுக்குப் பழைய நினைப்புகள் அலைமோதிக் கொண்டு வந்தன.

இதேபோல ஒருநாள்தான் அவன் மஞ்சுளாவைப் பார்க்க நேர்ந்தது. ஆனால் அவனது ஆசையில் நேர்மை இருக்க வில்லை. சம்பாதிக்கிற அழகான பெண். தனக்குப் பணமும், தாம்பத்திய வாழ்வும் தருவாள் என்ற சுயநல நோக்கம்தான் இருந்தது. ஒருவேளை அதனால்தான் மஞ்சுளா அவனிடம் தங்காமல் பிரிய நேர்ந்ததோ?

மணல் பாதையருகே புத்தம் புதிய கார் ஒன்று வந்து நின்றது. அவன் திரும்பிப் பார்த்தான். மஞ்சுளா, தந்தையும் தாயும் பின் தொடர, பூஜா சகிதம் இறங்கிக் கொண்டிருந்தாள். அவளே காரை ஓட்டி வந்திருக்க வேண்டும்.

அவமானத்தால் முகம் சிவக்கத் தலையைத் திருப்பிக் கொண்டான். மணலிலிருந்து எழுந்து ஓடினால் கண்டு கொள்வார்களோ என்ற தயக்கம்.



அவனைத் தாண்டி சென்றவள் அவளையும் அறியாமல் திரும்பிப் பார்த்தாள். ''என்னகோலம் இது?'' அடிவயிற்றை அள்ளிப் பிசைந்ததுபோல துயரம்...

''அப்பா! திரும்பிப் பாருங்கப்பா'' பதட்டத்துடன் கூறினாள் அவள். அவர் திரும்பியதும், அவசரமாக அவன் எழ முயன்றான்.

''என்ன இது மாப்பிள்ளே!'' கண்ணீர் ததும்ப ஓடிச் சென்று அவர் அவனைப் பிடித்து நிறுத்தினார்.

''ஆண்டவா! மருமகப் பிள்ளை உடம்பே வீணாகிப் போயிட்டுதே'' அமிர்தம்மாள் புலம்பினாள்.

கணவன் அருகில் வந்த மஞ்சுளா ஒரு கணம் மௌனமாக நின்றாள். இருவர் கண்களும் ஒரு வினாடி சங்கமித்தன. மறுகணம், காமேசன் சிறு குழந்தைபோல் அழ ஆரம்பித்தான்.

''மஞ்சு! என்னை மன்னிச்சுடு, மஞ்சு, ப்ளீஸ்!'' கடற்கரையில் கூட்டம் அதிகம் சேரவில்லை. என்றாலும் அழுது கொண்டிருக்கும் அவனை எவரேனும் பார்த்து விட்டால்...? மஞ்சு பதட்டமாக, ''அப்பா, அவரைக் கூட்டிக்கிட்டு காருக்கே போகலாம் வாங்க'' கணவனின் கையைப் பிடித்தபடி திரும்பி நடந்தாள். அவளது தோளில் சாய்ந்திருந்த மகளை ஆசையுடன் வாங்கி, முத்தம் கொடுத்தவன் மேலும் கண்ணீரால் மகளின் முகத்தைக் கழுவினான்.

''வண்டியில் உக்காருங்க, முகத்தைத் துடைச்சுக் கிட்டுப் பேசலாம்'' மஞ்சுளா இயல்பாகக் கூறினாள்.

''இல்லே மஞ்சு. ஸாரி மஞ்சுளா. இதில உட்காருகிற அருகதை எனக்குக் கிடையாது. அதனால தயவு செஞ்சு என்னைப் போகவிடு உன்னைப் பார்த்திட்டேன். குழந்தைக் குத் தகப்பன் என்ற முறையிலே, பூஜாவைக் கொஞ்சி முத்தமிட்டுக்கிட்டேன். இனி நான் புறப்படறேன்'' அவன் தடுமாறினான்.

''முதல்ல கார்ல ஏறிக் கொள்ளுங்க'' மஞ்சுளாவின் உத்திரவை மீற அவனால் முடியவில்லை. கடற்கரை மணலில் ஆரம்பித்த அவர்களது வாழ்க்கை, அதே மண்ணில் மீண்டும் சேர்ந்து ஒளி படர ஆரம்பித்து விட்டது என்பதைப் போல விளக்குகள் ஒளி வீசின.

ஓரிரு மாதங்களில், நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் கம்பெனி வீட்டிற்குப் புறப்படத் தயாராக இருந்தனர் காமேசனும், மஞ்சுளாவும்.

''உங்கம்மாவும், அப்பாவும் நம்மோடத்தான் இருக்கணும்னு நான் உத்திரவு போட்டிருக்கேன். அத்தனை பெரிய வீட்டைக் கட்டி மேய்க்க நம்மால முடியாது'' காமேசன் மனைவியிடம் கூறிச் சிரித்தான்.''

''அவங்க ஒப்புக்கொண்டாங்களா?'' கேட்டபடி கணவனது உடைகளை எடுத்து வெளியே வைத்தாள் மஞ்சுளா.

''நான் சொன்னா கேக்க மாட்டாங்களா? அத்தோட என் மகள் பூஜாவைப் பாத்துக்கணும்னா எங்க வீட்டோட தான் இருக்கணும்னு கண்டிஷன் போட்டுப்பிட்டேன். அவ்வளவு தான்'' வரிசைப் பற்கள் தெரிய சிரித்து விட்டு, அவளது உடைகளை அவன் எடுத்துத் தயாராக வைத்தான்.

''இதென்ன? பதிலுக்குப் பதிலா? நான் செய்தேன்னு நீங்க செய்யறீங்களா?'' மஞ்சுளா சிணுங்கினாள்.

மனைவியின் முகத்தை ஆசையுடன் நிமிர்த்திய காமேசன், ''அப்படியல்ல என் அருமை மனைவியே! வாழ்வைப் பகிர்ந்து கொள்ளும் நாம், உழைப்பையும் பகிர்ந்து கொண்டு ஒருவர்க் கொருவர் ஒத்துழைப்போம்னு செய்தேன்'' கலகலப்பான சிரிப்பில் இருவரும் மனம் ஒன்றிப் போனார்கள்.

CPL 893624
CONNEMARA PUBLIC LIBRARY
12 JUL 2010
CHENNAI
p. 208
12/7/10

12 MAY 2011
28 MAY 2011
2 JUN 2011
17 JUN 2011
30 JUN 2011
30 JUN 2011
25 JUN 2011